
என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

MANGAYAR MALAR ஆகஸ்ட் 2006
262 பக்கங்கள் ரூ.18/-



டு வீலர் டிப்ஸ் இலவச இணைப்பு + திருமண மலர்



பூர்ணா தமிழகமெங்கும் ஆரோக்கியமான ஆரம்பம்
நான் நினைச்ச மாதிரி
எனக்கு கிடைச்சாச்சு..
15% LESS
Oil Absorption
விலை, சுவை,
உண்மையான
ஆரோக்கியம்
விலை
லிட்டருக்கு
ரூபாய்
50
மட்டுமே.
ரைஸ் பிரான் ஆயிலில் மட்டுமே உள்ள ஒரைசோனால் கெட்ட கொலஸ்ட்ராலை குறைத்து நல்ல கொலஸ்ட்ராலை பாதுகாக்கிறது.
சமைக்கும் பொழுது மற்ற எண் ணெய்களை விட 15%குறை வான எண்ணெய்யே செல வாகும்.
வைட்டமின் E, டோக்கோட்ரைய னால் போன்ற பல ஊட்டச் சத்துக் கள் நிறைந்தது.
ரைஸ் பிரான் ஆயிலில் உள்ள ஸ்குவாலின் சருமத்திற்கு பளபள ப்பு மற்றும் பாதுகாப்பைத் தரு கிறது.
ரைஸ் பிரான் ஆயில் மற்ற எண் ணெய்களை விட அதிக கொதி நிலை உடையது (490°F). அதனால் சூடாகும் பொழுது கருகாது. மேலும் உயர் வெப்பத்தி லும் இயற்கை குணம் மாறாதது.
PORNA
HEALTHY CHOICE OF YOUR FAMILY
SKM
நிறுவனங்களின் தயாரிப்பு
பூர்ணா ரீபைண்ட் ரைஸ் பிரான் சமையல் எண்ணெய்

வந்துவிட்டது ஸிந்த்தால் சின்ன பேக்





அறிமுகம், ஸிந்த்தால் 75 கிராம் சின்ன பேக்
ரூ.14/- மட்டுமே. ஸிந்த்தால் டியோடரண்ட்
அண்டு கம்ப்ளெக்ஷன் சோப் இப்போது
இரண்டு சைஸ்களில் கிடைக்கிறது. ரெகுலர்
00 கிராம் பேக் மற்றும் புதிய ஸிந்த்தால் 75
கிராம் சின்ன பேக்.

www.cinthol.com

- Cinthol Deodorant and Complexion soap is now available in 100g and 75g • **100g pack is priced at Rs. 19/- • *75g pack is priced at Rs. 14/- • Available in select outlets only • Available till stocks last

அடிச்சாங்க பரிசு!

'ஆஹா பரிசு' (ஜூலை) போட்டியில் 'எந்த ஒரு விண்ணப்பப் படிவம் நிரப்பினாலும் ஜெராக்ஸ் எடுத்து, நிரப்பி, சரிபார்த்தபின் நிரப்பினால் ஒரிஜினல் படிவம் அடித்தல் திருத்தல் இல்லாமல் இருக்கும்' என்ற டிப்ஸை எழுதி 3 டயர் ஸ்டீமர் பரிசு பெறுகிறார் பி. கோமதி பாளையங்கோட்டை. அதே டிப்ஸை சிறந்ததாகத் தேர்வு செய்த பல வாசகியர்களில், குலுக்கல் முறையில் 3 டயர் ஸ்டீமர் பரிசு பெறுகிறார்
ஜி. கல்யாணி, பாலவாக்கம், சென்னை - 41.





தரத்திலும் நம்ப



ஆஹா பரிசு!

இந்த இதழில்
'ஆஹா 50!' என்ற தலைப்பில்
இடம்பெற்றுள்ள டிப்ஸ்களைப்
படியுங்கள். மிகச் சிறந்த
ஒரே ஒரு குறிப்பைத் தேர்ந்தெடுத்து,
எழுதி அனுப்புங்கள். உங்கள்
தேர்வும், ஆசிரியர் குழுவின் தேர்வும்
பொருந்தினால்
குலுக்கல் முறையில் ப்ரீமியர் 3 டயர்
ஸ்டீமர் பரிசு! தேர்ந்தெடுப்பவருக்கு
மட்டுமல்ல, அந்தக் குறிப்பை
எழுதியவருக்கும் ஸ்டீமர் பரிசு!
'ஆகஸ்ட் - ஆஹா பரிசு!' என்று
மறக்காமல் குறிப்பிட்டு, பக்க எண்,
வாசகி பெயருடன் அஞ்சல் அட்டையில்
மட்டுமே எழுதி அனுப்புங்கள்.
கடைசித் தேதி : 15.8.2006

அட்டையில் :
கீர்த்தி சாவ்லா
படம் :
சங்கர் சத்யமூர்த்தி

என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
..களிர் மாத இதழ்!
மலர் : 26 இதழ் : 7 ஆகஸ்ட் 2006



ஒரு வார்த்தை!

எங்கள் கிராமத்தில் இரவு நேரங்களில் அந்தக் காட்சியைப் பார்க்கலாம். விவசாயிகள் அதிகம் வசிக்கும் பகுதி அது!

நிலா காயும் முற்றத்தில் பெரிய பானையில் நெல்லுச்சோறோ, கம்பங்களியோ தயாராகும். பொக்கை வாய்க் கிழவி முதல், தளிர்நடை குழந்தை வரை.. பெரிய குடும்பமே சுற்றிலும் உட்கார்ந்திருக்கும். குழம்பின் மணமெங்கும் வீச, ஊர்க் கதை, சினிமாக் கதை என எதையாவது சளசளத்துக் கொண்டே சாப்பிடுவார்கள்.

எதிரேயும் குடியானவர்களின் வீடுகள்தாம்! பசுஞ்சாணம் மெழுகிய அவர்கள் வீட்டு முற்றத்திலும் இதே போன்றதொரு கூட்டுக் குடும்பம். அங்கேயும் அதே எளிய உணவுதான்! அவர்கள் வீட்டுச் சின்னப் பயல், இந்த வீட்டுக்கு 'குடுகுடு' என்று ஓடி வந்து, எதையாவது வாங்கித் தின்னும். இவர்கள் வீட்டு நாயோ, பூனையோ அங்கே வளைய வந்தால், இரண்டு கை பருக்கையை அள்ளி வைப்பார்கள். அதில் யாராவது இளவட்டமோ, 'குடி'மகனோ இருந்து, எம்.ஜி.ஆர். போல ஆடிப் பாடிக் காட்டினால், கத்தரிக்காய்க் குழம்பு இன்னும் ருசியாக அமைந்துவிடும்.

இது தவிர, அந்த நேரம் பார்த்து யாராவது அந்தப் பக்கம் போக நேர்ந்தால்...

''ஏ... அண்ணமுண்டி.. ஒரு வாய் களிய உண்டு போட்டு போறது!'' என்று அன்பாக அழைப்பார்கள். (மனசாரவும்தான்!)

ஆனால் இப்போது கணவனும் மனைவியுமே வீட்டில் பேசிக் கொள்வதில்லை. அப்படியே பேசிக் கொண்டாலும், காசு விஷயமாகத்தான் பேசிக் கொள்கிறார்கள்.

உறவுகள் ஃபோனில் பேசினாலேயே, ''உம்.. சரி.. ஓகே. ரைட்... பார்ப்போம்!'' என்று ஒற்றை வார்த்தைகளிலேயே வேண்டாவெறுப்பாக முடித்து விடுகிறார்கள்.

குழந்தைகள் ஆசையாகப் பேச வந்தாலும் ''ஆபீஸுக்கு லேட்டாச்சு! சாயங்காலமா சொல்லு!'' சாயங்காலம் பேச வந்தால், ''டயர்டா இருக்குடா! காலைல சொல்லு!'' என்று ஒரே தள்ளு!

சாப்பிடுவதும் தனித்தனியாகவோ அல்லது டி.வி. பார்த்துக் கொண்டோதான் என்பதால், கலகலப்பாகக் கலந்து உரையாடுவதே இல்லை.

கல்யாணம், விருந்து என்று போனாலும், யாரும் யாரிடமும் மனம் ஒன்றிப் பேசுவதில்லை.

மற்றவர்களைப் பற்றிய ஏதேதோ மனப்பான்மைகளைக் கற்பனையாக வளர்த்துக் கொண்டு, நெருங்கவே தயக்கம்!

ஒரு கரண்டி குழம்பு மிச்சமானால் கூட, அதை ஃப்ரிஜ்ஜில் பதுக்கி விடுகிறோம்.

''லஞ்சுக்கு ஃப்ரைட் ரைஸ் வெச்சுருக்கேன். நீயே சாப்பிடு. அந்த யானைக்குட்டி யமுனாவோட ஷேர் பண்ணிக்காதே!'' என்று குழந்தைக்கும் மறக்காமல் சொல்லித் தருகிறோம்.

ஒரு நல்ல நாள், கிழமை என்றாலும் எதையும் யாரிடமும் பகிர்ந்து கொள்வதில்லை. ''ஆயா... சுறுப்பா ஒரு வாழைப்பழம் வெச்சு வெத்திலைப் பாக்கு தருவா. அதுக்கு இரண்டு மாடி ஏறிப் போகணும். டைம் வேஸ்ட்!'' என்று குழந்தைகள் முன்னாலேயே சலித்துக் கொள்கிறோம்.

இப்படி, எண்ணங்களையும், பொருள்களையும் யாரிடமும் பகிர்ந்து கொள்ளாமலே வளரும் குழந்தைகள் எதிர்காலத்தில் மன இறுக்கம், வீண் பயம், பதற்றம், அலட்சியம், குரோதம், விட்டுக் கொடுத்துப் போகாமை போன்றவற்றுக்கு ஆளாகி சிதைந்து போகிறார்கள் என்கிறார்கள் மனவியல் நிபுணர்கள்.

வரலக்ஷ்மி விரதமா... வீட்டுப் பெண்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து பூஜை செய்யட்டும். அந்த ஒற்றுமையே வீட்டுக்கு மங்களம் தரும். கோகுலாஷ்டமியா... அது குழந்தைகளுக்கானது. கிருஷ்ணர் வேஷம் போட்டு, அழகாகப் பாதம் வரைந்து... வீடே நந்தகோகுலமாகி விடாதா?

பிள்ளையார் சதுர்த்தி... எருக்க மாலை, அருகம்புல் சார்த்தி, வெல்லக்கட்டி படைத்து எவ்வளவு எளிமையாகப் பூஜை செய்தாலும் விநாயகருக்குக் கொள்ளை விருப்பம்தான்! சுவாமியே இவ்வளவு எளிமை என்றால்... மனிதர்கள் இன்னும் எவ்வளவு எளிமையாகணும் என்று புரிந்து கொள்வோம்.

இந்தப் பண்டிகைகள் எல்லாமே குடும்பத்தில் ஓர் அன்னியோன்யம் ஏற்படவும், மன இறுக்கம் தணிந்து மகிழ்ச்சி நிரம்பவும் உண்டானவை! 'ஷேரிங் அண்ட் கேரிங்' என்று பெரிய பெரிய மனவியல் நிபுணர்கள் சொல்வதேதான் இந்தப் பண்டிகைகளின் அடிப்படைத் தத்துவமும்! கூடிப் பழகிக் கொண்டாடுவோம்! குதூகலமாய் வாழ்வோம்!

அனுஷா நடராஜன்

மங்கையர் மலர்

இந்தியாவின் நெ.1 மகளிர் இதழ்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

பொறுப்பாசிரியர் :
அனுராதா சேகர்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்,
பி.ஆர். ராஜன்,
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 -22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
mangayarmalar@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

மங்கையர் மலர்
இன்டர்நெட் முகவரி :
www.mangayarmalaronline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.225/-
ஆறு மாதம் : ரூ.115/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 39 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

இணைந்து வழங்கும்

ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்

உள்ளம் உயர்ந்திட சக்தி கொடு!



போக்குவரத்துச் சந்தடியும், ஷாப்பிங் பரபரப்பும் நிறைந்த சென்னை தி.நகர் பகுதியில் அமைதியான கல்லூரி... அதுவும் அழகான பெண்கள் படிக்கும் கல்லூரி அமைந்திருப்பதே தனிச் சிறப்புதான்! சங்கர்லால் சுந்தரிபாய்

• சேர்ந்திசைக்கும் குயில்கள்!



"புல்லாங்குழலாக

• மாணவிகளில் ஒரு பிரிவு...



ஷாசுன் ஜெயின் மகளிர் கல்லூரி ஆரம்பித்து ஒரு வருடம்தான் ஆகிறது. ஆனால் அதற்குள் 'தி பெஸ்ட் டிஸிப்ளின்ட் கல்லூரி' என்ற சிறப்பைப் பெற்று விட்டது என அறிந்ததும், மங்கையர் மலரும் ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸும் இணைந்து வழங்கும் 'சக்தி கொடு' நிகழ்ச்சியை எஸ்.எஸ்.எஸ். ஜெயின் கல்லூரியில் தான் நடத்துவது என தீர்மானித்தோம்.

'தமிழே... உன்னை வணங்குகிறேன்' என்று கனிர்க் குரலில் ஆரம்பித்தார் கல்லூரி முதல்வர் தேவகி கிருஷ்ணகுமார்.

''தீய சக்திக்கு என்றைக்குமே துணை போக மாட்டோம்'' என, தங்கள் கல்லூரி மாணவிகள் அனைவரும் உறுதிமொழி எடுத்திருப்பதாகச் சொல்லி, பெருமைபட்ட அவர், அவையோரை வரவேற்றுப் பேசினார்.

மும்பை தொடர் குண்டுவெடிப்பில் பலியான அப்பாவி மக்களுக்கு மௌன அஞ்சலியைச் செலுத்தியதும் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

''ஒரு தாய், தன்னுடைய பெண் குழந்தைக்கு விளையாட பரப்பாச்சி பொம்மையைக் கொடுக்கும் போது கூட... ஒரு துண்டு துணியைத் தந்து, அதற்கு மாராப்பு

• மா. இராமலிங்கம், ருக்மணி பன்னீர்செல்வம், தேவகி கிருஷ்ணகுமார், அனுராதா சேகர்




• முதல்வர் தேவகி

போட்டு விடப் பழக்குகிறாள். ஒரு சின்ன மரத்துண்டுக்குக் கூட, மானம் காக்க நினைக்கும் பண்புள்ள சமூகம் இது" என்று உணர்ச்சிகரமான குரலில் ஆரம்பித்தார் புலவர் மா. இராமலிங்கம்.

பட்டிமன்றங்களில் புகுந்து கலக்கிக் கொண்டிருப்பவர் சிட்லபாக்கம் அரசு மேனிலைப் பள்ளியில் உதவி தலைமையாசிரியராகப் பணிபுரிபவர். அருமையாக இலக்கிய நயத்துடன் உரையாற்றினார்.

நூறு ஆச்சாரியர்கள் ஒரு ஞானிக்குச் சமம்;

நூறு ஞானிகள் ஒரு தந்தைக்குச் சமம்;

நூறு தந்தைகள் ஒரு தாய்க்குச் சமம்.

காலையில் மலர்ந்து மணம் வீசி, மாலையில்

இருந்தது போதும்!..


"மகாபாரதத்தில் பீஷ்மர் சொல்வார் :

"நூறு அந்தணர்கள் ஓர் ஆசசாரியாருக்குச சமம்;



உதிர்ந்து விடும் மலரல்ல பெண்கள். மற்றவர்கள் வாழ்க்கையையும் மலரச் செய்யும் அபார சக்தி படைத்தவர்கள்" என்று பெண்மையின் மேன்மையைப் போற்றிப் பேசப் பேச, பெண்கள் அப்படியே நெக்குருகி அமர்ந்திருந்தனா.

அடுத்ததாக மைக் பிடித்தார் பேராசிரியை ருக்மணி பன்னீர்



ஷோகேஸுக்கு கண்ணாடி கதவு போடாதவர் களுக்கு சீக்கிரமே தூசு படிந்து அடிக்கடி சுத்தம் பண்ண வேண்டியிருக்கும். அதனைத் தவிர்க்க, ஷோகேஸின் நீள அகலத் திற்கு தகுந்தாற் போல, டிரான்ஸ்பரண்ட் கிளாஸ் பேப்பர் வாங்கி செலோ டேப்பின் உதவியால் ஒட்டி விட்டால் நீண்ட நாட் களுக்கு தூசு படியாமல் இருப்பதோடு, பார்க்கவும் அழகாக இருக்கும்.

- வி. விஜயராணி,
கோயமுத்தூர்.

செல்வம். 'மைக்'கை மட்டுமா பிடித்தார்? ஆணாதிக்கச் சமுதாயத்தையும்தான்!

"குப்பைத் தொட்டிகள் எல்லாம் குழந்தைகள் ஈனும் காலமிது. எங்கள் ஊரான வேலூரின் கால்வாயில் இது வரை பதின்மூன்று குழந்தைகளின் பிணங் கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எல் லாமே பெண் குழந்தைகள்! கருவிலேயே அழிக்கின்றனர். கள்ளிப்பாலும் நெல்லும் தந்து கொல்கின்றனர். வரதட்சணைக் கொடுமை செய்து பெண்குலத்தை நசுக்கு கின்றனர். திரைப்படங்களிலும் பாடல் வரிகளிலும் பெண்களைப் படுகேவல மாகச் சித்திரிக்கின்றனர். ஆனால் இவற்றையெல்லாம் மீறி பெண் என்பவள் மிகப் பெரிய ஆக்கப்பூர்வமான சக்தியாக வெளிப்பட்டு, சம அந்தஸ்துக்காகப் போராடிக் கொண்டுதான் இருக்கிறாள்.

Woman-ல் தான் Man அடக்கம்.

Female -ல்தான் Male அடக்கம். அத னால் 33% போதாது. 50% பெற நாம் போராட வேண்டும். அழகாக இசைக்கின்ற புல்லாங்குழலாக நாம் இருந்தது போதும்; இனி போராட வருகிற போர் வாளாக இருப் போம்!" என்றவர் பெண்ணின் அழகை மட்டுமே துதிபாடும் இளைஞர்களைக் கிண் டலடித்தார்.

"ஒரு பையன் சொன்னானாம்...

"என் கண்ணே... கல்பனா...
உன் பாதம் பட்ட இடத்திலே நான் சாதம் போட்டுச் சாப்பிடுவேன்"னு.
அதற்கு அந்தப் பொண்ணு,
"சொந்தமா ஒரு அலுமினியத் தட்டு வாங்கக் கூட வக்கு இல்ல; உனக்கெல் லாம் காதல் தேவையா?"னு கேட்டாளாம்! என்றதும் மாணவிகளின் கரவொலி அவையை அதிர வைத்தது!

நிகழ்ச்சிகளைத் தமிழ்ப் பேராசிரியர் உமா மகேஸ்வரி தொகுத்து வழங்க, மங்கையர் மலர் பொறுப்பாசிரியர் அனுராதா சேகர் நன்றி கூற... இனிய தேசப்பற்றுப் பாடல்களுடன் விழா நிறை வுற்றது.

தொகுப்பு : **மலர்**



பருப்புப் பொடி அரைக்கும் போது இரண்டு ஸ்பூன் ஓமம் சேர்த்து அரைத்தால் மணமாகவும் இருக்கும். ஜீரணத்திற்கும் நல்லது.

- எஸ். மலர்விழி கோவிந்தசாமி,
ஊத்தங்கரை.

என்றும் உங்களுடன்

மங்கையர் மலர்

ஆல்மண்ட் போர்ட் ஆஃப் காலிஃபோர்னியா

இணைந்து வழங்கும்

பாதாம் ரெசிபிஸ் - 64

வாசகர் போட்டி

பருப்பில்லாமல் கல்யாணமா? இது பழைய மொழி!

பாதாம் பருப்பில்லாமல் பண்டிகையா? இது புதிய மொழி!

பாயசமோ, லட்டோ, நாலு பாதாம் பருப்பை வறுத்துச் சேர்த்தால் அதன் ருசியே அலாதிதான்!

மங்கையர் மலர் செப்டெம்பர் இதழுடன் இலவச இணைப்பாக 'பாதாம் ரெஸிபிஸ்- 64!' தரப்படுகிறது.

உங்களுக்குத் தெரிந்த பாதாம் ரெஸிபிகளை... இனிப்போ, காரமோ, சூப்போ, ஐஸ்க்ரீமோ உடனடியாக எங்களுக்கு எழுதி அனுப்புங்க. ஒருவரே எத்தனை குறிப்புகள் வேண்டுமானாலும் எழுதலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் சுவையான, சுலபமான ரெஸிபிகள் இலவச இணைப்பில் இடம்பெறுவதோடு, சன்மானமும் பெறும்! சிறந்த 5 பாதாம் குறிப்புகளுக்கு ஸ்பெஷல் பரிசு உண்டு. நேரம் அதிகமில்லை, க்விக்!

கடைசித் தேதி : 10.8.06



• படம் : ஸ்ரீஹரி


என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
செப்டெம்பர் நவராத்திரி சிறப்பிதழில்...
தவமாய்த் தவமிருந்து...
சரண்யா பொன்வண்ணன்
எழுதும்
பெண்மைத் தொடர் ஆரம்பம்
மனசுக்குள் பூ பூக்கும்... மகரந்த கவரி வீசும்!

படிக்க ஆரம்பிச்சாச்சா..?

கல்கி

6.8.2006 ஆண்டு மலரில் அதிரடி ஆரம்பம்...



பட்டுக்கோட்டை
பிரபாகர் எழுதும்

'ம்!'

திகில் கலந்த குடும்பத் தொடர்!


இன்னும்... பக்கத்துக்குப்
பக்கம் புத்தம் புது பகுதிகளின்
அணிவகுப்பு!



Manchester Towers



Manchester Square



Manchester Perks



Manchester Regent



Manchester Perks - II



Manchester Landmark



Success & Commitment Continues...

MANCHESTER GRAND

M.G. Road (off. Avinashi Road), Coimbatore - 641 006



Inaugural Offer

- No registration charges
- Free car park
- No processing fees for loans*

Possession by March 2008

Grab it... When the opportunity knocks your door.

HIGHLIGHTS : ➡ Earthquake resistant ➡ Air Conditioners for Bed rooms, Drawing and Dinning Halls ➡ Hands free Video door phone ➡ Solar water heater ➡ Generator for all uses ➡ Water Doctor ➡ R.O and Water softener plants ➡ Sewerage treatment plant ➡ Telephone, Intercom and Dish TV ➡ Departmental Stores and Kiosk ➡ Community hall ➡ Badminton / Volley ball court ➡ Table tennis ➡ Billiards ➡ Gymnasium ➡ Games room ➡ Children's park with TV monitoring ➡ Swimming pool ➡ Steam bath ➡ Landscape garden ➡ Servant's bathroom and laundry ➡ Reserved car parking, Visitors car parking ➡ Round the clock security with CCTV ➡ Auto lifts ➡ Wi-Fi enabled ➡ Closer to proposed IT park, Educational Institutions & Hospitals.

All 3 Bed rooms


Cotton City Developers Private Limited

Regd. Office : 1029, Avanashi Road, (Opp.PRS), Coimbatore - 641 018.
Telefax: 4392610, 4393610, 4393710, 4393810 Mobile: 98658 11000, 22000, 33000
Email: manchester@cottoncity.in Website: www.cottoncity.in

ICICI Bank Home Loans
It's really easy!
98430-27321
*only for loans availed from ICICI Bank

ARCHITECTS : SUNDAR SUNDARAM ARCHITECTS, Coimbatore

அழகுக் கோலங்கள்



(21 -1) நேர்ப்புள்ளி
காசி. கி. நிர்மலா
பிரேம் ஆனந்த்
கோவிந்தகுடி.



சுதந்திரதின கொடிக் கோலம்
ஆர். பிரேமா, சென்னை - 3
(9-1) சந்துப்புள்ளி
நான்கு புறமும் (4-1) சந்து



15-9 சந்துப்புள்ளி
- எஸ். மீனாக்ஷி, வேலூர் - 9.

15 புள்ளி 1ல் நிறுத்தவும்.
ஹேமா செல்வராஜ், கடலூர்.





(15-8) சந்துப்புள்ளி
- எஸ். அம்சவல்லி, கரூர்.

- வி. பூமா தேவி,
பெங்களூர்.



சென்ற வருடம் ஆகஸ்டு 7-ம் தேதி அன்று கும்பகோணத்திலிருந்து மதுரையை நோக்கி பஸ்ஸில் சென்று கொண்டிருந்தோம்.



நாங்கள் தோழிகளாக பத்து பேர் இருந்ததால் ஒரே பாட்டு, பஜனை என்று பக்திப் பரவசம்தான். எங்களுடன் பயணித்த பெண்மணி ஒருவர், எங்கள் ஆலய தரிசன டூர் பற்றி விசாரித்தார். பின்னர், அவர் கைப்பையிலிருந்து ஒரு மருதாணி நிரம்பிய 'கோனை' எடுத்தார். எங்கள் குழுவிலுள்ள ஒவ்வொருவருக்கும் அழகான டிசைன்களை கையில் இட்டு அசத்தி விட்டார்.

திருச்சியில் அவர்

இறங்கும் முன்,
"அகிலாண்டேஸ்வரியைக் கண்டிப்பாகத் தரிசனம் செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டு, நண்பர்கள் தின வாழ்த்துகளையும் சொன்னார். கைகுலுக்க முடியவில்லையே என்ற வருத்தம் தோன்றினாலும், (கையில் மருதாணி ஆச்சே), மருதாணி விரல்களால் ஒரு கணபதி படத்தை அவர் கைகளில் கொடுத்து விட்டு அவரது முகமலர்ச்சியைக் கண்டுகளித்து வாழ்த்தி விடை கொடுத்தோம்.

'ஃப்ரெண்ட்ஷிப் டே' அன்று

மனதில் பதிந்த தோழியே!

கிடைத்த அந்தத் தோழி ராதாவை (மும்பை) மங்கையர் மலர் மூலம் இன்று மனமார வாழ்த்தி எங்கள் அன்பான நட்பை அர்ப்பணிக்கிறோம்.

அவர் எங்கள் கைகளில் போட்ட டிசைன் அழிந்து இருக்கலாம். ஆனால் அவர் எங்கள் உள்ளங்களில் போட்ட நட்பு டிசைன் என்றும் அழியாதது!

- உஷாமணி,
பெங்களூர்.



''நான் டிகிரி படிச்சுருக்கேன். பாட்டு, ஓவியம்னு நிறையத் திறமைகள் என்கிட்ட இருக்கு... ஆனா, கல்யாணத்துக்கப்புறம் எல்லாத்தையும் மூட்டைக் கட்டி வெச்சுட்டேன். இப்பவும் உற்சாகமா உயிர்த்தெழ முடியும்தான். ஆனால் குடும்பமோ, குழந்தைகளோ பாதிக்காத வகையில் சாதிக்கிறது எப்படின்னுதான் தெரியலை'' என்று தனித்துவம் தேடித் தவிக்கும் பெண்ணா நீங்க?

சென்னை, விருகம்பாக்கத்தில் உள்ள வெங்கடேஸ்வரா மாண்டிஸோரி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் முதல்வர் என். விஜயாவின் வெற்றிக் கதையைக் கேளுங்க... தன்னால ஆர்வம் பொங்கும்!

ஆர்வத் திரியைத் தூண்டி....

''நான் பிறந்து வளர்ந்தது எல்லாமே சென்னையிலதான். படிப்பை முடிச்சதுமே சிட்டி பேங்கில் வேலை கிடைச்சுது. நல்ல வேலை, கை நிறைய சம்பளம்! ஆனா, எனக்கு அந்தப் பணியில் ஏனோ திருப்தியே இல்லை. 'இது நம்ப இடமில்லை; இன்னும் சாதிக்க வேண்டியது எத்தனையோ இருக்கு' என்ற எண்ணம் எனக்குள் தோன்றிக் கொண்டேயிருந்தது.

''திருமணமானதும் சிட்டி பேங்க் வேலையை உதறிவிட்டு, கணவருடன் பாலக்காடு சென்று விட்டேன். வீட்டுல சும்மா இருக்கும் நேரத்துல, எம்.காம்., ஐ.சி.டபிள்யூ.ஏ. படிச்சேன். இந் நிலையில் தாய்மை அடைந்தேன். கருவில் வளர்வது இரட்டைக் குழந்தைகளானு தெரிய வந்ததும் பூரிச்சுப் போனேன். ஒரே சமயத்துல,



* விஜயாவுடன் ரேணுகா, மீனா

இரண்டு குழந்தைகளைச் சமாளிக்கிற துன்னா, அதிகப்படியாவே தயாராக ணுமே! அதனால குழந்தை வளர்ப்புப் பற்றி, நிறைய புத்தகங்கள் படிச்சேன். இண்டர்நெட்ல ப்ரவுஸ் செஞ்சேன். அதன்படியே வளர்த்தேன்.

"குழந்தைகளோட அறிவுத் திறனையும், துறுதுறுப்பையும் பார்த்த எல்லாருமே, என்கிட்ட டிப்ஸ் கேட்க ஆரம்பிச்சாங்க.. அப்போதான் எனக்கு அந்த எண்ணமே உருவாச்சு; குழந்தை நலம் பற்றி, நமக்குக் கிடைத்த அறிவும் அனுபவமும் மற்றவர்களுக்கும் உதவும்படி ஏதாவது செய்யலாமே! என்று தோன்றியது" என்று சொல்லி நிறுத்தினார் என். விஜயா.



• விஜயா

வீட்டிலே கலந்து பேசியதில், விஜயாவின் மீது கொண்ட அபார நம்பிக்கையால், பெரியவர்கள் எல்லோருமே பச்சைக் கொடி காட்டிவிடவே, பாலக்காட்டிலேயே, 'ப்ளூமிங் பட்ஸ்'



• படங்கள் : ஸ்ரீஹரி

என்ற மாண்டிஸோரி பள்ளியை ஆரம்பித்து விட்டார்! அதில், தனது அனுபவ அறிவையும், கடும உழைப்பையும் கொட்டக் கொட்ட, பள்ளிக்கு மிக விரைவிலேயே நல்ல புகழ் கிடைத்து விட்டது.

விஜயாவின் மாமனார் ஆசீர்வாதம் செய்து கொடுத்த 25,000 ரூபாய் முதலீட்டில், ஒரே ஒரு குழந்தையுடன் தொடங்கப்பட்ட அந்தப் பள்ளியில், இன்று 120 குழந்தைகள் படிக்கிறார்கள்; ஆறு ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள்.

'ப்ளூமிங் பட்ஸ்' பிரபலமாகத் தொடங்கியது. மேலும் ஒரு வெற்றிக் கதவு திறந்தது. விஜயாவின் கவனம் சென்னையின் மீது திரும்பியது. பாலக்காட்டுப் பள்ளியை நிர்வகித்துக் கொண்டே, சென்னையிலும் மாண்டிஸோரி ஆசிரியர் பயிற்சிக்கான ஆலோசகராகப் பணியாற்றுகிறார்.

"மாண்டிஸோரி பயிற்சி என்பது இந்தியாவுக்குப் புதிதல்ல. வேதகாலத்திலிருந்தே நடைமுறையில் இருப்பதுதான். அதுமட்டுமல்லாமல், 'மாண்டிஸோரி' என்றாலே மேல்தட்டு

சுயமேன்மை

"**த**னக்குள் இருக்கும் உற்சாகச் சுடரைக் கொண்டு, மற்றவர்களின் ஆர்வத் திரியையும் தூண்டி விடும் பெண் இவர்" என்று பாராட்டிப் பேச, நிறையப் பேர் முன்வந்தாலும் இதோ இருவரது அனுபவங்கள் மட்டும்!

"நான் ஒரு பட்டதாரி... என் கணவர் நல்ல வேலையில் இருந்ததால், வேலைக்குப் போகும் எண்ணமே வராமல், 35 வயது வரை வீட்டிலேயே இருந்தேன். அந்தச் சமயத்தில்தான் விஜயாவைச் சந்தித்தேன். அவருடைய பேச்சு எனக்கு மிகவும் ஊக்கம் தந்தது. உடனே மாண்டிஸோரி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து விட்டேன். ஆறே மாதங்கள்தான். என் வாழ்க்கையே மாறி விட்டது. என் முன்கோபம் போன இடம் தெரியலை. இப்போது அதே பள்ளியில் சீஃப் கோ-ஆர்டினேட்டராகப் பணிபுரிகிறேன்" என்கிறார் மீனாகுமாரி.

"நான் பி.பி.ஏ., ஃபேஷன் டிஸைனிங் படித்திருக்கிறேன். ஆனால் அதில் எல்லாம் ஏனோ ஆத்மார்த்தமான ஈடுபாடு இல்லை. என் மகன் விஷாக் அர்ஜுனை நல்ல முறையில் வளர்ப்பதற்காக இந்தக் கோர்ஸுல சேர்த்தேன். ஆனால் நானே எதிர்பார்க்காத முறையில் விஜயா மேடத்தால், என் படைப்பாற்றலும், கற்பனைத் திறமும் தூண்டி விடப்பட்டன. நான் இப்போது பொன் வித்யாஸ்ரமம் பள்ளியில் பணிபுரிகிறேன். குழந்தைகளுடன் பழகும் போது, நானும் ஒரு குழந்தையாகவே மாறிவிடுகிறேன்" என்கிறார் துர்காலக்ஷ்மி.

குழந்தைகளுக்கானது என்று தவறாக நினைக்கிறார்கள். ஒரு குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு, உறுதுணையாக இருக்கும் வகையில் நவீனமும், குருகுலமும் இணைந்த பாடத் திட்டங்களை நாங்களே தயாரித்து, பள்ளிகளில் நடைமுறைப்படுத்தியிருக்கிறோம். குழந்தைகளை சுயமாகச் சிந்திக்க வைப்பது, கற்பனை ஆற்றலை மேம்படுத்துவது, தன்னம்பிக்கையும் சாதுர்யமும் உள்ள குழந்தைகளை உருவாக்குவதுதான் எங்கள் நோக்கம்" என்கிறார் விஜயா உற்சாகம் பொங்க!

ப்ளஸ்டூவோ, டிகிரியோ முடித்து விட்டு, மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று தடுமாறிக் கொண்டிருக்கும் பெண்கள், ஒரு வருட இன்டர் கார்டன் ப்ளஸ் குருகுலம் முறையிலான மாண்டிஸோரி ஆசிரியர் பயிற்சி பெற்றால், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கலாம். இதனால் பிரபல பள்ளிகளில் ஆசிரியர் வேலையும் கிடைக்கும். அந்த அனுபவ அறிவை, வீட்டுக்குள்ளேயும் பயன்படுத்தி, குழந்தைகளை சூப்பர் குழந்தைகளாகவும் வளர்க்கலாம்."

ஆசிரியைகளுக்கும் பெற்றோர்களுக்கும், தமிழ்நாடு மட்டுமில்லாது, வெளிமாநிலப் பள்ளிகளுக்கும் ஆலோசகராகப் பணிபுரியும் இவர், இடைப்பட்ட நேரத்தில் பெண்களுக்காக சுயமுன்னேற்ற வகுப்புகளும் எடுக்கிறார்.

"அம்மாக்களுக்கு தன்னம்பிக்கையும் திறமையும் இருந்தால்தானே, பிள்ளைகளுக்கு வழிகாட்ட முடியும்? அதுதான் அடிப்படையிலிருந்தே ஆரம்பிக்கிறேன்" என்கிறார் என். விஜயா.

- ஜி. லட்சுமி, சென்னை - 24.



தலைவலி சமயத்தில் வெதுவெதுப்பான நீரில் எலுமிச்சைச் சாறு, இஞ்சிச் சாறு கலந்து சிறிது உப்பு சேர்த்து பருக உடனே குணமாகும்.

- திருப்பூர் மணிமேகலை மயில்சாமி.



வழங்குகிறோம்
அதிக ஊட்டச்சத்தும், சுவையும், மணமும் கொண்ட
உலகின் முதல்
குண்டு சாம்பார் பருப்பு.
JEYYAM
SAMBAR DHALL
Q3 ADVANTAGE
JEYYAM
முளை நீக்கப்படாததால்
அதிக சுவை, மணம் மற்றும்
ஊட்டச்சத்து கொண்டது.
விரைவாக
வேகும் திறன்
கொண்டது.
சாதாரண பருப்பு 3 கிலோ
ஜெய்யம் குண்டு சாம்பார் பருப்பு
2 கிலோவே போதுமானது.
Asian Dhall Industries Ltd. Omalur By-Pass Road, Omalur, Salem - 636 455, Tamil Nadu.
Ph: 04290-222921 / 22, Telefax: 04290-222911 E-mail: asiandhall@vsnl.net Website: www.asiandhall.com

வாங்க மிஸ்... வாங்க...!

- நீங்கள் கல்லூரி மாணவியா?
- துடிப்பான இளம்பெண்ணா?
- வயது 18- 25க்குள்ளா?
- தமிழில் பிழையின்றி எழுதத் தெரியுமா?
- பத்திரிகைத் துறையில் ஆர்வம் உள்ளவரா...? என்ன... எழுத்தாற்றலும் இருக்கா?

இளம் நிருபர்கள் தேவை!





அப்படின்னா... இந்த வாய்ப்பு உங்களுக்குத்தான்! உங்க ஊர் செய்திகளை உடனுக்குடன் சேகரிக்கும் சுறுசுறுப்புத் தேனீயாகச் செயல்பட அன்புடன் அழைக்கிறோம்... வாங்க மிஸ்.. வாங்க!

உங்களோட சுயக்குறிப்போட, சமீபத்திய புகைப்படத் தோட எங்களுக்கு சுவாரஸ்யமான உங்க ஊர் செய்திகளை கட்டுரை வடிவில் உடனே அனுப்புங்க... பிரசுரமானால் தகுந்த சன்மானம் உண்டு.

மங்கையர் மலரில் மணம் பரப்பவிருக்கும் புதிய பூக்களே... வருக...! வருக... இனிய நறுமணம் எங்கும் பரப்புக!

(ஆர்.)

விண்ணப்பங்கள் அனுப்ப கடைசித் தேதி : 31.8.2006

ஆஹா 50!

● விடியற்காலையில் வெந்நீரில் 1 டேபிள் ஸ்பூன் தேன் கலந்து வெறும் வயிற்றில் குடிக்கவும்.

● முட்டைக்கோஸை நறுக்கி, உப்பு சேர்த்து வேகவைத்து, அரைத்துச் சாறெடுத்து வடிகட்டி, மிளகுப் பொடி சேர்த்துக் குடித்தால் ஊளைச்சதை குறையும்.

தொப்பையைக் குறைக்க...



● வாழைத்தண்டை பச்சையாக மிக்ஸியில் அரைத்து, ஜூஸ் எடுத்து வெறும் வயிற்றில் குடித்தால் உடல் எடை குறையும். தொடர்ந்து 2 அல்லது 3 மாதங்கள் சாப்பிட நல்ல பலன் தெரியும்.

- ஹேமா பகவான்தாஸ்,
சென்னை -64.

கண் எதிரே பனி முடித்த இமயத்தைக் கொண்டு வந்து நிறுத்தினால், யாராவது முழம் போட்டு அளக்க நினைப்பார்களா? அப்படியே அசந்து போய்விட மாட்டார்களோ? சாந்த்படீல், பாபாவை, தூப் கிராமத்து மக்கள் முன் நிறுத்திய போதும் அப்படித்தான் ஆனது.

அந்தக் கண்களில் தெரிந்த காந்தமும், சாந்தமும் அவர்களை அப்படியே மெய்

சரணம் ஷீரடி சாயி!



மறக்கச் செய்தன. பாபாவைப் பற்றி சாந்த்படீல் பக்திப் பரவசத்துடன் விவரிக்கவே... பட்டுப் பாய் விரித்து, பூம்பல்லக்கில் ஏற்றி, பாபாவைக் கொண்டாடினர். என்ன மரியாதை! எத்தகைய வரவேற்பு!!

பசும்பால், நெய் பட்சணங்கள், கனிகள் என எல்லாவற்றையும் கொண்டு வந்து காலடியிலிட்டுப் பணிந்தனர்.

ஆனால் பாபாவுக்கு, பளிங்கு மாளிகையோ, பொன்னோ, பொருளோ எதுவும் உறைக்கவேயில்லை.

கிழிந்த கோணிப் பையையும், ஒற்றைச் செங்கலையும் மட்டுமே எடுத்துக்கொண்டு வழக்கம் போல, தனிமையில் கழிக்கத் தொடங்கினார்.

அவருடைய அற்புதங்கள் சாந்த்படீலின் சமஸ்தானத்திலும் தொடர்ந்தன.

சாந்த்படீலின் உறவுக்காரருக்குத் திருமணம். மணமகள் ஷீரடியைச் சேர்ந்தவர். ஆகவே குதிரைகள் பூட்டிய

அனுராதா சேகர்

பெரிய பெரிய அலங்கார வண்டிகளில் திருமணக் குழு ஷீரடிக்குப் புறப்பட்டது. பாபாதான் திருமணத்தை முன்னிருந்து நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளுக்கு இணங்கி, பாபாவும் ஷீரடிக்குப் புறப்பட்டார்.

திருமணம் வெகு விமரிசையாக நடந்தேறியது. விருந்து, கேளிக்கை என எல்லாம் முடிந்ததும், மணமக்களுடன் திருமணக் குழு, தூப் கிராமத்துக்குத் திரும்பியது. ஆனால் பாபா மட்டும் ஷீரடியிலேயே தங்கி விட்டார்.

'பாபா தங்களுடன் வரப் போவதில்லை' என்பதைக் கேட்டதும், ஏதோ வானமே இடிந்து தலை மீது விழுந்து விட்டது போல, சாந்த்பட்டீலின் குடும்பமே கதறி அழத் தொடங்கியது.

"அய்யோ... பாபா! அங்கே ஒரு சமஸ்தானமே உங்களுக்கு அடிமையாக இருக்க... இந்தப் பட்டிக்காட்டில் நீங்கள் அனாதையைப் போல கிடக்க வேண்டிய கொடுமை நேர்ந்ததே!" என்று கண்ணீர் விட்டு, மன்றாடிப் பார்த்தார்கள்.

"எங்கெங்கோ சுற்றி அலையும் கன்றுக்குட்டி, 'ம்மா!' என்று தாய்ப்பசு குரல் கொடுத்ததும், தாய்மடி தேடி ஓடுவதில்லையா? அதுபோலத்தான்... இனி, என் கடைசி மூச்சு வரை இதே மண்தான்!" என்று உறுதியாகச் சொல்லி விட்டார்.



ஆசீர்வாதத் தொடர்-4

ஷீரடி! வறுமையையும், வெம்மையையும் மட்டுமே அடையாளமாகக் கொண்ட சிற்றூர்! எல்லாமே மண் குடிசைகள். அருகிலேயே கோதாவரி நதி வற்றாது ஓடினாலும், ஷீரடிக்கு ஒரு பயனுமில்லை. வானம் பார்த்த பூமி! மழை பெய்தால் அரை வயிறு நிறையும்; பொய்த்தால் பல உயிர்கள் மாயும்!

ஊரின் மக்கள் தொகையில் பெரும்பான்மையோர் இந்துக்கள்; சிறுபான்மையோர் முஸ்லிம்கள். சண்டையும் போட்டுக் கொள்வார்கள்; சமாதானமாகி சேர்ந்தும் கொள்வார்கள்.

ஊர் நடுவே, ஒரு பாழடைந்த மசூதி. அதை ஒட்டியபடி ஆஞ்சநேயர் கோயில். ஊரின் எல்லையிலே கந்தோபா ஆலயமும் இருந்தது.

முதலில், கந்தோபா ஆலயத்தில்தான் காலடி எடுத்து வைத்தார் பாபா. ஆனால் அங்கே பூசாரியாக இருந்த பகத் மகால்சாபதிக்கு பாபாவைப் பார்த்த உடனேயே எரிச்சல் பற்றியது.

"இது இந்துக்களின் கோயில்னு தெரியாதா? நீ உள்ளே வந்தால் கோயிலோட புனிதமே போயிடும்! பக்கத்துல இடிஞ்சு போன மசூதி இருக்கு... அங்க போ" என்று விரட்டியடித்தார்.

பாபா, ஒரு வார்த்தை கூட பதில் பேசாமல், நகர்ந்தார். மசூதியில் தங்கத் தொடங்கினார்.

கரையான் புற்று வளர்ந்த குட்டிச் சுவர்கள், வெயிலுக்குத் தடையே போடாத மேற்கூரை, மண் தரை... பாபா உள்ளே நுழைந்தார். அங்கிருந்த வேப்பமரத்தடியிலேயே தங்கி விட்டார்.

அந்த வேப்பமரத்துக்கு ஒரு சிறப்பு உண்டு. ஒரு பக்க இலைகள் சர்க்கரையாக இனிக்கும்; இன்னொரு பக்க இலைகள் வேம்பாகக் கசக்கும். (அந்த அபூர்வ வேப்ப மரத்தை இன்றைக்கும் ஷீரடியில் காணலாம்.)

அக்னி வெயில், பனி கொட்டிய குளிர், கடும் மழை என எதையும் பொருட்படுத்தாமல் அந்த மசூதியிலேயே கிடந்தார். (அந்த மசூதியைத்தான் இப்போது 'துவாரகமாயி' எனப் பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.)

ஷீரடி கிராமத்து மக்களுக்கு வயிற்றுப் பாட்டைக் கவனிக்கவே நேரமில்லை. இந்த வழிப்போக்கனைப் பற்றி யார் கவலைப்படப் போகிறார்கள்?

''யாரோ ஒரு முஸ்லிம் பித்துக்குளி... மசூதியே கதின்னு கிடக்குது!'' என்று நினைத்துக் கொண்டார்கள்.

ஆனால் நாட்கள் நகர நகர, பாபாவிடம் ஏதோ ஓர் அற்புத சக்தி குடிகொண்டிருப்பதை, அவர்கள் அனுபவபூர்வமாக உணர்ந்தனர்.

நோயுற்றவர்களைத் தடவிக் கொடுத்தார். சில பச்சிலைகள் தந்தார். என்ன அதிசயம்! அவர்கள் பூரண குணம் அடைந்தனர். நம்பிக்கை இல்லாதவர்களை, நெருங்காதவர்களையும் கூட தூரத்திலிருந்தே உற்றுப் பார்ப்பார். மந்திரம் போட்டது போல பிரச்னைகள் தீர்ந்தன. அவர் நிழல் பட்டாலே, நல்லது நடக்கத் தொடங்கியது.

வெகு விரைவிலேயே, ஏழை பாழைகளின் இறைவன் ஆனார் பாபா! அவர்கள் அன்புடன் தரும் காசு, பொருள் எதையும் அவர் கையால் கூடத் தொடுவதில்லை. கிடைத்த உணவைச் சாப்பிடுவார். குறிக்கோள் இல்லாமல் நடப்பார். மணிக்கணக்கில் யோகநிஷ்டையில் மூச்சுப் பேச்சின்றிக் கிடப்பார்.

தலைமுடி எப்போதும் கலைந்தே கிடக்கும்! சில சமயங்களில் மல்யுத்த வீரனைப் போல கச்சை அணிந்திருப்பார். இரவு நேரத்தில் காலில் சலங்கை கட்டிக் கொண்டு பாடுவார், கூத்தாடுவார்!

மகால்சாபதிக்கு ஒரே ஆச்சரியம்!

'கேட்பாரற்றுக் கிடந்த மசூதியில், பெருங்கூட்டம் கூடுகிறதே! அந்த இஸ்லாமியப் பித்துக்குளி ஏதோ சித்து வேலை எல்லாம் செய்து வசியம் செய்கிறதோ... என்னதான் நடக்கிறது என்று பார்ப்போமே!' என்று வேடிக்கை பார்ப்பதற்காக உள்ளே எட்டிப் பார்த்தார்.

ஒரே ஒரு விநாடியா? அல்லது அதற்கும் குறைந்த நேரமா?

பாபாவின் பார்வை மகால்சாபதியின் மீது பட்டது. கோடி சூரிய வெளிச்சத்தின் ஒளி, ஒன்றுதிரண்டு மகால்சாபதியின் நெஞ்சில் மின்னலாய்ப் பாய்ந்தது.

''பாபா சாயி! நீர்தான் நான் நித்தம் நித்தம் தேடிக் கொண்டிருந்த ஆண்டவன்!'' என்று தம்மையும் அறியாமல் அலறி விட்டார்.

''நான் ஆண்டவன் அல்லன; அல்லாஹ்வின் வேலைக்காரன்!'' என்று அவரை அன்புடன் தழுவிக் கொண்டார் பாபா.

'சாயிபாபா' என்னும் பரம்பொருளுக்கு லட்சக்கணக்கான பக்தர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். ஆனால் அன்றைக்கு, பாபாவின் முதல் பக்தனும், பரம சீடனும் ஆகும் பெருமை, மகால்சாபதிக்கே கிடைத்தது. அந்தப் பேறு அடைய அவர் எவ்வளவு ஜென்மம் புண்ணியம் செய்திருந்தாரோ!

நாங்கள் ஜாம்பியா நாட்டில் 17 வருடங்கள் இருந்தோம். 1996-ம் ஆண்டு என் கணவருக்கு சைப்ரஸ் நாட்டில் வேலை கிடைக்கவே, வீட்டுச் சாமான்களை கார்கோவில் அனுப்பி விட்டு மறுவாரம் நாங்கள் கிளம்புவதாக இருந்தோம்.


எங்கள் இல்லத்தில் பூஜையறை மண்டபத்தில் பிரதானமாக ஷீரடி சாயி பாபாவின் மிகப் பெரிய படம் ஒன்று வைத்திருந்தோம்.



நாங்கள் ஜாம்பியாவை விட்டுக் கிளம்புவதால் அந்த மண்டபத்தை இன்னொரு சாயி பக்தருக்குக் கொடுப்பதாக வாக்களித்து இருந்தோம். ஆனால் அந்த

* மெய்சிலிர்க்க வைத்த விக்ரகம்!

ஷீரடி சாயி பாபா படத்தை மட்டும் நான் என்னுடன் எடுத்துச் செல்ல விரும்பினேன். எவ்வளவோ முயற்சி செய்தும், நன்றாக



கிடைக்காத அற்புதம்!

ஒட்டியிருந்ததால், அதை என்னால் எடுக்க முடியவில்லை. எனக்கோ, ஒரே வருத்தமாகி விட்டது. அன்று இரவு எல்லோரும் தூங்கிய பிறகு நான் மட்டும் அமைதியாக அமர்ந்து ஷீரடி சாயி பிரார்த்தனாஷ்டகம் 108 முறை ஜபம் செய்தேன்.

மறுநாள் ஒரு காரியமாகப் பக்கத்து ஊருக்குப் போக வேண்டியிருந்தது. ஜாம்பியாவில் எப்பொழுதுமே திருட்டுப் பயம் மிக அதிகம். ஆகவே எங்களுடன் வைத்திருந்த நகைகளை ஸ்வாமி மண்டபத்தில் உள்ளே வைக்க டிராயரைத் திறந்தால், என் கண்ணையே என்னால் நம்ப முடியவில்லை. அழகான பஞ்சலோகத்தால் ஆன சிறிய ஷீரடி சாயி பாபா விக்ரகம் ஒன்று அங்கு இருந்தது.

முந்தைய தினம் அனைத்து சாமான்களையும் அனுப்பி விட்டதால், வழக்கமாக வைக்கும் ஊதுபத்தி, கற்பூரம், திரி என்று எந்தப் பொருளும் இல்லாமல் காலியாக இருந்த டிராயரில் அழகே உருவான ஷீரடி சாயிபாபாவின் விக்ரகத்தைப் பார்த்த எங்களுக்கு மெய்சிலிர்த்து வார்த்தைகளே வரவில்லை.

அந்த வீட்டில் 5 வருடங்கள் இருந்திருக்கிறோம். ஆனால் ஒருமுறை கூட இப்படிப்பட்ட ஒரு விக்ரகத்தை அந்த வீட்டில் நாங்கள் கண்டதேயில்லை. யார் கொண்டு வந்து வைத்திருப்பார்கள்? இன்று வரை விடை கிடைக்காத மிகப் பெரிய அற்புதம் இது!

- கீதா ரவிசங்கர்,
ஓமன்.

'பாபா சாயி!' (மரியாதைக்குரிய எங்கள் தந்தையே!) என்று மனமகிழ்ந்து அழைத்தார். அதுவே 'சாயிபாபா' என நிலைத்து விட்டது நிரந்தரமாக!

குழந்தைக்குப் பெயர் வைக்கும் அப்பாவைப் பார்த்திருக்கிறோம்.. அப்பாவுக்கே, பெயர் வைத்த பிள்ளை யாரேனும் உண்டா? ஆம், உண்டு. அவர்தான் மகால்சாபதி!

(பக்தி பெருகும்)

முகம்



உன்
காலடி ஓசை கேட்டவுடன்
அவசரமாய் என்னைக்
கலைத்துக் கொள்கிறேன்
காய்ச்சிய நீரையே காய்ச்சி
வேலை செய்வதாக
பாவனை செய்கிறேன்
என் ஜீவிதமான
வாசிப்பு எனக்கு
மறந்தே போனது
உனக்குப் பிடிக்கும்
உடைகளை உடுத்தி
அவலட்சணமாகிறேன்
நீ AXN பார்ப்பதால்
நான் டீ.வி. என்ற
சதுரப் பெட்டியையே மறுதலிக்கிறேன்
ஆண்களிடம் பேசுவது
பிடிக்காது என்பதால்
மகனிடம் கூட
அளந்துதான் பேசுகிறேன்
கூடலில் கூட
கூலிக்கு மாரடிப்பாய்
இத்தனை வருடங்களில்
நான் யார் என்பதே
மறந்து போனது
கண்ணாடி கூட
என் முகத்திற்குப் பதில்
உன் முகத்தைத்தான்
எப்போதும் காட்டுகிறது.

ஆர்.கே.பொன்னி, காரைக்கால்


ஆடியிலும் பெருகும்
சௌபாக்கியம்...
ISO 9001:2000
CERTIFIED COMPANY
Sakthi
maa
Shree
110 Volts & 60 Hz
available for
USA & CANADA
AdMark
SOWBAGHYA®
T. Nagar, Chennai -17. Ph: 28343547, 28342908. Fax: 42023926.
Erode: Ph: 0424-2260245. Bangalore: Ph: 080 - 25320627.
www.sowbaghya.com E-mail: grind@sowbaghya.com
DISTRIBUTORs: TRICHY : GLADS HOME APPLIANCES [P] LTD. PH: 2702733, 2702844. TANJORE : PH 2702733,2702844. TIRUNELVELY : P.C.FURNITURE LAND, PH 2345806. NAGERKOIL : PH 2345806.TUTICORIN: SATHYA AGENCY PH:234985 NORTH ARCOT : SRI UNNAMALAI MARKETING PH-0416--2263889, 4200709 CUDDALLORE&VILLUPUAM: JJK AGENCY,Ph:9842379131,9894138904. MADURAI: ABHINAV ENTERPRISES. PH: 0452 -2528215. ERODE:THAAI ENTERPRISES, .Ph. 2256666.
Also Available at- DUBAI - CANADA - SINGAPORE - SRILANKA



வெடிக்காத வெல்லச்சீடை!

ஸ்ரீ ஜயந்தி என்றால் பிரதானமான நிவேதனப் பொருள் வெல்லச் சீடை! ஆனால் இதை அலர்ந்து போகாமல், வெடித்துச் சிதறாமல் எண்ணெயில் இட்டு வேகவைப்பது ஒரு கலை. குறிப்பிட்ட பக்குவத்தில் செய்தால், வெல்லச் சீடை அந்தக் கோகுலத்துக் கிருஷ்ணன் மாதிரி, உங்கள் பின்னாலேயே கைகட்டிச் சேவகம் பண்ணும்!

– ஒரு சவால்!

தேவையான பொருள்கள் :

வறுத்த பச்சரிசி மாவு - தலைதட்டி 2 ஆழாக்கு,
வெல்லம் (உருண்டை வெல்லம் சீவிய தூள்) - 1¾ ஆழாக்கு,
உளுந்து மாவு - 2 மேசைக்கரண்டி, நெய் - 1 மேசைக் கரண்டி,
வெள்ளை எள் - 1 மேசைக் கரண்டி, தேங்காய் - 1 மூடி,
ஏலக்காய்த் தூள் - ½ தேக்கரண்டி,
ரீஃபைண்டு ஆயில் - ½ லிட்டர்

செய்முறை :

உளுத்தம் பருப்பை வெறும் வாணலியில் இட்டு, சிவக்க வறுத்து மிக்ஸியில் மாவாக அரைத்துக் கொள்ளவும். வெள்ளை எள்ளை வெறும் வாணலியில் இட்டுப் பொன்னிறமாக வறுத்து எடுத்து வைத்துக் கொள்ளவும்.

பச்சரிசியை இரண்டு மணி நேரம் ஊறவைத்து வடித்து நைஸாக அரைக்கவும். ஈர அரிசி மாவை வாணலியில் இட்டு நன்கு சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ள வேண்டும். மாவு ஆறியதும், ஆழாக்கால் தலைதட்டி இரண்டு ஆழாக்கு மாவை அளந்து எடுத்துக் கொள்ளவும்.

இரண்டு ஆழாக்கு தண்ணீரை வாணலியில் இட்டுக் கொதிக்க வைக்கவும். அதில் ஒரு மேசைக்கரண்டி நெய், துருவிய அல்லது பொடியாக நறுக்கிய தேங்காயைப் போட்டு, அத்துடன் ஒன்றே முக்கால் ஆழாக்கு வெல்லத் தூளைப் போட்டுக் கொதிக்க விடவும். தளதள என்று கொதி வரும் பொழுது வறுத்த அரிசி மாவை அதில் கொட்டிக் கிளறவும்.

மாவு ஆறியபின் வெல்லம் கலந்து பக்குவமான மாவை ஓர் அகலமான தாம்பாளத்தில் கொட்டி, அதன் மீது உளுந்து மாவு, வெள்ளை எள், ஏலப்பொடி இவற்றைப் போட்டு, நன்றாகப் பிசைந்து கொள்ளவும்.

சிறிது நெய் தொட்டுக் கொண்டு ஆறிய மாவை ஓரே சீரான உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.


எண்ணெயை வாணலியில் இட்டுச் சூடேறிய பிறகு சீடை உருண்டைகளை அதில் இட்டுக் கருகி விடாமல் பார்த்து வேக விட்டு எடுக்கவும். மிதமாக அடுப்பு எரிந்தால் போதும்.



- பா. நாகலெட்சுமி, தாம்பரம்.

குணம் பெற்றவர்கள் கூறும் உண்மைக்கதை

நாள்பட்ட பக்கவாதம் குணமானது...



எனக்கு 1½ வருடம் கை, கால் வாதம் (Paralysis) ஏற்பட்டு நடக்க முடியாமல், கை, கால் செயல்படுத்த முடியாமல் பல பெரிய மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வந்தும் பலன் கிடைக்கவில்லை. டீ.வி மூலம் விளம்பரத்தைப் பார்த்து ரப்பானி வைத்திய சாலாவில் சிகிச்சை பெற்று வருகிறேன். இப்போது கை, கால் தூக்க முடிகிறது. நல்ல முறையில் நடக்கிறேன். இப்போது எந்தக் குறையும் இல்லை என்று கூறுகிறேன். - ரமேஷ் மதுரை


நாள்பட்ட ஆஸ்த்துமா இல்லாமல் போனது...



நான் கடந்த 20 ஆண்டுகளாக ஆஸ்த்துமா (Asthma) என்ற நோயால் அவஸ்த்தைபட்டு வந்தேன். தங்களது மருத்துவமனை பற்றி டீ.வி மூலம் தெரிந்து தங்களது விலாசத்திற்கு வந்து என்னுடைய உடம்பை பரிசோதித்து மருந்து கொடுத்து சுமார் 5 மாதம் தொடர்ந்து சாப்பிட்டு வந்துள்ளேன். 3 பாகம் சரியாகிவிட்டது என்று இப்போது எந்த தொந்தரவு இல்லாமல் இருக்கிறேன்.

- சரோஜா, ஆரணி


சோரியாஸிஸ்...



நான் கடந்த பத்து ஆண்டுகளாக சோரியாஸிஸ் நோயினால் அவதிப்பட்டு இருந்தேன். உடம்பில் மீன் செதில்கள் போல் கொட்டும். பல டாக்டர்களிடம் காண்பித்தும் சரியாகவில்லை. கடைசியில் டாக்டரின் விளம்பரத்தைப் பார்த்து சென்றேன். ஆறு மாத காலம் தொடர்ந்து மருந்து சாப்பிட்டதில் சோரியாஸிஸ் என்ற தோல் வியாதி இல்லாமல்போனது. அந்த வடு கூட இல்லாமல் மிக நன்றாக இருக்கிறேன்.

- பத்மநாபன், சென்னை - 56

மூட்டு வலிக்கு *சிறந்த சிகிச்சை*



நான் கடந்த சில ஆண்டுகளாக மூட்டு வலியுடனும், கைகால், குதிகால் வலியிலும் அவதியுற்று இருந்தேன். பல மருத்துவமனைகள் சென்று பார்த்தேன். பலன் கிடைக்கவில்லை. அதன் பிறகு டீ.வி. மூலம் விளம்பரத்தைப் பார்த்தேன். ரப்பானி வைத்திய சாலாவில் மருந்து சாப்பிட்டு வருகிறேன். இப்போது எந்த வேதனையும் இல்லை; நல்ல முறையில் இருக்கிறேன்.

கே.ராஜேஸ்வரி, சென்னை - 116

வெண் தழும்புகள் *மாயமானது...*



நான் சில வருடங்களாக Leucoderma என்ற தோல் நோயினால் அவதியுற்றேன். டாக்டரின் பேட்டியை டீ.வியில் பார்த்து இராயப்பேட்டையில் உள்ள ரப்பானி வைத்தியசாலாவிற்குச் சென்று சில மாதங்கள் மருந்து சாப்பிட்டதில் நான் பூரண குணமடைந்துள்ளேன்.

- அமீர் பாட்சா, தில்லாம்பட்டி

கை, கால் வாதம், மூளை வளர்ச்சிக் குறைவு, லிவர் பெயிலியர், மூலம், நரம்புத் தளர்ச்சி, ஆண்மைக் குறைவு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற யுனானி மருத்துவமனை



ரப்பானி வைத்யசாலா

பழைய 65 / புதிய 139, டாக்டர் பெசன்ட் ரோடு, மீர்சாகிப்பேட்டை,
மார்க்கெட் அருகில், இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன்: 28476969, 28470874

ராஜ் டீ.வி. காலை 8.30 - 9.00
திங்கள் முதல் சனி வரை தமிழன் டீ.வி. மாலை 6.00 - 6.30,
திங்கள் முதல் வெள்ளி வரை தமிழன் டீ.வி. காலை 9.30 - 10.00

மாதந்தோறும் டாக்டர் சையத் சத்தாரின் யுனானி மருத்துவம் மாத இதழ் கடைகளில் கேட்டு வாங்குங்கள்.

கேட்க வைக்கும்!

சித்த மருத்துவம்

கோழி இறகு, ஹேர்பின், பட்ஸ் மற்றும் தீக்குச்சி போன்றவற்றைக் காதில் விட்டால் செவிப்பறையில் ஓட்டை விழும், சீழ் பிடிக்கும். சில காலங்கள் கழித்து அந்தச் சீழினால் அரித்து அரித்து செவிப்பறையே இல்லாது போய்விடும். "அப்படி செவிப்பறை அற்றவர்களுக்கும், சிகிச்சை அளித்து சீழ் வருவதை நிறுத்தி விட்டுக் காது கேட்க வைக்க முடியும்" என்கிறார் டாக்டர் சாமிகிரிசித்தர். இவர் கோவை, காந்திபுரம், கிராஸ்கட் சாலையில் காதொலி நிலைய சித்த மருத்துவ மனையை, கடந்த 40 ஆண்டுகளாக நடத்தி வருகிறார். இவரது மகன்கள் டாக்டர் எஸ். கிரிவாசன், டாக்டர் எஸ். கிரிராஜன். இவர்களும் சாமிகிரி சித்தருடன் சேர்ந்து காதுகேளாமை, ஊமைத்தன்மை உள்ளவர்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்கள்.

"காது கேளாமைக்குப் பல காரணங்கள் உள்ளன. அதில் முக்கியமானது செவிசாய்க்கும் நரம்புகள் பலவீனப்படுதலாகும். இக் கோளாறால் ஏற்படும் காது கேளாமைக்குச் சித்த மருத்துவத்தில் மருந்து இட்டவுடன் காது கேட்கும். சித்த மருத்துவச் சிகிச்சையில் இது நிரந்தரமான தீர்வை அளிக்கிறது. காது கருவி உபயோகித்த, காது கேளாதவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதில்லை. ஆனால் ஊமைத்தன்மை உள்ளவர்கள், காது கருவி வைத்திருந்தாலும் சிகிச்சைக்கு ஏற்றுக் கொள்கிறோம்.

ஏனெனில் ஊமைத்தன்மைக்கு 3½ வருட காதொலி சிகிச்சை அளிப்பதால் அந்தக் காதுக்கு கருவி பொருத்துவதால் ஏற்பட்ட பாதிப்பைச் சரிசெய்து குணப்படுத்த முடிகிறது.

மூளைக் காய்ச்சலினால் சிலருக்கு வாயும் பேச முடியாது; காது கேளாத பிரச்சினையும் ஏற்படும். இதனையும் இங்கு சரிசெய்கிறோம். காதில் சீழ் வடிதல், காது இரைச்சல் போன்ற எல்லாவித காது சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் சித்த மருத்துவத்தில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. சில சமயங்களில் வர்ம சாஸ்திர முறைப்படி நரம்புகளை இழுத்து விட்டு சரிசெய்கிறோம்."

"**நெ**ருக்கமான, ரத்த சம்பந்தமுள்ள உறவு முறைகளில் திருமணம் செய்வதாலும், கருக்கலைப்பு முயற்சி மேற்கொள்வதாலும், குறைப் பிரசவத்தில் குழந்தைப் பேறு ஏற்படுவதாலும், கர்ப்ப காலத்தில் வீரியமுள்ள மருந்துகளைத் தாய் உட்கொள்வதாலும், கரு உருவாகும்



தாம்பூலத்தில் வெற்றிலையுடன் சுக்கு, காய்ச்சுக்கட்டி, கிராம்பு போன்றவை சேருவதால் பல குணங்கள் தெரியும். காய்ச்சுக்கட்டி சேர்த்த தாம்பூலத்தினால் பற்கள் இறுகும். மலக்கிருமிகள் ஒழியும். சுக்கு, கிராம்பு முதலியவற்றால் மனக்களிப்புண்டாகும்; அஜீரணம் நீங்கும்.

- ஆனந்தி ஸ்ரீராம், திருச்சி - 6.



பேச வைக்கும்!

காலத்திலேயே குழந்தைக்கு ஊமைத் தன்மை ஏற்படுகிறது. ஒரு சில குழந்தைகள் 5 அல்லது 6 வயதில் பேசுவதற்கும் வாய்ப்புண்டு. ஆகவே 7 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை மட்டும் சிகிச்சைக்கு ஏற்றுக் கொள்கிறோம். முதலில் அவர்களைப் பரிசோதித்து, குணமாக்க முடியும் என்ற அறிகுறிகள் தோன்றினால் மட்டுமே சிகிச்சைக்கு ஏற்றுக் கொள்கிறோம்.

காதுக்கு மட்டுமின்றி மூக்கு, தொண்டை, மூளை சம்பந்தமாக பலவிதமான மூலிகைகள் அடங்கிய மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. 6 மாதங்களுக்கு ஒருமுறை நேரில் வந்து பரிசோதித்து முன்னேற்றம் கண்டு சிகிச்சை பெற்று மருந்து வாங்கிச் செல்ல வேண்டும். காது கேளாமல், வாய் பேசாமல் இருந்தவர்கள் மருந்து இட்ட உடனே கேட்பதையும், பேசுவதையும் இங்கே தினந்தோறும் காணலாம். அவர்களது பேச்சுத்திறன் படிப்படியாக முன்னேறுவதை சிகிச்சைக் காலங்களில் காணலாம். பூரணமாக நல்ல நிலையை அடைய 3½ வருடங்கள் ஆகும். இதற்காக ஊமைத்தன்மை உள்ளவர்களுக்குப் பேச்சுப் பயிற்சியும் இங்கு அளிக்கிறோம். எத்தனை வருடங்கள் காது கேட்காமல் இருந்தாலும் அவர்களுக்கு ஒரு சத விகிதம் கேட்கும் திறன் இருந்தால் போதும். அதனை எமது காதொலி சிகிச்சை மற்றும் பயிற்சி, பத்தியத்தின் மூலம் 100 சதவிகிதம் குணப் படுத்த முடியும். இதனால் எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படாது,'' என்று கூறுகிறார் டாக்டர் சாமிகிரி சித்தர்.

- பிரபா



உறவுகள் சிறக்க....

வெளியூரிலிருந்த எங்கள் தூரத்து உறவினர் பல வருடங்கள் கழித்து எங்களைப் பார்க்க வந்திருந்தார். மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தோம்.

வெளியில் விளையாடச் சென்றிருந்த என் 8 வயது மகன் வந்திருந்த உறவினரைப் பார்த்து புன்னகை செய்தான். என் உறவினர் மிக ஆச்சர்யமுற்று, "ஏண்டா, படுவா! ரொம்பத் தெரிஞ்ச மாதிரி சிரிக்கிறியே; நான் யாருன்னு தெரியுமா?" என்று கேட்டார். அதற்கு என் மகன், பளிச் என்று, "ஓ! தெரியுமே. நீங்க மொரீஷியஸிலிருக்கிற தாத்தா. அம்மா உங்களோட ஃபோட்டோவைக் காட்டிச் சொல்லியிருக்காங்க! நீங்க சூப்பரா மவுத் ஆர்கன் வாசிப்பீங்களாமே எனக்கு வாசிச்சுக் காட்டறீங்களா?" எனக் கேட்டதும், அவருக்கு மகிழ்ச்சி தாளமுடியவில்லை. என்னை மிகவும் பாராட்டினார்.

வளரும் தலைமுறைக்கு நம் உறவினர்களைப் பற்றி அட்லீஸ்ட் ஃபோட்டோ வாயிலாவது மனதில் பதியவைப்பது ஆரோக்கியமானது!

- இரா. உஷா, வேளச்சேரி.

ஆஹா 50!



சுண்டைக்காய் வற்றலுடன் இரண்டு மோர் மிளகாய் சிறிது பெருங்காயம் ஆகியவற்றை நன்கு வறுத்துப் பொடி செய்து சாதத்துடன் நல்லெண்ணெய் அல்லது நெய் போட்டு உப்பு சேர்த்துச் சாப்பிட்டால் வயிற்றுப் பூச்சிகள் அடியோடு ஒழிந்துவிடும்.

- ஆர். ஜெயலெட்சுமி,
திருநெல்வேலி.



SWIFTEE
Mixer-Grinder
CG Crompton Greaves
EVERYDAY SOLUTIONS
விரைவாக, நிறைவாக, சுவையாக சமைக்க!
CG-DX TURBO
• 750 w பவர்ஃபுல் மோட்டார்
• க்யுக்-கிரைண்ட் பிளேட்ஸ்
• சர்க்யூட் பிரேகர் புரொடெக்சன்
• ஜார்ஸ் வித் ஃப்ளோ பிரேகர்ஸ்
CG-DX
• 550 w பவர்ஃபுல் மோட்டார்
• க்யுக்-கிரைண்ட் பிளேட்ஸ்
• சர்க்யூட் பிரேகர் புரொடெக்சன்
• ஜார்ஸ் வித் ஃப்ளோ பிரேகர்ஸ்
CG-LX
• 500 w பவர்ஃபுல் மோட்டார்
• க்யுக்-கிரைண்ட் பிளேட்ஸ்
• ஓவர் லோட் புரொடெக்சன்
CG-MX
• 500 w பவர்ஃபுல் மோட்டார்
• இன்ஸ்டா-கிரைண்ட் பிளேட்ஸ்
• ஓவர் லோட் புரொடெக்சன்
• காம்பாக்ட் டிசைன்
CG-RX
• 500 w பவர்ஃபுல் மோட்டார்
• இன்ஸ்டா-கிரைண்ட் பிளேட்ஸ்
• ஓவர் லோட் புரொடெக்சன்
• ஸ்லீக் டிசைன்
envisage
இன்றே, உங்கள் அருகிலுள்ள டீலரை அணுகுங்கள்!
Crompton Greaves Limited, Branch Offices: Chennai: 3, MGR Salai (K.H. Road), Nungambakkam, Tel: 044 4224 7500 / 4215 9275. Coimbatore: No. 658-664, Rajalakshmi Plaza, 100 Ft. Road, Gandhipuram, Tel: 0422 252 6453. Madurai: 2, 3 Mangayarkarasi College Road, Paraval. Tel: 0452 266 7771/7697.

அம்மாவுக்கு - 6

பொறுப்புமிக்க குழந்தைகளை வளர்ப்பது எப்படி?

பத்து வயது சுவேதா பள்ளிக்குக் கிளம்ப இன்னும் ஒரு மணி நேரம்தான் இருக்கிறது. அந்த நேரத்தில் இந்த 'ஹோம்-வொர்க்' பிரச்னையைக் கிளப்பி சுவேதா அழுவது விமலாவுக்கு எரிச்சலைக் கிளப்பியது.

"நேத்தே கேட்டேன். அப்போ உன் அத்தை பசங்களோட ஆட்டம் போட்டுக்கிட்டு, 'ஒண்ணுமே ஹோம் வொர்க் இல்லை'ன்னு குஷியா தலையை ஆட்டிட்டு, இப்போ இவ்வளவு பாடம் சொன்னா என்ன செய்யறது? பக்கத்து வீட்டு சுரேஷ் மாதிரி நீயாகவே 'கடகட'ன்னு செய்து முடிச்சா, நான் ஏன் கோபப் படப் போறேன்? உனக்குப் பக்கத்திலே யாராவது உட்கார்ந்து முடுக்கி விட்டுக்கிட்டே இருக்கணுமே! ஏன்தான் இப்படிப் பொறுப்பில்லாம இருக்கியோ...?" என்று நீளமாக விமலா சுவேதாவைக் கோபித்தாலும், பக்கத்தில் உட்கார்ந்து அவளை ஹோம்வொர்க் செய்ய வைத்துக் கிளப்பியதுதான் நடந்தது! இல்லையென்றால், சுவேதா தண்டனைக்குப் பயந்து, 'பள்ளிக்குச் செல்லமாட்டேன்' என்று அடம்பிடிக்கிறாளே!

சின்ன (பெரிய?) குழந்தைகள் இருக்கும் எல்லா வீடுகளிலும் நடக்கும் ஒரு காட்சிதான் இது! திட்டுவோம்; அடிப்போம்; மட்டந்தட்டிப் பேசுவோம். ஆனால் கடைசியில் உதவி செய்து விடுவோம்! இல்லாவிட்டால் பள்ளியிலிருந்து பெற்றோருக்குச் சீட்டு வருமே! டீச்சரைச் சந்திப்பது ஒன்றும் ருசியான அனுபவமில்லையே!

ஹோம்வொர்க் செய்வது சுவேதாவின் பொறுப்பா? விமலாவின் பொறுப்பா? பத்து வயது சுவேதாவுக்குத் தானாகச் செய்யத் தெரியாதா என்ன? ஏன் இந்த நெருக்கடி? பெற்றோர் பலரும் ஆரம்பத்திலிருந்தே குழந்தைகளுக்கு அவர்கள் பொறுப்புகளைச் சொல்லிக் கொடுத்து வளர்ப்பதில்லை. ஆரம்பத்திலிருந்தே என்றால்? இரண்டரை, மூன்று வயது முதல்...! விளையாட வாரி இறைக்கும் பொருட்களை மறுபடி எடுத்து வைப்பது தன் பொறுப்புதான் என்பதை எத்தனை பெற்றோர்கள் சொல்லிக் கொடுக்கிறோம்? விளையாடிய களைப்பில் குழந்தை தூங்கிப்போய் விடும்; நாம் அத்தனையையும், புகார் சொல்லாமல் எடுத்து வைத்து விடுவோம். ஆக, 'வாரி இறைப்பதுதான் என் வேலை; எடுத்து வைப்பது என் வேலையில்லை' என்றுதான் குழந்தை புரிந்து கொள்ளும்! ஐந்தில் வளையாதது, ஐம்பதில் (அம்மம்மா, ஐம்பது என்பது தொலை தூரம்... 'பத்தில்' என்றே கொள்ளலாம்!) வளையுமா? சின்னச் சின்ன வேலைகள் - வெளியிலிருந்து வீடு திரும்பியதும் 'ஷூ'வை அதற்குரிய இடத்தில் வைப்பது, பால் குடித்த தம்ளரை சமையலறை முற்றத்தில் போடுவது, பிரித்த பிஸ்கெட் பாக்கெட்டுடன்



உறையைக் குப்பைக் கூடையில் போடுவது போன்ற செயல்களெல்லாம் மூன்று வயதுக் குழந்தையால் செய்ய முடியாதா என்ன? பெற்றோருக்கு ஓர் எண்ணம் - 'என் குழந்தையை நான்தானே பார்த்துக் கொள்ள வேண்டும்; சரியாகப் பார்த்துக் கொள்ளாவிட்டால், நான் என்ன நல்ல அம்மாவா? அப்பாவா?' இதுதான் தடையாயிருக்கிறது.

சிறு வயது முதலே சுவேதாவுக்கு என்னென்ன பொறுப்புகள் உண்டு என்பதைப் பெற்றோர் கற்றுக் கொடுக்காததால்தான் இந்தச் சிக்கல். இப்போதாவது விமலா சரிசெய்யாவிட்டால், நாளை சுவேதா பெரிய வகுப்புகளுக்குப் போகும் போது, அவளைக் குற்றம் சொன்னால், கோபம் வரும்; எதிர்த்துப் பேச ஆரம்பிப்பாள். விமலாவுக்கு இன்னும் கோபம் வரும். சுவேதா ஒத்துழையாமையைக் கடைப்பிடிப்பாள்.

இதையெல்லாம் தவிர்க்க ஒரே வழி - தன் செயல்களின் பின்விளைவுகளை, சுவேதாவைச் சந்திக்க விடுவதுதான். அத்தையும் குழந்தைகளும் முதல் நாள் இரவு வருவது முன்கூட்டியே தெரிந்திருக்கும். அவர்கள் வருமுன் விமலா சுவேதாவைத் தயார் செய்திருக்க வேண்டும்.

"அந்தை குழந்தைகளோட நீ ஜாலியா





தக்காளிப் பழம் 'கொழ கொழ' என்று மிருதுவாகி விட்டால் தூக்கி எறிய வேண்டாம். ஐஸ் கட்டிகளைப் பாத்திரத்தில் போட்டு ஓர் இரவு முழுவதும் வைத்திருந்தால் அவை கெட்டியாகி விடும்.

சி. வசந்தகோகிலம், சென்னை - 61.

விளையாடணும்னுதான் நான் ஆசைப்படறேன்; ஆனா 'ஹோம்வொர்க்கையெல்லாம் அவங்க வரதுக்குள்ளே முடிச்சுட்டா, கவலைப்படாம விளையாடலாம். இன்னைக்கு ஒருநாள் நீ டீ.வி. பாக்கறதை விட்டுட்டு, அந்த நேரம் ஹோம்வொர்க்கை முடிச்சுடறியா? அப்புறம் இன்னொரு விஷயம், சுவேதா! இன்னைக்கே முடிக்காம, நாளை காலை அவசரத்திலே செய்ய ஆரம்பிச்சா, என்னாலே நிக்க முடியாது. அப்புறம் அழுது, பயந்து பிரயோசனம் இல்லை. ஹோம்வொர்க் செய்யாம போனா ஸ்கூலிலே என்ன நடக்கும்னு நான் உனக்குச் சொல்லத் தேவையில்லே. யோசனை பண்ணிக்கோ!" என்று முதல் நாளே அவள் பொறுப்பை உணர்த்தி, அதைச் செய்யாமல் இருந்தால் சந்திக்க வேண்டிய பின்விளைவுகளையும் விளக்கி எச்சரிக்க வேண்டியது மட்டும் தான் பெற்றோர் பொறுப்பு.

ஒருமுறை பள்ளியில் தண்டனை வாங்கினால், மறுமுறை கவனமாக இருப்பாள். விமலா நினைவில் கொள்ள வேண்டியவை மூன்று : ஒன்று, இப்படிப் பேசும் போது, குரலை உயர்த்திப் பேசாமலிருப்பதும், ஒரேயடியாகக் கெஞ்சிப் பேசாமலிருப்பதும் நல்லது. அக்கறை நிறைந்த குரலில் அழுத்தமாகப் பேச வேண்டும். இரண்டு, முதல் நாள் சொன்ன பின்விளைவுகளை மறுநாள் மாற்றிக் கொள்ளக் கூடாது. 'உதவ மாட்டேன்' என்று முதல் நாள் பேசிவிட்டு, மறுநாள் அழும் குழந்தையைப் பார்க்க முடியாமல், உதவி செய்து விட்டால் உங்கள் முயற்சிகள் வீண்!

காய்ச்சல் வந்தால், கசப்பு மருந்தானாலும், கொடுக்கத்தானே செய்வோம்' மனதைக் கல்லாக்கிக் கொண்டு, குழந்தைக்கு எது நல்லதோ அதைச் செய்வது தான் சிறந்தது. மூன்றாவதாக, ஒரு முக்கியமான தகவல்: குழந்தையின் பொறுப்புகள் என்னென்ன என்று தெளிவாக விளக்கி ('உனக்கு அதைச் செய்ய முடியுமா? அல்லது விருப்பமா?' என்று தெரிந்து கொண்டபின்), செய்யாவிட்டால் இன்னின்ன பின்விளைவுகளை எதிர் நோக்க வேண்டிவரும் என்பதையும் அப்போதே, பயமுறுத்தாமல், அக்கறையாகச் சொல்லி விடுவது குழந்தையைப் பொறுப்பாக நடக்க வைக்கும்.

(தொடரும்)



புதினா ஒரு கையளவு, வேப்பிலை ஒரு கையளவு எடுத்து, ஒரு லிட்டர் தண்ணீரில் காய்ச்சி அரை லிட்டராகச் சுண்டியதும் வடிகட்டி, ஆறவைத்து, அதனுடன் கற்பூரத்தை நன்கு பொடி செய்து கலந்து பாட்டிலில் ஊற்றி வைக்கவும். தினமும் காலையில் இதை முகம், கழுத்து, கை, கால்களில் தடவினால், பொலிவான மிருதுவான சருமம் கிடைக்கும்.

- ஜெ. நாகராஜன், சிதம்பரம்

நாளைய அப்துல்கலாமே-7

ஏற்றம் தரும் எண்ணங்கள்!

'**எ**ண்ணம் போல் வாழ்வு' என்பதன் பொருளை இன்றைய இளையதலைமுறையினர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். நமது எண்ணங்களை உடன்பாடான எண்ணங்கள், எதிர்மறையான எண்ணங்கள் என்று பிரிக்கலாம். வெற்றிகரமான வாழ்க்கைக்கு உடன்பாடான எண்ணங்களின் சக்தி மிகவும் இன்றியமையாதது. மனிதன் தனது வாழ்க்கையின் நிஜங்களை எந்த அளவுக்குத் தெளிவாகப் புரிந்து கொள்கின்றானோ அதனை ஒட்டியே அவனது எண்ணங்களும், வாழ்க்கைக் குணங்களும் வகுக்கப்படுகின்றன.

மனிதன் தனது வாழ்க்கைப் பாதையை அவன் விரும்பும் வண்ணம் மாற்றிக் கொள்ள இயலும் என்ற கண்டுபிடிப்பே இந்தத் தலைமுறையில் வாழ்க்கையைப் பற்றிய மிக முக்கியமான கண்டுபிடிப்பு என்று உளவியலாளர்கள் கருதுகின்றனர். தமது வெற்றிப் பாதையைச் சீரமைத்துக் கொள்ள வேண்டுமென்று நமது இளைய தலைமுறையினர் இட்டமிட்டால் அவர்கள் தங்களுக்குள் உடன்பாடான எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். உடன்பாடான எண்ணம் என்றால் என்ன?



வாழ்க்கையின் ஒவ்வொரு நிகழ்விலும் நல்லவையும், தீயவையும் இருக்குமென்பதைப் புரிந்து கொண்டு, எல்லா நேரங்களிலும் நல்லவையே தலைதூக்கி இருக்குமென்ற நம்பிக்கையே உடன்பாடான அல்லது நன்னம்பிக்கை எண்ணம் எனலாம். அழுகிப் போன பிணத்தைப் பார்த்து முகம் சுளித்த சீடர்களிடம் "அந்தப் பிணத்தின் பற்களைப் பாருங்கள்; எவ்வளவு வசீகரமாக இருக்கின்றன" என்று சொன்ன புத்தமகானின் எண்ணம் உடன்பாடானது. உடன்பாடான எண்ணங்கள் மனத்தில் தோன்ற, தோன்ற நல்லவையே நமது வாழ்க்கைப் பாதையில் தோன்றும். அவையே நமது வெற்றிக்கும் வழிவகுக்கும்.

தங்களது ஒரே கருவில் உருவான இரட்டைக் குழந்தைகளில் ஒருவன் உடன்பாடான எண்ணம் கொண்டவனாகவும், மற்றொருவன் எதிர்மறை எண்ணம் கொண்டவனாகவும் இருப்பதை அறிந்த அவர்களது பெற்றோர்கள் தங்கள் கவலையை ஓர் உளவியல் வல்லுநரிடம் கூறித் தங்களது எதிர்மறை எண்ணம் கொண்ட மகனைச் சீர்செய்ய ஆலோசனைக் கேட்டனர். உளவியல் வல்லுநரும் எதிர்மறை எண்ணம் கொண்டவனுக்கு அவனது எதிர்மறை எண்ணத்தை மாற்ற அதிகமான அன்பைக் காட்டுங்கள் என்று கூறினார். அந்த ஆண்டு வந்த பிறந்த நாளன்று தங்களது அன்பை வெளிப்படுத்த எதிர்மறையான எண்ணங்களைக் கொண்ட மகனின் அறையில் அவன் நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்த கம்ப்யூட்டரைப் பரிசாக வைத்தனர். உடன்பாடான எண்ணங்களைக் கொண்ட

டாக்டர் பே.நா.நாராயண ராஜா



• படம் : ஸ்ரீஹரி

மகனது அறையில் குதிரையின் சாணத்தை வைத்தனர்.

காலையில் கண் விழித்த எதிர்மறை எண்ணங்களைக் கொண்ட மகன் தமது அறையில் இருந்த கம்ப்யூட்டரைப் பார்த்து, "நிறமே சரியில்லை; நல்ல கம்பெனி இல்லை" என்று கோபித்துக் கொண்டான்.

அதே சமயம் குதிரையின் சாணத்தைப் பார்த்த மகனோ, "குதிரையின்





சாணம் இங்கு இருக்குன்னா கண்டிப்பாக, குதிரைதான் பிறந்த நாள் பரிசா கிடைச்சிருக்கும்'' என்று குதிரையைத் தேடி ஓடினான்.

இந்த நிகழ்ச்சியிலிருந்து என்ன புரிகிறது? உடன்பாடான எண்ணங்களைக் கொண்டவர்கள் எல்லாக் காரியங்களிலும் நல்லனவற்றையே பார்ப்பார்கள் என்பதும், எதிர்மறை எண்ணம் கொண்டவர்கள் நல்லவற்றிலும் கூட குறைகளையே பார்ப்பார்கள் என்பதுமே!

பொதுவாக மனிதனிடம் எண்ணங்களை உருவாக்குவது அவர்கள் வளர்ந்த சூழ்நிலையும், அந்தச் சூழ்நிலையை அவர்கள் புரிந்து கொள்ளும் விதமும்தான். "என்னால் என்ன செய்ய முடியும்? நகர்ப்புறச் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைக்காமல் போனது எனது துரதிருஷ்டம். என்னால் நகர்ப்புற இளைஞர்களோடு போட்டி போட இயலாது'' போன்ற எதிர்மறையான எண்ணங்களே பல கிராமத்து இளைஞர்களை முடக்கிப் போட்டுள்ளன. இந்த எண்ணங்களிலிருந்து விடுபட்டு, என்னால் ஏன் முடியாது என்ற கேள்வியை நன்னம்பிக்கையுடன் யோசித்து, இது என்னால் முடியுமென்ற உறுதியை மனத்தில் தோற்றுவித்துக் கொண்டால் நாம் ஒவ்வொருவரும் நாளைய அப்துல்கலாம் ஆவது உறுதி!

உடன்பாடான எண்ணங்களை எவ்வாறு வளர்த்துக் கொள்வது?

மனிதனின் செயல்களுக்கு அடிப் படை அவனது ஆழ்மனத்தில் பதிவாகி உள்ள எண்ணங்களே. நமது ஆழ்மனம் என்பது ஓரே மூடி கொண்ட பெட்டி போன்றது. நாம் பிறந்த பொழுது இந்தப் பெட்டி காலியாகவே இருந்தது. பின்பு நாம் வளர்ந்த பொழுது நாம் பெற்ற பல்வேறு அனுபவங்களின் அடிப்படையில் தோன்றிய எண்ணங்கள், நம்பிக்கைகள், அபிப்பிராயங்கள் இந்தப் பெட்டியை ஆக்கிரமித்துக் கொண்டன. அந்த எண்ணங்களே நமது நடவடிக்கைகளை வழி நடத்திச் செல்கின்றன.

உதாரணமாக, 'நான் நேர்மையானவன்' என்ற எண்ணம் நமது ஆழ்மனப் பெட்டியில் புகுந்திருந்தால் வேறு யாராவது நம்மை நேர்மை இல்லாதவன் என்று சொன்னால் கூட அதை நமது மனம் ஒப்புக் கொள்வதில்லை. 'இதைச் செய்ய என்னால் முடியாது' என்று நமது ஆழ்மனத்தில் பதிவாகி இருந்தால் 'உன்னால் முடியுமென்று' தகுந்த சான்றுகளுடன் யார் கூறினாலும் நமது ஆழ்மனம் ஒப்புக் கொள்ளாது. இந்த ஆழ்மன எண்ணங்களே நாம் எப்படிப்பட்டவர் என்பதையும், நம்மால் எந்த மாதிரியான காரியங்களைச் சாதிக்க முடியுமென்பதையும் தீர்மானிக்கின்றன.

வாழ்க்கையில் வெற்றிகளைக் குவிக்க

தயாரிப்பாளருக்கு யோசனை!

புட்டிப்பால் தருவது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் பாட்டிலை அலம்ப க்ளீனிங் பவுடர்களையோ, டிடர்ஜென்ட் பவுடர்களையோ நாடவேண்டியுள்ளது. குழந்தைகளுக்கான பிரத்யேகப் பொருள்களைத் தயாரிப்போர், 'பாட்டில் வாஷ்' என்றொரு பொருளை அறிமுகம் செய்தால் எண்ணற்ற இளம்தாய்மார்கள் பயனடைவர்.

- விஜயா சுந்தர்ராஜன், திருவள்ளூர்.



வேண்டுமென்றால் நமது ஆழ்மனத்திலுள்ள எண்ணங்கள் உடன்பாடாக அமைந்திருக்க வேண்டும். எதிர்மறையான எண்ணங்கள் இருந்தால் அவற்றின் ஆளுமையால் மேலும் மேலும் எதிர்மறை எண்ணங்களே ஆழ்மனத்தில் குடிபுகுந்து விடுகின்றன. நமது எதிர்மறையான எண்ணங்களை மாற்றி அமைத்துக் கொண்டால் மட்டுமே உடன்பாடான எண்ணங்களை உருவாக்கிக் கொள்ள முடியும்.

"நான் நன்கு தேர்வு எழுத நினைக்கின்றேன். ஆனால் ஆங்கில அறிவு என்னிடம் குறைவாக உள்ளது" என்று நம்மில் பலர் புழுங்கிக் கொண்டிருப்பதை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். இதுவே நமது எதிர்மறை எண்ணங்களின் வெளிப்பாடு. எதிர்மறை எண்ணங்கள் எதனையொட்டி அமைந்துள்ளன என்று உற்றுப் பார்த்தால் நம்மைப் பற்றி நாம் நினைக்கும் கடந்த காலத்தைப் பற்றியே அமைகின்றன என்று அறியலாம். அதாவது 'ஆங்கில அறிவு இல்லை' என்ற எதிர்மறை எண்ணம் நமது கடந்த கால நிலையையே நினைவுக்குக் கொண்டு வருகிறது. கடந்த காலத்தை நினைக்காது எதிர்காலத்தை யோசித்தால் மட்டுமே உடன்பாடான எண்ணம் தோன்றும். "நான் நன்றாகத் தேர்வு எழுத நினைக்கின்றேன். அதற்கு எனது ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்வேன். என்னால் எனது ஆங்கில அறிவை வளர்த்துக் கொள்ள முடியும்" என்ற எண்ணமே உடன்பாடான எண்ணம்.

ஆழ்மனதிலே உடன்பாடான எண்ணங்களை உருவாக்க கீழ்க்காணும் எளிதான பயிற்சியைச் செய்ய நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

உங்களை முதலில் நீங்கள் நம்புங்கள்; நமது எதிர்மறையான எண்ணங்களை மாற்றி உடன்பாடான எண்ணங்களை நம்மால் உருவாக்க முடியுமென்று முதலில் நம்புங்கள்.

அமைதியான சூழ்நிலையில் உங்களது மனமும், உடலும் ஓய்வுடன் இருக்கும் நிலையை உண்டாக்கிக் கொள்ளுங்கள். அத்ற்கு ஏதேனுமொரு தியான முறை உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். எந்த மாதிரியான உடன்பாடான எண்ணங்கள் உங்களுக்குள் ஏற்பட வேண்டுமென மனத்திலே நினைத்துக் கொண்டு, அவ்வெண்ணங்களை மீண்டும் மீண்டும் மனத்திலே கொண்டு வாருங்கள். அந்த எண்ணங்களைச் செயல்படுத்துவது போன்று உங்களது நடவடிக்கைகளை அமைத்து உங்கள் மனத்திலே திரைப்படம் பார்ப்பது போன்று பாருங்கள். இந்தப் புதிய நடவடிக்கைகள் உங்களது வாழ்வின் பகுதியாக மாறி விட்டதாக உணர்வுபூர்வமாக நம்புங்கள். அதில் உற்சாகம் பெருகுவதாக எண்ணி ஆனந்தம் கொள்ளுங்கள். உங்கள் உற்சாகத்தை, ஆனந்தத்தை உங்களுக்குள்ளே சொல்லிக் கொள்ளுங்கள். இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து செய்தால் உடன்பாடான எண்ணங்கள் நமது ஆழ்மனத்திலே பதிவாகிவிடும்.

நமது எண்ணங்களை மேற்கூறிய பயிற்சியின் மூலம் மாற்றும் பொழுது நமது அபிப்பிராயங்கள், நம்பிக்கைகள் மாறி நம்மிடையே புதிய எதிர்பார்ப்புகளை உருவாக்கிவிடும். இந்த மாற்றமே நமது செயல்திறமைகளை மாற்றியமைத்து வாழ்க்கையின் வெற்றிப் பாதையைக் காட்டும்!

(அடுத்த இதழில் நிறைவுறும்)



சாவிக் கொத்தில் அடிக்கடிப் பயன்படுத்தும் முக்கியமான சாவி மட்டும் பளிச்சென்று தெரிய அதன் மீது நெயில் பாலீஷ், அல்லது பெயிண்டைத் தடவி விடலாம்.

- எஸ். விஜயா சீனிவாசன், திருச்சி - 13.

MERIT 2006
Bring your Mark Sheet

CSC®

COMPUTER EDUCATION

ISO 9001:2000 Certified Institution

மதிப்பெண் சான்றிதழுடன் வாருங்கள்! ஸ்காலர்ஷிப் பெற்றுச் செல்லுங்கள்!

Scholarship upto 75%

On total Course Fee



Students can now use their Marksheets as cheque

10th | 12th | Dip. | UG

OPEN FOR LIMITED CANDIDATES ONLY
ON FIRST COME FIRST SERVE BASIS

The Only Largest Network with 325 Centres

For more details contact nearest CSC centre or Call: Chennai-24312593, Others-9842324027 / 9364112272

ஒரு பக்கக் கதை

இங்கே என்ன நடக்குது?

"அடேய் விசு! அந்த 'காலிங்பெல்' கம்பியை எடுத்து விட்டாயா? சனியன்... 'லோலோ'னு நேரம் காலம் தெரியாமல் சத்தம் போடும். அப்படியே பால் பாக்கெட் போட அந்த மஞ்சள் பையைக் கதவுத் தாழ்ப்பாளில் கட்டி வை. பையனிடம், 'பெல்' வேலை செய்யாதுனு சொல்லு."

"சின்னம்மா! நாளையிலிருந்து மத்தியானம் மூணு மணிக்கு மேல் வேலைக்கு வந்தால் போதும். விடியற்காலையில் வர வேண்டாம்."

"ஷீலா! இந்த சீசரை அந்தப் பக்கம் கட்டி வையேன்."

"விசு! மளிகைக் கடையில் 'லிஸ்ட்' கொடுத்து விட்டு வந்தேன். நீயே போய் சாமான்களை வாங்கி வந்துடு. அவன் எப்போதும் நட்ட நடுப்பகலில் வந்துதான் கழுத்தறுப்பான்."

"ஷீலா! கொஞ்ச நாளைக்கு காலை டிபனை காண்டீனில் பாத்துக்கறயா?"

"அம்மா! நீ கவலைப்படாதே. டிபன் மட்டும் இல்லை. சாப்பாடு வேணு மானாலும் அங்கேயே பார்த்துக்கறேன்." - இது ஷீலா.

"எல்லாம் சரிதான். அடிவயிற்றிலிருந்து கத்தி, பட்டியல் போட்டு ஊரைக் கிளப்புவானே அந்தக் கீரைக்காரனை என்ன செய்யப் போறே? பின்பக்கத்து வீட்டில் முகம் தெரியாத மனிதர் காரை 'ரிவர்ஸ்' எடுக்கும் போது ஏகமாகச் சத்தம் கேட்குமே?" அம்மாவைச் சீண்டினான் விசு.

"ஆமாம்டா... என்ன செய்யறது?"

"போதும்! இது ஓவரா தெரியலை? குழந்தை எல்லாத்துக்கும்தான் பழகணும். நீயே குட்டிச்சுவராக்காதே!" - இது அப்பா.



என்ன நடக்கிறது? ஒன்றுமில்லை. எங்கள் வீட்டுக் குட்டிப் பேத்தி அஞ்சு, இரவெல்லாம் விழித்திருந்து, விளையாடி, அழுது சுறுசுறுப்பாக இருந்து விட்டுப் பகல் வேளையில்தான் தூங்குகிறாள். அதற்கான ஏற்பாடுகள்தாம் இவை.

சந்தேகமானால் வந்து பாருங்களேன். சாரி! இரவு ஏழு மணிக்கு மேல் வாங்களேன்.

- கிருஷ்ணவேணி ரங்கநாதன், சென்னை -41.

தன்னம்பிக்கைப் பெண்

விதியை வென்ற வினிதா!

“அப்போ எனக்கு பன்னிரண்டு வயசிருக்கும். அம்பாடுப்பாளையத்துல எட்டாவது படிச்சுக்கிட்டு இருந்தேன். திடீர்னு கடுமையான காய்ச்சல் அடிச்சுது. கால் மூட்டுக்கள்ல தளர்வு நோய் ஏற்பட்டு, என்னால நடக்க முடியாமப் போச்சு!' எத்தனையோ டாக்டர்ஸ் கிட்ட காட்டினாங்க! என்னென்னமோ வைத்தியம் செஞ்சாங்க! ஆனா, இது பிறவியிலேயே வர்ற மூட்டு நோய்ங்கிறதால எந்தச் சிகிச்சையும் பலனளிக்கலை. இரண்டு வருஷம் கட்டிலே கதின்னு கிடந்தேன். எவ்வளவு நேரம்தான் புக்ஸ் படிக்கிறது... டீ.வி. பார்க்கிறது? என் வயசுப் பொண்ணுங்க எல்லாம் ஓடியாடிப் போறதை ஜன்னல் வழியா பார்க்கும்போதுதான் கால்கள் செயலிழந்த தன் கொடுமையே தெரிய ஆரம்பிச்சுது.

''ஒருநாள் தற்செயலா டீ.வி.யில யாரோ ஒரு பெண்மணி, ஃபேப்ரிக் பெயிண்டிங் பற்றிச் சொல்லிக்கிட்டிருந்தாங்க. எனக்குள்ளே என்னவோ ஒரு ஆர்வம் சுடர் விட்டுச்சு. நான் ஏற்கெனவே நல்லா வரைவேன். “அம்மா... சும்மா இருக்க போரடிக்குது! எனக்குத் துணியும் வர்ணங்களும் வாங்கித் தாங்க!''ன்னேன். மறுநாளே வாங்கித் தந்தாங்க. அப்போ கூட நான் நினைக்கலை - அந்தத் தூரிகை என்னை ஒரு கலை உலகத்துக்கே அழைச்சிட்டுப் போகப் போகுன்னு'' என்று சொல்லும் வினிதா, இன்று சித்தூர், பாலக்காடு என கேரளாவில் பல இடங்களில் தன்னுடைய கலைப் பொருள்களை வைத்து, நிறையக் கண்காட்சிகளை நடத்துகிறார். வீட்டிலேயே இளம் சிறார்களுக்கு ஃபேப்ரிக் பெயிண்டிங், கிளாஸ் பெயிண்டிங் வகுப்புகள் எடுக்கிறார்.



''எனக்கு இரண்டு குழந்தைங்க... மகன் விமல் மேனன் பி.ஏ. மியூசிக் படிக்கிறான். பொண்ணுதான் வினிதா! ஆசையா, அருமையா வளர்த்த மகள், கூண்டுல் அடைச்ச கிளி மாதிரி ஆனதும் நாங்க ரொம்பவே நொந்து போனோம். விதி

ஆஹா 50!

காய்கறி வாங்கும் போது முள்ளங்கி, காலிபிளவர், நூல் கோல், பீட்ரூட், முட்டைகோஸ் இவற்றை இலைகளுடன் வாங்க வேண்டும். இலைகளைப் பொடியாக அரிந்து பாசிப் பருப்பு சேர்த்துக் கூட்டு



யோட கோரக் கரங்கள் என்னதான் என் குழந்தையை நசுக்கிப் பிடிச்சாலும், கலை தேவதை வாரி அணைச்சுக்கிட்டு இப்ப அவளுக்குப் புதிய வாழ்க்கையைக் கொடுத்துட்டா" என்கிறார் வினிதாவின் தாய் லதாமேனன்.

"ஃபேப்ரிக், கிளாஸ், கேன்வாஸ், செராமிக் பெயிண்டிங்ஸ், மெட்டல் எம்பாஸிங், பாட்பெயின்டிங், ஃப்ளவர் மேக்கிங் என தூள் கிளப்பிக் கொண்டிருப்பவர், சமீப காலமாக ஜுவல்லரி டிஸைனிங், டிரஸ் டிஸைனிங், எம்பிராய்டரியையும் விட்டு வைக்கவில்லை. வினிதாவின் ஆர்ட் வர்க் சேலைகள் ரூபாய் முந்நூறிலிருந்து, இரண்டாயிரத்து ஐந்நூறு வரை விற்பனை ஆகின்றனவாம்!



"எனக்கு இப்போ பதினேழு வயசாகுது! நாலு சுவருக்குள்ள முடங்கிப் போயிருக்க வேண்டிய என் வாழ்க்கை, இந்தக் கலையினால சந்தோஷமா போயிட்டிருக்கு. போகுமிடமெல்லாம் நல்ல வரவேற்பு இருக்கிறதனால, பொள்ளாச்சி, கோவை போன்ற இடங்களிலும் கண்காட்சி நடத்த திட்டமிட்டிருக்கேன்" என்று சொல்லும் வினிதாவின் வருங்கால ஆசை என்ன தெரியுமா?

"லட்ச ரூபாய் செலவில் நவரத்தினக் கற்கள் பதிச்ச தஞ்சாவூர் பெயிண்டிங் செய்யணும்" என்பது தான்!

சின்னப் பெண்ணின்... வண்ண ஆசை பலிக்கட்டும்!

- தத்தமங்கலம் முத்துலட்சுமி

உங்கள் ஊரிலும் இதுபோன்ற 'தன்னம்பிக்கைப் பெண்கள்' இருந்தால் எழுதி அனுப்புங்களேன்! - ஆர்.

செய்தோ அல்லது சூப் செய்தோ சாப்பிட்டால் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. காய்கனிகளில் உள்ள வைட்டமின்களை விட இதில் அதிக சத்து இருக்கிறது.

- சேலூர், அ. சாந்தி.



ஆஹா 50!

தாய்ப்பால் நன்றாகச் சுரக்க...

ஆகஸ்ட் முதல் வாரம் சர்வதேச தாய்ப்பால் வாரமாக அனுசரிக்கப்படுகிறது. தாய்ப்பால், சரிவர சுரப்பதில்லை எனப் புலம்பும் தாய்மார்களுக்காக சில எளிய பாரம்பரிய வழிகள் :

- கேழ்வரகை ஊறவைத்து, மறுநாள் ஈரத்துணியில் கட்டி முளை கட்டவும். பின் முளை விட்டதை மாவாக்கி, எள்ளும் வெல்லமும் கலந்து சாப்பிடவும்.
- வெள்ளைப் பூண்டை தோலுரித்து, தட்டி, நெய்யில் வதக்கி, பாலில் வேகவைத்து, சர்க்கரை சேர்த்து உட்கொண்டால் தாய்ப்பால் பெருகும்.
- அரிசியுடன் வெந்தயத்தைச் சேர்த்துக் கஞ்சியாக்கி, காய்ச்சி உண்டு வரவும்.
- முருங்கைக்கீரையை தினமும் சூப்பாகவோ, பொரியலாகவோ சாப்பிட்டு வந்தால் பால் நன்கு சுரக்கும்.
- சுரைக்காயுடன் பாசிப்பருப்பு, சீரகம் சேர்த்து நெய்யில் தாளித்து கறியாக்கி ருசிக்கலாம்.
- முற்றிய பப்பாளிக்காய்களை பொரியல் (அ) கூட்டாகச் சமைத்து உண்ணலாம்.
- தாய்ப்பால் குறைவாக இருந்தால், தாய்க்கு பூண்டுத் தாள், ஒரு வெங்காயம், சீரகம் தாளித்து வதக்கி, பூண்டு ரசத்துடன் சாதத்தில் பிசைந்து சாப்பிடலாம்.
- சீரகத்தையும், வெல்லத்தையும் சம அளவு கலந்து சாப்பிட்டு வந்தால் பால் பெருகும்.



- உ. சுல்த்தானா, கீழக்கரை.



மாசமாயிருக்கிற
நாத்தனாருக்கு
இடுப்பு வலியோட
மூட்டு வலி...
வயசான
மாமியாருக்கு
தீராத
மலச்சிக்கல்...
அடிக்கடி
களைப்பாகும்
டயபட்டிக்
மாமனார்...
சோர்வாய்
வீடு திரும்பும்
குழந்தைகள்...
RAMANA'S
NEW
RAMANA'S
சத்து மாவு
அதெல்லாம்
பழைய கதை..!
இப்ப இது
ஆரோக்கியமான
குடும்பம்
குடும்பத்தினர்அனைவரும் ஆரோக்கியமாய் வாழவும், துடிப்புடன் செயல்படவும் தேவையான போஷாக்கு நிறைந்த சத்துமாவு, பதினைந்து வகையான தானியங்களின் சரியான கலவையான ரமணாஸ் சத்துமாவு. தினந்தோறும் விரும்பிய வகையில் உண்டு வந்தால் உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு
For queries - ramanasfoodproduct@yahoo.com, Ph: 94433 25618

'மெகா சீரியலால் நன்மை கூட உண்டா?' என எரிச்சல்படாமல், கண்டமேனிக்கும் வீட்டில் சீரியல் ஓடிக் கொண்டேயிருப்பதால் விளையும் நன்மைகளைப் பார்ப்போமா?



● மாமியார், மருமகள் சண்டை வரவே வராது. மாமியார் கண், டி.வி.யில் இருப்பதால் மருமகள் செய்யும் வேலையில் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு தப்பு கண்டு பிடிக்க மாட்டாள்! அல்லது வைஸ்வர்ஸா!

● உறவினர் விருந்தினர் தொல்லை கிடையா! சீரியல் மிஸ்ஸாயிடுமே என்று யாருமே வெளியில் போவதில்லை. (ஒரு லோட்டா காப்பி மிச்சம்...)

● சமையல் கன்றாவியாக இருந்தாலும் யாரும் எதுவும் சொல்வதேயில்லை. கண் டி.வி.யில், தியானம் சீரியலில் இருப்பதால் உப்புச் சப்பில்லாத (அ) டபுள் உப்புக் கண்டமாக இருந்தாலும் கமெண்ட்டே அடிக்காமல் உள்ளே தள்ளிக் கொண்டிருப்பார்கள்.

சீரியலின் சீரான பலன்கள்!

● அடாவடியாக வசனங்களை ஈஸியாக மனப்பாடம் செய்து, ப்ரேக்கில் வீட்டிலிருப்பவர்களைத் திட்டி, சீரியல் எஃபெக்ட்டை வீட்டிலும் கொண்டு வந்து மகிழலாம்.

● திருமண வீட்டுக்குப் போய் பரிசு, மொய், பஸ், ஆட்டோ, கார்... எனத் தண்டச்செலவு ஆகாது. சீரியலில் காண்பிக்காத திருமணமா? மெயின் திருமணம், கிளைத் திருமணம், பொய்த் திருமணம்.. என வகை வகையாகச் செய்து பின்றாங்களே... ஸோ, பார்த்து என்ஜாய் பண்ணவும்.

● விலாவாரியாக சீரியலில் எல்லாவற்றையும் காண்பிப்பதால் வீட்டிலிருக்கும் குழந்தைகள் அதிமேதாவிகள் ஆவதற்கு ஃபுல்ஸ்கோப்! முதலிரவு, சீமந்தம், சாவு, ஒப்பாரி... என எல்லா சடங்குகளையும் விரல் நுனியில் வைத்து விளாசித் தள்ளிடுமே வாண்டுகள்!

● கொட்டக் கொட்ட விழித்துப், பார்ப்பதினால் திருட்டுத் தொல்லை இராது. திருடனும் சீரியலில் ஐக்கியமாகி விட்ட எபிஸோட்களும் உண்டு.

● விளக்கேற்றினால் சுபம் என்பது போய் 'பூதம்' என்றாகி விட்டது பல வீடுகளில். பூதம், (கமெடியர் பூதம்), முகூர்த்தம், ஆனந்தம்... என ஆர்ப்பரித்து விட்டு கோலங்களையும் போட்டு விட்டுத்தான் இரவு சமைக்கலாயா



வேண்டாமா என யோசிக்கிறார்களாம். அதனால், பல வீடுகளில் பட்டினிதான்! சாப்பிடாமல் இருந்தால் சிக்கென்று இருப்பார்களே...

● 'பெண் என்பவளுக்குள் இத்தனை ஆங்காரமா? இப்படியெல்லாம் கூட சூழ்ச்சி பண்ணுவாளா? எங்க காலத்தில் இது இல்லையே' என, திரௌபதி, சீதை, கண்ணகி போன்றோர் கதறுகிறார்களாம். பெண்களின் நெற்றிக் கண்ணைத் திறந்து விடுகிறதே சீரியல்...

● அழுமூஞ்சி பார்த்துத்தான் சிரிப்பே! கரண்ட் கட், கேபிள் ரிப்பேர் என்றால் வீட்டிலிருப்பவர்கள் ஏதோ லட்ச ரூபாயை கோயம்பேட்டில் கொத்துமல்லி, வாழைத்தண்டு வாங்கும்போது தொலைத்து விட்டது போல் படுசோகமாகக் காட்சித் தருவார்கள். டிவியில் சீரியல் வந்த உடனேயே ஓடிப் போய் (பி.டி. உஷா வெட்கி விடுவார்) ஐக்கியமாகி விடுவார்கள். கோடி ரூபாய் கொடுத்தாலும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்கள் என்பது உறுதி!

● பெரிய மேஜர் ஆபரேஷன், சிசேரியன்... இதெல்லாம் சிரிச்சுக்கிட்டே நடக்கிறதாம். அனெஸ்தீஷியாவே தேவையில்லையாம். சீரியலைப் போட்டுவிட்டு ஆபரேஷன் செய்வதால் வலியே தெரிவதில்லையாம். டாக்டர், பேஷண்ட் இருவருமே மெய்மறந்து சீரியலை பார்த்துக் கொண்டு, பிரேக்கில் கதை(!)யை விவாதித்துக் 'கொல்'கிறார்களாம்.

● ஒரு முப்பது நிமிட சீரியலினால் (ஏகப்பட்ட இடை'வலி'களுடன்) இத்தனை பலனா? சீதை சமத்தாக சீரியல் பார்த்துக் கொண்டிருந்தால் ராவணன் அபகரித்திருப்பானா? லட்சுமண ரேகையைத் தாண்டியிருப்பாளா? கண்ணகியும் கோவலனுடன் சீரியல் பார்த்திருந்தால் மாதவியைத் தவிர்த்திருக்கலாமே... இப்படியெல்லாம் கூட தாய்க்குலங்கள் சொல்லிச் சொல்லிக் கண்ணீர் வடிக்கிறார்களாம்...

இதுவரை பார்க்காமலிருப்பவர்கள் உடனே சீரியல் பார்க்கவும். பார்த்துக் கொண்டிருப்பவர்கள் ப்ளீஸ் கன்டின்யூ...

லதா சேகர்

சேமிக்க வேண்டும் இப்படி!

வரிக்குதிரையின் குட்டி, பிறந்து ஒரு மணி நேரத்திலேயே தலைநிமிர்ந்து நின்று விடுவது போல், நாமும் சீக்கிரமாகவே வாழ்க்கையில் தலைநிமிர்ந்து விட வேண்டும். உடனே, சேமிப்பை ஆரம்பித்து விட வேண்டும்.

எறும்புகள், தமக்கு வேண்டியதை விட அதிகமாகவே சேகரித்து விடுகின்றன. அது போல், நாமும் பணம் சம்பாதிக்கும்போதே சுறுசுறுப்பாகச் சேமிக்க வேண்டும்.

தாய் கங்காரு, தான் குதிக்கும்போது கூட தனது பையில் உள்ள குட்டியைப் பாதுகாக்கிறது. அதுபோல், நமது சேமிப்பின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்.

ஓர் அணிலானது, தான் சாப்பிடும் பருப்புகளை மரப்பொந்துகளின் வெவ்வேறு இடங்களில் மறைத்து வைக்கிறது. அதுபோல், நமது சேமிப்பை அநேக விதங்களில் சேமிக்க வேண்டும்.

ஒரு கொக்கானது, தண்ணீரில் மணிக்கணக்காக தமது இரைக்காகக் காத்திருப்பது போல், நாமும் சேமித்துவிட்டு நல்ல பயனுள்ள தொகைக்காகக் காத்திருக்க வேண்டும்.

ஒட்டகச்சிவிங்கியோ தனக்குள் உள்ள நான்கு பைகளில் ஆகாரத்தைச் சேமித்து வைத்து, தனக்குப் பசியெடுக்கும் போது அதிலிருந்து எடுத்துக் கொள்கிறது. அதுபோல், நமக்கு வேண்டும்போது கிடைக்கும்படியாக நமது சேமிப்பு இருக்க வேண்டியது மிகவும் முக்கியம்.

நமக்குத் தேவையான போது கிடைக்கும் சேமிப்பே, மிகச் சிறந்த சேமிப்பாகும்.

- கு. கல்யாணிபாய்,
திருநெல்வேலி - 1.



சிறுகதை

கூடு



"என்ன நான் சொல்றது விளங்குதா?" என்றாள் கோமதி கணவனிடம்.

"விளங்குது!" என்றான் பன்னீர்.

"நேரா போறீங்க; உங்க தம்பிகிட்ட வீட்டுல சரிபாதி என் பங்கு; அதுக்குண்டான பணத்தை எனக்குக் குடுன்னு கேக்கறீங்க!"

"அவன்ட்ட ஏது அவ்வளவு பணம்? உடனே குடுன்னா எப்படிக் குடுப்பான்?"

"அந்தக் கவலை உங்களுக்கு எதுக்கு? அது உங்க தம்பியோட கவலை; நகை நட்டை வித்தோ, அடமானம் வைச்சோ புரட்டட்டுமே; நம்ம 'வினோத்தை மெடிக்கல் காலேஜ்ல சேர்க்கணுமா வேண்டாமா?" என்று முறைத்தாள் கோமதி.

பன்னீருக்கு தனியார் நிறுவனத்தில் எழுத்தர் வேலை. அந்த ஒற்றை வருமானத்தை வைத்துத்தான் வாழ்க்கையை ஓட்ட வேண்டும். வாடகை வீடு. மத்தியதர குடும்பங்களுக்கே உண்டான அத்தனை சிரமங்களும் அவனுக்கு உண்டு. இந்த நிலையில் தன் பையனை மருத்துவக் கல்லூரியில் சேர்க்க, படிக்க வைக்க ஏராளமான பணம் தேவைப்பட்டது. அந்தச் சமயத்தில் தான், அவன் மனைவி அந்த யோசனையைக் கூறினாள்.

பன்னீருடன் கூடப் பிறந்தவன் சதாசிவம். கிராமத்து வீட்டில் வசிக்கிறான். குத்தகைக்கு நிலங்களை ஒப்புக்கொண்டு, சாகுபடி செய்து இத்தனை மேனி என்று நில உரிமையாளருக்கு நெல் அளந்தது போக, உபரியை வைத்து ஜீவனம் செய்பவன். அவனுக்கு மூன்று பெண் குழந்தைகள். வறுமையான வாழ்க்கைதான்.

அவன் குடியிருக்கும் ஓட்டு வீடும் பின்புறம் உள்ள எட்டு செண்ட் கொல்லையும்தான் இவர்களது ஒரே பூர்வீகச் சொத்து. பன்னீருக்கும் சதாசிவத்துக்கும் சமபங்கு. அந்த வீட்டுப் பணத்தைத்தான் இப்பொழுது கேட்கிறாள் கோமதி. வீடும், மனைக்கட்டும் எப்படியும் இரண்டு லட்சத்துக்கு விலை போகும். ஆளுக்கு ஒரு லட்சம். அந்த ஒரு லட்சத்தை வைத்து பையன் படிப்புச் செலவை ஓரளவு ஒப்பேற்றி விடலாம். பையன் டாக்டராகி விடுவான்.





ஆர்.லதா

நினைக்கவே உடம்பெல்லாம் சந்தோஷத்தில் புல்லரித்தது பன்னீருக்கு.


ஆனால் ஒரு லட்சம்? அவன் தம்பியிடம் இல்லாத தொகை. இருந்தால் கொடுத்து விடுவான். வீட்டை விற்று விட்டால் தம்பியும் அவன் குடும்பமும் எங்கே போவார்கள்? கோமதியிடம் சொல்லிப் பார்த்தான். அவள் பிள்ளைப் படிப்பிலேயே குறியாய் இருந்தாள். இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்தான்.

"நாளை வெள்ளிக்கிழமை ஒருநாள் லீவ் எழுதிக் கொடுங்க. சனி, ஞாயிறு சேந்தாப்ல லீவு வந்துடும். கிராமத்துக்குப் போய் பாகப்பிரிவினையை முடிச்சுட்டு, பணத்தை வாங்கிக்கிட்டு வந்துடலாம். என்ன?" என்றாள் கோமதி.

விண்டு வைத்த தோசை தொண்டையில் இறங்கவில்லை பன்னீருக்கு. தலையசைத்து விட்டுப் புறப்பட்டு அலுவலகம் சென்றான்.

கோமதி தானும் சாப்பிட்டு விட்டு கொல்லைப்புறம் வந்து உட்கார்ந்தாள். பாத்திரம் கழுவும் நீர் வீணாகாமல் இருக்க இரண்டு வாழைக்கன்று. ஒரு செம்பருத்தி, ஒரு குரோட்டன்ஸ், நான்கு





வீட்டில் பல்லித் தொல்லையா? வசம்பைப் பொடித்து பல்லியிருக்கு மிடம் வைத்து விடுங்கள். வசம்பு வாசனை பிடிக்காமல் பல்லிகள் வாக் அவுட் செய்து விடும்!

- என். சுந்தரி,
சென்னை - 78.

கனகாம்பரச் செடிகள் வைத்திருந்தாள். செடிகளும், வாழைக்கன்றுகளும் நன்கு செழித்து, பார்க்க அழகாய் இருந்தன. காற்றில் அவை அசைந்தாடும் அழகைக் கண்டாலே கவலையெல்லாம் பறந்து புது உற்சாகம் பிறந்துவிடும் கோமதிக்கு. இன்றும் அப்படிப் பார்த்துக் கொண் டிருந்தவளுக்கு சட்டென்று ஞாபகம் வந்தது. குரோட்டன்ஸ் செடியிடம் சென்று பார்த்தாள். பச்சையாய் மஞ்சள் ரேகை ஓடிய இலைகள் நெகிழ்வாய் அடர்ந்திருந்தன. பக்கத்து வீட்டுச் சுவரோரம் செல்லும் சிறிய கொப்பை நோகாமல் விலக்கிப் பார்த்தாள். வெறும் கூடு மட்டும்தான் இருந்தது.

இரண்டு மாதங்களுக்கு முன் இரண்டு குருவிகள் வந்து வந்து அந்த குரோட் டன்ஸ் செடியில் அமர்ந்தன. உற்றுப் பார்த்ததில் அலகில் இணுக்கு இணுக்காய் தேங்காய் நார், வைக்கோல், ஒட்டடை என்று மாறி மாறி இருப்பது தெரிந்தது. ஒரு வாரம் கழித்துச் செடிக்குத் தண்ணீர் ஊற்றும்போது, பார்த்தபொழுது இரண்டு இலைகளை இணைத்து, கீழே அடைத்து கூடு கட்டியிருந்தது. பஞ்சு போல் மிருது வான கூடு. மழை வந்தால் நனையாதிருக்க மேலே, மூன்றாவதாய் ஓர் இலையை வளைத்து மடக்கி மூடி போல் கவிழ்த் திருந்தது. போக வர காம்போரமாய், தாராளமாய் இடம் விட்டுக் கட்டி இருந் தன அந்தக் குருவிகள் இரண்டும். அசந்து போய் விட்டாள் கோமதி. அன்றிலிருந்து விசேஷக் கவனம் எடுத்து, செடிப் பக்கம் யாரும் போய்க் கலைத்து விடாமல் கவன மாய்க் காவல் இருந்தாள். மறு வாரம் மூன்று முட்டை விட்டிருந்தது குருவி.

இருபது நாட்கள் கழித்து மூன்று குஞ்சு களும் பொறித்து விட்டன. மூன்றும் நீண்ட அலகுடைய வாயைத் திறந்த வண்ணமே உட்கார்ந்திருக்கும். குருவிகள் இரண்டும் ஒன்று மாற்றி ஒன்று பறந்து வந்து ஊட்டி விட்டுத் திரும்பப் பறந்த வண்ணம் இருந்தன. அலுக்காமல் சலிக்கா மல் இதே வேலைதான். இப்படியும் கூட குஞ்சுகளைப் போற்றி, ஊட்டி வளர்க்க முடியுமா என்று மலைத்து நின்றாள் கோமதி.

நாளொன்றுக்கு ஒருமுறையேனும்



சேனைக்கிழங்கை வேகவைத்து தோலுரித்து, சிறு குச்சியால் ஆங்காங்கே குத்தி விடவும். காரத் தூள், உப்பு, ஒரு ஸ்பூன் புதினா சாஸ், ஒரு ஸ்பூன் தக்காளி சாஸ், சேர்த்து சேனைக்கிழங்குடன் கலந்து இருபது நிமிடம் ஊறவிடவும். பின்பு வதக்கி எடுத்தால் சூப்பர் சுவையாக இருக்கும்.

- வி.எஸ்., பெங்களூர்.



கடையிலிருந்து ரெடிமிக்ஸ், இன்ஸ்டன்ட் பொடிகள், மஞ்சள் பொடி, கரம் மசாலா பொடி வாங்கியவுடன் பாக்கெட்டைத் தேவையான அளவுக்குத் திறந்து அப்படியே பாட்டிலில் வைத்துப் பயன்படுத்தினால் அந்தப் பொடியைப் பயன்படுத்தும் காலக்கெடு இன்னும் உள்ளதா, முடிந்து விட்டதா என்ற குழப்பம் வராது. இல்லாவிட்டால் பொடியை பாட்டிலில் கொட்டி, (எந்த தேதி, மாதம் வரை) பயன்படுத்தலாம் என்ற குறிப்பைப் பாட்டிலின் மீது எழுதி ஒட்டி விடவும். காலக்கெடு முடிந்த பொருள்களை உபயோகித்தால் உணவு நச்சுத்தன்மை ஆகிவிடும்.

- எஸ். சரோஜா ஸ்ரீதர்,

சென்று அந்தக் கூட்டையும், மூன்று பறவைக் குஞ்சுகளையும் இரையூட்டும் குருவிகளைப் பார்த்து விடுவாள். இந்த ஒரு வாரமாய் பிள்ளையின் மேற்படிப்பு, பணப் பிரச்னை, என்று ஒரே சிந்தையாய் இருந்து விட்டதில் கூட்டைப் பார்க்க மறந்து விட்டாள். இப்பொழுது பார்த்தால் கூடு காலியாய் இருந்தது.

"என்னம்மா செடியையே வெறிச்சுப் பார்த்திட்டிருக்கே?" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள். தயிர்க்காரி செண்பகம் நின்றிருந்தாள்.

"ஒண்ணுமில்லே செம்பகம், குருவி கூட்டுல மூணு குஞ்சு இருந்துச்சா. இப்ப காணும்!"

"ரெக்கை மொளச்சுப் பறந்திருக்கும். தாய்க்குருவி அழைச்சுட்டுப் போயிருக்கும். பறக்குறதுக்கு அதுகளைப் பழக்க வேண்டாமா?"

"வேற எந்தக் குருவியாச்சும் இந்தக் கூட்டுல வந்து முட்டை இடுமா செம்பகம்?"

"இன்னொருத்தர் கூட்ல பூர்ரதோ, புழங்கறதோ, குழப்பம் உண்டு பண்ணி கலைக்கறதோ, அதுகள்ட்ட கெடையாதும்மா. ரோஷம் சாஸ்த்திம்மா அதுகளுக்கு. தன் குஞ்சுகளுக்குத் தங்க, தானே கூடு கட்டிக்குமே தவிர அடுத்தவங்க கூட்ட நெனச்சுக் கூட பாக்காதுங்க!"

என்று சொல்லிவிட்டு செண்பகம் பாத்திரத்தில் மோரை ஊற்றி விட்டுச் சென்று விட்டாள்.

வெகுநேரம் வரை பிரமை பிடித்தவள் போல் அந்தக் கூட்டையே வெறித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் கோமதி. பின் எழுந்து சென்று மோரைக் கொண்டு போய் மூடி வைத்து விட்டு, வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்பினாள்.

கணவன் அலுவலகத்துக்கு எண்களைச் சுழற்றி, மறுநாள் அவனை விடுப்பு எழுதிக் கொடுக்க வேண்டாம் என்று சொன்னாள்.

"ஏங்கோமதி, நாளைக்கு ஊருக்குப் போய், தம்பிகிட்டே வீட்டை வித்து பணம் வாங்கணும்னியே!"

"வேண்டாம்ங்க; அந்தக் கூட்டைக் கலைக்க வேணாம்."

"பையன் படிப்பு?"

"என் நகை இருக்கு. அலுவலகத்துல கடன் வாங்கலாம். என் தம்பிகிட்ட கேட்டுப் பார்க்கறேன். எப்படியோ சமாளிச்சுடலாம். நீங்க இனிமே பாகப் பிரிவினை பத்திப் பேச வேண்டாம். நாளைக்கு லீவும் போட வேண்டாம். என்ன? விளங்குச்சா?"

"விளங்குச்சு" என்றான் பன்னீர். ஆனால் அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ●

Anandam

Haven of Happiness

ஆனந்தமிகு வாழ்விற்கான எழில்மிகு குடியிருப்பு



கோவையின் நிலப்பரப்பை அழகிய கட்டிடங்களால் அலங்கரித்திட வேண்டும் என்ற எமது இலட்சியத்திற்கு கிடைத்த மற்றுமொரு பரிசு - ஆனந்தம்.

திருச்சி சாலையில், இராமநாதபுரம் சந்திப்பிலிருந்து செல்லும் நஞ்சுண்டாபுரம் ரோட்டில் அமைந்துள்ள ஆனந்தம், உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் ஒரு ஆனந்தமிகு வாழ்வை வழங்கும் ஓர் எழில்மிகு குடியிருப்பு.

கண்ணையும், கருத்தையும் கவரும் கட்டிடக்கலை வடிவமும், உட்புறத் தோற்றமும், அதிநவீன வசதிகளும் பெற்றுள்ள ஆனந்தம், அனைவரும் சொந்தமாக்கிடும் விலையில் கிடைப்பது இதன் மற்றுமொரு சிறப்பு.

உங்கள் இல்லக் கனவுகளை நனவாக்கிட, ஆனந்தம் குடியிருப்பில் உங்கள் இடத்தை முன்பதிவு செய்யுங்கள். வாழ்நாள் முழுவதும் ஆனந்தம் அனுபவியுங்கள்.

ஆனந்தம் வழங்குவது

• 1.5 ஏக்கர் நிலத்தில், மிக உன்னதமாக வடிவமைந்த 72 அடுக்குமாடி குடியிருப்புக்கள் • மூன்று பிளாக்குகளில் 2 / 3 படுக்கையறை குடியிருப்புக்கள் • லே-அவுட் முழுவதும் தார் சாலைகள் • நீச்சல் குளம் • ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட 'லவுன்ச்' • உடற்பயிற்சிக்கென ஜிம் • லிஃப்ட், பொது இடம் மற்றும் குடியிருப்புகளுக்கென எப்பொழுதும் தயார் நிலையில் ஜெனரேட்டர் • தண்ணீரை தூய்மையாக்கும் வசதிகள் • சோலார் வாட்டர் ஹீட்டர் மற்றும் கீசர் • சென்ட்ரல் கேஸ் விநியோகம் • குடி இருப்போர் மற்றும் விருந்தினருக்கான கார் பார்க்கிங் வசதிகள் • 24 மணி நேர பாதுகாப்பு • இன்டர்காம் • தீயணைப்பு ஏற்பாடுகள் • அழகுபடுத்தப்பட்ட பூங்கா.

Modular Kitchen Free

வீட்டுக் கடனுதவி வழங்குவோர் :
• HDFC லிட். • SBI ஹோம் லோன் • கனரா வங்கி
• எல்.ஐ.சி. ஹவுசிங் பைனான்ஸ்

Our representatives:
Chennai : Ms. Gita Ramesh, Ph : 044 - 24463063
Muscat : Ms. Latha Natarajan, Ph : +96895296698

Project Developers : M/s Auromira

COVAI PROPERTY CENTRE (INDIA) PRIVATE LIMITED

C 601, Pioneer Apartments, 1075 Avinashi Road, Coimbatore - 641018. Ph : 91-422-6572625,
Telefax : 2216867. Mobile : 099944-51119. Email : covaiprop@vsnl.net Website : www.covaiprop.com

AN EX-SERVICEMAN'S ENTERPRISE

Manipal/CPC/06

சொல்ல விரும்புகிறோம்!

✤ 'நகைப் பாதுகாப்பு' இலவசப் புத்தகத்தை நகைப் பெட்டி அருகில் பாதுகாப்பாக வைத்துள்ளேன்.
திருச்செங்கோடு,
எஸ். உஷா சுதர்சன்.

✤ பத்தாயிரம் ரூபாய் பரிசு பெற்ற 'விடியல்' சிறுகதை நெஞ்சைப் பிசைந்தது. கண் முன்னே காட்சிகளை விவரிக்கும் தத்ரூபமான கதை. என்னையறியாமல் கண்களில் நீர் சுரந்தது.
ஹைதராபாத்,
உஷா முத்துராமன்.



"கட்டாயம் இதுதான்!"

✤ பெண்கள் சுயமரியாதையை விட்டுக் கொடுக்காமல், மதிக்க வேண்டியவர்களை மதித்து, போற்ற வேண்டியவர்களைப் போற்றி அகந்தை கொள்ளாமல் வாழ வேண்டும் என்பதை 'ஒரு வார்த்தை' நெற்றிப் பொட்டில் அடிப்பது மாதிரி சொல்கிறது. உண்மையும் அதுதானே!
மேலகிருஷ்ணன்புதூர், பிரபாலிங்கேஷ்.

✤ 'அம்மா' தாய்மையின் சிறப்பை வெளிப்படுத்தியது. இதுபோன்ற ஆழமான சிறுகதையை மங்கையர் மலரில் மட்டுமே காண முடியும்.
மன்னார்குடி, எம். ரேவதி.

✤ மங்கையர் மலரைப் போற்ற அகராதியில் வார்த்தைகளைத் தேடுகிறேன். மேலும், மேலும் மெருகேறி வருகிறாள் எங்கள் தோழி மங்கை(யர் மலர்).
செம்பனார்கோயில், செந்தமிழ்ச்செல்வி.

✤ 'அருண் சரண்யா'வின் 'அருகருகே அந்நியராய்' சிறுகதை அருமை! பல வீடுகளில் இதுதானே யதார்த்த நிலை!
பெங்களூர், ராதா நரசிம்மன்.

✤ விரதம், டயட் என்ற பெயரில் பட்டினி கிடப்பது 'பித்தக் கல் சேமிப்பு(?)க்குக் காரணமாகிவிடும் என்ற விவரம் அதிர்ச்சியைத் தந்தது!
ஸ்ரீரங்கம், எஸ். கௌரிலக்ஷ்மி.

✤ 'ஆஹா டிப்ஸ்' அனைத்துமே 'ஓஹோ' என இருக்கிறது. டிப்ஸுக்குப் பரிசு வேறு! ஜமாயுங்கள் பெண்களே, ஜமாயுங்கள்! உங்கள் காட்டில் மழை! ம். "இத பாருங்க இத பாருங்க, இது நல்லா இல்லே! கட்டாயம் இதுதான்! இதற்குத்தான் கிடைக்கும்! நான் எழுதிட்டேன்." இப்படி மனைவியின் நச்சரிப்பு எங்களை பாடாய்ப் படுத்துகிறது.
சென்னை - 24,
எம். சேக் அப்துல்லா.

✤ டான்ஸில் என்றால் தொண்டையில் வலி, விழுங்க முடியாமல் கஷ்டம் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். இந் நோயைப் பற்றி முழுமையான தகவல்கள் கிடைத்தன. பாராட்டு!
பெருமாள்பட்டு, விஜயா சுந்தர்ராஜன்.

✤ சரணம் ஷீரடி சாயி தொடர்ந்து படித்து வருகிறேன். பல சம்பவங்கள் பிரமிக்க வைப்பதாக உள்ளன.
கோயமுத்தூர், கோமதி அனந்தமணி.



பைபாஸ் அறுவை சிகிச்சை என்பது பழைய காலம்
Oxymed Hospital I Chennai's first non-surgical treatment center for heart problems.
உலகின் பல நாடுகளில் இதய நோய்களுக்கு பைபாஸ் அறுவை சிகிச்சை மாற்றப்பட்டு ஓஸோன் மற்றும் கிலேஷன் சிகிச்சைகள் மூலம் குணமளிக்கப்பட்டு வருகிறது. நாங்களும் இந்த நவீன சிகிச்சை முறையை கையாண்டு பலருக்கு நல்வாழ்வு அளித்துள்ளோம். திறமைமிக்க, தொழில்பக்தி கொண்ட எங்களின் உழைப்பு உங்களின் ஆரோக்கியமான வாழ்விற்கு உத்திரவாதம்.
செலவு குறைவான 64 SLICE ANGIO CT Scanning, உலகின் அதிவேகமான Non-Invasive Coronary Scan
அறுவை சிகிச்சையில்லை, வலி இல்லை, நீண்ட நாள் மருந்துகள் இல்லை. ஆஸ்பத்திரி சிகிச்சையில்லை.
உங்களின் பழைய மெடிக்கல் ரிப்போர்ட்டுடன் வரவும்.
Chief Doctor: B. Ayaz Akber
M.D., A.M (Italy), DAC, MACCG, C.O.T (Canada)
Consultant - Chelation & Bio Oxidative Therapy
Timing : Week days 8 a.m to 7 p.m
Sunday 10 a.m to 5 p.m
OXYMED HOSPITAL
PRIVATE LIMITED
CLOSE TO YOUR HEART
ஈரோடு :
H-94, 5-வது மெயின் ரோடு, பெரியார் நகர்,
ஈரோடு – 638 001. போன் : 0424 - 3257999.
சென்னை : கல்யாண் மருத்துவமனை, 4-வது தளம்,
நெ.6, 1-வது மெயின்ரோடு, கஸ்தூரிபா நகர், அடையார்,
சென்னை. போன் : 044-4211 5211 / 2445 2753 / 2445 1615
பெங்களூர் : 320/E, 9வது A மெயின் ரோடு,
40வது கிராஸ், 5வது பிளாக், ஜெய நகர்,
பெங்களூர் – 560 041. போன் : 26533573 / 74



"கவலைப்படாதீங்கத் ஜமாய்ச்சுடலாம்!"

சென்னை மைலாப்பூர் பகுதியில், 'சுபம் அப்பளம்' என்ற பெயரில் அப்பளம், வற்றல் விற்பனை செய்து கொண்டிருந்தார் கணேசன். பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், அவரது நெடுநாள் வாடிக்கையாளர்கள் சிலர் கேட்டுக்கொண்டதனபேரில் காண்டிராக்டில் எடுத்து கல்யாணங்களை நடத்திக் கொடுக்க ஆரம்பித்தார். அவரது சிறந்த சேவைக்கு வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பு கிடைக்கவே, அவரது பெயரே இப்போது 'சுபம் கணேசன்' என்று ஆகிவிட்டது.


சுமார் ஆயிரம் கல்யாணங்களை வெற்றிகரமாக நடத்திக் கொடுத்திருக்கும் சுபம் கணேசனைச் சந்தித்து, தங்கள் வீட்டுத் திருமண ஏற்பாடுகள் குறித்து உரையாடுகிறார்கள் சென்னையைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி - காந்திமதி தமபதி.

கிருஷ்ணமூர்த்தி : சுபம் கணேசன் சார்! எங்க வீட்டுக் கலியாணத்த நீங்கதான் நல்லபடியா நடத்தித் தரணும்'' என்று கிருஷ்ண மூர்த்தி தம்பதி ஆரம்பித்தவுடனேயே, ''எங்கிட்டே அந்தப் பொறுப்பை விட்டுடுங்க! நீங்க எதைப் பத்தியும் கவலைப் படாதீங்க! ஜமாய்ச்சுடலாம்!'' என்று உற்சாகமாகச் சொன்னார் சுபம் கணேசன்.

அடுத்த சில நிமிடங்களில் கடச்சுட காப்பி வந்தது. ஒரு வாய் காபபியைக் குடித்த காந்திமதி, "காப்பி ரொம்பப் பிரமாதம்!" என்று சர்டிஃபிகேட் வழங்கினார்.

கணேசன் : கலியாணத்திஎ போதும், ஒவ்வொரு வேளையும் இதே மாதிரி கும்ப





கோணம் டிகிரி காப்பி தான் கொடுப்போம்! கலியாண சத்திரத்தில் ஒரு தனி ஸ்டாலே இருக்கும். அங்கே காப்பி, டீ இரண்டும் எப்போ வேண்டுமானாலும் கிடைக்கும். கூடவே குழந்தைகளுக்கும் ஸ்பெஷலா பூஸ்ட் கிடைக்கும்.

கிருஷ்ணமூர்த்தி : வாய்க்கு ருசியா காப்பி கிடைச்சுட்டாலே, சாப்பாடு டேஸ்டா இருக்கும்னு எல்லாருக்கும் ஒரு நம்பிக்கை வந்துடும்.

சுபம் கணேசன் : மங்கள வாத்தியம் தொடங்கி, கட்டுச் சாதம் வரை எல்லாம் நாங்க பார்த்துப்போம். எங்க ஏற்பாட்டுல நடக்கிற கல்யாணங்களில் பொண்ணு வீட்டுக்காரங்க கூட மாப்பிள்ளை வீட்டுக்காரங்க மாதிரியே ரொம்ப ரிலாக்ஸ்டா இருப்பாங்க.

காந்திமதி : சீர் பட்சணமெல்லாம் எப்படி? அங்குமணி சாமான்கள்?

சுபம் கணேசன் : எந்தெந்த ஐட்டம் எத்தனை எத்தனை வேணும்னு சொல்றீங்களோ, அதற்கு ஏற்றாற் போல தயார் பண்ணி அட்டைப் பெட்டிகளில் போட்டு, கிஃப்ட் பேக் பண்ணி வச்சுடுவோம். நீங்க மண்டபத்துல வந்து இறங்குகிறபோது, உங்க ரூமில் தயாரா இருக்கும். கூடவே அங்குமணி சாமான்கள் கொண்ட பெட்டியும் இருக்கும்.



காந்திமதி : எதிர்பார்த்ததை விட அதிகமா விருந்தினர்கள் வந்தால் சமாளிக்கறதுக்குத் தயாரா இருப்பீங்க இல்லையா?"

சுபம் கணேசன் : அந்த விஷயத்தில நான் ஒரு பாலிசி வெச்சிருக்கேன். ஒரு கலியாணத்துக்கு எத்தனை பத்திரிகை அடிச்சு விநியோகம் பண்ணறீங்களோ, அதைப் போல ஒண்ணரை மடங்கு விருந்தினர்கள் மொத்தம் வருவார்கள் என்பது ஒரு கணக்கு. முதல் முறை சந்தித்து என்னை புக் பண்ணுறபோது எத்தனை பத்திரிகை அடிக்கப் போறீங்க என்று கேட்டுக் கொள்வேன். கலியாணத்துக்கு முன்னால் குறைந்தது இரண்டு

ஜெயஸ்ரீராஜ் நினைவுச் சிறுகதைப் போட்டியில் ரூ. 1000/- பெறும் பிரசுரத்துக்குத் தேர்வான கதைகள் :

தேடி வந்த திருமகள்	- நவமணி சுந்தரம், சிங்கப்பூர்.
பொடி விஷயம்	- லக்ஷ்மி கெங்காதரர், திருச்சி - 2.
திருப்தி	- உமாதரணி, பெங்களூர் - 68.

வாழ்த்துக்கள் தோழியரே!

(ஆர்.)

தடவையாவது நான் கஸ்டமரைச் சந்தித்துப் பேசி விடுவேன். இதெல்லாம் போக, மண்டபத்தில் எங்கள் சூப்பர் வைசர் ஒருத்தர் இருப்பார். அவர் வருகிற கூட்டத்தை வைத்து எத்தனை பேர் சாப்பிடுவார்கள் என்று கணக்குப் போட்டு என்னிடம் சொல்லிவிடுவார். எனவே எதிர்பாராதவிதமாக நிறைய பேர் வந்து விட்டாலும், எங்களால் சமாளித்து விட முடியும்.

மங்கையர் மலர் வெள்ளி விழாவையே எடுத்துக் கொள்ளுங்களேன். மதிய உணவுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு பேர்கள் வருவார்கள் என்று கணக்குப் போட்டிருந்தோம். ஆனால் விழா நிகழ்ச்சிகளுக்குக் கூடிய கூட்டத்தைப் பார்த்து விட்டு உடனடியாக மூவாயிரத்து ஐந்நூறு பேருக்கு சாப்பாடு தயாரித்து விட்டோம். எல்லாரும் திருப்தியாகச் சாப்பிட்டார்கள்.

கிருஷ்ணமூர்த்தி : நாங்கள் திருவான்மியூரில் மண்டபம் பார்த்திருக்கிறோம். மண்டப அலங்காரம் மிகவும் பிரமாதமாக இருக்க வேண்டுமென்று மாப்பிள்ளை, பெண் இரண்டு பேருமே சொல்லி இருக்கிறார்கள்.

சுபம் கணேசன் : கவலையே படாதீங்க! ஜமாய்ச்சுடலாம்! சில சமயங்கள்ல, எதிர்பார்க்கிற மாதிரி மண்டபங்கள் அமைவதில்லை. அப்போ, நாங்க பிரமாதமா இன்டீரியர் டெகரேஷன் பண்ணி, மண்டபத்தின் கெட்-அப்பையே டோட்டலா மாத்திடுவோம். வண்ணத் துணிகள், தெர்மோகோல் வொர்க், காய்கறிகளில் சிற்பம், நீர் ஊற்று என்று இதற்கென்றே பல ஐட்டங்கள் இருக்கின்றன.

கிருஷ்ணமூர்த்தி : ஜானவாசத்தன்று



மாதத்தில் ஒரு விடுமுறை நாளில் புளி சாதமோ, சாம்பார் சாதமோ, வேறு கலந்த சாதமோ தயாரித்து சிறு சிறு பொட்டலங்களாகக் கட்டி பிச்சைக்காரர்களுக்கு விநியோகம் செய்யுங்கள். உங்கள் தயவில் ஒருவேளை வயிறு குளிர்ந்து வாழ்த்துவார்கள். போலிப் பிச்சைக்காரர்கள் என்றால் கூட காசு தருவதை விட அன்னதானம் செய்வதால் புண்ணியமே சேரும்.

- சி.எஸ். சித்ரா, கோயமுத்தூர்.

இரவு சாப்பாட்டில் போளி, ஆமை வடை, பால் பாயசம், ஜாங்கிரி நாலும் கண்டிப்பா இருக்கணும்.

சுபம் கணேசன் : ஓ! டிபிகல் தஞ்சாவூர் ஜானவாச சாப்பாடுன்னு சொல்லுங்க! பேஷாப் போட்டுடலாம்!

கிருஷ்ணமூர்த்தி : கட்டுச்சாதத்துல கூட ஏதாவது உங்க ஸ்பெஷாலிட்டி இருக்குமே?

சுபம் கணேசன் : ம்... இருக்கே! முன்ன மாதிரி கட்டுச்சாதக் கூடையெல்லாம் இப்போ இல்லை. நீட்டா சின்னச் சின்ன பிளாஸ்டிக் கண்டெயினர்கள்தான். ஒரு டப்பாவில் இட்லி, மிளகாய்ப் பொடி, இன்னொன்றில் புளியோதரை, மூன்றாவது டப்பாவில் தயிர்சாதம், ஊறுகாய்; தனியாகக் கவரில் வடாம், மோர் மிளகாய், அத்தனையையும் ஒரு கவரில் போட்டு ஒருத்தருக்கு ஒரு பை வீதம் கொடுத்து விடுவோம். ஒரு தடவை, கல்யாணம் எல்லாம் முடிஞ்சு புறப்படுகிற போது, என்னை ஒருத்தர் திருடன்னு சொன்னார். மனசு சந்தோஷப்பட்டது.

காந்திமதி (சற்றே அதிர்ச்சியுடன்) : என்ன சொல்றீங்க?

சுபம் கணேசன் : தப்பா நினைச்சுக்காதீங்க! கலியாணம் ரொம்ப திருப்தியா நடந்து முடிஞ்சது. பிள்ளை வீட்டுக்காரர்கள் ஏகத்துக்குப் பெண் வீட்டாரைப் பாராட்டினா! மனசு நெகிழ்ந்து போன பொண்ணோட அப்பா, "நீங்க மண்டபத்துக்கு வர்றதுக்கு முன்னால நாங்க வந்துட்டோம். எங்களுக்கு முன்னாலேயே இங்க ஒரு திருடன் வந்துட்டான். ரெண்டு நாள் இங்க நம்ம கூடவே இருந்து, பிரமாதமா கலியாணத்தை நடத்தி வெச்சு, நம்ம எல்லாரோட மனசையும் கொள்ளை அடிச்சுட்டான். அந்தத் திருடன் வேற யாருமில்லை; நம்ம சுபம் கணேசன்தான்னு சொன்னார். எல்லாரும் ஆமோதிச்சு சிரிச்சா! (கிருஷ்ணமூர்த்தி தம்பதி பலமாகச் சிரிக்கிறார்கள்.)

சுபம் கணேசன் (சிரித்துக் கொண்டே) : "கவலையேபடாதீங்க! ஜமாய்ச்சுடலாம்!

தொகுப்பு : **பாரதி மௌலி**

படங்கள் : **ஸ்ரீஹரி**

ஜெயஸ்ரீ ராஜ் நினைவு

கூட்டாஞ்சோறு

லீவு விட்டாச்சு! பொதி மூட்டை புத்தகப் பை, முரட்டுக் காலணி, வேளைக்கொரு ட்யூஷன், முன்பின்னாக வந்து ஹார்ன் அடிக்கும் ஸ்கூல் பஸ், பஸ்ஸை விட்டால் பைக்கில் கூட்டிச் சென்று, ஆபீஸில் திட்டு வாங்கும் டென்ஷன், ஹோம்வர்க் எல்லாவற்றிற்கும் லீவு விட்டாச்சு!

இரண்டு நாள் பொழுது மிக ஆனந்தமாகச் சென்றது. தூங்கி எழுந்து, நிதானமாய்ச் சாப்பிட்டு, டி.வி பார்த்து...

சனிக்கிழமை ஆபீஸ் முடிந்து வீட்டுக்கு வந்தேன். முழு வேகத்தில் ஃபேனை ஓட விட்டு சோஃபாவில் சாய்ந்தேன்.

"உஸ்! அப்பா! என்ன வெயில்!"

ஆனந்தி கொண்டு வந்த காப்பியை வாங்கியபடி சுற்றிலும் பார்வையை ஓட விட்டேன்.

"என்ன ஒரே அமைதியா இருக்கு? பிள்ளைகள் எங்கே?"

"ரெண்டும் ஷ்யாமி வீட்டுக்கு விளையாடப் போயிருக்குங்க" அவள் சொல்லி வாய் மூடுமுன், கேட் திறக்கும் சத்தம் கேட்டது.

"அய்! அப்பா!"

மேலே விழுந்த பிள்ளைகளை அணைத்தபடி பக்கத்தில் அமர்த்தினேன்.

"என்ன! நல்லா பொழுது போனதா?"

"ம்! அப்பா! ஷ்யாமி வீட்டுல நாளைக்குக் கிஷ்கிந்தா போறாங்களாம்."

என் வயிற்றில்





சிபி

பட்டாம்பூச்சிகள் வந்து அமர்ந்தன.

"நாமளும் போலாம்ப்பா."

பட்டாம்பூச்சிகள் சிறகடிக்க ஆரம் பித்து விட்டன.

"ஐய்யே! கிஷ்கிந்தாவா! இந்த வெயி லிலா! போன தடவையே கால் சுடுதுன்னு அழுதியே. இப்ப அதைவிட அதிக வெயில்."

முகம் சுளித்தபடி, பயமுறுத்திப் பார்த் தேன்.

"ஐயோ! டாடி! அப்போ நான் சின்ன பேபி. இப்ப கேர்ள் ஆயிட்டேன். அழ மாட்டேன்."

என் முழுங்காலுக்குச் சற்று மேலிருந்த மகள், பெரிய மனுஷி போல் கூற, அவள் அண்ணன் பாயிண்ட்டைப் பிடித்தான்.

"வெயில் ஜாஸ்தின்னாதாம்ப்பா நல்லது. எல்லாமே வாட்டர் கேம்ஸ்தான்! சூப்பரா என்ஜாய் பண்ணலாம்."

இருபுறமும் மாட்டிக் கொண்டு



விலையுயர்ந்த கண்ணாடிப் பாத்திரங்களைக் கழுவும் போது சிங்க்கின் அடியில் கனமான டவலை விரித்து விட்டுக் கழுவுங்கள். கை தவறி விழுந்தால் கூட கண்ணாடிப் பாத்திரங்கள் உடையாது.

- சுலைஹா அஹமது, கீழக்கரை.



விழித்த என்னைப் பரிதாபத்துடன் பார்த்தாள் என் அருமை மனைவி. என் நிலைமை தெரிந்த நிதி மந்திரி.

"அஷ்வின்! அனி! முதல்ல இரண்டு பேரும் இங்க வாங்க!"

பிள்ளைகள் துள்ளிக் குதித்து, தாயிடம் ஓடின.

"உங்களுக்கு ஸம்மர் ஹாலிடேஸ் ஏன் விடுறாங்க?"

"எதுக்கு?"

"வெயில்ல சின்னப் பிள்ளைகள் அலைந்து கஷ்டப்படக் கூடாது என்று தான். இந்த வெயில் காலத்துக்கு இன்டோர் கேம்ஸ்தான் நல்லது."

கேட்டுக் கொண்டிருந்த பிள்ளைகள் முகம் சிணுங்கின.

"போம்மா! கேரம், ஸ்பெல்லர் எல்லாம் ஒரே போர். கார்ட்டூனும் போட்டதேதான் வருது. வீடியோ கேம்ஸ் வேற ரிப்பேரா இருக்கு. வேண்ணா புது வீடியோ கேம் வாங்கித் தா."

மறுபடி மறுபடி என் பர்ஸுக்கே குறி வைத்த பிள்ளைகளையும், அவர்களோடு களமிறங்கிய என் சேனாதிபதியையும் (அவளே என் நிதி மந்திரி) பரிதாபமாய் மாறி மாறிப் பார்த்தேன்.

"ஓ.கே.! அப்ப ஒண்ணு பண்ணலாம். இதுவரை விளையாடாத புது இன்டோர் கேம் ஒண்ணு விளையாடலாம்."

என் மனைவி சமாதானத்துக்குப் புது வியூகம் அமைத்துப் பார்த்தாள்.

"புது கேமா! என்னது!"

அரைகுறை மனதுடன் சிணுங்கல் மாறாமல் கேட்டாள் அனி.

"நாங்களெல்லாம் சின்னப் பிள்ளைகளாய் இருக்கும் போது லீவு நாளில் கூட்டாஞ்சோறு ஆக்கி விளையாடுவோம்."

"கூட்டாஞ்சோறா! அப்படீன்னா!"

ஆர்வத்தில் கண் அகல சிறிது சமரசத்துடன் ஒட்டி அமர்ந்தன.

"கூட்டாஞ்சோறுன்னா சின்னப் பானையை மூணு கல் மேலே வைத்து, தீ மூட்டி கொஞ்சமா அரிசி போட்டு சோறாக்குவோம். ஜாலியா இருக்கும்."

"அய்! மம்மி! மம்மி! ப்ளீஸ் மம்மி! நாளைக்கு நாம கூட்டாஞ்சோறு ஆக்குவோம்."

வெற்றிப் புன்னகை புரிந்த என் மனைவியைக் காதலுடன் பார்த்தேன் நான்.

'கிஷ்கிந்தா' போவதாகச் சொல்லிக் கொள்ள வந்த ஷ்யாமியை அலட்சியமாய்ப் பார்த்தபடி அனி சொன்னாள்.

"நாங்க நாளைக்குக் கூட்டாஞ்சோறு ஆக்கப் போறோமே."

மருதாணி இலையை அரைக்கும் போது, சிறிது கடுக்காய் வைத்து அரைத்தால் நல்ல சிவப்பாய்ப் பிடிக்கும்.

- கோவை ஜெயா.



அவள் அதைக் கேட்டதும் சுருங்கிய முகத்தோடு போனாள். ஆஹா! மாட்டினான் கேசவன் (அவள் அப்பன்)!

காலை ஆறு மணிக்கே எழுந்து விட்டன பிள்ளைகள்.

"எப்ப மம்மி கூட்டாஞ்சோறு ஆக்கப் போறோம்?"

"என் வேலையெல்லாம் முடிஞ்சப் புறம்தான். அதுவரைக்கும் பேசாம இருக்கணும்."

துளைத்தெடுத்த பிள்ளைகளைத் துரத்திய மனைவி அப்படியே என்னையும் விரட்டினாள்.

"ஏங்க! அந்த லாஃப்டில் ஒரு சின்ன நார்க்கூடை இருக்கும் பாருங்க. அதை மட்டும் எடுங்க. அப்படியே உங்க தங்கை கல்யாணத்தப்போ ஆப்பிள் வாங்கிய மரக் கேஸில் ஒரு பலகை எடுத்து, சின்னச் சின்ன விறகா உடைங்க."

வியர்வை வழிய அந்தப் பாச்சை நாற்றம் பிடித்த நார்க்கூடையுடன் கீழே இறங்கி, வாயால் மூச்சு விட்டுக் கொண்டேன். அதற்குள் இருந்த சிறு பானையையும், கரண்டியையும் தேடி எடுத்துக் கழுவி வைத்தாள்.

"போய் மூணு கல் ஒரே அளவாகக் கொண்டு வாங்க. ரோடு பக்கம் போகக் கூடாது."

எல்லாம் ரெடி. ஃப்ளாட்டின் மொசைக் தரையில் எங்கே அடுப்பை மூட்டுவது?

"மேலே லாஃப்டில் ஒரு பெரிய இரும்பு முறம் இருக்கு..."

இழுவையாய் என்னைப் பார்த்தபடி சொன்னாள்.

ஒருவழியாய் முறத்தின் மேல் மூன்று கற்களை வைத்துப் பானையில் தண்ணீர் ஊற்றி, விறகில் ஒரு கற்பூரத்தை வைத்துப் பற்றவைத்தாள். பிள்ளைகளுக்கு ஒரே பரபரப்பு.

கற்பூரம் எரிந்து முடிந்ததும் அடுப்பும் அணைந்து போனது. ஒருவழியாய் பேப்பர், பழைய ஐஸ்க்ரீம் குச்சி எல்லாம் போட்டு, இரண்டு டப்பா தீக்குச்சியைக் கொளுத்தி, அடுப்பை எரித்தாள்.

"என்னம்மா! தண்ணி அப்படியே இருக்கு. ஸ்டீமே வரலை?"

என் மகள் பொறுமையிழந்து கத்தினாள்.

"அதுக்குள்ள கடுமாடி! மெதுவாகத்தான் சூடாகும்."

"அப்ப பபிள்ஸ் வந்ததும் சொல்லு."

பிள்ளைகள் இரண்டும் டி.வி. பார்க்க ஓடின. இரண்டு மணி வெயில் அடுப்பெரிந்த ஸிட்-அவுட்டைத் தொட்டது.

"ஏய் அனி! அஷ்வின்! இதோ பபிள்ஸ் வருது. வாங்க!"



கல்யாணத்துக்குப் புடைவை எடுத்து வைக்கும் போது ரவிக்கை அளவு சரியாக இருக்கிறதா எனப் பாருங்கள். என் சித்தப்பா மகள் திருமணத்திற்கு நான் மிகவும் ஆசையாக ஹாஃப் வயிட்டில் மெரூன் பார்டர் போட்ட புடைவையை அணிந்து கொள்ள வைத்திருந்தேன். கடைசி நிமிடத்தில் பிளவுஸ் கையில் ஏறவே இல்லை. வேறு புடைவை அணியும்படி ஆயிற்று.

- பவித்ரா, ஆழ்வார்ப்பேட்டை.



பிள்ளையார் சதுர்த்திக்கு வாங்கும் மண் பிள்ளையாரில் புடைவையில் பூ வேலை செய்யப் பதிக்கும் கலர் கற்களை, கழுத்தில், கிரீடத்தில் என்று அழகாகப் பதித்தால் கண்ணைக் கவரும் வண்ணம் பளபளப்பாக மின்னும்.

- சங்கரி வெங்கட், சென்னை - 63.

இரண்டும் ஓடி வந்தன.

"அய்! ஆமா! இப்ப என்ன செய்யணும்?"

"கொஞ்சம் அரிசி எடுத்து ஸிங்க்கில் கழுவிட்டு வாங்க" அரிசியை எடுத்துக் கொண்டு ஓடின.

"அம்மாாாாா!"

ஆனந்தி பயந்து போய் எழுந்தாள்.

"என்னாச்சு?"

"அரிசியெல்லாம் ஸிங்க்ல போயிடுச்சு."

"சட்! இப்படியா குழாயைத் திறப்பாங்க."

அரிசியைக் கொஞ்சமாய் எடுத்து ஆனந்தி கழுவ, மறுபடி போகோவில் அடைக்கலமாயின பிள்ளைகள்.

"வாங்க! வந்து அரிசியைப் போடுங்க."

"நீயே போடும்மா! அப்ப அப்ப வந்து பார்த்துக்குறோம்."

விளம்பர இடைவேளையில் இரண்டும் வந்தன.

"என்னம்மா! அப்படியே அரிசியா இருக்கு. டென் மினிட்ஸ்ல வேகாதா? குளிக்கப் போறப்ப அப்படித்தானே சொல்லுவ."

"அது குக்கர்ல! இதுல அரைமணி நேரம் ஆகும்."

"அப்படின்னா?"

"ஹாஃப் அன் ஆர்."

நானும் இருக்கிறேன் என்று குரல் கொடுத்தேன்.

"அப்ப, 'கவர்ட்லி டாக்' மட்டும் பாத்துட்டு வர்றோம்."

ஒருவழியாக அரைமணி நேரமானது. வெயில் ஆனந்தியையும், அடுப்பையும் எரித்தபடி முன்னேறியது. 'கவர்ட்லி டாக்'கும் கார்ட்டூனில் முடிந்தது.

"என்ன ஆச்சு?"

இரண்டும் பெரிய மனுஷத்தனமாய்க் கேட்டபடி எட்டிப் பார்த்தன. அரிசி இலேசாக மலர்ந்து விழித்தபடி இருந்தது.

"அப்புறம் என்ன செய்யணும்?"

"அப்புறம்... அவ்வளவுதான்."

வியர்வையுடன் எரிச்சலாய்ப் பதில் சொன்னாள் ஆனந்தி.

"இதுதான் கூட்டாஞ்சோறா?"

கோரஸ் பாடின இரண்டும்.

"சரி சரி! போய் சின்னத் தட்டு எடுத்துட்டு வாங்க. சாப்பிடலாம்."

முகத்தைக் கழுவித் துடைத்தபடி ஆனந்தி சொன்னாள்.

"இதையா? இப்ப சாப்பிடறதா? நோ!"

"வெறும் சாதமா இருக்கே. எனக்கு வேணாம்." இரண்டும் ஓடி விட்டன!

பரிதாபமாய் என்னைப் பார்த்தாள் என் அருமை மனைவி. இந்த வாரம் தப்பி விட்ட நிம்மதியை மறைத்தபடி நானும் அவளைப் பாவம் போல் பார்த்தேன்! ●



குழந்தைகளோ, பெரியவர்களோ சாக்ஸ் போடும் போது உள்புறமாகச் சிறிது டால்கம் பவுடரைத் தூவித் தேய்த்தபின் அணிந்தால், வியர்வையால் கால்கள் பாதிக்கப்படாமல் இருக்கும்.

- எம். வரலக்ஷ்மி, சென்னை - 102.


அப்பார்ட்மென்டுகளுக்கு உள்ள பாதுகாப்பு
கொண்ட தனி வீடுகள்
தனி வீடுகளுக்கு உரிய வசதிகளுடன்
அப்பார்ட்மென்டுகள்
வழங்குகிறோம்
Sreevatsa Residency
APARTMENTS & VILLAS
COIMBATORE
வில்லாக்கள் அனைத்தும் விற்று விட்டன
பிளாக்குகள் - ஒவ்வொன்றிலும் 32 அப்பார்ட்மென்டுகள் (2-3 பெட்ரூம் ஃப்ளாட்)
ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட்ஸ் (பி) லிட்.
உங்கள் நம்பிக்கை என்னும் அஸ்திவாரம், அதுவே எங்கள் கட்டடங்களுக்கு ஆதாரம்!
கோவை: 8/2, மேட்டுப்பாளையம் சாலை, கோயம்புத்தூர் 641 043, இந்தியா.
போன்: 91-422-243 7422 / 244 1481 / 243 2184 / 243 2042
பேக்ஸ்: 91-422-243 0899, E-mail: realestate@sreevatsa.com, Visit us at: www.sreevatsa.com
சென்னை: 7, காமராஜ் பார்க் தெரு, இராயபுரம், சென்னை 600 013, இந்தியா.
போன்: 91-44-2595 3149 / 2596 0270 / 2596 1029-31
பேக்ஸ்: 91-44-2596 5032 / 5211 5032, Email: sreevatsa@sreevatsatube.com
TUV
ISO 9001
9001: 2000 Certified

உங்களுக்கே சொந்தமான ஒரு தனி வீடு (வில்லா) அல்லது அப்பார்ட்மென்டில் பெருமளவு வசதிகளுடன் பெருமையுடன் வாழ, இதோ இப்போது மற்றொரு மகத்தான வாய்ப்பை வழங்குகிறது ஸ்ரீவத்ஸா.




எட்டு ஏக்கர் நிலப்பரப்பில் அமையவிருக்கும் அருமையான இடம். பின்னணியில் நெஞ்சத்தை அள்ளும் நீலகிரி மலைத்தொடர்களில் எழில்மிகு தோற்றம். மேட்டுப்பாளையம் சாலை வழியாக நகரிலிருந்து ஒரு சில நிமிடங்களில் வந்து விடலாம். கோயம்புத்தூர் வடக்கு மேம்பாலத்திலிருந்து (ஃப்ளை ஓவர்) 4 கிலோமீட்டர் தான். துடியலூர் தொலைபேசி இணைப்பகம் மற்றும் ஸ்ரீவத்ஸா என்கிளேவ் ஆகியவற்றையொட்டி இந்த இடம் அமைந்துள்ளது.

தனி வீடுகள் மற்றும் அப்பார்ட்மென்டுகள் - இங்கே வசிப்பவர்கள் எல்லோருமே இயற்கையுடன் ஒன்றுபட்டு அருமையான சூழ்நிலையில் வசதியாக வாழலாம். அப்பார்ட்மென்டுகள் என்றாலே இடத்திற்கு நெருக்கடி தான் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தால், இங்கே மிகவும் தாராளமாக உள்ள பொது இடம், மேலும் பல்வேறு வசதிகளும் உங்களை பிரமிக்க வைக்கும்.

ஸ்ரீவத்ஸா ரியல் எஸ்டேட்ஸ் - நல்ல தரத்திலே முழுமையான ஈடுபாடு கொண்டு மிக நல்ல முறையில் செயல்பட்டு நற்பெயர் பெற்றுத் திகழும் நிறுவனம். இதுவரை உருவாக்கிப் படைத்த கட்டடங்களின் பரப்பளவு 10 லட்சம் சதுர அடிக்கும் அதிகம். ஸ்ரீவத்ஸா ரெசிடென்ஸி இங்கே வாழும் நற்பேறு எல்லோருக்கும் கிடைத்து விடாது. எனவே நீங்கள் முந்திக் கொள்ளுங்கள்.



பதிவு தொடங்கிவிட்டது



எத்தனையோ பல வசதிகள்

அழகுற அமைந்த நிலத் தோற்றத்தில் அருமையான பூங்கா ○ விளையாட்டுக்கான பகுதி ○ சமூக நலக் கூடம் ○ டென்னிஸ் களம் ○ கிளப் ஹவுஸ் ○ ஜிம்னேஷியம் ○ தடங்கலே இல்லாமல் தொடர்ச்சியான தண்ணீர் சப்ளை ○ தெரு விளக்குகளுடன் தார் பூசிய சாலைகள் ○ சுற்றுப்புறச் சுவர் ○ 24 மணி நேரம் பாதுகாப்பு ○ மின்சார ஜெனரேட்டர்கள் முதலியவை

ஆர்க்கிடெக்டுகள் **சங்கர் அண்டு அசோசியேட்ஸ்** கோயம்புத்தூர்

சுபா 4

பூபதியின் கோத்த விரல்களை மாதங்கி நம்பிக்கையின்றிப் பார்த்தாள்.

"உங்க கேள்வி புரியலை" என்றாள்.

பூபதியின் முகத்தில் ஒரு நக்கல் விளையாடியது.

"புரியாத கேள்வியா கேட்டுட்டேன்? தெரிஞ்சவர்ன்னா... இந்த அளவுக்குத் தெரிஞ்சவரா?'' என்று இரண்டு கைகளையும் தள்ளி வைத்து இடைவெளியைக் காட்டினான். ''இல்ல... இவ்வளவு தெரிஞ்சவரா...?'' என்று இரண்டு கைகளின் விரல்களையும் நெருக்கமாகக் கோத்தும் காட்டினான்.

மாதங்கி உறைந்து போய் நின்றாள். ச்சே, இப்படி வக்கிரமான கேள்வி கேட்க இந்த மனிதருக்கு எப்படி மனசு வந்தது? அவனைப் பார்க்கப் பிரியப்படாமல், முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

இரண்டு கட்டில்கள் தள்ளி, ஸ்ட்ரோக் வந்து இதே திசையைப் பார்த்துப் படுத்திருந்தவர் அவள் விழிகளில் கசியும் ஈரத்தைப் பார்த்தும் பார்க்காதவர் போல் கண்களை மூடிக் கொண்டார். பக்கத்துப் படுக்கையில் கிடந்த கிழவியின் முகத்தில் அருவருப்பு தெரிந்தது.

வார்டில் இருக்கும் மற்றவர்களும் அவளை இரக்கத்துடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்ற எண்ணமே மாதங்கியைக் கூசச் செய்தது.

சட்டென்று அந்த அறையை விட்டு வெளியே போய் காரிடாரில் நின்று கொண்டாள்.

கட கட என்று



ஒலியெழுப்பிக் கொண்டு கடந்து போகும் சக்கர நாற்காலிகளும், பார்வையிலிருந்து மறையும் ஸ்ட்ரெச்சர்களும் சூழ்நிலையை ஒலிபரப்பிக் கொண்டிருக்க...

கைக்கெட்டாத உயரத்தில் சிறகடித்துப் பறந்த பெயர் தெரியாத ஒரு பறவை கவனத்தை ஈர்த்தது. அதுவும் யார் மீதாவது ஆசைப்பட்டிருக்குமா? ஆசைப்பட்டவரை பிற்பாடு திமிரோடு தூக்கி எறிந்திருக்குமா? காதல் தோல்வியின் கசப்பை ருசித்திருக்குமா? கணவன் என்ற விலங்குகளைப் பூட்டிக் கொண்டிருக்குமா?

அதைப் பார்க்கப் பார்க்க, ஏக்கம் வந்தது. எல்லாவற்றையும் அப்படியே துறந்து விட்டு காற்றில் கரைந்து விட முடிந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

போலீஸ்காரர் கையை வீசி நிறுத்தச் சொன்னதும், திலகன் காரை சாலையின் ஓரத்தில் நிறுத்தினான்.

அவனை அடித்து விடுவது போல் ஆத்திரத்துடன் அவர் நெருங்கி வந்தார்.

''கண்ணு தெரியலையா? சிகப்பு சிக்னல்ல வந்துட்டேயிருக்கீங்க? லைசன்ஸை எடுங்க.''

திலகன் பதில் பேசாமல் எடுத்து நீட்டினான்.

"ஸாரி" என்றான்.

இது மூன்றாவது ஸாரி.

என்னை விட்டுப் போகாதே!



மாதங்கியைப் பார்த்து விட்டு வரும் நாட்களில் இனி காரை அவனே செலுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

சார்ஜன்ட் நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டான். அபராதத் தொகையைக் கட்டினான்.

மாதங்கி... ஏன் என்னை இப்படி வதைக்கிறாய்? வேண்டாம், அவளையே ஏன் நினைத்துக் கொண்டிருக்கிறாய்? பார்த்தாயிற்று; உதவியாயிற்று. அவளிடமிருந்து அடுத்த விண்ணப்பம் வரும்வரை அவளை மற. மற்றவற்றில் கவனத்தைச் செலுத்து.

மனதை அதட்டத்தான் முடிந்ததே தவிர, அடக்க முடியவில்லை.

பூபதியின் சிகிச்சைக்குத் தேவையான பணத்தை மட்

டும் கொடுத்து விட்டு எங்காவது வெளியூருக்கு சில நாட்கள் போய் விடலாமா?

கோழை... கோழை... சூழ்நிலைகளிலிருந்து தப்பித்து ஓடுவதா புத்திசாலித்தனம்? அன்றைக்கு மாதங்கி செய்ததற்குப் பழிவாங்குவது போல் நீ நடந்து கொள்வதாக அல்லவா அவள் கருதுவாள்? உதவி கேட்டு வந்தவளிடமிருந்து தலைமறைவாவது அவளை அவமானப்படுத்துவது போல் அல்லவா ஆகிவிடும்? வருவதைப் பதற்றமில்லாமல் எதிர்கொள்.



அலங்காரத்துக்குப் பூ ஜாடியில் வைக்கும் பிளாஸ்டிக், துணிப் பூக்களை சோப் நீரில் கழுவி, கஞ்சி கலந்த தண்ணீரில் ஊற வைத்து, காய்ந்ததும் எடுத்து வைத்தால் மொரமொரப்பாக புதிது போல் இருக்கும்.

- எம். வரலக்ஷ்மி,

திலகன் தன்னையே அதட்டியபடி, காரை மெள்ளச் செலுத்தினான்.

பூபதி புரண்டு படுத்தான்.

மாதங்கி ஒரு கண்ணாடிக் குடுவையை எடுத்துக் கொண்டு, கட்டில் கட்டிலாக நகர்ந்து கொண்டிருந்தாள். கண்ணாடிப் பாத்திரத்தில், ஆரோக்கியமான சாத்துக்குடிச் சாறு நிரம்பியிருந்தது. அதிலிருந்து சரித்து, ஆளுக்கொரு தம்ளர் அவள் பகிர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தாள்.

திலகன் வாங்கி வந்திருந்த சாத்துக்குடி.

பறக்கும் பட்டாம்பூச்சியை இரையாக்கிக் கொள்ளும் ஆர்வத்துடன், அசையாமல் பார்வையால் தொடர்ந்து கொண்டிருக்கும் பல்லியைப் போல், பூபதி மாதங்கியைக் கண்களால் தொடர்ந்து கொண்டிருந்தான்.

"எப்படியிருக்கீங்க பூபதி?"

குரலால் கவரப்பட்டு திரும்பினாள்.

டாக்டர் ரமணன். அறைக்கு இரண்டடி வைத்து எட்டிப் பார்த்தபடி கேட்டார்.

பூபதி கைகளை மார்பில் வைத்து அப்படியே கும்பிட்டான்.

"மாதங்கிக்கு ரொம்ப வேண்டப்பட்டவர் உதவி செய்யறதுல நல்லாவே இருக்கேன்" என்றான்.

டாக்டர் ரமணன் மாதங்கியைப் பார்த்துப் புன்னகைத்தார்.

"மிஸஸ் மாதங்கி... கொஞ்சம் என் ரூமுக்கு வந்துட்டுப் போங்க..." என்றார். பதிலுக்காகக் காத்திராமல், சட்டென்று நடந்து சென்று விட்டார்.

மாதங்கி சற்றே பதறினாள். என்ன விஷயம் என்று தெரியவில்லையே? புதிதாக மருந்து எழுதிக் கொடுத்து இப்பொழுதே வாங்கி வா என்பாரா?

பக்கத்து முக்காலியில் பழச்சாறு குடுவையை வைத்தாள். புடைவையை இழுத்துச் செருகிக் கொண்டாள்.

"அக்கா! இங்க வாங்க.." என்று எதிர்க் கட்டிலிலிருந்து குரல் வந்தது. ட்ராக்ஷன் போட்டுக் கொண்டு படுத்திருந்த குருக்களின் பெண், அவளை அருகே கூப்பிட்டாள்.

"என்ன பானு?" என்று கேட்டபடி மாதங்கி அவளை நெருங்கினாள். "உனக்கு ஏதாவது வாங்கிட்டு வரணுமா?"

"இல்லக்கா... கொஞ்சம் குனிங்க.." என்றாள், பானு.

மாதங்கி குனிந்தாள்.

மாதங்கியின் நெற்றியில் ஒட்டியிருந்த ஸ்டிக்கர் பொட்டு மத்தியில் இல்லாமல் நகர்ந்து புருவத்தின் அருகில் ஒட்டியிருந்ததை பானு எடுத்தாள். மையத்தில் சரியாக வைத்தாள்.

"ஸ்டிக்கர் பொட்டு விழுந்துடற மாதிரி இருக்குக்கா..."

"ஆமா. அதுல பசை போயிடுச்சு. வேற வெச்சுக்கணும்..." என்றபடி நெற்றியில் அழுத்திக் கொண்டாள் மாதங்கி.



Flora™
ஆயுர்வேத பாதுகாப்பு ...
உச்சி முதல் உள்ளங்கால் வரை
ப்ளோரா ஆர்டீஸ் ஆயில்
சாதாரண வலி நிவாரணி அல்ல
தீராத மூட்டு வலிக்கான சிறந்த மருந்து
Rs. 5/- சிறப்பு சலுகை
Artis
New
எம்.சந்யா, வயது 42. நான் கடந்த இரண்டு ஆண்டுகளாக கால் மூட்டுவலி, குதிங்கால் வலி, இடுப்பு வலி ஆகியவற்றால் அவதிப்பட்டு வந்தேன். என் தோழி கலா கூறியது போல ப்ளோரா ஆர்டீஸ் ஆயில் வாங்கி காலை குளிப்பதற்கு அரை மணி முன்பாக தடவி பின்பு வெந்நீரில் குளித்து வந்தேன். இருபது நாட்களில் வலி முற்றிலும் மறைந்துவிட்டது. தற்பொழுது நான் எனது வேலைகளை எளிதாக செய்ய முடிகின்றது.
எல்.நாராயணன், வயது 63, நான் கடந்த இருபது ஆண்டுகளாக மூட்டுவலியினால் பாதிக்கப்பட்டு கால் மூட்டுக்கள் வீங்கி மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். கடந்த மூன்று மாதங்களாக ப்ளோரா ஆர்டீஸ் ஆயில் மற்றும் கேப்சூல் உபயோகித்து முழுவதுமாக குணமடைந்துவிட்டேன்.
ஆர். பானுமதி, வயது 62, நான் கடந்த பதினைந்து வருடங்களாக மூட்டுவலி மற்றும் வாய்வுத் தொல்லையினால் கஷ்டப்பட்டு வந்தேன். கடந்த நான்கு மாதங்களாக ப்ளோரா ஆர்டீஸ் ஆயில் மற்றும் கேப்சூல் பயன்படுத்தி குணமடைந்து வருகிறேன். தற்பொழுது எனது வேலைகளை நானே சிரமமின்றி செய்துகொள்ள முடிகின்றது.
பயனடைந்தவர்கள் பாராட்டுகிறார்கள்
நீண்ட அழகிய கருங்கூந்தல் வளர்த்திட
நாட்பட்ட தீராத மூட்டுவலி மறைந்திட
முடிகொட்டுதல்
இளநரை
பொடுகு
தலை அரிப்பு
ரோம பலஹீனம்
முடி உடைதல்
முடி மெலிவு
போஷாக்கின்மை
அடர்த்தியின்மை
நிவாரணம் பெற
Flora™
Flora™ Herbal Hair Oil
Flora™ Artis Oil
ஆர்த்ரைடிஸ்
மூட்டுவலி
முழங்கால்வலி
முதுகுவலி
இடுப்புவலி
குதிங்கால்வலி
கழுத்துவலி
எலும்பு தேய்வு வலி
வாத மூட்டு வலி
நிவாரணம் பெற
விற்பனை விசாரணைகளுக்கு 98409 88144
மாவட்டந்தோறும் ஏஜெண்டுகள் தேவை
அனைத்து ஆயுர்வேத மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்
சாஸ்த்திரிய முறை ஆயுர்வேத சிகிச்சை
தீராத நோய்களுக்கு நிரந்தர தீர்வு
மூட்டு வலி
ஆஸ்துமா - அலர்ஜி
விசேஷ சக்தி
SK ஆயுர்வேதா
31, தேவநாதன் தெரு, II மாடி, மந்தைவெளி, சென்னை - 28 Ph:2461 7019 - 98409 88144.

நீங்கள் சமையல் செய்வதில் சூரராக இருக்கலாம். ஆனால் குக்கர் சில சமயம் சூடுபோட்டு விடும். சமையல் சோடா வைத்திருப்பீர்களே! அதைத் தூவுங்கள். எரிச்சல் 'கப்சிப்' என்று அடங்கிவிடும்!

- சீ. பத்மஸ்ரீ, நெய்வேலி.



பூபதியிடம் வந்தாள். "டாக்டர் கூப்பிட்டாரு. என்னன்னு போய்க் கேட்டுட்டு வந்துடறேங்க" என்றாள்.

பூபதியின் இதழ்கள் கோணலாகப் புன்னகைத்தன.

"போ... போ... ஆம்பளை டாக்டர் கூப்புடறாரு. இல்ல? உடனே போ..."

மாதங்கி அவனை முறைத்துப் பார்த்தாள்.

டாக்டர் ரமணன் வெளிச்சத்திற்கு நேரே உயர்த்திப் பிடித்திருந்த எக்ஸ்ரே ஒன்றைத் தாழ்த்தி விட்டு, "வாங்க, மாதங்கி... உக்காருங்க" என்றார்.

மாதங்கி யோசனையுடன் அமர்ந்தாள்.

"நான் கவனிச்ச வரைக்கும் பூபதியோட ஆரோக்கியம் எப்ப நல்லாருக்கும், எப்ப மோசமாயிருக்கும்னு புரியாதபடி ஊசலாடிக்கிட்டே இருக்கு. ஒரு நிலையா இல்ல."

"ஏதாவது புது மருந்து வாங்கணுமா, டாக்டர்?"

"நோ, நோ... அவருக்குத் தேவையான மருந்துங்களை திலகன் வாங்கிக் குடுத்துடறாரு. அது ஒரு பிரச்னையே இல்லை. ஆனா இப்ப பூபதிக்கு ஒரு ஸ்கேன் எடுக்க வேண்டியிருக்கு... இந்த ஆஸ்பத்திரில ஸ்கேன் இயந்திரத்துல ஒரு சின்னக் கோளாறு. அதை சர்வீஸ் பண்றதுக்குப் பதினைஞ்சு நாளாவது ஆகும்னு தோணுது. உங்களால வெளில அவரை அழைச்சிட்டுப் போயி, வேற தனியார் ஆஸ்பத்திரில ஸ்கேன் பண்ணி எடுத்திட்டு வர முடியுமா?"

மாதங்கி உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள். "அதுக்கு என்ன செலவாகும் டாக்டர்?"

"ரெண்டாயிரத்து ஐநூறு ரூபா ஆகும். அது தவிர ஆம்புலன்ஸ்ல அழைச்சிட்டுப் போற செலவு. உங்களால ஏற்பாடு பண்ண முடியும்னா ஒண்ணு ரெண்டு நாள்ல ஸ்கேன் பண்ணிடுங்க... அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்... இல்ல, திலகனுக்கு நான் ஃபோன் பண்ணணுமா?"

மாதங்கி, ஒருகணம் யோசித்தாள்.

"நாளைக்குச் சொல்றேன் டாக்டர்..." என்று சொன்னாள். யோசனையுடன் எழுந்தாள்.

காரிடாரில் நடந்த போது, பூபதி

நாலு ஏலக்காய், நாலு லவங்கம், இரண்டு பட்டை, ஒரு ஜாதிபத்திரியைப் பொடி செய்து, நாலு ஸ்பூன் சர்க்கரை, நாலு ஸ்பூன் பால் பவுடர், நாலு ஸ்பூன் தேயிலைத் தூளுடன் கலந்தே வைத்து விடுங்க. நீங்கள் இல்லாத போது, குழந்தைகளே மசாலா டீ தயாரித்துக் கொள்வார்கள்.

- வி.எஸ்., பெங்களூர்.





சமையல் அறையில் எண்ணெய் கொட்டி விட்டால் அதன் மீது கோலப் பொடியைத் தூவி விட்டுத் துடைத்தால் எண்ணெய்ப் பசை நீங்கி விடும்.

- ஆர். தங்கராஜ், திருப்பூர்.

இருந்த வார்டு இன்னும் தொலைவில் இருக்கக் கூடாதா என்று ஏங்கினாள். அதற்குள் அவனுடைய என்னலான முகத்தைப் பார்க்கும் நேரம் வந்து விடப் போகிறதே என்று மனம் தவித்தது.

பணத்துக்கு எங்கே போக முடியும்? என்ன உதவி வேண்டுமானாலும் தயங்காமல் கேள் என்று சொல்லி விட்டதற்காக எடுத்ததற்கெல்லாம் திலகனுக்கு போன் செய்து அவன் தோள்களில் பாரத்தை ஏற்றிக் கொண்டேயிருப்பதா?

நினைக்க நினைக்க மாதங்கியின் கழுத்து மடிப்புகளிலும், முகத்திலும் வியர்வை பெருகியது. புடைவை முந்தானையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டபோது...

ஏற்கெனவே தளர்ந்திருந்த நெற்றிப் பொட்டு நழுவிக் கீழே விழுந்ததை அவள் கவனிக்கவில்லை.

"**டா**க்டர் தனியா இருந்தாரா?"

பூபதியின் கேள்வி காதில் விழாதது போல், அவள் தலைமாட்டில் அவர்களுடைய உடைகளை வைத்திருந்த பையை மாதங்கி எடுத்தாள்; திறந்தாள். துணி மணிகளை நகர்த்தி, திலகன் கொடுத்து விட்டுப் போயிருந்த விசிட்டிங் கார்டைத் தேடினாள்.

நெருக்கத்தில் இருந்த அவள் முகத்தையே குறுகுறுப்புடன் பார்த்தான், பூபதி.

"மாதங்கி! டாக்டர் ரூமுக்குப் போயிட்டு வந்ததுல, உன் நெத்திப் பொட்டு காணாமப் போயிருச்சு?"

மாதங்கி அதிர்ந்தாள். தன்னிச்சையாக விரல் நெற்றிக்குப் போனது. பொட்டு இல்லை.

பூபதி ரகசியக் குரலில் சொன்னான் :

"இனிமே அவரைப் பார்க்கப் போறப்ப, கையோட ஒண்ணு ரெண்டு பொட்டைக் கூடுதலா எடுத்திட்டுப் போயிடு... இப்பப் புதுசா ஒரு பொட்டை எடுத்து வச்சுக்க. யாராவது பார்த்துடப் போறாங்க..."

(தொடரும்)



பழைய பவுடர் டப்பாவில் சிலர் 'எறும்பு மருந்தை' நிரப்பி பயன்படுத்துகின்றனர். உறவினர் ஒருவரின் மகள் அதை 'பவுடர்' என எண்ணிப் போட்டுக் கொண்டு விட்டாள். இதுபோன்ற அபாயங்களைத் தடுக்க முதலில் 'எறும்பு மருந்து' டப்பாவின் இருபுறமும் கொட்டை எழுத்தில் எழுதி, டப்பாவில் ஒட்டி விட்டுப் பிறகு பயன்படுத்தவும்.

- உமா ஸ்ரீராம், மும்பை - 71.



loose yourself in an
island of love...
amidst magical backwaters, the honeymooner's haven.
Just what you need to keep the fire of passion burning. turquoise waters. In a tranquil getaway where nature finds a myriad ways to serenade you. Sun-kissed unspoilt beaches. A profusion of visual poetry. Exotic and very private cottages, floating and on-land. Exquisite cuisines and spirits. Soothing massages and ayurvedic therapies . . . or just sit back, enjoy the silence and immerse yourself in endless love.
EXPERIENCE THE SAROVAR SPIRIT
Poovar
ISLAND RESORT
Out of this world
Magical Getaway Package Rs.6666/- onwards
2 nights/3days per couple. Inclusive of a welcome drink, all meals and one sunset cruise.
www.sarovarhotels.com Toll Free Reservations: 1 800 111 222
Poovar Island Resort, Kerala Backwaters, Thiruvananthapuram, Kerala - 695 513
Tel: (0471) 221 2068/69/73 Fax: (0471) 221 2092 Email: pir@sarovarhotels.com

கலந்துரையாடல்

பத்து வயசுலேயே மலர்வது



• கிருத்திகா

• புஷ்பலதா

'அந்த' மூன்று நாட்களில் ஒதுக்குப்புறமாக தனிமையில் இருக்க வேண்டிய கட்டாயத்தில் சில பெண்கள். பூஜை அறையை மட்டும் போனால் போகிறது என்று விட்டுவிட்டு சகஜமாக வளையவரும் பெண்கள். இதற்கு நடுவே பலவித கெடுபிடிகள், சமரசங்கள்.

அறிவியல் என்ன சொல்கிறது? நவீன காலத்தில் புதுப்புது மாற்றங்கள். முன்பை விட இளவயதிலேயே பூப்பெய்தி விடுவது அவற்றுள் முக்கியமான ஒன்று. இதைக் குறித்த உண்மைகளைத் தெரிய வைக்க வேண்டாமா?

"நிச்சயம். இது ஓர் ஆரோக்கியமான முயற்சி'' என்று கூறி கலந்துரையாடலுக்குச் சம்மதித்தார் **கைனகாலஜிஸ்ட் டாக்டர் அனிதா பார்த்தசாரதி.** தண்டையார்ப்பேட்டையிலுள்ள ராஜா பெண்கள மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரிகிறார் **ப்ரியா ஜோதி. புஷ்பலதாவும்** பள்ளி ஆசிரியைதான். "என்றாலும் ஒரு தாய் என்கிற கோணத்தில் என் எண்ணங்களைத் தெரிவிக்கிறேனே'' என்றார். **கிருத்திகா** இளைய தலைமுறையின் பிரதிநிதியாக தயக்கமின்றி உரையாடலில் பங்கேற்றார்.

டாக்டர் : பூப்பெய்வதுங்கிறது ஒரு குறிப்பிட்ட சம்பவமில்லை. அது பல்வேறு நிகழ்ச்சிகளின் கிளைமாக்ஸ். ஒரு சிறுமி, பெண்ணாகப் பரிணமிப்பதற்கான தருதி அது. அதற்கு முன்பே வளர்ச்சிகள் தொடங்கிவிடுகின்றன.

அம்மா : எப்போதிலிருந்து?

டாக்டர் : யூட்ரஸ் எனப்படும் கர்ப்பப்பை, ஓவரி எனப்படும் சினைப்பை ஆகிய இரண்டுமே கருவின் ஐந்தாவது மாதத்திலிருந்தே தோன்றி வளரத் தொடங்கி விடுகின்றன. சுமார் பதினான்கு வயதிலிருந்து நாற்பத்து ஐந்து வயது வரை மாதம் ஒரு முட்டை என்று உருவாகும் சினைப்பையின் அடிப்படை அப்போதே தோன்றி விடுகிறது. சரியான காலகட்டத்தில் ஹார்மோன்களின் கைங்கரியத்தால் சிறுமிகள் பருவமடையறாங்க.

பயமுறுத்துற விஷயமா?

மாணவி : கருப்பையும் சினைப்பையும்தான் ஒரு பெண் எப்போது பருவமடைகிறாள் என்பதைத் தீர்மானிக்கின்றனவா?

டாக்டர் : நம் மூளையில் சின்ன மணி அளவில் உள்ள ஹைபோதலமஸ் என்ற பாகம்தான் இந்த விஷயத்தில் கேப்டன். அது பிட்யூட்ரி சுரப்பியைத் தூண்ட, அது சினைப்பையைத் தூண்டுகிறது. ஈஸ்ட்ரோஜென் ப்ரொஜெஸ்டரான் போன்ற ஹார்மோன்கள் அதிகமாகச் சுரக்க, உடலில் மாறுதல்கள் நிகழ்கின்றன. பருவமடைவதற்கு சுமார் ஒரு வருடத்துக்கு முன்பே மார்பக வளர்ச்சி, அக்குள் மற்றும் பெண் உறுப்பைச் சுற்றி ரோமங்கள் போன்றவை உருவாகின்றன.

அம்மா : எங்க காலத்தில் யாரும் இதையெல்லாம் சொன்னதில்லை. நம் உடலுக்கு ஏதோ கெடுதல் நடந்துடுச்சுன்னுதான் நினைச்சோம்.

மாணவி : ஆறாம் வகுப்பிலே இது எனக்கு நிகழ்ந்துடுச்சு; நான் படிச்ச ஆங்கிலோ இந்திய ஸ்கூல்ல கைனகாலஜிஸ்ட் ஒருவர் மூலமா இதைப் பற்றி விளக்க ஏற்பாடு செஞ்சுருந்தாங்க.



• ப்ரியா • டாக்டர் அனிதா

டீச்சர்: பள்ளியிலேயே இப்படி நடந்துருச்சுன்னா சம்பந்தப்பட்ட மாணவி பயந்து விடுவாள். சக மாணவிகளுடன் அழுகையுடன் அந்த ரகசியத்தைப் பகிர்ந்து கொள்வாள். சொல்லப் போனால் இந்த அனுபவம் ஏற்பட்டிருக்காத மாணவிகள் மூலமாகத்தான் இது அரைகுறையாக எங்கள் காதுகளை எட்டும்.

அம்மா : முன்பாவது மூன்று நாட்கள் ஒதுங்கி இருப்போம். என்ன ஏதுன்னு பெண் குழந்தைகள் கேட்கும். இப்போ அதற்கும் வாய்ப்பு குறைஞ்சுடுச்சு.

டீச்சர் : அதனால, நாங்களே இதையெல்லாம் பள்ளியில ஓரளவு எடுத்துச் சொல்லிடறோம்.

மாணவி : இதையெல்லாம் முன்பாகவே தெரிஞ்சுக்கிட்டா பயப்படத்தான் அதிக வாய்ப்பு.

டாக்டர் : ஒருவிதத்துல, நீங்க சொல்வது சரிதான். முன்னெல்லாம் ஒன்பதாம் வகுப்பு மாணவிக்கு இது நிகழும். அப்போ மனசு பக்குவப்பட்டிருக்கிறதால முன்பே விளக்கி விடுவது நல்லது. ஆனா ஐந்தாம் வகுப்பு மாணவிகள் கூட இப்பல்லாம் பூப்பெய்துடறாங்க. அவங்களுக்கு முதலிலேயே எடுத்துச் சொன்னா அது எதிர்

மறையாகச் செயல்படவும் வாய்ப்பிருக்கு. அதனால ரொம்பவும் கவனமாகக் கையாள வேண்டிய விஷயம் இது. முக்கியமா சைன்ஸ் பாட டீச்சர், செடி, விலங்குகளின் இனப்பெருக்கத்தை விளக்கும்போது, கடைசியில் மனித இனத்தையும் தொடலாம். "உங்க அப்பா ப்ரக்னென்ட் ஆகிப் பார்த்திருக்கியா?" என்று கொஞ்சம் நகைச்சுவையாகக் கூட இதை ஆரம்பிக்கலாம்.



குடத்து நீர் ஜில்லென்று இருக்க சகோதரி ஒருவர் ஐடியா கொடுத்திருந்தார். இதோ இன்னொரு டிப்ஸ். குடத்தைச் சுற்றிலும் ஒரு கனமான டவலைச் சுற்றி டவலில் ஈரப்பதம் இருக்கும்படி செய்து கொண்டால் போதும் ஜில் தண்ணீர் ரெடி! ஈர மணலை பாலிதீன் கவர் மீது பரப்பி அதன் மீது பானையை வைத்தாலும் தண்ணீரில் குளுமை வெகு நேரம் இருக்கும்.

- ஜி. அருள்ராணி, மதுரை - 10.

மாணவி : இப்பல்லாம் சீக்கிரமே பருவமடையறாங்களே, அதற்கு என்ன காரணம்? தாவரங்களுக்குப் பயன்படுத்தப்படும் ரசாயனங்கள்தான் காரணம்னு புத்தகத்துல படிச்சேன்.

அம்மா : சாப்பாட்டுல புரதம் போன்ற போஷாக்கான சத்துகள் அதிகமாகச் சேர்வதுதான் காரணம்னு நினைக்கிறேன்.

டாக்டர் : இதுக்கெல்லாம் தீர்மானமான ஆராய்ச்சி முடிவுகள் வெளிவரலை.

டீச்சர் : ஒருவேளை பரம்பரைதான் காரணமா? நாங்க நான்கு சகோதரிகள். எல்லோருமே எட்டாங்கிளாஸ் படிக்கும் போதுதான் பருவமடைந்தோம்.

டாக்டர் : முன்பெல்லாம் 45 வயசுலேயே மாதவிலக்கு நின்னுடும். இப்போது 53 வயசுல கூட அது நிற்காமல் வரும் போது, "இந்த விஷயத்துல உங்க அம்மா, பாட்டி எல்லாம் எப்படி?"னு நாங்க கேட்போம். அதே போல் பூப்பெய்தும் விஷயத்திலும் பரம்பரைக்குப் பங்கு இருக்கிறது. சின்ன வயசுலேயே பெரியவ ஆறதுல உடல்கூற்றின்படி கவலைப்பட எதுவுமில்லை. சொல்லப் போனால் இதுபோன்ற விஷயங்கள்ல சம்பந்தப்பட்ட பெண்ணை விட அவள் அம்மா தான் நிறையக் கவலைப்படுறாள்.

மாணவி : அந்தக் காலத்தில்தானே பெரியவங்க இந்த விஷயத்தை மூடுமந்திரமாக்கித் தப்பு செஞ்சாங்க. இதுல சாமி பெயரை வேறு கொண்டு வந்து நுழைச்சாங்க.

டாக்டர் : பெரியவங்க பல விவரங்களைத் தெரிஞ்சு வைச்சுருந்தாங்க. ஆனால் அதற்கான பின்னணி தெரியாத போது சாமி பெயரைப் பயன்படுத்தினாங்க. அப்போதானே யாரும் எதிர்த்துப் பேச மாட்டாங்க! அறிவியல் முன்னேறினாலும் இப்பக் கூட சில அதிர்ச்சிகரமான நிகழ்ச்சிகள் நடக்கத்தான் செய்கின்றன. சஞ்சம்பாக்கம் பக்கத்துல, ஒரு பதின்மூன்று வயதுச் சிறுமிக்கு தொடர்ந்து ரத்தம் வெளியேற, "சாமி இவ மேலே ஏறிடுச்சு. இவளிடமிருந்து நிறைய ரத்தம் போகப் போக நம்ம சமூகத்தினரின் கெட்டதெல்லாம் போயிடும்"னு அவங்க பாட்டுக்கு இருக்க, அது இதயத்தைப் பாதிச்சு, சாவுல முடிஞ்சுது.

இதுபோன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் கலந்துரையாடல்கள் பல உண்மைகளை மக்கள் மனத்தில் பதியவைக்க உதவுமே!

சந்திப்பு : **ஜி.எஸ்.எஸ்.**

படம் : **ஸ்ரீஹரி**

இனிய தம்பதி -7

ஒரு பெரிய நிறுவனத்தில் மார்க்கெட்டிங் பிரிவில் அதிகாரியாக வேலை பார்ப்பவன் கோகுல்நாத். திறமைசாலி... துடிப்பும் ஆர்வமும் கொண்டு விற்பனைப் பிரிவில் முன்னேறியவன்...

ஆனால் சமீப காலமாக அவனுக்கு எதிலும் ஆர்வம் அற்ற நிலை... சோர்வாகத் தென்பட்டான். அலுவலகத்திலும் மந்த நிலை...



“மறப்பக்குவமே மகிழ்ச்சி

இத்தனைக்கும் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டு ஐந்து வயது, மூன்று வயதுக் குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருபவன்தான்...

ஆனாலும் ஏதோ ஓர் ஏக்கம்...

கல்யாணங்கள், நண்பர்கள் வீட்டு விசேஷங்கள் என்று செல்லும் போது... அங்கே உறவினரோடு சந்தோஷமாக வளைய வரும் நண்பர்களைப் பார்க்கும் போது ஏக்கம்...

ஜாதி விட்டு ஜாதி மணம்செய்து கொண்டதால் அவன் வீட்டிலும் அவனை ஏற்கவில்லை. மனைவியின் வீட்டிலும் அங்கீகரிக்கவில்லை. "வாழ்ந்து காட்டறோம்... அவுங்களுக்கு நம்ப வேணாம்னா, நமக்கும் அவங்க வேணாம்..."

கல்யாணமான புதிதில் தெம்பாகச் சொன்ன வார்த்தைகள்தாம்...

"சரி சரி.. நீர் அடிச்சு நீர் விலகுமா? எல்லாம் பேரக் குழந்தைகள் பிறந்தா சரியாயிடும்..." எதிர்பார்ப்புகள்... ஒன்றல்ல, இரண்டான பிறகும்... இன்னும் இரு வீட்டிலும் பிடிவாதமாக ஏற்க மறுக்கிறார்கள்... வீட்டாரின் தவறான ஈகோ ஒருபுறம் இருக்கட்டும்...

"தான் செய்தது தவறோ" என்று கோகுல்நாத்துக்குத் தோன்ற ஆரம்பிக்கிறதே... ஏன்?"

தத்தம் குடும்பத்தின் குறைந்தபட்ச மாரல் சப்போர்ட் கிடைக்காத போது, காதல் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, சில காலம் கழித்து இப்படி ஓர் ஏக்கம் தோன்றினால்...? இந்தக் கேள்வியை சன் டி.வி. செய்தி வாசிப்பாளர், நிகழ்ச்சித் தொகுப்பாளர் ரத்னா, அவரது கணவர் அரவிந்திடம் கேட்டபோது...

“பின்னாளில் குடும்பத்தார் மனம் மாறி தம்மை ஏற்பார்கள் என்ற நம்பிக்கையுடன் தானே குடும்பத்தைத் துறந்து காதலர்/காதலியை நம்பி வெளியே வந்திருக்கிறீர்கள்... மன உறுதியோடு காத்திருக்கலாமே! இன்றைய நாட்களை மனைவி, குழந்தைகள் என்று சந்தோஷமாகக் கழித்து வரலாமே... ஏக்கச் சுமையை ஏன் மனதில் ஏற்றிக் கொள்ளணும்?" என்று கேட்கிறார் ரத்னா... கணினி பொறியியல் நிபுணர் அரவிந்தின் மனைவியாக, இரு குழந்தைகளின் தாயாக இருக்கும் இனிமையான, இளமையான ரத்னா....

"ஒரு சந்தோஷமான குடும்பத்தின் தலைவர் அல்லது தலைவியாக இருக்கும் அதிர்ஷ்டம் மிகப் பெரியதல்லவா?" என்கிறார் ரத்னா..

“கடவுள் ஒவ்வொருவரிடமும் ஓர் அற்புதமான சாவியைத்

அரும்!"

தந்திருக்கிறார்..." என்கிறார் டாக்டர் டான் மோரிஸ் என்னும் தத்துவ ஞானி.

"நம் மனசுக்குள் இருக்கும் உண்மையான அன்பு என்ற பெட்டியைத் திறந்து அதனுள் இருக்கும் உண்மையான சந்தோஷத்தை அள்ளுவது நம் கையில்தான் இருக்கிறது...

நாம் தொலைக்க முடியாத மந்திரச் சாவி அது... ஆனால் அதைத் திறப்பதற்கு உபயோகிப்பதும், வேண்டாம் என்று அடைத்து வைப்பதும் நாம் தான்! நாமேதான்!" என்கிறார்.

"நம் நாட்டில் திருமணம் என்பது இரண்டு குடும்பங் களின்



இணைப்புத்தான் என்றாலும், அக் குடும்பங்கள் சரியாகப் புரிந்து கொள்ளும் வரை காதல் திருமண தம்பதியினர், ஒருவரையொருவர் இன்னுமல்லவா ஆழ்ந்து நேசிக்க வேண்டும்?" என்கிறார் ரத்னா அரவிந்த்.

இன்றைய தம்பதியினர்... இவர்களுக்கிடையே பிளவு வர முக்கிய காரணம் ஈகோவா, பொருளாதாரமா... மற்ற காரணங்களா என்றால் இவை எதுவுமே இல்லை என்று மறுக்கிறார் ரத்னா...

"மிக மிக முக்கியக் காரணம் மனப்பக்குவம் இல்லாமைதான்..."

''முதலில் கல்யாணம் வேண்டாம் என்று தீர்மானித்து, பிறகு காலம் கடந்து திருமணம் செய்து கொண்டு பின்னர் பிரச்னைகளைச் சந்தித்த சிலரை நான் அறிவேன்...'' என்று ஆரம்பித்தார் அரவிந்த்.

இந்த இனிய தம்பதிக்கு, திருமணமாகி பதினான்கு ஆண்டுகள் குழந்தைப்பேறு கிட்டாதிருந்து, பின்னர் இரண்டு வருடங்களுக்கு முன்தான் இனிய இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கிறார்கள். கல்யாணமான இரண்டாம் மாதமே, ''என்ன ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்க ஆரம்பிக்கிற நம் சமூகத்தில், பல ஆண்டுகள் இவர்கள் எப்படிச் சமாளித்தார்கள்?

அரவிந்த், "நாங்கள் இதைப் பெரிய பிரச்னையாகவே எடுத்துக் கொள்ளவில்லை" என்கிறார்.

''குற்ற உணர்வுடனோ, கலங்கிய மனத்துடனோ நிச்சயமாக நாங்கள் இல்லை...'' என்கிறார் ரத்னா.

"நாங்கள் பாட்டுக்கு எங்கள் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டு, வாழ்க்கையை இனிமையாகத்தான் கழித்தோம். பாஸிடிவ் எண்ணத்தோடுதான் இருந்தோம்..."

மணமாகி சில ஆண்டுகள் ஆகியும் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் எந்தக் கலக்கமும் அடையத் தேவையே இல்லை என்பது ரத்னா மற்றும் அரவிந்தின் ஒருமித்த கருத்து...

இப்படி இலேசான மனத்தோடு உற்சாகமாக இருந்ததாலோ என்னவோ, பல ஆண்டு தனிமை வாசத்துக்குப் பின் இரண்டு குழந்தைகளின் வரவு...

"நிச்சயமாய் சந்தோஷம் அளித்தது; அவர்கள் வரவால் வாழ்க்கையின் சுவை மேலும் கூடியிருக்கிறது. இன்னும் வண்ணமயமாய் மாறி விட்டது. கூடவே பொறுப்புகளும் அதிகரித்துள்ளன'' என்கிறார் அரவிந்த்.

ஒரு சிறந்த செய்தி வாசிப்பாளராக, தொகுப்பாளராகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ள ரத்னா,

"மனப்பக்குவம் இல்லாத பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் பாவம்...'' என்கிறார்.

"வீட்டு வேலைகள், நிர்வாகம் எல்லாம் பார்த்துப் பார்த்து நானேதான் செய்கிறேன்... அவ்வப்போது அரவிந்த் உதவுவது உண்டு... இருந்தாலும் நான் முதலில் சொன்னது போல, ஒரு சந்தோஷமான குடும்பத்தின் தலைவன் அல்லது தலைவியாக இருப்பது வரம்... அதை ஏன் உங்கள் மனக் கோணல்களால் கெடுத்துக் கொள்ளணும்...?'' என்கின்றனர் ஒருமித்த குரலில்!

- பத்மினி பட்டாபிராமன்

படம் : **ஸ்ரீஹரி**



பிரஷர் குக்கர் நீண்ட காலம் நீடித்து உழைக்க நன்றாக ஆவி வந்த பிறகே வெயிட்டைப் போட வேண்டும்.

- மு. சாந்தி, போடி.

ஆஹா 50!



சாக்ஸ்களை துவைத்து உலர்த்தி மடித்து வைக்கும் போது ஜோடி மாறி விடாமல் இருக்க, ஒரு ரப்பர் பேண்ட் போட்டு வைத்து விட்டால், அவசரமாகத் தேடும் டென்ஷனைக் குறைக்கலாம்.

எம். வரலக்ஷ்மி,
சென்னை - 102.



கால் கட்டை விரல் நக இடுக்கில் மண் புகுந்து மிகவும் வலியெடுத்தால், 'பின்' வைத்து நோண்டி விடாதீர்கள். விளக்கெண்ணெயில் இரண்டு சிட்டிகை மஞ்சள் தூள் கலந்து தேய்த்து விடுங்கள். மண் இளகி வெளியே வந்து விடும். சீழ் பிடிக்காது.

- வி.எஸ். பெங்களூர்.



எறும்பு என்ன கடிச்சுது

"ராசாவே சித்தெறும்பு என்ன கடிச்சுது!" என்ற சினிமாப் பாடல் வந்த சமயம். எங்கள் பேரன் பெயர் சித்தார்த். 'சித்து' என்று கூப்பிடுவோம். யார் இந்தப் பாட்டை பாடினாலும், தன்னைக் குறித்துத்தான் பாடுகிறார்கள் என்று, "தாத்தா, எறும்பு என்ன கடிச்சுது; ஆச்சி, எறும்பு என்ன கடிச்சுது" என்று பதிலுக்குப் பாடுவான். இன்றும் நினைத்துச் சிரித்து மகிழ்வோம்.

- கோமதி சிதம்பரநாதன், திருநெல்வேலி.

நிலா! நிலா! ஓடி வாங்க!

என் குழந்தை ஸ்ரீராமுக்கு இரண்டு வயதாகிறது. படுசுட்டி.. கற்பூர புத்தி!

ஒருநாள், நாங்கள் அவனிடம் யாரையும்





ஆஹா 50!



'வா, போ'னு சொல்லக் கூடாது. 'வாங்க போங்க'னு மரி யாதையாதான் அழைக்கணும்னு சொன் னோம்.

ஒருநாள், வீட்டுக்கு விருந்தினர் வந்திருக்கும் போது, என் மகன் அவர்களை, 'வாங்க மாமா, வாங்க அத்தை' என்று அழகாகக் கூப்பிட்டான். அவர்கள் மிகவும் சந்தோஷமாகி, "ஏதாவது பாடிக் காண்பி" என்று கூற, என் மகன் உடனே, "நிலா! நிலா! ஓடி வாங்க! நில்லாமல் ஓடி வாங்க" என்று பாட ஆரம்பித்தான். 'ங்க...' என்று அழுத்தி அழுத்தி அவன் பாடுவதன் காரணத்தைச் சொன்னதும் வீடே சிரிப்பலை யில் அதிர்ந்தது!

குட்டீஸ் லூட்டி

- ஆர். பாரதி மகேஷ், நாகை.

மழலைக் குறும்பு!

கொடுத்தால்தானே!

என் மூன்று வயது மகளை அவள் அத்தைகள் செல்லமாக 'நாட்டாமை' என்று தான் அழைப்பார்கள். ஒருநாள், அவள் ஒரு பேனாவை அத்தையிடம் கொடுத்தாள். அதை வேடிக்கையாகப் பார்த்தவாறு ஒரு அத்தை, "நாட்டாமை, தீர்ப்பை மாற்றி எழுது" என்ற சினிமா டயலாக் சொல்லி விட்டாள்.

அதற்கு என் மகள் உடனே, 'நீங்க பேனாவைத் திறந்து கொடுத்தாதானே எழுத முடியும்?" என்றாளே பார்க்கலாம். அனைவரும் சிரித்தே விட்டோம்!

- ஆர்.ஜி. மீனாக்ஷி, சென்னை - 84.

என்ன... ஏது?

அன்று என் மகளின் இரண்டாவது பிறந்த நாள். குழுமியிருந்த உறவினர், நண்பர்களிடையே குட்டித் தேவதையாக வலம்வந்த அவளை, அருகில் வரும்படி அழைத்தேன். அவளோ கவனிக்க வில்லை. அவளது பெரியப்பா, "அம்மா கூப்பிடறா பார்... என்ன ஏதுன்னு கேளு" என்றதும், என்னிடம் ஓடி வந்து, "என்ன... ஏது?" என்று ஸ்டைலாகக் கூறிவிட்டு ஓடி விட்டாள். ஒரு நிமிடம் திகைத்த நான், அடுத்த நிமிடம் 'கடகட' என சிரிக்கத் துவங்க அது அலையலை யாய் அனைவரிடமும் பரவ ஒரே கலாட்டாதான் போங்க...

- விஜயா சுந்தர்ராஜன்,
திருவள்ளூர்.





ராசி பலன்

வியய வருஷம் ஆடி 16ம் தேதி முதல் ஆவணி 15ம் தேதி வரை (1.8.2006 முதல் 31.8.2006 வரை)

இந்த மாதத்தில் கிரக நிலை மாற்றம்

5.8.2006 - கடக புதன்
8.8.2006 - கடக சுக்ரன்
16.8.2006 - சிம்ம ரவி
29.8.2006 - கன்னி செவ்வாய்

ரா			சுக்
	1.8.2006 அன்று உள்ள கிரக நிலை		சூரி சனி புதன்
			செவ்
		குரு சந்	கேது

இந்த மாதம் எப்படி?



மேஷ ராசி :

அஸ்வினி, பரணி, கார்த்திகை, 1-ம் பாதம்

உழைப்போம், உயர்வோம் என்ற சிந்தனையுடன் செயல்படும் மேஷ ராசி நேயர்களே! உமது எண்ணம் ஈடேறும். சரளமான பணப்புழக்கம் உண்டாகும். தொழில் முறையில் சில சங்கடங்கள் உண்டாகும் எனினும் அச்சத்துக்கு இடமில்லை. மாணவர்கள் உயர்கல்வி பெற வாய்ப்புகள் கிட்டும். வேலை தேடி அலுத்துப் போனவர்களுக்கு இன்ப அதிர்ச்சியாய் நல்ல வேலை கிடைக்கும். சிலர் வெளிநாடு செல்லவும் வாய்ப்பு தேடி வரும். இறையருள் கூடும். இன்னல் விலகும். உங்கள் குடும்பத்தில் ஒருவர் காதல் திருமணம் புரிவார். 25.8.06 நள்ளிரவு முதல் 28.8.06 நண்பகல் வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. ஸ்ரீதேவி கருமாரியம்மனை வழிபட, கவலைகள் விலகும்.

ரிஷப ராசி :

கார்த்திகை 2, 3, 4-ம் பாதங்கள், ரோஹிணி, மிருகசீரிஷம் 1, 2-ம் பாதங்கள்.

இனிமையும், எளிமையும் கொண்ட ரிஷபராசி நேயர்களே! சரளமான பணப் புழக்கம் உண்டு. வீடு, மனை, பூமி வாங்க வாய்ப்பு உண்டாகும். அரசுடன் மோதல் போக்கைத் தவிர்ப்பது வியாபாரிகள் அனுசரிக்க வேண்டிய யுக்தி ஆகும். சிலர் மனைவி பேரில் முதலீடு செய்வர். கடன் கணிசமாகத் தீரும். எதிர்பாராத தனலாபம் கிட்டும். பிறந்த வீட்டின் மூலம் உதவியும் ஒத்தாசையும் கிட்டும். உயர்கல்வி மற்றும் ஆய்வுக் கல்வி பயில்வோர் இலக்கை எய்துவர். அரசு வழி அனுகூலம் தேடி வரும். 28.8.06 நண்பகல் முதல் 30.8.2006 நள்ளிரவு வரை

சந்திராஷ்டமம். கவனம் தேவை. ஸ்ரீ மஹாலக்ஷ்மியை வழிபடுதல் நன்று. மஹாலக்ஷ்மி ஸதநாம ஸ்தோத்திரம் பாராயணம் செய்க.





மிதுன ராசி :

மிருகசீரிஷம் 3, 4-ம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதங்கள்.

எதனையும் எளிதில் சீர்தூக்கிப் பார்த்துச் செயல்படும் மிதுன ராசி நேயர்களே! கணவன் மனைவி இடையில் மகிழ்ச்சி பெருகும். மகள் திருமணம் திடீர் என கூடும். கண் சம்பந்தமான

சிறு சிறு இன்னல்கள் வர வாய்ப்பு உள்ளது. குருபலம் காரணமாக அச்சம் அகலும். வீண் வாக்குவாதம் தவிர்த்தல் நலம். கல்வி பயில்வோர் மிகவும் கவனமாக இருக்கவும். உணவு வகையில் ஒவ்வாமைக்கு இடம் உண்டு. கடன் தீரும். அரசியல்வாதிகள் மிகவும் அனுகூலம் அடைவர். ரியல் எஸ்டேட், ட்ராவெல் ஏஜென்ஸி, கம்ப்யூட்டர் சென்டர் நல்ல லாபம் தரும். 3.8.2006 மாலை முதல் 5.8.2006 நள்ளிரவு வரை மற்றும் 30.8.06 நள்ளிரவு முதல் மாதத்தின் இறுதி வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. மஹாவிஷ்ணுவின் அம்சமான லக்ஷ்மி ஹயக்ரீவரை வணங்கவும்.

கடக ராசி :

புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்

கலகலப்புடன் இருந்தாலும் கடமை தவறாத கடக ராசி நேயர்களே! குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். உடல் நலனில் கவனம் தேவை. இரத்த அழுத்தம் மற்றும் நரம்பு சம்பந்தமான நோயுள்ளவர்கள் தேகப் பயிற்சி மூலமும் தெய்விகப் பிரார்த்தனை மூலமும் நலமடைய இடமுண்டு. தொழில் வழியில் உற்சாகம் நிலவும். பெண்கள், தாயார் வீட்டின் உதவியைப் பெறுவர். உமது எண்ணத்தில் உயர்ந்த நோக்கம் இருக்கும். அது நிறைவேற இறையருள் துணை புரியும். வீடு (அ) தொழிலகம் மாற வேண்டிய சூழ்நிலை வரும். கடன் தீரும். பூர்விகச் சொத்து உமது வசமாகும். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் கிட்டும். 5.8.06 நள்ளிரவு முதல் 7.8.06 பின்னிரவு, 8.8.2006



டாக்டர் முருகடிமை துரைராஜ்

அதிகாலை வரை சந்திராஷ்டமம் கவனம் தேவை. மாதாபுவனேஸ்வரியை வழிபட, வாழ்வில் வளம் சேரும்.

சிம்ம ராசி :

மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்.

எதிரிக்கு சிம்மசொப்பனமாகத் திகழும் சிம்மராசி நேயர்களே! உமது செயல்திறன் மேன்மை அடையும். பொது வாழ்வில் பெயரும் புகழும் சேரும். தெய்விகப் பிரார்த்தனைகள் பலிதமாகும். பணப்புழக்கமுள்ள பணியை ஏற்று இருப்போர், மிகுந்த கவனமுடனிருப்பது அவசியம். இதய நோயாளிகள், நரம்பியல் கோளாறு உள்ளவர்கள் எச்சரிக்கையுடனிருப்பது நலம். கடன் தீரும். பகை விலகும். கோர்ட் வழக்கில் எதிர்பார்த்தபடி முடிவுகள் அமையும். புதிய கூட்டாளிகள் கிடைப்பர். உமது புத்திக் கூர்மையாலும் நிர்வாகத் திறமையாலும் எதிர்ப்புகளைச் சிதறடிப்பீர்கள். நீண்ட கால கனவுகள் நிறைவேறும். நீச்சல் குளம், நீர்வீழ்ச்சி, ஆறு, குளம், கடல் போன்றவற்றில் மிக்க எச்சரிக்கையுடன் நேரத்தைச் செலவிடவும். 8.8.06 அதிகாலை முதல் 10.8.2006 அதிகாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. அர்த்தநாரீஸ்வரரை வழிபட அச்சம் விலகும். ஆனந்தம் சேரும். சிவநாம ஜெபம் செய்க.

கன்னி ராசி :

உத்திரம் 2, 3, 4-ம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2-ம் பாதங்கள்.

கண்ணியம் மிகுந்த கன்னி ராசி நேயர்களே! தொழிலில் வெற்றிக் கொடி நாட்டுவீர்கள். அரசு வழி அல்லல் அகலும். வாக்கினால் வளமும் நலமும் சேரும். பெண்கள் மூலம் மிகுந்த பொருள்தனம் சேரும். உடல்நலனில் கவனம் தேவை. குறிப்பாக நீரிழிவு நோயாளிகள், உணவுக் குழாய் சம்பந்தமான நோயுள்ளவர்கள், தகுந்த மருத்துவக் கண்காணிப்பில் இருப்பது அவசியம். கருவுற்ற தாய்மார்கள் மருத்துவப் பராமரிப்பில் மிகுந்த அக்கறை செலுத்தவும். சிலருக்கு மறுமணம் நடக்க வாய்ப்புள்ளது. 10.8.06 அதிகாலை முதல் 12.8.2006 அதிகாலை வரை சந்திராஷ்டமம்; கவனம் தேவை. மஹாவிஷ்ணுவின் அம்சமான தன்வந்திரி பகவானை வழிபடவும்.

கட்டித் தயிர் வேண்டுமா?

பாலை நன்றாகக் காய்ச்சி, பதமான சூட்டில் சிறிது மோரை ஊற்றி நுரை பொங்க ஆற்றி சிறிய மண்பானையில் ஊற்றி வையுங்கள். உறைந்தபின் திறந்து பாருங்கள். சூப்பரான கட்டித் தயிர் ரெடி!

- சி. பூங்கோதை, சிதம்பரம்.



துலாம் ராசி :

சித்திரை 3, 4-ம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்கள்.

துவளாத மனமும், துல்லியமாகச் சீர்தூக்கி அறியும் ஆற்றலும் கொண்ட துலாம் ராசி நேயர்களே! தொட்டது துலங்கும். முடியாது என விட்டது மீண்டும் தொடரும். மனைவி வழியில் அனுகூலம் கிட்டும். எதிர்பாராத தனலாபம் கிட்டும். சிலர் பணி நிமித்தம் வெளிநாடு செல்ல மனைவியை (அ) கணவனைப் பிரிய நேரும். சிலர் கலப்புத் திருமணம் புரிய இடம் உண்டு. உடல் நலனில் கவனம் தேவை. குறிப்பாக, அஜீரணக் கோளாறு மற்றும் மூல வியாதியால் அவதிப்படுபவர்கள் அதிக கவனம் செலுத்தவும். தெய்விகப் பிரார்த்தனை



மண்ணெண்ணெய் அடுப்புக்கு மட்டுமா?

தையல் மிஷின், சைக்கிள், கதவுக்கு எண்ணெய் விடும்போது தேங்காய் எண்ணெயோடு மண்ணெண்ணெய் கலந்து போட்டால் துரு கரைந்து விடும். பாருங்கள் பழுதடையாமல் இருக்கும்.
- கே. எஸ். லக்ஷ்மி, காரைக்குடி.

களை நிறைவேற்றுக. சிலர் புதிய வீட்டில் குடியேறலாம். புதிய வண்டி வாகனம் வாங்க முடியும். 12.8.06 அதிகாலை முதல் 14.8.06 அதிகாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. மஹா லக்ஷ்மியை மனமுருக வழிபடவும். லக்ஷ்மி ஸத நாமஸ்தோத்திரம் பாராயணம் செய்க.

விருச்சிக ராசி :

விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை

வீரமாகச் செயல்பட்டாலும் விவேகம் குன்றாத விருச்சிகராசி நேயர்களே! நீங்கள் நினைத்தது நினைத்தபடி நடக்கும். இறைவழி பிரார்த்தனைகள் பலிதமாகும். நீங்கள் வெளிநாடு செல்ல வாய்ப்பு கிடைக்கும். பிரிந்த தம்பதியர் இணைந்து வாழ இடம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும். கருவுற்ற தாய்மார்கள் மிகவும் கவனமுடனிருப்பது நலம். வீடு, மனை, பூமி என வாங்க வாய்ப்பு கிட்டும். 14.8.2006 அதிகாலை முதல் 16.8.2006 காலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. சமயபுரம் மாரியம்மனை வழிபடவும். சௌந்தர்யலஹரி பாராயணம் செய்க.

சேப்டி பின்களை ஒரு பழைய டையில் வரிசையாகக் குத்தி வைத்து விட்டால், தேடாமல் எடுத்துக் கொள்ளலாம்.
- எம். வரலக்ஷ்மி.



தனுசு ராசி :

மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்

எல்லோருக்கும் உதவும் உயரிய குணம் கொண்ட தனுசு ராசி நேயர்களே! திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் ஆகும். நீண்ட கால கனவுகள் நனவாகும். செய்தொழிலில் தடைகள் அவ்வப்போது குறுக்கிடும், எனினும் அச்சம் வேண்டாம். பணம் கையாளும் பொறுப்பில் இருப்பவர்கள் பணியில் கவனம் தேவை. பூர்வீகம் விட்டுப் போனவர்கள், மீண்டும் திரும்பி வர இடமுள்ளது. கண் சம்பந்தமான இன்னலை ஏற்க நேரும். மருத்துவம், கம்ப்யூட்டர் சயின்ஸ், ஆர்க்கிடெக், மைக்ரோபயாலஜி போன்றவற்றில் மாணவர்களுக்கு வாய்ப்பு கிட்டும். உயர் அதிகாரிகளிடம் இணக்கமாக நடந்து கொள்வது நலம். 16.8.06 காலை முதல் 18.8.2006 மாலை வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. திருச்செந்தூர் முருகனை வழிபடவும் ஆதிசங்கரர் அருளிய சுப்ரமண்ய புஜங்கம் பாராயணம் செய்க.



மதிய வேளையில் குழாயைத் திறந்தால் கொதிக்கும் நீர்தான் வருகிறது என்று கோபத்தில் குதிக்காதீங்க! எண்ணெய்ப் பிசுக்கான கைப்பிடித் துணி, கால்மிதியடிகள், பாட்டில்கள் இவற்றைக் கழுவி அலச இந்த சுடுநீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- நா. ராஜேஸ்வரி, மதுரை - 14.

மகர ராசி :

உத்திராடம் 2, 3, 4-ம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதங்கள்.

எதிரிக்குக் கூட தீங்கு நினைக்காத மனமுடைய மகர ராசி நேயர்களே! கணவன் மனைவி இடையில் கருத்து ஒற்றுமை தேவை. செய்தொழிலில் நிலவும் தேக்கமான சூழ்நிலை தீர்ந்து புதிய உற்சாகம் பெறும். எதிர்பாராத தன வரவுக்கு வாய்ப்பு உண்டு. கூட்டாளிகளிடம் கருத்து வேறுபாடு அகலும். புதிய தொழிலில் எச்சரிக்கை தேவை. தந்தையின் உடல்நலனில் கூடுதல் கவனம் செலுத்தவும். உத்யோகப் பிரிவினர் விரும்பிய இடமாறுதலைப் பெறுவர். மனைவியின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். 18.8.2006 மாலை முதல் 20.8.2006 நள்ளிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. ஸ்ரீ வெங்கடாஜலபதியை வழிபடவும். விஷ்ணுசஹஸ்ரநாமம் பாராயணம் செய்க.

கும்ப ராசி :

அவிட்டம் 3, 4-ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதங்கள்.

குமிழ் சிரிப்பால் கவலையை விரட்டும் குணம் கொண்ட கும்பராசி நேயர்களே! கடன் தீரும். கவலைகள் விலகும். வீடு, மனை, கார் போன்றவை வாங்க முடியும். தொழில்புரிபவர்கள் உற்சாகம் பெறுவர். ஆர்க்கிடெக்ட், ஹோட்டல் மேனேஜ்மெண்ட், தகவலியல் போன்ற பிரிவுகளில் பயில்பவர்கள் நன்னிலை எய்துவர். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்திகள் வரும். தந்தை மூலம் தனலாபம் கிடைக்கும். பிரயாணங்களில் கவனம் தேவை. 20.8.2006 நள்ளிரவு முதல் 23.8.2006 நண்பகல் வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. ஸ்ரீ குருவாயூரப்பனை வழிபடவும்.

மீன ராசி :

பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

மென்மையான மனமும், மிதமான செயலும் கொண்ட மீனராசி நேயர்களே! உமது தொழிலில் ஓவர்டைம் செய்யவும் நேரும். பிரயாணம் மூலம் தொழில்புரிவோர் ஏற்றம் அடைவர். சரளமான பணப் புழக்கம் இருக்கும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போட வேண்டாம். புது மனை புகுவிழா நடத்த ஆயத்தமாவீர்கள். எண்ணம் ஈடேறும். லாபம் தரும் வழிகளில் முதலீடு செய்வீர்கள். அரசியலில் செல்வாக்கு கூடும். 23.8.2006 மாலை முதல் 25.8.2006 நள்ளிரவு வரை சந்திராஷ்டமம். கவனம் தேவை. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு நெய்தீபம் ஏற்றி, மஞ்சள் வண்ண மலர்களால் அர்ச்சிக்கவும்.



புகையிலையை சிறிது நீர் விட்டு ஊறவைத்து வீட்டிலுள்ள சிறு விரிசல்களிலும் ஓட்டைகளிலும் ஊற்ற எறும்புகளின் தொல்லை இராது.

- வி. ஸ்ரீதிவ், கும்பகோணம்.

பயன்தரும் பழச்சாறு!



தக்காளி + கேரட் சாறு - மேனிக்கு அழகு தரும். பீட்டாகெரட்டின் செறிந்தது. கண் பார்வை சிறப்படையும்.

வாழைப்பழம் + குளிர்ந்த பால் = மலச்சிக்கல் போக்கும். எடையைக் கூட்டும்.

திராட்சை + தேன் = வைட்டமின் சி, மைக்ரோ நியூட்ரியன்ட்ஸ் அடங்கியது. நோய் எதிர்ப்பு சக்தி தரும். இளமையை நீட்டிக்கும்.

பப்பாளி + முலாம்பழம் = வைட்டமின் ஏ நிறைந்தது. குளிர்ச்சி தரும்.

ஆரஞ்சு + தக்காளி = உடல்சூடு தணியும். பருமனைக் குறைக்க உதவும்.

ஆப்பிள் + பால் = வயிற்றுக்கோளாறுகளைப் போக்கும்.

சாத்துக்குடி + எலுமிச்சை - வைட்டமின் சி நிறைந்தது. நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். கூந்தல் அழகாகும்.

கேரட் + இஞ்சிச் சாறு = குமட்டலை நிறுத்தி, பசியைத் தூண்டும். சருமம் மிளிரும்.

அன்னாசி + தேன் = பழமாகச் சாப்பிடுவது நல்லது. நார்ச்சத்து நிரம்பியது. கொழுப்பைக் குறைக்கும். உடல்சூடு தணியும். காலரி நிரம்பியது.

மாம்பழம் + குளிர்ந்த பால் = சருமம் மென்மையாகும். இரத்தம் பெருகும். புஷ்டியைத் தரும்.

மாதுளை + திராட்சை = உடலின் நச்சுத்தன்மையைப் போக்கும். விதையுடன் சாப்பிட்டால் பற்கள் பலம் பெறும்.

- வி. சிந்து, பெங்களூர்.

படம் : **ஸ்ரீஹரி**

நன்றி : **பழமுதிர் நிலையம்; தி. நகர்.**

ஆல்பம்





பேத்தி : நகுல் வியாஸ்

தாத்தா: பாலகிருஷ்ணன்
பாட்டி : விஜயா பாலகிருஷ்ணன்

என் செல்வமே!



தாத்தா : எல். மதன்சிங்
பாட்டி : பி. விஜயலக்ஷ்மி



பேரன் : ஆர்.எஸ். கனிஷ்குமார்



பேத்தி : உமையாள்



குழந்தை : ஆட்தி கார்த்திகேயன்
தாத்தா : எஸ். ராமஸ்வாமி
பாட்டி : உமா ராமஸ்வாமி



தாத்தா : முருகேசன், பாட்டி : சந்திரா



குழந்தை : கிரிதர்



தாத்தா : ஆர். பரமேஸ்வர ஐயர்
பாட்டி : ஈ. சரோஜா

வீட்டு மனையில் வில்லங்கமா?

வழக்கறிஞர் புஷ்பா ரமணி





கே. நந்தினி, சென்னை.

ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு மோட்டார் சைக்கிள் எனது கணவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதிக காயம் இல்லாததால் சிறிது காலச் சிகிச்சைக்குப் பிறகு சரியாகி விட்டார். ஆனால், கடந்த மூன்று மாதங்களாக அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு படுத்த படுக்கையாகி விட்டார். விபத்து ஏற்பட்டதன் விளைவு தான் இந்த உடல்நலக் குறைவு என்கிறார் டாக்டர். மருத்துவச் செலவும் அதிகமாகிறது. வேலைக்குச் செல்லாததால் வருமானமும் இல்லை. விபத்து நடந்தவுடன் காயம் அதிகமில்லை என்று நாங்கள் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. இப்பொழுது என்ன செய்வது?

உடனேயே நீங்கள் வழக்குப் பதிவு செய்யாதது பற்றிக் கவலைப்பட வேண்டாம். விபத்து நடந்து எத்தனை வருடங்களுக்குப் பிறகு வேண்டுமானாலும் வழக்குப் பதிவு செய்யலாம். அதற்குக் காலவரையறை கிடையாது. விபத்து நடந்தபோது பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை (எஃப்.ஐ. ஆர்.). (எந்த வாகனம் மோதி அடிபட்டதோ அந்த வாகனம் பற்றிய விவரம் முதல் தகவல் அறிக்கையில் இந்த விவரம் இருக்கும்) மருத்துவச் செலவு ஆனதற்கான சான்று, தற்போது தங்கள் கணவர் வேலைக்குப் போகாததால் ஏற்பட்ட வருமானக் குறைவு போன்றவற்றைப் பட்டியலிட்டு, மோட்டார் வாகன இழப்பீடு தீர்ப்பாயத்தில் (மோட்டார் ஆக்ஸிடெண்ட் க்ளெய்ம்ஸ் ட்ரிபியூனல்) மனுதாக்கல் செய்ய வேண்டும். உங்களுக்கு உரிய தொகை கிடைக்கும். மேலும் விபத்து ஏற்பட்டவுடன் போக்குவரத்துக் காவல் துறையினர் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்திருப்பார்கள். (பலருக்கு இந்த விவரம் தெரிவதில்லை. எல்லா விபத்துகளும் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்காகத் தாக்கல் செய்யப்படும்.) அந்த வழக்கு என்னவாயிற்று என்று புகார் கொடுத்த காவல் நிலையத்தில் விசாரித்தால் சொல்வார்கள். இந்த விவரம் தங்களது வழக்கிற்கு உதவியாக இருக்கும்.

எஸ். ஜெயந்தி, ஜெய்ப்பூர்.

எங்கள் குடும்பச் சொத்தான ஒரு வீடு எங்கள் சொந்தக் கிராமத்தில் உள்ளது. அதை எங்களால் பராமரிக்க முடியவில்லை; விற்பதற்கும் மனம் வரவில்லை. அந்த வீட்டை அந்தக் கிராம மக்களுக்குப் பயன்படும் வகையில் ஏதாவது செய்ய விரும்புகிறோம். ஆனால் மற்றவர்களிடம் ஒப்படைக்க விருப்பமில்லை. சட்டப்படி என்ன செய்யலாம்?

அடுத்தவர் சொத்திற்கு ஆசைப்படுபவர்கள் அதிகரித்திருக்கும் இந்தக் காலத்தில் உங்களது குடும்பத்தினரின்

தர்மசிந்தனைக்கு நன்றி. உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து ஓர் அறக்கட்டளை (டிரஸ்ட்) துவங்கலாம். அந்த அறக்கட்டளைக்கு வீட்டை எழுதி வைத்து, அந்த அறக்கட்டளை மூலம் நீங்கள் என்னென்ன நல்ல காரியங்கள் செய்ய விரும்புகிறீர்களோ அதை ஷரத்துக்களாகப் போட வேண்டும். அந்த வீட்டை ஒரு நூலகமாகவோ அல்லது சிறிய அளவில் கல்விக் கூடமாகவோ பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் மாற்றலாம். அதை நிர்வகிக்கும் பொறுப்பை உங்களுக்குத் தெரிந்தவர்களிடத்தில் ஒப்படைக்கலாம். நீங்கள் செலவு செய்ததற்கும் நன்கொடைகள் போன்ற கணக்குகளும் ஆடிட்டர் மூலமாக வருடத்திற்கு ஒருமுறை தணிக்கைச் செய்யப்பட வேண்டும். இப்படிக் குறைந்தது 3 வருடங்களுக்கு உங்களது கணக்குகளைத் தணிக்கை செய்து வைத்திருந்தால் அரசாங்கம் மற்றும் பெரிய தனியார் தொண்டு நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற உங்களது அறக்கட்டளை தகுதி பெறும். அதன் மூலம் உங்களது பொதுச் சேவையை விரிவுபடுத்திக் கொள்ளலாம். உங்களது பொதுநல சேவைக்கு வாழ்த்துக்கள்.



வனிதா ராமன், சேலையூர்.

நான் 6 மாதங்களுக்கு முன் சென்னைப் புறநகர்ப் பகுதியில் வீட்டு மனை வாங்கினேன். அங்கே வீடு கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யும் போது வேறொருவர் அந்த இடம் தங்களுக்குத்தான் சொந்தமானது என்று ஒரு பத்திரத்தைக் காண்பித்தார். எங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் அதிர்ச்சி. எப்படி ஒரே இடம் இருவருக்குச் சொந்தமாக முடியும்? அதுவும், பத்திரப் பதிவு அலுவலகத்தில் நாங்கள் வில்லங்கச் சான்றிதழுக்கு விண்ணப்பித்து, அதில் வில்லங்கம் எதுவும் இல்லை என்று உறுதியான பிறகுதான் அந்த இடத்தை வாங்கினோம். இப்பொழுது இதற்கு என்ன செய்வது?

இதுபோன்ற ஏமாற்று வேலைகள் தற்போது அதிகமாகி விட்டன. வில்லங்கச் சான்றிதழ் வாங்கும் நோக்கமே, நாம் வாங்



திருமகள் ஸ்தோத்திரம்

தாமரை திகழும் திருக்கரமும்
தளிர் நகை பொழியும் ஒளிர் முகமும்
க்ஷேமம் அளிக்கும் நல்லருளும்
சேவிப்பார்க்கு நிறை வரவும்
மூவர் போற்றும் பெருமையுடன்
முன்னே சங்க பதுமநிதி
காவல் செய்ய காட்சி தரும்
கமலமாதே வணங்குகின்றேன்!

- ஆர். எஸ். சௌந்தரா, மும்பை.

கும் இடம் வேறு யாருக்காவது விற்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான். சில சமயங்களில் சிலரின் கவனக்குறைவால் நாம் ஏமாந்து விட நேருகிறது. உங்களது பிரச்னைக்கு நீங்கள், விற்றவர் மீது குற்றவியல் மற்றும் உரிமையியல் (சிவில் மற்றும் கிரிமினல்) நீதிமன்றங்களில் வழக்குத் தொடரலாம். குற்றவியல் நீதிமன்றத்தில் விற்றவர் மீது நம்பிக்கைத் துரோகம் மற்றும் ஏமாற்றியதற்காக (இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவு 409 மற்றும் 420) வழக்குத் தொடரலாம். உரிமையியல் நீதிமன்றத்தில், தனக்குத்தான் அந்த இடம் உரிமையானது என்று சொல்லும் நபர் மீது வழக்குத் தொடரலாம். இந்த வழக்கில் விற்றவரை 2 ஆவது எதிர்மனுதாரராகவும், பத்திரப் பதிவு அலுவலகத்தை 3 ஆவது எதிர் மனுதாரராகவும் (அந்த அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட வில்லங்கச் சான்றிதழ் அடிப்படையில்தான், அதை நம்பிதான் தாங்கள் சொத்தை வாங்கி இருக்கிறீர்கள்.) சேர்த்து வழக்குத் தொடரலாம். இந்த வழக்கிற்கு டிக்லரேஷன் சூட் என்று பெயர். அதாவது அந்தச் சொத்து யாருக்கு உண்மையிலேயே சொந்தமானது என்பதை நீதிமன்ற உத்தரவு மூலமாக அறிவிக்கும் வழக்கு. இந்த வழக்கின் தீர்ப்பாக உங்களது சொத்தைத் தக்க வைத்துக் கொள்ளலாம். அல்லது அந்தச் சொத்திற்கு ஈடாக பணம் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் தங்களுக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்காகத் தனியாக நஷ்டஈடு கேட்டும் வழக்குத் தொடரலாம்.



விநாயகர் சதுர்த்தி அன்று இக்காணும் இலைகளால் அர்ச்சனை செய்தால் கிடைக்கும் பலன்கள் :

கண்டங்கத்திரி இலை - லட்சுமி கடாட்சம்
மாதுளை இலை - நற்புகழ்
வெள்ளெருக்கு - சகல பாக்கியம்
அரளி இலை - அன்பு
அகத்தி இலை - துயரம் களைதல்
அரச இலை - எதிரி நாசம்
எருக்கு இலை - குழந்தைப்பேறு
மாவிலை - துன்பம் நீங்கும்
மருத இலை - மகப்பேறு
துளசி - விநாயகருக்கு சாத்துதல் கூடாது.

- ஆர். ஜெயலெட்சுமி, திருநெல்வேலி.

யாரைப் பார்த்தாலும் ஃபேஷியல் செய்து கொண்டதாகச் சொல்கிறார்கள். ஃபேஷியல் என்பது எல்லாருக்கும் தேவையா? அதனால் அப்படி என்னதான் பலன்?

- எஸ். ராகவி, திருச்சி - 3.

ஃபேஷியல் எல்லோருக்கும் தேவையா?

ஃபேஷியல் என்பது முகத் தசைகளுக்கான மசாஜ். உடலுக்கு உடற்பயிற்சி மாதிரி முகத்துக்கு ஃபேஷியல். முகத்தை இளமையாக, அழகாக வைத்திருக்க ஃபேஷியல் அவசியப்படுகிறது. இதில் வயதுக்கேற்ப பல ரகங்கள் உள்ளன. 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு மினி ஃபேஷியல் என்று ஒன்று உண்டு. இதில் மசாஜ் இருக்காது. சருமத்தைச் சுத்தப்படுத்தி, இறந்த செல்களை அகற்ற ஸ்க்ரப் உபயோகித்து பேக் போடுவார்கள்.

கிளீன் அப் ஃபேஷியல் என்று ஒன்று இருக்கிறது. ரொம்பவும் மசாஜ் இருக்கும். இதன் விளைவாக, இரத்த ஓட்டம் அதிகரிக்கும். சருமத்தைக் கிளென்ஸ் செய்து, மசாஜ் செய்து, பேக் போடுவார்கள். 20 வயதுக்கு மேல் உள்ளவர்கள் இதைச் செய்து கொள்ளலாம்.

இது தவிர, ஸ்பெஷல் ஃபேஷியல்களும் உண்டு. பிரச்னைக்குரிய சருமத்துக்கு,



அழகோ அழகு... அழகுக்கலை நிபுணர் வசுந்தரா

எண்ணெய் வழிகிற சருமத்துக்கும், பருக்கள் அதிகமுள்ள சருமத்துக்கும் இந்த ஃபேஷியல் செய்யலாம். இதில் மசாஜ் குறைவாக இருக்கும். இறந்த செல்கள் அகற்றப்பட்டு, அதிகப்படியான எண்ணெய்ப் பசை கட்டுப்படுத்தப்படும். கிளென்சிங் மில்க், ஆஸ்ட்ரின்ஜென்ட் டோனர் மற்றும் மாஸ்க் உபயோகிக்கப்படும்.

ரெகுலர் ஃபேஷியல்கள் ஒரு ரகம். இதில் காய்கறிகளைக் கொண்டு, பழங்களைக் கொண்டு, மூலிகைகளைக் கொண்டு செய்யப்படுகிற ஃபேஷியல்கள் நிறைய உண்டு. இதில் நல்ல அதற்கேற்ப செய்யப்படுகிற பேஷியல்கள் இவை. உதாரணத்துக்கு முகத்தில் கருமையான திட்டுகள், கரும்புள்ளிகள், சருமம் தொய்வடைந்து போவது, கன்னங்கள் ஒட்டிய மாதிரி தோற்றம், டபுள் சின் போன்றவற்றைச் சரி செய்ய பிரத்யேக கிரீம்கள் கொண்டு செய்யப்படும். சரும நிறத்தை அதிகரிக்கச் செய்யவும் ஃபேஷியல் உண்டு. இந்த

ஃபேஷியல்களை எல்லாம் குறைந்தது 4 முதல் 6 முறைகள் செய்து கொள்ள வேண்டியிருக்கும். 15 நாட்களுக்கொரு முறை செய்யலாம்.

பொதுவாக ஃபேஷியல் செய்வதால் வேண்டாத துர்நீர் வெளியேறும். இரத்த ஓட்டம் அதிகரிக்கும். சரும நிறம் கூடும். சருமம் மென்மையாகும். உடலுக்கும், மனதுக்கும் நல்ல ஓய்வைத் தரும்.

முகத்துக்கு ஃபேஷியல் செய்கிற மாதிரி, ஒட்டுமொத்த உடலையும் அழகாக, ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள ஏதேனும் டிப்ஸ் சொல்லுங்களேன்.

- வி.எஸ்.ஜே. திருப்பத்தூர்.

உடம்புக்கான மசாஜ் உடலை அழகாக, ஆரோக்கியமாக , இளமையாக வைக்கும். முறையான ஆயில் மசாஜ் செய்வது சருமத்துக்கு நல்லது. நல்லெண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் இரண்டையும் சம அளவு எடுத்து வெதுவெதுப்பாகச் சூடாக்கி, உடல் முழுக்கத் தடவிக் கொள்ளவும். மசாஜ் செய்து விடவும். எண்ணெய்க் குளியல் எடுக்கும் போது சோப் உபயோகித்துக் குளிக்கக் கூடாது. அதற்கென பிரத்யேகப் பொடி உள்ளது. அதை வீட்டிலேயே தயாரித்து உபயோகிக்கலாம்.

சந்தனப் பொடி - 2 டீஸ்பூன்,

ரோஜா இதழ் பொடி - 2 டீஸ்பூன்,

காயவைத்த ஆரஞ்சுப் பழத்தோல் பொடி - 2 டீஸ்பூன்;

முல்தானிமிட்டி (அ) கடலை மாவு - 10 டீஸ்பூன்

இவற்றைப் போதிய அளவு பன்னீரில் குழைத்துக் கொள்ளவும். உடலை ஈரப்படுத்திய பிறகு இந்தக் கலவையை வட்டமாகத் தடவித் தேய்த்துக் குளிக்கவும். வாரம் ஒன்றிரண்டு முறைகள் இப்படிச் செய்து வந்தாலே உங்கள் ஒட்டுமொத்த உடலின் சருமமும் அழகாக மாறும்.

கடைகளில் ஷாம்பூ தனியே, கண்டிஷனர் தனியே விற்கிறார்களே... அதென்ன கண்டிஷனர்? அதை ஏன் உபயோகிக்க வேண்டும்?

- எம். கருணநந்தினி, ஹைதராபாத்.

ஷாம்பூ குளியல் எடுக்கும்போதெல்லாம் கட்டாயம் கண்டிஷனர் உபயோகிக்க வேண்டும். ஷாம்பூ உபயோகிப்பதால் கூந்தலின் கியூட்டிகிள் பகுதி திறந்து கொள்ளும். கூந்தல் சுத்தமானாலும், கியூட்டிகிள் பகுதி மூடப்படாதபோது கூந்தல் முரட்டுத்தனமாக, பொலிவே இன்றி இருக்கும். சுலபத்தில் வெடிக்கும். கூந்தல் உதிரும். கண்டிஷனர் உபயோகிக்கிற போது கியூட்டிகிள் பகுதி மூடப்படும். அப்போது கூந்தல் மென்மையாக, பொலிவாக இருப்பதை உணரலாம். ஷாம்பூ போட்டு அலசிய பிறகு ஈரமான கூந்தலில், மண்டைப் பகுதியில் படாதபடி, வெறும் முடிப் பகுதியில் மட்டும் கண்டிஷனரைத் தடவி, 5 நிமிடங்கள் காத்திருந்து அலசி விடலாம். ஷாம்பூவுடன் கண்டிஷனர் சேர்ந்தே இப்போது கிடைக்கிறது. அதை உபயோகிப்பது அவ்வளவு சிறந்தது இல்லை. ஷாம்பூ தனியே, கண்டிஷனர் தனியே உபயோகிப்பதே கூந்தல் ஆரோக்கியத்தைக் காக்கும்.



ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் செய்ய வேண்டிய நைவேத்தியங்கள்

அவல், வெல்லம், வெண்ணெய், பால், தயிர், வாழைப்பழம், நாவல் பழம், கொய்யாப்பழம், விளாம்பழம், சீடை, உப்புச் சீடை, வெல்லச் சீடை, முறுக்கு, லட்டு, மைசூர்பாகு, தேன்குழல், தொட்டில்பயறு, பொரிகடலை வெல்லம் போட்ட உருண்டை, தட்டை, ஓமப்பொடி, தேங்காய்த் திரட்டுப்பால் ஆகியவை கிருஷ்ணனுக்குச் செய்ய வேண்டிய நைவேத்தியங்கள்.

- ஆர். மீனாட்சி, திருநெல்வேலி.

நீங்கள் நினைத்த காரியம் கைகூட வேண்டுமா?


இவரை ஒருமுறை சந்தியுங்கள். உங்கள் வாழ்க்கையில் ஒரு மிகப்பெரிய திருப்பத்தை, வெற்றியை மிக விரைவில் அடைவீர்கள்.



நீங்கள் நினைத்த காரியம் கைகூட வேண்டுமா? கோவை மாவட்டம், அன்னூர் - பு. புளியம்பட்டிக்கு அருகில் உள்ள கனுவக்கரையில் வசிக்கும் அதிர்ஷ்ட நியூமராலஜி மாமேதை **கே.ஆர்.பிரபாகர் ராஜ்** அவர்களைச் சந்தித்து நியூமராலஜி, பெயர் வசியம், சைன், கையெழுத்து வசியம், தொழில் வசியம் செய்து கொண்டால் நீங்கள் நினைத்த காரியங்கள் அனைத்திலும் வெற்றிமேல் வெற்றிபெறலாம்.

தொழில் முடக்கம், வியாபார மந்தம், உத்தியோகத்தில் தடை, வெளிநாடு செல்லத் தடை, கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடு, தாம்பத்யக் கோளாறு, திருமணத் தடை, குழந்தை பாக்கியம் இல்லாமை, எதிர்ப்பு, கோர்ட் வழக்கு.

மேலும் புகழ் இல்லாமை, முன்னேற்றத் தடை, செய்வினை, மாந்திரீக பாதிப்பு, தீய சக்திகளால் பாதிப்பு, ஊழ்வினை கர்மா, முன் ஜென்மப் பாவம் மேலும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மிகநல்ல முறையில் தீர்வு தருகிறார்.



இவரால் தொழில் வசியம் செய்யப்பட்ட அனைத்துத் தொழில் நிறுவனங்களும் இன்று முன்னணியில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இவரிடம் பெயர் வசியம் செய்து கொண்டவர்கள் பலரும் இன்று கலைத் துறையிலும், அரசியலிலும் புகழ்பெற்று விளங்குகிறார்கள். இராஜவசிய உச்சாடனப்படி அதிர்ஷ்டப் பெயர் அமைத்துக் கொண்டவர்கள் பலரும் இன்று மிகப்பெரிய கோடீஸ்வரர்களாகவும், சாதனையாளர்களாகவும் திகழ்கிறார்கள்.

வெற்றியடைய முடியாத பல காரியங்களைச் சவால்விட்டுச் சாதித்துக் கொடுத்துள்ளார்.

ஆண்-பெண் எந்தத் தேதியில் பிறந்தவராக இருந்தாலும் அவர்கள் திருமணம் செய்த நாளின் கூட்டு எண் (திருமணத் தேதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டிவரும் எண்) 2, 4, 5, 7, 8 வரும் நாளில் கண்டிப்பாகத் திருமணம் செய்யக்கூடாது. அப்படிச் செய்தால் சோதனைகளும், போராட்டங்களும் நடக்கும். இதிலிருந்து விடுபட இவர் சொன்னபடி 'மறுமாங்கல்ய பூஜை' செய்து கொண்டவர்கள் அனைவரும் இன்று சிறப்புடனும், செல்வச் செழிப்புடனும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நீங்களும் வாழ்வில் வளம்பெற, பணம், பதவி, புகழ் பெற உடனே (அதிர்ஷ்டக்கலை) அதிர்ஷ்ட நியூமராலஜி நிபுணரை இன்றே சந்தியுங்கள்.

விஞ்ஞான, மெய்ஞான, தெய்வீக ஆய்வு முறையில் நியூமராலஜி, நேமாலஜி, சைன், தொழில் வசியம், பெயர் வசியம், இராஜவசியம், சர்வ காரியசித்தி வசியம், ஜனவசியம், மேக்பவர், கையெழுத்து வசியம், பெயர்எண் வசிய சக்திகள், மந்திர எண்கணிதம் போன்றவற்றின் மூலம் மிக நல்ல முறையில் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தீர்வு தருகிறார்.

இவரது புத்தகங்களை வாங்கிப் படியுங்கள்.

1. **அதிர்ஷ்ட பெயர் எண் சாஸ்திரம்** (தமிழ், ஆங்கிலம், தெலுங்கு) ரூ. 300/-. 2. **வெற்றிக்கு வழி** ரூ. 1,050/-. 3. **பணம், பதவி, புகழ்** ரூ. 550/- தபால் மூலம் பெற M.O. செய்யுங்கள். வெளிநாடுகளிலும் கிடைக்கும்.

உலகப்புகழ் அதிர்ஷ்ட நியூமராலஜி மாமேதை **கே.ஆர்.பிரபாகர் ராஜ் அவர்களைச் சந்தித்து வாழ்வில்** வெற்றிமேல் வெற்றிகளைக் குவியுங்கள்.

வெளிநாட்டு அன்பர்கள் போன் (அல்லது) தபால் மூலம் தொடர்பு கொண்டு பயனடையுங்கள்.

வாழ்வில் முன்னேற வந்து சந்தியுங்கள்.

சென்னையில் பிரதி மாதம்
6, 7 தேதிகளில் மட்டும்
ஹோட்டல் தாசப்பிரகாஸ்
செல் : **9443056366**



உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்
"நியூமராலஜி மாமேதை" - கே.ஆர். பிரபாகர் ராஜ்
நியூமராலஜி - பெயர் எண் வசிய சக்திகள் - தொழில் வசியம்



கே.ஆர். பிரபாகர் ராஜ்
நல்லாந் தோட்டம், கனுவக்கரை (P.O.) - 638 459.
பு. புளியம்பட்டி (Via), கோயமுத்தூர் (Dt.), TAMIL NADU - INDIA
Ph. : 04254 - 287258. Cell : (0) 94430 56366 Fax : 04254 - 287258

வார விடுமுறை : புதன், வியாழன்

வெற்றிக்கு வழி

நோயாளி : எனக்கு ஒரே தலைவலியாக இருக்கு டாக்டர்.

டாக்டர் : எப்பல்லாம் தலைவலி வருது?

நோயாளி : காலையில



எழுந்ததும் தலைவலி வருது.

டாக்டர் : தலைக்குக் குளிச்சா அதிகமாகுதா?

நோயாளி : சும்மா கேள்வி கேட்டுக்கிட்டே இருக்காதீங்க டாக்டர். எனக்கு சைனஸ் பிரச்னை இருக்கு. டி.வி.யி லேயும் நிறைய பத்திரிகைகளிலேயும் இதைப் பத்தி படிச்சுப் படிச்சு, இந்த வியாதியைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும். அதுக்கு வைத்தியம் மட்டும் பண்ணுங்க!

இப்படிப்பட்ட நோயாளிகள் ஒரு பக்கம் இருக்க சைனஸ் பிரச்னையைப் பற்றி காது, மூக்கு, தொண்டை மருத்துவர் டாக்டர் டி.என். ஜானகிராம் என்ன சொல்கிறார் பார்ப்போமா?



விரட்டுங்க

• டி.என். ஜானகிராம்



“சைனஸ் என்பது மூக்கு மற்றும் கண்களைச் சுற்றியுள்ள பகுதியில் அமைந்துள்ள காற்றுப் பைகள். பதினைந்து முதல் இருபது வரை எண்ணிக்கை கொண்டுள்ள இவை, நம் பேச்சு, தெளிவாக அமைவதற்கும், நாம் சுவாசிக்கும் காற்றின் வெப்பத்தை அதிகரிக்க வைப் பதற்கும் உதவுகின்றன. இந்த சைனஸானது நான்கு முக்கிய இடங்களில் அமைந்துள்ளன. ஒருசிலருக்கு சைனஸுக்குள் கிருமிகள் புகுந்து சைனசைடிஸ் என்ற வியாதி ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

சைனசைடிஸ் இருந்தால் என்னென்ன உடல் பாதிப்புகள் நேரும்?

தலைவலி :

தலைவலி ஒரு முக்கியமான அறிகுறி. காலையில் எழுந்தவுடன் தலைவலி, தலைபாரம், தலைக்குக் குளித்தால் அதிகரிக்கும் தன்மை கொண்டது. புருவத்துக்கு மேலே அல்லது தலைக்குப் பின்புறம் அல்லது கண்ணுக்குள் அல்லது மேல் தாடையில் வலி இருந்தால் அது சைனஸ் பிரச்னையினால் வரும் தலைவலியாக இருக்கலாம்.

மூக்கடைப்பு, சளி வடிதல், மூக்கில் ரத்தம் வடிதல், நுகரும் தன்மை குறைதல் போன்றவையும் சைனசைடிஸின் அறிகுறிகள்தான்! சைனஸால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் காது, மூக்கு, தொண்டை நிபுணர்களை அணுகும்

அதிசயம் - 1,2,3!

போது அவர்கள் நேஸல் என்டோஸ்கோபி என்ற பரிசோதனை செய்வார்கள். இதன் மூலம் சைனஸ் பிரச்னையைத் துல்லியமாகக் கண்டுபிடிக்க இயலும். அதன் பிறகு மாத்திரை கொடுத்தால் சைனஸுக்கு பெரும்பாலானவர்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். பிரச்னை தீவிரமாக இருந்தால் மட்டுமே சி.டி. ஸ்கேன் எடுக்கச் சொல்வோம். சி.டி. ஸ்கேனில் சைனசைடிஸ் எந்த அளவுக்கு மூக்குக்குள் பரவி உள்ளது என்பதைத் துல்லியமாகக் கணிக்க இயலும். அதன் பின் என்டோஸ்கோபி சைனஸ் சர்ஜரி என்ற நவீன அறுவை சிகிச்சை செய்து இப் பிரச்னையைக் குணப்படுத்தலாம்.

என்டோஸ்கோபிக் சைனஸ் சர்ஜரியைப் பற்றி இப்போது பார்க்கலாம்.

இந்த அறுவை சிகிச்சை முறையை முதலில் ஆஸ்திரியா நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அறிமுகப்படுத்தினார்கள். இந்தச் சிகிச்சை முறையில் நோயாளிகளுக்கு முழு மயக்க மருந்து கொடுத்து என்டோஸ்கோபி என்ற கருவியைப் பயன்படுத்தி சைனஸ் பைகளுக்குள் இருக்கும் நீர் மற்றும் சீழை, துல்லியமாக அகற்ற இயலும். லேசர் மற்றும் மைக்ரோ டிப்ரைடர் போன்ற நவீன கருவிகளைப் பயன்படுத்தி சிகிச்சை செய்வதால், மிகத் துல்லியமாக இரத்த சேதமின்றி செய்து அகற்றி விடலாம்.

பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகள் :

• சைனஸ் பிரச்னை இருந்தால் அறுவை சிகிச்சை கட்டாயம் செய்தாக வேண்டுமா?

மூன்று மாதங்கள் மாத்திரை எடுத்துக் கொண்டும் பயனளிக்கவில்லை என்றால், அப்போது அறுவை சிகிச்சையைத்தான் நாட வேண்டும்.

• சைனஸ் அமைந்திருக்கும் இடங்கள்



• அலர்ஜிக்கும், சைனசைடிஸுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?

அலர்ஜி, மூக்குப் பகுதியைப் பாதித்தால் அதற்கு அலர்ஜிக் ரைனைடிஸ் என்று பெயர். இவர்களுக்கு, ஓயாத தும்மல், மூக்கிலிருந்து நீர் வடிதல் ஏற்படும். இப்படிப்பட்ட நபர்களுக்கு சைனஸ் பிரச்னைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம்.

• மூக்கில் நீர்க்கட்டிகள் ஏற்பட்டால் அதற்கு எவ்வாறு சிகிச்சை அளிக்க வேண்டும்?

மூக்கில் நீர்க்கட்டிகள் இருந்தால் அதற்கு பாலிப்போஸிஸ் என்று பெயர். இந்த நோய்க்கு அறுவை சிகிச்சை மட்டுமே நிரந்தரத் தீர்வு தரும். இதை என்டோஸ்கோபிக் சைனஸ் சர்ஜரி மூலம் சரிப்படுத்த இயலும்.

• மூக்கில் காளான் ஏற்பட்டால் அது உயிருக்கு ஆபத்தானதா?

சிலருக்கு, நீர்க்கட்டிகளுடன் மூக்கில் காளான் வளரும். ஒருசில காளான்கள்

தலைவலியை!



தொலைபேசி எண் மற்றும் முகவரியை சம்பந்தப்பட்டவர்கள் கைப்பட எழுதி வாங்கி வைத்துக் கொள்வதன் மூலம் தவறுகளைத் தவிர்க்கலாம்.

- எஸ். மாலதி, திருச்சி.

மூளைக்குள் அரித்துச் செல்லக்கூடியவை என்பதால் மிகவும் கவனம் தேவை. உடனடியாக அறுவை சிகிச்சை செய்யா விட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

• சைனஸ் பிரச்னையை அப்படியே விட்டு விட்டால் என்ன ஆகும்?

மூக்கைச் சுற்றியுள்ள காற்றுப் பைகள் கண் மற்றும் மூளைக்கு அருகாமையில் இருப்பதால் இந்தச் சீழானது கண் மற்றும் மூளைக்குப் பரவக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. அப்படிப் பரவினால் கண் பார்வை மங்குதல், காக்கை வலிப்பு, மூளைக் காய்ச்சல் போன்றவை ஏற்படலாம்.

புதுக்கோட்டையைச் சேர்ந்த பிரபாகரன், பதின்மூன்று வயதுச் சிறுவன். ஒருசில மாதங்களாகக் கடும் தலைவலியால் அவதிப்பட்டான். அவனைப் பரிசோதனை செய்த டாக்டர், சைனஸ் பிரச்னை இருப்பதை அறிந்து அவனுக்கு மருந்து மாத்திரைகள் அளித்தார். ஒருசில நாட்களுக்குப் பிறகு அவனுக்கு வலிப்பு வந்து சிரமப்படவே, நரம்பியல் நிபுணரை அணுகியிருக்கிறார்கள். அவர் சி.டி. ஸ்கேன் எடுத்துப் பார்த்துவிட்டு, அச் சிறுவனின் மூளையில் சீழ் கோத்து இருப்பதாகவும், அதற்கு சைனஸ் பிரச்னைதான் காரணம் என்பதையும் தெரிவித்தார். அதன் பிறகு அச் சிறுவனுக்கு நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் Burr Hole அறுவை சிகிச்சை செய்தார். அதன் பிறகு நாங்கள் சைனஸுக்காக FESS என்ற அறுவை சிகிச்சை செய்து அவன் தற்போது நன்றாக இருக்கிறான்" என்கிறார் டாக்டர் ஜானகிராம்.

(அடுத்த மாதம் காக்ளியர் இம்ப்ளான்டேஷன்)

- கல்யாணி நாராயணன், திருச்சி.



பல் துலக்கி விட்டு, பிரஷ்ஷால் உதடுகளையும் இலேசாகத் தேய்க்க வேண்டும். இவ்வாறு செய்வதால், உதடுகளில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, எப்பொழுதும் பளபளப்பாக, மென்மையாக இருக்கும் லிப்ஸ்டிக் பூசாமலே..

- நஸிஹா ஹபீஸ், இராமநாதபுரம்.


அந்த பழைய ப்ரஷர் குக்கரை இன்னமும் வைத்திருக்கிறீர்களா?
நீங்கள் அதிர்ஷ்டசாலி !
இப்போது
ரூ.1000
வரை பெறுங்கள் உங்கள் பழைய ப்ரஷர் குக்கருக்கு
மேலும் உங்கள் பழைய மிக்ஸி, வெட்கிரைண்டர், அல்லது கேஸ் ஸ்டவ்
எதை வேண்டுமானாலும் கொண்டு வாருங்கள். புத்தம் புதிய லேட்டஸ்ட் ப்ரீமியர் பொருட்கள்
எதை வேண்டுமானாலும் எக்ஸ்சேஞ்ச் செய்து கொள்ளுங்கள்.
ஒண்டர் கிரைண்டர்
2 வருட உத்திரவாதம்
சூப்பர்- ஜீ
நவீன கிச்சன்களுக்கான
புதிய தலைமுறை மிக்ஸி
ஹார்ட் அனோடைஸ்ட்
ப்ரஷர் குக்கர்
ஆட்டோ இக்னிஷன்
LPG கேஸ் ஸ்டவ்
நான்கு பர்னருடன்
Premier
ANY BRAND | ANY CONDITION | ANY SIZE
EXCHANGE
www.sspremier.net

இம்மாத இல்லத்தரசி

முதல் பரிசு :

டேபிள் டாப் வெட் கிரைண்டர் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :

ப்ரீதா ரங்கஸ்வாமி, மதுரை - 14.

பொருள் :
ஈஸி ஸ்கூல் லஞ்ச்

தானிய அரிசி சேவை

தேவையான பொருள்கள் :

அரிசி சேவை (மளிகைக் கடைகளில் கிடைக்கும்) - 2 தம்ளர்,
தண்ணீர் - 1 தம்ளர்,
எண்ணெய் - 1 ஸ்பூன்,
கடுகு - 1 ஸ்பூன்,
உடைந்த உளுத்தம் பருப்பு - 1 ஸ்பூன்,
பெருங்காயம் - ¼ ஸ்பூன்,
கறிவேப்பிலை - 2 இணுக்கு,
வற்றல் மிளகாய் -2,
உப்பு - 1 ஸ்பூன்,
முளைகட்டிய பச்சைப் பயறு, முளை கட்டிய வெந்தயம், முளை கட்டிய பச்சைப் பட்டாணி - 2 கப்

செய்முறை :

அரிசி சேவை மூழ்கும் வரை தண்ணீர் விட்டு, குக்கரில் ஒரு விசில் வந்ததும் அடுப்பை அணைத்து விடவும். ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு குக்கரி லிருந்து எடுத்துத் தண்ணீரை வடிகட்டி ஆறவிடவும்.

வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் மிளகாய், கடுகு, பெருங்காயம், உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை தாளித்து, முளைகட்டிய பச்சைப் பயறு, வெந்தயம், பட்டாணி ஆகியவற்றுடன் உப்பு சேர்த்து வெந்துள்ள சேவையுடன் சேர்க்கவும். இதை மெதுவாகக் கரண்டிக் காம்பால் கிளறவும்.

இதற்குத் தொட்டுக் கொள்ள தக்காளி - தயிர்ப் பச்சடியும், ஜவ்வரிசி வடாமும் ஏற்றவை.

- ப்ரீதா ரங்கஸ்வாமி, மதுரை - 14.

இரண்டாம் பரிசு ரூ. 300/-

கார்ன் டிலைட்

தேவையான பொருள்கள் :

குடை மிளகாய் (மஞ்சள், சிவப்பு, பச்சை) சேர்ந்து நறுக்கியது - 2 கப்,
பொடியாக நறுக்கிய காரட் - ½ கப்,
துருவிய ஸ்வீட் கார்ன் - ½ கப் (அ) வெந்த மக்காச் சோளம் - 1 கப்,
மிகப் பொடியாக நறுக்கிய இஞ்சி 1 டேபிள் ஸ்பூன்,
மிளகுத் தூள் - 1 டீஸ்பூன்,
பச்சைமிளகாய்த் துண்டுகள் 1 டீஸ்பூன்,
நறுக்கிய தக்காளி - 1 கப்,
நறுக்கிய வெங்காயம் - 1 கப்,
எலுமிச்சம் பழச்சாறு - 2 டீஸ்பூன்,
வெண்ணெய் (அ) எண்ணெய் - சிறிதளவு,
சீரகம் - ½ டீஸ்பூன்,
உப்பு - ருசிக்கேற்ப.

செய்முறை :

வாணலியில் எண்ணெயைச் சூடாக்கி சீரகம் தாளித்து, இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம் பொன்னிறமாக வதங்கியதும், குடை மிளகாய், உப்பு, மிளகுத் தூள், தக்காளி சேர்த்து வதக்கியபின் மக்காச் சோளத்தையும் போட்டு ஒருமுறை நன்றாகப் புரட்டிக் கொள்ளவும். சூடான சாதத்தில் இதைக் கலந்து எலுமிச்சம் சாறு சேர்த்தால் சுவையான கார்ன் டிலைட் தயார்.

- சித்ரா சேகர்,
திருவள்ளூர்.

'இம்மாத இல்லத்தரசி' போட்டிக்கு நடுவர்களாக இருந்து பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்த சென்னை, மயிலாப்பூர் 'தோழி கிளப்' வாசகிகளுக்கு நன்றி!



• படம் : ஸ்ரீஹரி

மூன்றாம் பரிசு ரூ. 200/-

ஹெல்தி பால்ஸ்

தேவையான பொருள்கள் :

ப்ளெய்ன் கார்ன் ஃப்ளேக்ஸ் - 2 கப்,
முருங்கைக்கீரை (உருவியது) - ½ கப்,
கேரட் துருவல் - ½ கப்,
பனீர்த் துருவல் - ¼ கப்,
பச்சை மிளகாய் - 4,
இஞ்சி விழுது - ½ டீஸ்பூன்,
உப்பு - ருசிக்கேற்ப,
தக்காளி ப்யூரி - ¼ கப்,
மிளகு, சீரகப் பொடி - ½ டீஸ்பூன்,
உருக்கிய நெய் - 1 டேபிள் ஸ்பூன்

செய்முறை : கார்ன்ஃப்ளேக்ஸை மிக்ஸியில் போட்டு, ஒன்றிரண்டாகப்



பெண்களின் வயிறு, பிரசவத்துக்குப் பிறகு பெருத்து தளர்ந்து விடும். ஏலக் காய்களை நீரில் போட்டு நன்கு கொதிக்க வைத்து தினமும் குடித்து வர 'சிக்' என்ற இடையழகு கிடைக்கும்.

- கே. ராஜேஸ்வரி, காவேரிப்பாக்கம்.

பொடித்துக் கொள்ளவும். இதில், தக்காளி ப்யூரியைத் தெளித்து, பிசறி வைக்கவும். முருங்கைக் கீரையை தண்ணீர் விட்டு, சுத்தமாக அலம்பி வடித்தெடுக்கவும். பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கவும்.

பிறகு, அகலமான பேசினில், தக்காளி ப்யூரியில் ஊறிய கார்ன்ஃப்ளேக்ஸைக் கொட்டி, அத்துடன் முருங்கைக்கீரை, கேரட் துருவல், பனீர் துருவல், பச்சை மிளகாய், இஞ்சி விழுது, உப்பு, மிளகு சீரகப் பொடி, உருக்கிய நெய் ஆகியவற்றைச் சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.

தேவைப்பட்டால் கொஞ்சமாக நீர் தெளித்து, உருண்டைப் பிடிக்கும் பக்குவத்தில் பிசைந்து கொள்ளவும். இட்லிப் பானையில் நீர் ஊற்றிச் சூடாக்கவும். பிசைந்த கலவையை, சிறு சிறு உருண்டைகளாக உருட்டவும்.

இட்லித் தட்டில் வேகவிடவும். இது ஐந்து நிமிடங்களில் வெந்துவிடும். இதனை ஸ்கூல் லஞ்ச் பாக்ஸில், நான்கு அல்லது ஐந்து வைத்துக் கொடுத்து விடலாம்.

இதற்குத் தொட்டுக் கொள்ள எதுவும் தேவையில்லை. இந்த 'ஹெல்தி பால்ஸ்' ஆறினாலும், அலாதியான சுவையுடன், குழந்தைகளை விரும்பிச் சாப்பிட வைக்கும். இது செய்வதும் ஈஸி! குழந்தைகளின் ஆரோக்கிய வளர்ச்சிக்குத் தேவையான சத்துகளும் நிரம்பியது.

- எச். ரியாஜ் சுல்த்தானா, இராமநாதபுர மாவட்டம்.

ஆறுதல் பரிசு ரூ. 100/-

வானவில் கிச்சடி

தேவையான பொருள்கள் :

அரிசி - 3 கப், கோதுமை - ½ கப்,
துவரம் பருப்பு, ப. பருப்பு, சோயா பீன்ஸ், கொள்ளு வகைக்கு - ½ கப்,
இவற்றை ஒன்றாக மிஷினில் சன்ன ரவையாக உடைத்து வைத்துக் கொள்ளவும்.
ஒரு கப் உடைத்த ரவைக்கு - பொடியாக நறுக்கிய காய்கள் (பீன்ஸ், காரட், உருளைக்கிழங்கு, கோஸ்) - ½ கப்,



● ரேவதி

இஞ்சி பொடியாக நறுக்கியது - 1 ஸ்பூன்,
சீரகம் - 2 ஸ்பூன்,
உடைத்த மிளகு (மிளகை லேசாகத் தட்டிக் கொள்ளவும்) - 1 ஸ்பூன்,
எண்ணெய் - 2 ஸ்பூன்,
மஞ்சள் தூள், உப்பு - தேவைக்கேற்ப,
தண்ணீர் - 5 கப்.

செய்முறை :

வாணலியில் எண்ணெய்க் காய்ந்ததும் இஞ்சி, மிளகு, சீரகத்தைப் பொரித்து, காய்களைச்

சேர்த்து நன்றாக வதக்கவும்.

குக்கரில் 5 பங்கு தண்ணீர் விட்டு உப்பு, மஞ்சள் தூள் சேர்த்துக் கொதிக்க விடவும். கொதி வந்ததும் ரவையைக் கொட்டி நன்றாகக் கிளறவும். வதக்கிய காய்களைச் சேர்த்து கறிவேப்பிலையைக் கிள்ளிப் போட்டு நன்கு கிளறி, குக்கரை மூடி, வெயிட் வைக்கவும். மூன்று (அ) நான்கு விசில் வந்ததும் அடுப்பை அணைக்கவும். ஆறிய பிறகு குக்கரைத் திறந்து (வேண்டுமானால் ஒரு ஸ்பூன் நெய் சேர்த்து) நன்றாகக் கிளறி விடவும்.

பல வண்ணங்களில் இருப்பதால் வானவில் கிச்சடியை எல்லோரும் விரும்பி உண்பார்கள்.

- பிரேமா கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 20.

ஆறுதல் பரிசு ரூ. 100/-



• ப்ரீதா ரங்கஸ்வாமி



• பிரேமா கிருஷ்ணமூர்த்தி

சிசேம் (எள்) அவல்

தேவையான பொருள்கள் :

சுத்தம் செய்யப்பட்ட அவல் - 1 கப்,
எள் - 2 டேபிள் ஸ்பூன்,
உளுத்தம் பருப்பு - 1 டேபிள் ஸ்பூன்,
வேர்க்கடலை - 1 டேபிள் ஸ்பூன்,
பெருங்காயத் தூள் - சிறிது,
கறிவேப்பிலை - சிறிதளவு
தாளிக்க -
சமையல் எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்,
உளுத்தம் பருப்பு,
கடலைப் பருப்பு - தலா ½ டேபிள் ஸ்பூன்,
கடுகு, சீரகம் - தலா 1 டீஸ்பூன்

செய்முறை :

அவலை 2 கப் நீரில் ஊற வைக்க வேண்டும். அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் விடாமல் எள், உளுத்தம்பருப்பு, வேர்க்கடலை, பெருங்காயத் தூள், கறிவேப்பிலை எல்லாவற்றையும் தனித்தனியாகப் போட்டு வறுத்துக் கொள்ள வேண்டும். இத்தோடு தேவையான உப்பு சேர்த்து மிக்ஸியில் பொடி செய்து கொள்ள வேண்டும்.

வாணலியில் கடுகு, சீரகம், பருப்பு வகைகளைத் தாளித்து, ஊறிய அவலைப் போட்டுப் புரட்டியபின் மேற்கூறிய பொடியையும் சேர்த்துக் கலந்தால் சத்துக்கள் நிரம்பிய 'சிசேம் அவல்' ரெடி.

- ரேவதி எஸ்., மேற்கு தாம்பரம்.

ரவா இட்லி செய்யும் போது
சிறிது சேமியாவை வறுத்து
ரவையுடன் தயிரில் ஊறவைத்துச்
செய்தால் ருசியாக இருக்கும்.

- ஆர். லட்சுமி,
மதுரை -16.



கோகுலாஷ்டமிக்கு பட்சணங்கள் செய்ய அரிசி மாவை, கடையில் வாங்குவதானால், மாவை ஒருமுறை சலித்து வெறும் வாணலியில் இலேசாகச் சூடுபடுத்தவும். பிறகு, அதை ஆறவிட்டு உப்பை நீரில் கரைத்து தெளித்துப் பிசைந்த பிறகு செய்தால் பட்சணம் சிவக்காது. வெடிக்கவும் செய்யாது.

- ஆர். மீனாட்சி,
திருநெல்வேலி.





நல்லது நடக்குமா?

சமீபத்தில் நான் தெற்கே பழம்பெருங் கோயில்களைத் தரிசிக்கச் சென்றேன். பல திவ்யதேசங்கள் மிகவும் பாழடைந்த நிலையில் இருந்தன. பல கோவில்கள் வெறும் குப்பைக்கூளமாகவே இருந்தன. கர்நாடக இசையின் ரசிகையான நான் மிகுந்த ஆர்வத்துடனும், பக்தியுடனும் ஸ்ரீ தியாகராஜஸ்வாமியைத் தரிசிக்க திருவையாறு சென்றேன்.

அசுத்தமான சுற்றுச் சூழல், அசிரத்தையான ஆரத்தி. இடையே இன்னொருவர், "நாங்கள் ஸ்ரீ தியாகராஜஸ்வாமியின் வம்சாவழியினர்; அன்னதானத்திற்கு பணம் தாருங்கள்" என்று ஒரு நோட்டை நீட்டுகிறார் (ரசீது கிடையாது) வெளிப்புற ஹாலில் சிலர் குழந்தைகளுடன் அமர்ந்து புளியோதரை சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அந்தக் குழந்தைகள் ஹால் முழுவதும் சாதத்தை இறைத்ததைப் பார்க்க மிகவும் வேதனையாக இருந்தது.

கோவிலைச் சுத்தமாக்கி பின்னணியில் ஸ்ரீராமநாமமோ, ஸ்ரீதியாகராஜரின் கீர்த்தனைகளோ, இசைக்க வைத்து, மனதுக்கு அமைதியும், பக்தியும் தரும் சூழ்நிலையை உருவாக்கலாமே!

வருடத்திற்கு ஒருமுறை அமர்க்களமாக உத்ஸவம் நடத்தி விட்டால் மட்டும் போதுமா?

- என்.எஸ். மனோரமா,
செகந்திராபாத்.

இளமைப் பூங்கா



• ஆடையிலும் தேச உணர்வு!

நகரங்களிலிருந்து கிராமங்களை நோக்கி, திரைப்படத் தொழில்நுட்பக் கருவிகளை நகர்த்திக் கொண்டு வந்தவர் பாரதிராஜா. கிராமங்கள் மத்தி



• மூவர்ண முகம்

யில் மகளிர் கல்லூரியொன்றினைத் துவக்கி நடத்தி வருபவர்கள், திருமதி இராஜேஸ்வரி லோகநாதன் - திரு. லோகநாதன் தம்பதியினர். மகாத்மா காந்தி கண்ட கனவு, கிராம ராஜ்ஜியம். அதில், கிராமப்புறப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்கு உண்டு. அந்தக் கனவு நினைவாகி நிஜமாகி இயங்கி வருவது மண்ணச்சநல்லூர், சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரியில். எனவே, சுதந்திரதின மலருக்காக அந்தக் கல்லூரிக்குள் அடியெடுத்து வைத்தோம்.

பூங்காவின் பல பகுதிகளிலும், 'தேசப்பற்று என்று சொன்னவுடன் உங்களுக்கு என்ன தோன்றுகிறது?' என்று கேட்டு வைத்தோம். மெல்லிய தென்றல தவழ்ந்து வந்தது. நாட்டுப்புறப்பாடலொன்றை சுமந்து கொண்டு. "பள்ளிக்கூடப் பாடமெல்லாம் இவ படிக்கக் கூடாதா? பச்சப் புள்ள கத்தியழுதா இவந் தூக்கிச் சுமக்கணுமா? ஆம்ள பிள்ளைன்னா உசத்தி என்னா? பொண் பிள்ளைன்னா தாழ்த்தி

த்ரிஷாவும் தில்லையாடி



• தாமரைகள் போடும் மயில்கோலம்!



* "வாங்க பொண்டுகளா!"

என்னா? இந்தத் தேசம் இருண்டு போச்சு. விளக்கு ஏத்தி வைக்க வாங்க. பொண்டுகளா... விளக்கு ஏத்தி வைக்க வாங்க!" இனிய குரலெடுத்துப் பாடி வந்த நிலவு ஹேமா கேதரீன்.

உரையாடல், உபகரணங்கள் ஏதுமின்றி நிகழத் துவங்கியது வீதி நாடகம். வேலையில்லாத்

அமர்ந்திருந்தது - தேசப்பற்றுடன் பத்தே நிமிடத்தில் வரைந்திருந்தனர் நளினி, ஜெனிஃபர் இருவரும்.

வள்ளியம்மையும்!

திண்டாட்டத்தை வேரோடு பிடுங்கி ஒழித்து விட்டால், நம் பாரதத்தில் தீவிரவாதம் துளிர்விட துளியும் இடமில்லை என்பதை எளிதில் புரிய வைத்த நாடகம் அது. சிந்து, இலக்கியா, கவிதா, தில்லை நாயகி, பாலசரஸ்வதி மற்றும் மல்லிகேஸ்வரி ஆறு பேரும் அற்புதமாக அதில் பங்கேற்றிருந்தனர்.



* தீவிரவாதம் சாயட்டும்!

கேரட், முட்டைக்கோஸ், சண்டிக் கீரை இலைகளைப் பரப்பி இந்திய வரைபட மொன்றை வெகு அழகாகவும் உருவாக்கிக் கொண்டிருந்தவர் ஆர். விவேகா. பக்கத்திலேயே தாமரை மலர் மீது அழகு மயிலொன்று ரங்கோலியாக

"அழகான பொண்ணுகளைப் பார்த்து அஞ்சு நிமிஷம் மெய்மறந்து நிக்குற நம்ப இளைஞர்கள்... ஐம்பத்திரண்டு வினாடி இசைக்கிற தேசிய கீதத்துக்கு நிக்காம ஓடிப் போயிடுறாங்க. அதனாலத்தான் சினிமாத் தியேட்டர்ல தேசிய கீதம்



வீட்டுக்கு வரும் விருந்தினர்கள் உபயோகிக்க சிறிய அளவிலான டாய்லட் சோப்புகளை வாங்கி வைத்துக் கொண்டு தரலாம். கெஸ்ட்டுக்கு மட்டுமல்ல. நம் குடும்ப ஆரோக்கியத்துக்கும் இது பெஸ்ட்!

- எஸ். மாலதி, திருச்சி.

ஒலிபரப்புறத நிப்பாட்டிட்டாங்க!'' என்றார் ஃபிரான்சிஸ் சகாய ஆரோக்கிய மேரி முகம் சிவக்க..!

'கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன், பாரத விலாஸ் அப்படின்னு தேசப்பற்று திரைப்படங்கள் அப்பல்லாம் வரிசையா வந்திச்சு. ஏன்? அதுக்கு அப்புறமா கூட... ரோஜா, ஜெய் ஹிந்த், இந்தியன், முதல்வன், ரமணான்னு தேசப்பற்று, தேசநலன் சார்ந்து சினிமாக்கள் வந்திச்சு. இப்ப என்னடான்னா பட்டியல், புதுப்பேட்டை, கொக்கி அப்படின்னு தாதாயிசப் படங்களா தடதடன்னு வந்துகிட்டிருக்கு. பொட்டி ரொம்பினா போதும்னு நினைக்கிறாங்க சினிமாக்காரங்க!'' என்று ஒரு பிடி பிடித்தார் பாலசரஸ்வதி.

அசரீரி போல தூரத்திலிருந்து பெருங் குரலொன்று கேட்டது. திரும்பிப் பார்த்தோம். பிரமை பிடித்தாற்போன்று ஓடி வந்தார் இளம்பெண். ''என்னய்யா தேசப் பற்று? அன்னிய நாட்டுப் பொருள் எல்லாம் இந்திய மண்ணில் கொடிகட்டிப் பறக்குது. இந்த மண்ணுல படிச்ச பல பேரும் வெளிநாட்டு வேலைக்கு வேலி தாண்டிப் போறாங்க! அப்புறம் என்னய்யா தேசப்பற்று?'' எனச் சொல்லி உள்ளங்கைகளிலிருந்து ஏதோ ஒன்றினை ஊதி விட்டது. புகைப்படக் கலைஞரும், செய்தியாளரும் மயக்கமாகி கீழே சரிந்தனர்.

தில்லையாடி வள்ளியம்மை போலத் தோற்றம் கொண்டிருந்த பெண், உள்ளங்கைகளில் தண்ணீர் ஏந்தி வந்து கொண்டிருந்தாள். மயக்கம் தெளிந்து கண் திறந்தோம். ''நா மட்டும் மனசு வெச்சா... த்ரிஷா மாதிரியும் வருவேன், தில்லையாடி வள்ளியம்மை மாதிரியும் வருவேன்', தெரிஞ்சுக்கோ!'' என்று அசரீரியாய் அதே பெண் குரல் கேட்டது. அட... நம்ப காலேஜ் பொண்ணு 'மிமிக்ரி' தனலெட்சுமி!

கட்டுரை : ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

படங்கள் : திருச்சி விஜய்



குழந்தைகளின் பிறந்த நாளுக்கு வரும் மற்ற குழந்தைகளின் பெயரை ஸ்கெட்ச் பென்னால் பலூனில் எழுதிக் கொடுத்து விட்டால் அதை ஊதியவுடன் தன் பெயர் பார்த்து வியந்து மகிழ்வார்கள்.

- எம். வரலக்ஷ்மி.

தித்திக்கும் திருவிழா!

நவராத்திரி, தீபாவளி,கார்த்திகை...
இனி எல்லாமே விழாக்காலங்கள்தான்!



பண்டிகைகளும், கொண்டாட்டங்களும் வெறும் கேளிக்கைக்காக மட்டுமே உருவானவை அல்ல!
அவரவர்தம் கலாசாரத்துடன் இறுக இணைக்கப்பட்ட அதிஅற்புதமான வழிகாட்டுதல்கள்!
இவற்றில் பொதிந்திருக்கிற உறவுப் பிணைப்பையும் குடும்ப மகிழ்ச்சியையும் நாம் முழுமையாக அனுபவிக்க வேண்டும் அல்லவா...?
செப்டெம்பர் இதழ் நவராத்திரி சிறப்பிதழாகவும், அக்டோபர் இதழ் தீபாவளிச் சிறப்பிதழாகவும் கோலாகலமாக மலர்கின்றன!
மலர வைக்கப் போவது சாட்சாத் நீங்களேதான்!
அழகான படங்களுடன், கதை, கட்டுரை, நகைச்சுவை அனுபவங்கள், சமையல் குறிப்புகள், பூஜை முறைகள், மங்கலச் செய்திகள் என எழுதிக் குவியுங்க! மறக்காமல் உங்களுடைய விலாசத்துடன் ஃபோன் நம்பரும் எழுதுங்க!

கொலுப்படி முதல் சுண்டல் வரை, கங்கா ஸ்நானம் முதல் குபேர லக்ஷ்மி பூஜை வரை... உங்களுக்குத் தெரியாததா? அசத்துங்க வாசகியரே!

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்திக்கு, இந்த ஆண்டு
வித்தியாசமான சில தேன்குழல்கள் செய்வோமே!

உருளைக்கிழங்கு தேன்குழல்

தேவை :
பச்சரிசி - ஒரு தம்ளர்,
பெரிய உருளைக்கிழங்கு - 400 கிராம்,

முறுக்கு அடிச்ச



உப்பு - 1 ஸ்பூன்,
பெருங்காயம் - சிறிது,
சீரகம் - ஒரு ஸ்பூன்,
வெண்ணெய் - 3 டீஸ்பூன்.

செய்முறை :
பச்சரிசியைக் களைந்து, சற்று ஊற வைத்து, பின்பு நீரை

* படம் : ஸ்ரீஹரி

வடித்துவிட்டு, துணியில் உலர்த்தி, காய்ந்ததும் மாவாக்கிக் கொள்ளவும். உருளைக்கிழங்கை வேகவைத்து, தோல் நீக்கி, நன்கு மசித்துக் கொள்ளவும். மிக்ஸியில் ஒரு சுற்று சுற்றினால் மையாக மசிந்து விடும். உப்பு, பெருங் காயம் இரண்டையும் நீரில் கரைத்து மாவில் விடவும். உருளைக்கிழங்கு விழுது, சீரகம், வெண்ணெய் ஆகிய வற்றை மாவில் விட்டு நன்றா கப் பிசையவும். வாணலி

நொறுக்கு!



யில் எண்ணெய் ஊற்றி, காய்ந்ததும் தேன்குழல் அச்சில் மாவை நிரப்பிப் பிழிந்து பொரித்தெடுக்கவும்.

ஜவ்வரிசித் தேன்குழல்

தேவை :

ஜவ்வரிசி - ஒரு தம்ளர்,
பச்சரிசி மாவு - 1 தம்ளர்,

உப்பு - தேவைக்கேற்ப,
சீரகம் - ஒரு ஸ்பூன்,
நெய் - 2 ஸ்பூன்.

செய்முறை :

ஜவ்வரிசியை மாவாக அரைத்துக் கொள்ளவும். அந்த மாவுடன், பச்சரிசி மாவு, சீரகம், நெய், பொடி செய்த உப்பு எல்லாம் கலந்து நீர் தெளித்துக் கெட்டி யாகப் பிசையவும். வாணலியில் காய்ந்த எண்ணெயில், மாவை தேன்குழல்



• ஆர். ராஜலட்சுமி



அச்சில் நிரப்பி பிழிந்துப் பொரித்தெடுக்கவும்.

புளிப்புத் தேன்குழல்

தேவை :
பச்சரிசி - ஒரு தம்ளர்,
உளுத்தம் பருப்பு - 6 ஸ்பூன்,
புளி - சிறிது,
உப்பு - தேவைக்கேற்ப, நெய் - 2 ஸ்பூன்,
பச்சை மிளகாய் - 3,
பெருங்காயம் - சிறிது,
சீரகம் - 1 ஸ்பூன்.

செய்முறை : பச்சரிசியை ஊறவைத்து உலர்த்தி, மாவாக்கிக் கொள்ளவும். உளுத்தம் பருப்பை சிறிது வறுத்து, மாவு ஆக்கிக் கொள்ளவும். புளியைக் கரைத்து சாறு பிழிந்து, உப்பு சேர்த்து, பச்சரிசி மாவு, உளுந்த மாவு எல்லாவற்றையும் கலந்து கொள்ளவும். பச்சை மிளகாயை அரைத்துச் சேர்க்கவும். நெய்யை விட்டு மாவை நன்றாகப் பிசையவும். பிறகு, தேன்குழல் அச்சில் மாவை நிரப்பி, வாணலியில் எண்ணெயைக் காயவைத்துப் பிழிந்து, பொரித்தெடுக்கவும்.

தேங்காய்ப் பால் தேன்குழல்

தேவை :
பச்சரிசி - 2 தம்ளர்,
உளுத்தம் பருப்பு - ½ தம்ளர்,











முற்றிய தேங்காய் - 1,
உப்பு - தேவைக்கு,
பெருங்காயம் - சிறிது,
வெண்ணெய் - 100 கிராம்,
எள் - 2 ஸ்பூன், சீரகம் - 2 ஸ்பூன்.



செய்முறை : பச்சரிசி, உளுத்தம் பருப்பு இரண்டையும் தனித்தனியே சிவக்க வறுத்து மாவாக அரைத்துக் கொள்ளவும். தேங்காயைத் துருவிப் பால் பிழிந்து வடிகட்டவும். மாவு இரண்டையும் கலந்து, அதில் தேங்காய்ப்பால், உப்பு, பெருங்காயம், வெண்ணெய், எள், சீரகம் எல்லாம் விட்டு தண்ணீர் கலந்து கெட்டியாகப் பிசையவும். வாணலியில் நெய்யை விட்டு, காய்ந்ததும், தேன்குழல் அச்சில் மாவைப் போட்டுப் பிழிந்து பொரித்தெடுக்கவும்.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்.

ஆபரேஷன் பட்டர்!

அன்று ஆயர்பாடி வானொலியின் தலைப்புச் செய்தி!

"வெண்ணெய் திருடும் கண்ணனைக் கையும், களவுமாக பிடித்தே தீருவோம்" கோபியர்கள் கண்ணன் மீது யசோதை இல்லத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த கையோடு, தீர்மானமும் போட்டு விட்டனர்.

மாயக்கண்ணனைக் கையும் களவுமாகப் பிடிக்க, பெண் காவலர் படையும் ரகசியமாக இயங்கியது. இந்தத் திட்டத்துக்கு 'ஆபரேஷன் பட்டர்' என்றும் பெயரிட்டனர்.

கண்ணன் எப்போது வெண்ணெய் திருடுவான்? எப்படி வருவான்? இவனுடன் யார், யார் வருகிறார்கள்? எவ்வளவு உயரத்தில் பானைகளை வைத்தாலும், வெண்ணெயை எப்படி எடுக்கிறான்? போன்ற வினாக்களை



முன்வைத்து பெண் காவலர்கள் ஒரு வியூகத்தை முடிவாக வகுத்தனர்.

உறிகளின் மீதுள்ள பானைகளில் சுத்தமான வெண்ணெய் நிரப்பப்பட்டு, அடுக்கடுக்கான மேல் பானையிலிருந்து கீழ் பானை வரை ஒரு நீண்ட கயிறு இணைக்கப்பட்டு, கயிற்றின் மறு முனையில் ஒருசிறிய வெண்கலமணி தொங்க விடப்பட்டது. வெண்கல மணியின் நாக்கைக் கயிறுடன் இணைப்பதாகத் திட்டம்! கண்ணன் உறிப் பானையைச் சற்று அசைத்தாலும், நாக்கானது மணியின் வெண்கலச் சுவர்களைத் தட்டி 'கிண் கிண்' எனச் சத்தமெழுப்பும். இந்த வியூகம் அனைத்து கோபியர்கள் இல்லங்கள்தோறும் பொறியாகப் பொருத்தப்பட்டது.

அன்று இரவு பெண் காவலர்கள் மறைவாக வெளியே பதுங்கிக் கொண்டனர். கண்ணன், நண்பர்களுடன் புறக்கடை வழியாக ஒரு வீட்டுக்குள் நுழைந்தான். கோபியர்களின் தந்திரத்தை ஏற்கெனவே அறிந்திருந்த கண்ணன் உறிமணியைப் பார்த்துப் பரிதாபமாகப் பேசினான்.

"மணியே! செல்ல மணியே! பரமன் பேசுகிறேன். நான் வெண்ணெய் எடுக்கும் போது, நல்ல மணியாகிய நீ ஒலி எழுப்பக் கூடாது. என்ன, நான் சொல்வதைக் கேட்பாயா?" என்று பவள வாய் குவித்துக் கெஞ்சிக் கேட்டான்.

மணியும் உதவி செய்வதாக ஒப்புக் கொண்டு, கூடவே சத்தியமும் செய்தது. கண்ணனுக்கோ படு சந்தோஷம்.

நண்பர்கள் உறியின் உயரத்துக்கு ஏணியாகக் குனிந்தார்கள். முதுகுகளின் மேல் நின்ற கண்ணன் உறியைத் தொட்டான்.

மணி அடிக்கவில்லை!

பானையைத் துழாவினான்.

மணி அடிக்கவில்லை!

கைநிறைய எடுத்தான் வெண்ணெயை!



மணி அடிக்கவில்லை!

மணியை நன்றியோடு பார்த்துக் கொண்டே கண்ணன், வெண்ணெயை அள்ளித் தின்றான்.

"கிண்கிணி' என்று மணியடித்தது!

அதிர்ச்சியடைந்தான் கண்ணன்!

"ஏன் சத்தியம் தவறினாய் மணியே?" என்று கோபமாகக் கேட்டான். நடுங்கியது மணி.

"கண்ணா! மணிவண்ணா! பகவானுக்கு நைவேத்தியம் செய்யும்போது மணி ஒலிப்பதுதானே வழக்கம்? மணியாகிய நானும் என் கடமையைச் செய்தேன். என் பிறவிப் பயனும் அதுதானே!" என்றது மணி.

முடிவாக 'ஆபரேஷன் பட்டர்' வெற்றியடைந்தது. கண்ணன் பிடிபட்டான். பக்தர்களின் மனச்சிறையில் அன்பு விலங்குடன் கண்ணன் நிரந்தரமாக அடைக்கப்பட்டான்.

- எக்ஸ்னோரா விஷ்ணு கஜேந்திரன்

தேவையான பொருள்கள் :

கொட்டாங்குச்சி - 1

மூங்கில் கம்பு (அ) தடிமன் கம்பி - விரும்புகிற உயரம்,

கலர் - விருப்பமானது,

சாமிக் குடையை வெவ்வேறு மாடல்களில் செய்யலாம். இந்தப் பண்டிகைக்கு வீட்டில் உள்ள சின்னச் சின்னப் பொருள்களை வைத்து சுலபமாகவும், அழகாகவும் செய்து அசத்துங்க!

1) கொட்டாங்குச்சியின் மேற்புறத்தை உப்புத்தாள் போட்டுத் தேய்க்கவும். அப்பொழுதுதான் வழவழப்பாகிப் பெயிண்ட் அடிப்பதற்கும், மற்ற அலங்காரப் பொருட்கள் ஒட்டுவதற்கும் வசதியாக இருக்கும்.





பிள்ளையார் குடை

உப்புத்தாள் சிறிது,

அலங்கரிக்க - ஜரிகை, கண்ணாடித் துண்டுகள், பிளாஸ்டிக் மணிகள்

ஃபெவிகால் - ஒட்டுவதற்கு.

செய்முறை :

நம் கற்பனைத் திறனுக்கு ஏற்ப,

ஜகவேணி



2) மெல்லிய மூங்கில் குச்சி (அ) கம்பியில் ஜரிகையைச் சுற்றி ஒட்டவும்.

3) வழவழப்பான கொட்டாங்குச்சியில் பிரௌவுன் அல்லது உங்களுக்கு விருப்பமான கலர் அடித்துக் காயவிடவும்.

4) தங்க நிற மணியைக் கொட்டாங்குச்சியின் நான்கு புறங்களிலும் ஒட்டவும். அடியில் ஜரிகை ஒட்டவும். ஆங்காங்கே கண்ணாடி, சோழி, சம்கி, முத்துக்கள் ஒட்டி நம் கற்பனைத் திறனுக்கு, தகுந்த

மாதிரி அலங்கரிக்கலாம்.

இப்பொழுது கொட்டாங்குச்சியின் நடுவில் ஜரிகை சுற்றிய கம்பியை ஒட்டி விடவும். அழகான சாமிக் குடை தயார். இதை எல்லாவித சாமி படங்களுக்கும் மேல் வைக்கலாம். யானை மீது, பல்லாக்கு மீது சிறிய சாமி சிலை வைப்போம் அல்லவா? அதன் மீதும் இந்தக் குடையை வைத்து அலங்கரிக்கலாம்.





செய்வோமா?

குறிப்பு :

கொட்டாங்குச்சிக்குப் பதில் பிளாஸ்டிக் பந்தை விருப்பமான அளவில் தேர்வு செய்து கொண்டு அதை இரண்டாக நறுக்கி அதன் மேல் வெல்வெட் துணி ஒட்டியோ அல்லது மேற்சொன்ன மாதிரி பெயிண்ட் அடித்தோ கூட அலங்காரக் குடை தயாரிக்கலாம்.


- சுதா செல்வகுமார்

படங்கள் : **ஸ்ரீஹரி**



கொழுக்கட்டை....
ஆஹா! என்ன சுவை!!
பிள்ளையாருக்கு மட்டுமா
அது... ப்ரியம்?
நம்ம வீட்டுக்
குழந்தைகளுக்கும்தானே?
ஏன்,
பெரியவர்களையும்
சிறு பிள்ளைகளாக
மாற்றி மகிழச்
செய்யும்
சுவையான
கொழுக்கட்டைகளை
யாருக்குத்தான்
பிடிக்காது?
எத்தனைவிதமான
புதுவகை
இனிப்புக்களும்
தின்பண்டங்களும்
இருந்தாலும்
கொழுக்கட்டைகள்
'ஆல் டைம் ஃபேவரிட்'
அல்லவா...?

தின்னத் தின்ன ஆசை; விநாயகருக்குப் பூசை!



கொழுக்கட்டைக்கு மாவு தயாரிக்க...

தேவையான பொருள்கள் : பச்சரிசி - ½ கிலோ, உப்பு - சிறிதளவு, நல்லெண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன், தண்ணீர் - தேவையான அளவு.

செய்முறை : அரிசியைச்

சுத்தப்படுத்தி 2 மணி நேரம் ஊற வைத்து வடித்தெடுக்கவும். வடித்தெடுத்த அரிசியை ஒரு துணியில் பரத்தி நிழலில் உலர விடவும். இந்த அரிசியை மாவு மிஷின் அல்லது மிக்ஸியில் நைஸாக மாவாக அரைத்துச் சலித்தெடுக்கவும். 1 கப் மாவுக்கு ஒரு கப் தண்ணீர் என்ற விகிதத்தில் தண்



ணீர் எடுத்துக் கொள்ளவும். தண்ணீரை எண்ணெய், உப்பு சேர்த்துக் கொதிக்க விடவும். அடுப்பை 'சிம்'மில் வைத்து சிறிது சிறிதாக மாவைச் சேர்த்துக் கை விடாமல் கிளறவும். மாவு பாத்திரத்தில் ஒட்டாமல் திரண்டு வந்ததும் எடுத்து ஒரு தாம்பாளத்தில் போட்டுக் கட்டியின்றி மசிக்கவும்.

• இப்போது மேல் மாவு தயார்!

எள்ளுக் கொழுக்கட்டை

தேவையான பொருள்கள்
எள் - 1 கப்,
வெல்லத்தூள் - ¾ கப்,
ஏலப்பொடி - ¼ டீஸ்பூன்.

செய்முறை :

1. எள்ளைச் சுத்தப்படுத்தி (கறுப்பு எள் என்றால் ஊற வைத்து எடுத்து தோல் நீக்கவும்). சூடான வாணலியில் வெடிக்கும் வரை வறுக்கவும். மிக்ஸியில் எள்ளைப் பொடிக்கவும். எள்ளுப்பொடியுடன் வெல்லத்தூள், ஏலப்பொடி கலக்க

பண்டிகை ஸ்பெஷல்

வும்.

கொழுக்கட்டை மாவை உள்ளங்கை அகலத்துக்கு இலேசாகத் தட்டிக் கொண்டு அதில் ¾ - 1 டீஸ்பூன் எள்ளுப் பூரணத்தை வைத்து அரை வட்டமாக மூடவும். ஓரங்கள் பிரியாமல் ஒட்டவைத்து வேகவைத்து எடுக்கவும்.

டிரை ஃப்ரூட் மோதகம்

தேவையான பொருள்கள் :

தேங்காய்த் துருவல் - 1 டேபிள் ஸ்பூன்,

சர்க்கரை சேர்த்த பால்கோவா - 1 கப்,

டூட்டி ஃப்ரூட்டி - 1 டேபிள் ஸ்பூன்,

கிஸ்மிஸ் - 1 டேபிள் ஸ்பூன்

செய்முறை :

பூவாகத் துருவிய தேங்காய், பால்கோவா, ஒன்றிரண்டாக நறுக்கிய டூட்டி ஃப்ரூட்டி, கிஸ்மிஸ் ஆகியவற்றைக் கலந்து நன்கு பிசையவும். சிறு உருண்டைகளாக உருட்டி மாவுக்கு நடுவே வைத்து மோதகம் போல வடிவமைத்து 3-4 நிமிடங்கள் வேகவைத்து எடுக்கவும்.

உளுந்துக் கொழுக்கட்டை

தேவையான பொருள்கள் :

வெள்ளை உளுந்து - 1 கப்,

கடலைப் பருப்பு - 1 டீஸ்பூன்,

பச்சை மிளகாய் - 4 - 6

எண்ணெய் - 2 டேபிள் ஸ்பூன்,

கடுகு - ¼ டீஸ்பூன்,

பெருங்காயத் தூள் - ¼ டீஸ்பூன்,

கறிவேப்பிலை - சிறிது,

உப்பு - தேவையான அளவு

செய்முறை :

பருப்புகளை ஒரு மணி நேரம் ஊற வைத்து வடித்துக் கொண்டு பச்சை மிளகாய், உப்பு சேர்த்து அரைக்கவும். அரைத்த விழுதை இட்லி போல வேகவைத்துப் பொடியாக உதிர்த்துக் கொள்ளவும்.

எண்ணெயைக் காயவைத்து அதில் கடுகு, கறிவேப்பிலை, பெருங்காயத் தூள் ஆகியவற்றை வறுத்து அத்துடன் உதிர்த்த உளுந்துக்





கலவையைச் சேர்த்து நன்கு வதக்கவும். கொழுக்கட்டை மாவை உள்ளங்கை அகலத்துக்கு தட்டிக் கொண்டு அதனுள் பருப்புக் கலவையை வைத்து சோமாசி போல அரை வட்ட வடிவில் மூடி ஓரம் பிரியாமல் ஒட்டவும். வேகவைத்து எடுக்கவும்.

உண்டலிக் கொழுக்கட்டை

தேவையான பொருள்கள் :

கொழுக்கட்டை மாவு - 2 - 3 கப்,
தேங்காய்த் துருவல் - 1 கப்,
கடுகு - ¼ டீஸ்பூன்,
உளுத்தம் பருப்பு - 1 டீஸ்பூன்,
மிளகாய் வற்றல் - 6 - 7.
பெருங்காயத் தூள் - ¼ டீஸ்பூன்,
உப்பு - தேவையான அளவு,
நல்லெண்ணெய் - 2-3 டேபிள் ஸ்பூன்,
கறிவேப்பிலை - சிறிது.

செய்முறை : கொழுக்கட்டை மாவை சீடைகள் போல சிறு உருண்டைகளாக உருட்டி இட்லித் தட்டில் பரத்தி வேக வைத்து எடுக்கவும். காய்ந்த எண்ணெயில் கடுகு, உளுத்தம் பருப்பு, மிளகாய், கறிவேப்பிலை ஆகியவற்றைத் தாளித்துத் தேங்காய்த் துருவல், கறிவேப்பிலை சேர்த்து வறுக்கவும். இதில் வெந்த கொழுக்கட்டைகள், உப்பு, பெருங்காயம் சேர்த்து ஓரிரு நிமிடங்கள் வதக்கி எடுக்கவும்.

- உஷா ஸ்ரீகுமார்

படங்கள் : **ஸ்ரீஹரி**

இந்த வருடம் வரலக்ஷ்மி விரதம் ஆகஸ்டு 4-ந் தேதி வருகிறது. தீக்ஷிதர் தம் ஸ்ரீ வரலக்ஷ்மி கிருதியில் இந்த நோன்பு ஆவணி மாதம் பௌர்ணமிக்கு முன் வரும் வெள்ளிக்கிழமையன்று வரும் என்கிறார்.

இதுபற்றிய கதை ஒன்று வழங்குகிறது. சௌராஷ்டிர நாட்டில் இது துவங்குகிறது. அரசனும், அரசியும் நல்லாட்சி நடத்தி வந்த சமயத்தில் திருமகள் அவர்களைச் சோதிக்க நினைத்தாள். தள்ளாத கிழவி உருக் கொண்டு, அரசி அவசரமாகப் போகும் சமயம், தான் பசியால் வருந்துவதாகவும் உடனே அன்னமிட வேண்டும் என்றும் கேட்டாள். போதாத காலம் அரசி கவனிக்காமல் சென்று விட்டாள். வாடிய முகத்துடன் திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது அரசிளங்குமரி, சிறிய பெண், "பாட்டி எங்கு வந்தீர்கள்? ஏன் முகம் வாடியிருக்கிறது?" என்று கேட்டுப் பாட்டியை உபசரித்து அன்னம் வழங்கி வாசல் வரை சென்று வழி அனுப்பி



வந்தாள் வரலக்ஷ்மி!

னாள். கிழவி உருவில் வந்த திருமகள் மனம் குளிர்ந்தாள். "பதினாறும் பெற்று பெரு வாழ்வு வாழ்வாய்!" என வாழ்த்தி மறைந்தாள். காலப்போக்கில் இளவரசி மண முடித்து புக்ககத்தில் சீரும் சிறப்புமாக வாழ்ந்தாள். விதி விளையாடியதில் அரசனும் அரசியும் எல்லாவற்றையும் தோற்றுக் காட்டுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது.

இளவரசி அவ்வப்போது தாய்-தகப்பனைப் பார்க்கக் காட்டுக்கு வருவாள். அவர்கள் நிலை கண்டு வருந்துவாள். ஒருநாள் இளவரசி வெகு நாட்களுக்கு முன் நடந்த இச் சம்பவத்தை நினைவுகூர்ந்து தன் தாயிடம், "அம்மா, இன்று வெள்ளிக்கிழமை; நாம் மகாலக்ஷ்மியை வரித்து இந்த எளிய குடிசை

யில் வருகை தர வேண்டுவோம். அறியாமல் ஏதும் பிழை செய்திருந் தால் அவன் மன்னிப்பையும் வேண்டு வோம்'' என்றாள். தாயும் மகளும் காட்டிவிருந்த ஓலைகள், பூக்களினால் ஆன ஒரு சிறு



சப்பரத்தில் மகாலக்ஷ்மியை இருத்தி பக்தியுடன் ஆவாஹனம் செய்து பூசித்தனர். திருமகள் கண் திறந்தாள். அரசனும் அரசியும் பெருவாழ்வைத் திரும்பப் பெற்றனர் என்று இப்படிப் போகிறது கதை.

சௌராஷ்டிரத்திலிருந்து தமிழ்நாட்டுக்குப் பிழைப் புத் தேடி வியாபாரம் செய்ய வந்த அந்த மக்களுடன் இந்தக் கதை வந்திருக்கலாம். தெய்வ நம்பிக்கையில் ஊறிய தமிழ்மக்கள் ஆர்வத்துடன் இப் பூஜையை ஏற்றுக் கொண் டிருக்கலாம். இப்போது இது கர்நாடகத்தி லும் ஆந்திராவி லும் தமிழ்நாட்டிலும் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. பிறந்தகத்திலோ புக்ககத்திலோ இருந் தால்தான் இந்த நோன்பை எடுத்துக் கொள்ளலாம் என்று ஒரு நம்பிக்கை இருந்து வருகிறது.

வரலக்ஷ்மி நோன்பு கொண்டாடுவதிலும் எத் தனையோ வழக்கங்கள். சுவரில் அம்மனை வரை வோர் உண்டு. விளக்கில்



அம்மன் முகத்தை இணைப்பவர் உண்டு. சிலர் தேங்காயில் முகம் வரைவார்கள். நிறை நாழி வைத்து வெள்ளியால் முகம் செய்து பொருத்துவோரும் உண்டு. வசதி உள்ளவர் தங்க நகைகளை அம்மனுக்கு அணிவித்தாலும் ஓலையாலும் கருக மணியாலும் போடுவதுதான் முன்பு பழக்கத்திலிருந்தது. சுமங்கலிகளுக்குத் தாம்பூலம் கொடுப்பதும் அம்மனைப் போற்றிப் பாடுவதும் முக்கியமாகக் கருதப் பட்டன. முற்காலத்தில் வாத்தியார் வந்து பூஜையை நடத்தித் தருவார்.

இதில் சிறப்பு அம்சம் என்னவென்றால் வீட்டுக்கு விலக்கு என்றோ உறவினர் இறந்ததால் தீட்டு என்றோ இதை நிறுத்தக் கூடாது என்பார்கள். மறு வெள்ளிக் கிழமை செய்யலாம். இதில் அம்மனை பூஜை செய்வோர் கிருஹத்தில் கொண்டு போய் வைக்கலாம். பண்டிகையை ஒளிக்கக் கூடாது. மங்கையர் மலர் போன்ற பத்திரிகைகள் புண்ணியத்தில் ரவிக்கைத் துணிகளுக்குப் பதிலாக கேசட்டுகள், சுலோகப் புத்தகங்கள் வைத்துக் கொடுக்கிறார்கள்.

சாங்கரி என்னும் ஒரு பஜனைக் குழு வெற்றிகரமாக மும்பையில் நடந்து வருகிறது. இதன் முக்கிய நோக்கம் சமூகச் சேவை. இதில் தென்னாட்டவருடன் குஜராத்திகள், மராட்டியர்கள், பார்ஸிகள், மார்வாடிகள், ராஜஸ்தானிகளும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். வரலக்ஷ்மி நோன்பு ஏன் கொண்டாடுகிறோம் என்பதை விளக்க ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்தோம். அப்போது இதுவரை எங்களுக்குத் தெரியாத பல விஷயங்களைத் தெரிந்து கொண்டோம்.

மும்பை மாதிரி இடங்களில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடம் செல்வது ப்ரம்ம ப்ரயத்னம். அதை விடுங்கள். அழைப்பது போனில்தான் ஆனாலும் கூப்பிடுகிறவர்கள் அந்த நேரத்தில் கிடைக்க வேண்டுமே. எத்தனை பேர் வருவார்கள்? ஒரு வேளை யாருமே வராவிட்டால்... இங்குதான் சாங்கரி கைகொடுக்கிறாள்! அவரவர் வீட்டில் பூஜையை முடித்துக் கொள்வோம். கையில் தாம்பூலத்துடன் முறை போட்டுக் கொண்டு ஒருவர் வீட்டில் கூடுவோம். அம்மனுடைய பாட்டுகளை அங்கே பாடி விட்டு ப்ரசாதம் சாப்பிட்டு விட்டு அவர்கள் தரும் நன்கொடையைப் (500 முதல் 2000 வரை) பெற்றுக் கொண்டு வீடு திரும்புவோம். யார் வீட்டில் கூடுகிறோமோ அங்கு கல்யாணம் நடக்கும் களை கட்டி விடும். நோன்பு இல்லாவிட்டால் கூட சிலர் வெள்ளிக்கிழமையை உத்தேசித்து அங்கு வந்து தாம்பூலம் கொடுப்பார்கள். இப்படி 25 வருடங்களாக நடந்து வருகிறது. இந்த வருடம் வெள்ளி விழா கொண்டாடுகிறோம்.

- ஜயா வெங்கடேசன்

படங்கள் உதவி : **காயத்ரி கிரீஷ்**

திடீர் விருந்தாளிக்கு, திடீர் ஊறுகாய்



விருந்தாளிகள் தொட்டுக் கொள்ள உடனே எலுமிச்சை ஊறுகாய் வேண்டுமா? டோன்ட் ஒர்ரி! கொதிக்க வைத்து, இறக்கி வைத்த நீரில் முழு எலுமிச்சையைப் போட்டு, 10 நிமிடங்கள் தட்டு போட்டு மூடி வைக்கவும். பிறகு அந்த எலுமிச்சையை வெளியே எடுத்து, சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, ஒரு ஜாடியில் போட்டு, அத்துடன் தேவையான அளவு கல் உப்பு, மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், வெந்தயத் தூள், பெருங்காயத் தூள் சேர்த்துக் குலுக்கி, அத்துடன் நல்லெண்ணெய் கடுகு தாளித்துச் சேர்த்து விட்டால், அப்பொழுதே சாதத்திற்குத் தொட்டுக் கொள்ள ஊறுகாய் ரெடி! கொஞ்சம் கூட கசப்பே இராது!

- கே. ராஜலக்ஷ்மி, நங்கநல்லூர்.

‘யூனிவர்செல்’ டி.சதீஷ்பாபு பதில்கள்

செல்ஃபோன் தொலைஞ்சா என்ன பண்ணணும்?



செல்ஃபோன் தொலைந்து பானால் என்ன செய்யணும்?

பேசிவிட்டு, பிறகு பில் வந்தும் பணம் செலுத்துகிற போஸ்ட் பெய்டு) வசதி வைத்திருப்பவர்கள், ஏர்-டெல், ஏர்செல், ஹட்ச், பிஎஸ்என்எல், டாடா இண்டிகாம், ரிலையன்ஸ் போன்ற எந்த சர்வீஸ் ரொவைடரிடம் கணக்கு வைத்திருக்கிறீர்களோ, வர்களுக்கு உடனே கவல் சொல்லி, ங்கள் மொபைல் பான் தொடர்பை றுத்தச் சொல்லுங்கள். (கிரெடிட் கார்டு தொலைந்து போனால் வங்கிக்கு டடனே தெரிவிப்பதில்லையா, அது மாதிரி.)

உங்கள் மொபைல் போன் திருட்டுப் போய் விட்டாலோ அல்லது தொலைந்து போய் விட்டாலோ, உடனே அசிஸ்டெண்ட் கமிஷனர், சைபர் கிரைம் செல், சென்ட்ரல் கிரைம் பிராஞ்ச், எழும்பூர், சென்னை - 600 008. என்ற முகவரியில் புகார் ஒன்று பதிவுசெய்யுங்கள். அப்படிச் செய்யும் போது, தொலைந்து போன போனுக்கு உரிய குறிப்பிட்ட எண் இருக்குமே, அதையும் கட்டாயம் குறிப்பிட வேண்டும். அந்த எண்ணுக்கு ஐஎம்இ (இன்டர் நேஷனல் மான்யுஃபாக்சரர்ஸ் எக்விப் மென்ட் ஐடென்டிஃபிகேஷன்) என்பார்கள். (‘அதுதான் செல்போனே தொலைந்து போச்சே, எப்படி அதுக்குள்ள இருக்கற எண்ணைக் கண்டுபிடித்து புகாரில் எழுதுவது?’ என்று அப்பாவி மாதிரி கேட்கக் கூடாது. போன் வாங்கும்போது பில்லில் அந்த எண்ணைக் குறிப்பிட்டிருப்பார்கள். அதனால் பில்லைப் பத்திரமாக வைத்திருந்து, அந்த எண்ணைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும்!)

வாய்ஸ் எஸ்எம்எஸ் என்றால் என்ன?

எஸ்எம்எஸ்ஐ டைப் செய்யாமல், ஒரு தனி எண்ணை அழைத்து, உங்கள் குரலிலேயே செய்தியைச் சொல்லலாம். பெறுபவர் உங்கள் குரலிலேயே அந்தத் தகவலைக் கேட்க முடியும்!

செல்போன் வெளியிடும் ரேடியேஷன் கதிர் அலைகளை எப்படிக் குறைப்பது?

கிட்டத்தட்ட முழுதுமாகக் கைகள் மறைப்பது போல செல்போனைப் பிடித்துக் கொண்டால், சிக்னல்களை அனுப்பும் திறனும், பெறும் திறனும் குறைந்து விடும். எனவே அந்தச் சக்தி முழுதும் அதிகமாகி, ரேடியேஷன் மூலமாக வெளிப்படும். அதைத் தவிர்க்கவும், ஒழுங்காக சிக்னல்கள் கிடைக்கவும் போனின்

கீழ்ப் பாகத்தை மட்டும் பிடித்துக் கொண்டு பேசவும். அப்போது ரேடியேஷன் குறையும். பாட்டரியின் ஆயுளும் அதிகமாகும்.

செல்போனை எத்தனை நேரத்துக்கு மின்சார ரீசார்ஜ் செய்ய வேண்டும்?

நீங்கள் இதைப் பற்றி ரொம்பவும் கவலைப்பட வேண்டாம். (சார்ஜரைப் போட்டு விட்டு, கண் கொத்திப் பாம்பு மாதிரி அதையே பார்த்துக் கொண்டிருக்கத் தேவை இல்லை!) அதன் உள்ளே இருக்கிற விதியம் பாட்டரிகள், முழு சார்ஜ் அடைந்ததும் தாமாகவே மின் தொடர்பைத் துண்டித்துக் கொண்டு விடும்.

செல்போனில் அதிநவீனத் தொழில் நுட்பங்கள் என்னென்ன வந்திருக்கின்றன?

ப்ளூ டூத் வயர்லெஸ் டெக்னாலஜி அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. இது இன்டர்நெட் மாதிரி ஒரு வசதி. இந்தத் தொழில்நுட்பம் வாயிலாக, அதிகபட் பத்து மீட்டர் வரை சுற்றுவட்டத் உள்ள எலக்ட்ரானிக் தகவல் சாத கரோடு இணைக்கப்பட்டு விட்ட கூடுதல் செலவு ஏதும் இல்லாமல் தக அனுப்பலாம். பிஸினஸ் கார்டு, எர் தேதியில் என்ன செய்ய வேண் போன்ற குறிப்புகள் எல்லாம் அப்படி அனுப்பலாம்.

MP-3 தொழில்நுட்பம் என்பது இ னொரு நவீன ஆடியோ உத்தி. இ MPEG-1 மற்றும் MPEG-2 வசதிகளின் அங்கம்தான். இதன் மூலம் இன்டர்நெ அல்லது போர்ட்டபிள் பிளேயரி இசையை அனுபவிக்கலாம். இன் பெரும்பாலான மொபைல் போனி இப்படி இசையை வரவழைத்து ஒ நிகழ்ச்சியே ரசிக்கிற மாதிரி நடத் கிறார்கள்.

ஜிபிஆர்எஸ் தொழில்நுட்பம், தகவ கள் அனுப்பவும், பெறவும் இன்டர்நெ போலவே உதவும். இதைப் பயன்படுத்

இம்மாத இல்லத்தரசி

சமையல் கூப்பன்

பொருள் : தீபாவளி ஸ்பெஷல் பாயசம்...

***கடைசி தேதி* : 20.8.200**

என்ற தலைப்பில் சமைய குறிப்பை இதனுடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப் இதுவரை எந்தப் பத்திரிகையிலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

இன்டர்நெட், ஈமெயில் போலவே தகவல்களைப் பரிமாறிக் கொள்ளலாம். இந்தத் தொழில்நுட்ப வசதியை வைத்துக்கொண்டு ஈமெயில்களை எளிதாக, எந்த நேரமும் பார்த்து விடலாம்.

3-G என்றால் தர்ட் ஜெனரேஷன் அல்லது மூன்றாம் தலைமுறை தொழில் நுட்பம். இதன் மூலம் விரைவாகத் தகவல் பெறும் வசதி (ஹைஸ்பீடு வசதி), அதிகபட்ச குரல் ஒலி வசதி எல்லாமே கிடைக்கும் (இதன் அடுத்தகட்டம் வீடியோ வசதியாம்!)

நினைவு வைத்துக் கொள்ளுங்கள் :

• ஒரிஜினல் போன்களையும் உண்மையான பாகங்களையும் மட்டுமே வாங்குங்கள். ரேடியேஷன் குறைவு. எனவே உங்கள் மொபைல் போன் ஆயுள் அதி

• பயணத்தின் போது பாதுகாப்ப வண்டியை ஓட்ட ப்ளூ டூத் வசதியை பயன்படுத்துங்கள். இதுவும் ரேடியேஷ பாதிப்பைக் குறைக்கும்.

• உங்கள் போன் தண்ணீரில் விழு விட்டால், உடனே ஸிம் கார்டை பாட்டரியையும் கழற்றி எடுத்துவிட் நீரை வெளியேற்றுங்கள். அதிகபட உஷ்ணம் ஆகவே ஆகாது. உடனே சர்வீஸ் சென்டருக்கு எடுத்துக் கொண்டு போங்கள்.

• சார்ஜரில் வைத்திருக்கும் போது மொபைல் போன் சிணுங்கினால் ஸ்விட்சை அணைத்து மின்சாரத் தொடர்பை எடுத்துவிட்டு, பிறகு எடுத்துப் பேசுங்கள்.

- சாருகேசி



சுகமா? சுமையா

பிருந்தா ரமணி, மதுரை - 625 020.

தாங்கள் சமீபத்தில் ஏற்றுக் கொண்ட ஆசிரியப் பணியின் அனுபவம் பற்றி... சுமையாக இருக்கிறதா? சுகமாக இருக் கிறதா?



பெரிய கற்கண்டுக் கட்டியைத் தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு ஓடும் கட்டெறும்புக்கு அது சுமையா? சுவையா?

கே. பிரேமா, பாப்பநாயக்கன்பாளையம்.

எனக்கு ஒரு சந்தேகம். வைர மூக்குத்திப் போட்டுக் கொண்டால் கண் நரம்பு பாதிக்கப் படுமா?

"சான்ஸே இல்லை!" என்று அடித்துச் சொல்கிறார் பிரபல கண் மருத்துவர் ஒருவர். மிக அரிய வகை வைரமாக இருந்து, அது சூர் வெளிச்சத்தில் பிரகாசமாக டாலடித்தா அந்த ஒளிச் சிதறலினால், கண்கள் இ சாகக் கூசலாமே தவிர... கண் நரம்புக பாதிக்கப்பட வாய்ப்பே இல்லையாம்!

(கண் நரம்பு பாதிக்கப்படுமோ இ லையோ... உங்கள் கணவரது பேங் பேலன்ஸ் பாதிக்கப்படுவது சர்வ நிச்சய என்ன... தீபாவளிக்கு வைர மூக்குத்திய ஜமாயுங்க பிரேமா!)

ஜெயந்தி சிவகுமார், ஏற்காடு.

சிறு கவிதையை ஐம்பது பைசா கார்டி எழுதி அனுப்பலாமா?

ஒரு குறுநாவலையே எட்டணா அஞ்ச அட்டையில் எழுதி அனுப்பும் அசகாயசூர கள் உள்ள உலகில், இப்படியும் ஒ வெள்ளந்தியான வாசகியா? தாராளம எழுதுங்க! ('கார்டு'தான் எனக்குப் பிடி தபாலு!)




வி. ஜானகி, மைலாப்பூர்.


ஏதாவது ஒரு கலையை உரிய கால தில் கற்காமல் விட்டு விட்டோமே என் வருத்தம் தற்போது உங்களுக்கு உண்டா

சரியான நபரிடம், சரியான சமயத்தி

-அனுஜா நடராஜன்



ஆட்டோ அண்ணாச்சியின் தத்துவத்தைப் படிச்சீங்களாக்கும்! அதையே பாஸிடிவ்வா யோசிச்சுப் பாருங்க. 'மகிழ்வித்து மகிழ்!'...ன்னும் புரிஞ்சுக்கலாமே!



ரியான அளவில், சரியான றையில், மிகச் சரியான கார த்துக்காகக் கோபப்படும் லை இருக்கிறதே... அதைத் ான் சரியாகக் கற்காமல் ட்டு விட்டேன்!

கோபம் வரும் போது மனனமாக இருந்து விட ண்டும் என்று பெரியவர் ர் சொல்வார்கள். மௌனம் ர்வார்த்த சாதனமாம்! னால் எனக்கு அதுவும் தரியாது என்பதால் ஏதாவது ஜாக் அடித்து நிலைமை யச் சமாளித்து விடுவேன்! ந்த டெக்னிக்கை நீங்களும் யற்சி பண்ணிப் பாருங்க!

பி. நாகலக்ஷ்மி,
சென்னை - 40.

நிறைய பேருக்குத் தெரிய ல்லை. கீழ்க்காணும் வாச த்துக்கான பொருளை ங்கள் விளக்கினால், பய ுள்ளதாக இருக்கும். 'தான் ாழப் பிறரைக் கெடுக்காதே!'

ஏதாவது தாடிக்கார

எஸ். சாந்தா, திருவண்ணாமலை.

மங்கையர் மலரில் பங்குபெறும் வாசகியருக்குப் பணமும், பொருள்களும் தந்து ஊக்கப்படுத்துகிறீர்களே! என்றென்றும் பத்திரப்படுத்தும்படி ஊக்கச் சான்றிதழ்கள் தரக்கூடாதா?

'பார்டிஸிபேஷன் சர்டிஃபிகேட்'ஸ்தானே? இதோ உடனே அதுக்கான ஏற்பாடுகளை செஞ்சுட்டா போச்சு! நாலு வரி விமர்சனமோ, நாலு பக்க சிறுகதையோ... இனி மங்கையர் மலரில் வாசகியர் பெயரும் ஊரும் இடம்பெறும் போதெல்லாம் ஓர் அழகிய பாராட்டுச் சான்றிதழும் அன்புடன் அனுப்பி வைக்கப்படும் (வரும் நவராத்திரி சிறப்பிதழிலிருந்து). சந்தோஷமா, சாந்தா?

ஆர். ரமணி விஸ்வநாதன், மேட்டூர்.

உங்களுக்குப் பிடிச்ச அப்பா நடிகர்?

மிடுக்கான அப்பா - எஸ்.வி. ரங்காராவ்



மழைக்காலமாக இருப்பதால் வீட்டின் கத இடுக்குகளிலோ, சமையல் அறையிலோ எறும் புற்று வைத்துவிடும். தண்ணீரை ஊற்றி அலம் வேண்டாம். புகையிலையை, தண்ணீரில் சிறி நேரம் ஊறவைத்து, நன்றாகக் கலக்கி அந்தத் தல ணீரை ஊற்றினால் அவை காணாமல் போய்விடு அனுபவப்பூர்வமான உண்மை.

- சி. வசந்தகோகிலம், சென்னை - 6.

பாசமுள்ள அப்பா - எஸ்.வி. சுப்பையா

காமெடி அப்பா - பாலையா

இயல்பான அப்பா - பூர்ணம் விஸ்வநாதன்

மிடில் கிளாஸ் அப்பா - டெல்லி கணேஷ்

கிராமத்து அப்பா - விஜயகுமார்

பிரமிப்பூட்டும் அப்பா - கமல்

ஸ்டைலான அப்பா - ரஜினி

சீரியல் அபபா - டெல்லிகுமார்

இவங்க எல்லாரையும் தூக்கிச் சாபபிட்டு விடும் ஒரே அப்பா சிவாஜி! அவர் அப்பா அல்ல; அபபப்பா!

எல். உஷாகுமாரி, சென்னை - 94.

கள்ளக் காதலுக்காக, கணவனையே கொன்ற மேரி, திவ்யா இருவரும் தமிழ்ப் பெண் இனத்துக்கே தலை குனிவை ஏற்படுத்தி விட்டார்களே?

அடியும், வசவும் வாங்கிக் கொண் மனப்பொருத்தமோ, உடல் பொரு தமோ இல்லாத கணவனிடம் மன பூர்வமாக அன்பு காட்டி, குடும்பத்து காக, குழந்தைகளின் நன்மைக்கா ஓடாய் உழைத்து, இன்முகத்தோ வளையவரும் லட்சக்கணக்கா தியாகச் சுடர்கள் இருக்கிறார்கள் அவர்கள் சார்பில், எது உண்மையா அன்பு எனத் தெரியாமல், பெரி விலை கொடுத்து வாழ்க்கையை சிதைத்துக் கொண்டு விட்ட இந் சைக்கோ டிஸ்ஆர்டர் பெண்களுக்க கப் பரிதாபப்படுகிறேன்!



இது பலாப்பழ சீசன். பழங்கள் வெட்டும் போது, கத்தி மற்றும் அரிவாள்மணையில் எண்ணெய் தடவிக் கொண்டால் கூட, பிசின் ஒட்டிக் கொண்டு சுத்தம் செய்யக் கடினமாகி விடும். சுலபமான முறை, எரியும் ஜ்வாலையில் காட்டி, ஆறவிட்டு, துணியால் துடைத்து எடுத்து விடலாம்.

- கல்யாணி கிருஷ்ணன், கொல்கத்தா.



நர்ஸுக்கு மவுசு!

'சுமார் இரண்டு லட்சம் நர்ஸ்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பூங்கொத்துடன் காத்திருக்கிறது' - என்கிறது செய்தித்தாள் செய்தி!

"உண்மைதான்.... நர்ஸ்களுக்கு மட்டுமல்ல; ஃபிஸியோதெரபிஸ்ட், ஃபார்மசிஸ்ட், டயடீஷியன்ஸ் போன்ற 'ஹெல்த் கேர்' பணியாளர்களுக்கு மேலைநாடுகளில், குறிப்பாக - அமெரிக்காவில் கவர்ச்சியான சம்பளத்துடன் வாய்ப்புகள் காத்திருக்கின்றன" என்கிறார் குளோப்மெட் அகாடமி டைரக்டர் ஷரண்.

"மற்ற வேலைகளுக்கெல்லாம் 'விசா' வாங்குவதில் உள்ள சிரமம், அதன் பல கட்டங்களைத் தாண்டி 'க்ரீன் கார்டு' ஹோல்டராவது பற்றி எல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

ஆனால், நர்ஸ் வேலைக்கு மட்டும் விசா கிடைத்த உடனேயே க்ரீன் கார்டு ஹோல்டராகி விடலாம்" என நம்மை வியக்க வைக்கிறார் ஷரண்.

நர்ஸ்களுக்கு மட்டும் ஏனிந்த மவுசு?

"அமெரிக்காவில் இன்றைக்கு இருக்கும் நர்ஸ்களின் சராசரி வயசு என்ன தெரியுமா?" கேட்டுவிட்டு, அவரே பதிலளிக்கிறார்.





• ராம்குமார்

"நாற்பத்து ஒன்பது. என்ன, தூக்கி வாரிப் போடுகிறதா? நர்ஸ் வேலைக்கு அமெரிக்க இளைஞிகளிடம் ஆர்வமே இல்லை. குறைந்த சம்பளம், வேலைப்பளு, கூடுதல் பொறுப்பு, சகிப்புத் தன்மை இன்மை, சேவை மனப்பான்மை தேவை போன்ற பற்பல காரணங்களால் இளம்பெண்கள் செவிலியர் பணி செய்ய தயக்கம் காட்டுகிறார்கள்.

இதே ரீதியில் போனால், 2020-ஆம் ஆண்டில் இந்தப் பணிக்கான ஆட்களின் தேவை






வேலை வாய்ப்பு

சுமார் எட்டு லட்சம் என்கிற எண்ணிக்கையைத் தொட்டு விடும்'' என்கிற சூழ்நிலையில் விழித்துக் கொண்ட அமெரிக்க அரசும், மருத்துவமனைகளும் 'கிடுகிடு' என செயல்பட்டு...

கிழக்கத்திய நாடுகளில், குறிப்பாக - பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து தரமான செவிலியர்களைத் தேர்ந்தெடுக்க ஆரம்பித்து விட்டன. அந்தப் பணியைத்தான் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மேலும் விவரம் அறிய நீங்கள் குளோப்மெட் நிறுவனத்தின் வைஸ் பிரெஸிடெண்ட் ராம்குமார் அவர்களைத்தான் சந்திக்கணும்'' என்றார்.





"இது ஒரு சர்வதேச நிறுவனத்தின் அரசு அங்கீகாரம் பெற்ற இந்தியக் கிளை. எங்களிடம் தேர்வாகி, வெளிநாட்டில் பணிபுரியச் செல்லும் ஒரு நர்ஸ், அவரது திறமை மற்றும் அனுபவத்தைப் பொருத்து ஒரு மணி நேரத்துக்கு 20 - 30 டாலர்கள் வரை சம்பளமாகப் பெறுகிறார்.

வாரம் நாற்பது மணி நேரம் மட்டுமே பணி. அதற்கு மேல் வேலை செய்தால் ஓவர் டைமுக்கு ஒன்றரை மடங்கு சம்பளம் கிடைக்கும். இப்படி, ஒரு நர்ஸ், இதில் மூணு லட்சம் ரூபாய் வரை சம்பளமாகப் பெற முடியும்'' என்றார் ராம்குமார்.

இதற்கு வேண்டிய தகுதி என்ன? 'நர்ஸ்களை நீங்கள் தேர்ந்தெடுத்து அனுப்ப கட்டணம் ஏதும் உண்டா?'' என்று கேட்கிறோம்.

தகுதி பி.எஸ்ஸி., - நர்சிங் அல்லது அங்



• வெளிநாட்டுப் பணியில் நம்ம ஊர் நர்ஸ்கள்..

கறிவேப்பிலையுடன் சிறிதளவு உப்பு, ஒரு பச்சை மிளகாய் சேர்த்து பேஸ்டாக ஆக்கி வைத்துக் கொள்ள தினமும் குழம்பு, ரசம், கூட்டு எல்லாவற்றிலும் 1 ஸ்பூன் போட்டுக் கலக்க சமையல் மணமோ மணம். சத்தும் வீணாகாது. சமயத்தில் நீர் மோரிலும் கலக்கலாம்.

- சீதா சங்கரன், சென்னை.



சிகரிக்கப்பட்ட டிப்ளமா, அத்துடன் குறைந்தபட்ச தேவையாக ஒரு வருட அனுபவம், ஆங்கில ஆர்வம், அவ்வளவு தான். எங்களுக்கான சர்வீஸ் சார்ஜ் எதுவும் இவர்கள் தர வேண்டியதில்லை. அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து அது எங்களுக்குக் கிடைத்துவிடும்.

இதற்கான பயிற்சி, பாடம், தேர்வுகள், ஆங்கிலப் புலமை எல்லாவற்றையும் நாங்களே இலவசமாகத் தருகிறோம். இது குறித்து பயிற்சியாளர் ஷரணிடமே பேசுங்களேன்" என்கிறார் ராம்குமார்.

புன்னகையுடன் பதில் தருகிறார் ஷரண்.

"விண்ணப்பிக்கும் நர்ஸ்களை நேரடியாகச் சந்திப்போம். 'துருதுரு'வென்றிருந்து, அடிப்படை மருத்துவ அறிவிலும் தேறினால் 90 நாட்கள் பகுதி நேர வகுப்பு - சி.ஜி.எஃப்., என்.எஸ். என்கிற தேர்வுக்காக ஆயத்தப்படுத்துகிறோம். அதிலும் தேறினால் 'ஐ.இ.எல்.டி.எஸ்'. என்கிற ஆங்கிலப் புலமைத் தேர்வு காத்திருக்கும். அந்தப் பயிற்சி உள்பட அத்தனை செலவையும் நிறுவனமே ஏற்கிறது.

தேர்வு பெற்றவர்கள் விசா பெறுவது, அமெரிக்கா செல்ல டிக்கெட் என, மொத்தச் செலவையும் நாங்களே ஏற்கிறோம். அதாவது ஒரு நர்ஸுக்கு சுமார் இரண்டு லட்ச ரூபாய் வரை செலவு செய்கிறது நிறுவனம்" என்றார்.

"நான்கு வருடங்களாக, இருநூற்று ஐம்பது நர்ஸுகளுக்கும் அதிகமாக அனுப்பியுள்ளோம். நூறுக்கு ஒன்று என்ற சதவிகிதத்தில், சில நர்ஸ்கள் சொதப்பி விடுவதும் உண்டு. கூச்ச சுபாவம், போதிய கம்ப்யூட்டர் அறிவு இன்மை, வெளி நாட்டுச் சூழ்நிலைக்குத் தம்மைப் பொருத்திக் கொள்ளாமை போன்ற சிற்சில காரணங்களால் இந்தக் குறைபாடு ஏற்படுகிறது என்று தெரிந்ததும், அதைக் களைய, குளோப் மெட் அகாடமி மூலம் சிறப்புப் பயிற்சி தருகிறோம். அந்த இரண்டு வாரப் பயிற்சியையும் அமெரிக்காவிலிருந்து சீனியர் நர்ஸ்களே வந்து தருகிறார்கள். அமெரிக்க மருத்துவமனை, அந்த ஊர் டாக்டர்-நோயாளி உறவு, மருத்துவ நடைமுறைகள் போன்றவற்றை வீடியோக்கள் மூலம் விளக்கி விடுகிறார்கள்" என்கிறார் ராம்குமார்.

என்ன படித்தால், உடனே வெளிநாட்டு வேலை கிடைக்கும், அதுவும் நிரந்தரக் குடியுரிமையுடன் என்று யோசித்துக் கொண்டிருக்கும் பெண்களுக்கு இது ஓர் அருமையான வாய்ப்பு!

- சபிதா, சென்னை - 102.



மாதம் ஒருமுறை கைப்பை, சூட்கேஸ் போன்றவற்றை அமோனியா கரைத்த நீரினால் துடைத்து வைத்தால் எப்போதும் புத்தம் புதியதாகக் காட்சி தரும்.

- சீ. விஜயா, திருச்சி - 13.

தருகிறேன் விநாயகா!

கொழுக்கட்டை விநாயகா,
உன் உணவில், என் விறகடை
விதியைப் பதியவைத்தும்,
அதை உணராமல், நான்தரும்
கொழுக்கட்டையை நீ
விண்டு விழுங்கும்போது,
வந்து நிற்கும் விக்கலுக்கு,
என் விழி கடைநீரை,
தண்ணீராக்கி, உனக்குத் தருகிறேன்!

- எஸ். ஆண்டாள் சங்கரன்,
விருகம்பாக்கம்.



நியூஸ் சாலட்

● **கே**ரளாவில் பிரபலமான திருச்சூர் வடக்குநாதர் கோவிலில் நடைபெற்ற யானையூட்டு நிகழ்ச்சியில் 41 யானைகள் பங்கேற்று ஜோராக விருந்து உண்டன.

• சும்மா பூந்து விளையாடுங்க...



நெல் மட்டுமா உயரும்?

50 பறை அரிசி, மஞ்சள், நெய், கரும்பு, வெள்ளரிப் பிஞ்சு, தேங்காய், சர்க்கரை, பழங்கள், வெல்லம், எள்ளு போன்றவை மலை மலையாகக் குவிந்திருக்க... யானைகள் சுவைத்துச் சாப்பிடும் அழகை ஏராளமான பக்தர்கள் கண்டுகளித்தனர்.

● தாய்லாந்து நாட்டில் பாங்காக்கில் கடத்தல்காரர்களிடமிருந்து 999 வன விலங்குகள், பறவைகள் பறிமுதல் செய்யப்பட்டன. அவை காடுகளுக்குக் கொண்டு போகப்பட்டு சுதந்திரமாக விடப்பட்டன.

● இங்கிலாந்து நாட்டுக் கால்பந்து அணியின் தலைவர் டேவிட் பெக்காம், மனைவி விக்டோரியாவுடன் சேர்ந்து பிரம்மாண்டமான விருந்து கொடுத்தார். சுமார் 4 கோடி செலவில் விடிய விடிய நடந்த இந்த விருந்து கொண்டாட்டங்களின் காரணமாக பாதிக்கப்பட்ட அக்கம்பக்கத்தினர், பெக்காம் மீது நகரசபையில் புகார் செய்தனர்.

"இந்த விருந்து பற்றி பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் நகர சபைக்கும் முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டது. அதனால் எங்கள் மீது தப்பில்லை" என்று பெக்காம் கூலன்று கொண்டு விட்டார்.



ஆஹா 50!

தலையில் நீர் கோத்துக் கொண்டால், தலை பாரமாக இருக்கும். கொதிக்கும் தண்ணீரில் சிறிதளவு மஞ்சள் பொடியைப் போட்டு ஆவி பிடித்தால் தலை பாரம் குறையும்.

- மதி குமாரசாமி, கும்பகோணம்.

● 'நீர் உயர நெல் உயரும்
நெல் உயர கோன்
உயரும்
கோன் உயர குடி
உயரும்'

என்று படித்திருக்கிறோம்.

ஆனால் இக்காலத்தில் நீர் உயர எது வேண்டுமானாலும் உயரும் போலும்.

வெள்ளம் சூழ்ந்த நிலையில் இந்த மும்பைக் குடும்பம் இயல்பாகவே இருக்கிறது. குழந்தைகள் தாய் செய்து தரும் உணவைச் சாப்பிட ஆவலாக இருக்கிறார்கள்.

கணவன் தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறார். டி.வி. ஓடிக் கொண்டிருக்கிறது.

வாழ்க்கை வாழ்வதற்கே. எந்நிலையிலும் மனதைத் தளர விடாமல் நிதானத்துடன் வாழ இவர்களைப் பார்த்துப் பழகிக் கொள்ள வேண்டும்.




● "ஹலோ... அவசரமா ஒரு படகு வேணும்..."

- மாயாசேகர், மும்பை - 90.
ஆர்.எல்., சென்னை - 18.


I love the Globus sale
Upto 50% off
globus
FASHION FOR A CHANGING WORLD
S WEAR • LADIES WEAR • KIDS WEAR

Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN / CC (S) DN / 170 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 103 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka




என்றும் உங்களுடன்
ஙகையர் மலர்
ஆகஸ்ட் 2006
புத்தகம்-2
திருமண மலர்
மருதாணிச்
சிவப்பு...
மணநாள்
சிரிப்பு!

கல்யாணப் பரிசு



வெளிநாட்டில் நான் தங்கியிருந்த போது, ஒரு டிபார்ட்மெண்டல் ஸ்டோரில், நடுநாயகமாக ஒரு தூணில் திருமணத் தம்பதி போல ஒரு கட்-அவுட் வைத்து அதைச் சுற்றி, சுழலும் மேடை போல் அமைத்திருந்ததைப் பார்த்தேன். அந்த மேடையில் புதிதாகத் திருமணம் ஆகப் போகும் தம்பதியின் ஃபோட்டோக்களை வைத்துப் பெயர்களையும் எழுதி வைத்திருந்தார்கள். உறவினர், நண்பர்கள் தாங்கள் வாங்கும் பரிசுப் பொருளை ஒரு குறிப்பிட்ட தினம் வரை அந்த மேடையிலே வைத்துச் செல்வார்கள்.

ஒரு வீட்டுக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்கள் எல்லாமே, அங்கு இருந்தன; விப்ஸ்டிக்கில் இருந்து ஸ்பூன் வரை!

4 ஒயின் கிளாஸ்கள் கொண்ட செட் ஒருவரால் வாங்க முடியவில்லை என்றால் ஒன்று மட்டும் வாங்கி வைத்து விடுவார்கள். மற்ற மூன்று கிளாஸ்களை மற்ற நண்பர்கள் அவர்கள் ஒருவருக்கொருவர் பழக்கமில்லாதவர்களாகக் கூட இருக்கலாம். வாங்கி செட் ஆக்கி விடுவார்கள். திருமணப் பரிசுகள் அழகாக கிஃப்ட் பேக் செய்யப்பட்டு கண்களைக் கவரும் வகையில் மேடையில் சுழன்று கொண்டே இருந்தன. கடையிலும் நல்ல வியாபாரம். விளம்பரம்.

இந்த முறையை நாமும் பின்பற்றலாமே!

- கல்யாணி கிருஷ்ணன், கொல்கத்தா.

கல்யாணமாக கைகொடுக்கும் கல் வாழைகள்!

திருச்சியில் ஓடும் காவிரி நதியில், வெள்ளம் அதிகமாகும் போது உபரி வெள்ள நீரை வாங்கிக் 'கொள்ளும் இடமாக' இருப்பதால் கொள்ளிடம் என்று பிரசித்தி பெற்ற வடதிருக்காவேரியின் வடகரையில் வளப்பமான ஊரான மண்ணச்சநல்லூரிலிருந்து சுமார் எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது 'திருப்பைஞ்ஞீலி' திருத்தலம். திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்தில் சென்றால் சுமார் ஒரு மணி நேரத்தில் இந்த ஊரை அடையலாம்.

• ஸ்ரீ விசாலாக்ஷி அம்மன்



ஞீலி என்பது ஒருவித விசேஷ ரகமான வாழை. பைஞ்ஞீலி என்றால் பசுமையான வாழை என்று பொருள். அப்படிப்பட்ட வாழைகள் வளர்ந்ததால் 'திருப்பைஞ்ஞீலி' என்று பெயர் வந்ததாகக் கூறுகிறார்கள். மேலும் இத்தலத்தின் தலவிருட்சம் 'வாழை'. இந்த வாழைக்குத்தான் பரிகாரம் செய்கிறார்கள். விமலாரண்யம், தட்சிண கைலாசம், மேலைச் சிதம்பரம் என்று பல பெயர்கள் இருந்தும், வாழை சம்பந்தம் உள்ளதினால்தானோ என்னவோ, திருப்பைஞ்ஞீலி என்ற பெயரே நிலைத்து விட்டது. கோயில் கல்வெட்டுகளிலும், இப்

• கோவில் முகப்பு



பெயரே காணப்படுகிறது. பெயருக்கேற்றாற்போல் வழி நெடுக வாழைத் தோட்டங்களைக் காண முடிகிறது. அப்பர், சுந்தரர், திருஞான சம்பந்தர் ஆகியோரால் பாடப் பெற்ற இத்திருத்தலம் சோழ நாட்டில் உள்ள 63 சிவாலயங்களில் 62ஆவதாகக் கருதப்படுகிறது.

'என்னடா? கோயில் நுழைவு வாயில் சிறிதாக இருக்கிறதே?' என்ற எண்ணத்துடன் உள்ளே நுழைந்தால் சிறிது இடைவெளி விட்டுத் தெரியும் மூன்று நிலை ராஜகோபுரம், நம் எண்ணம் தவறு என்பதையும், உருவத்தை வைத்து எதையும் எடை போடக் கூடாது என்பதையும் உணர்த்துகிறது. பிரதான ராஜ கோபுரத்தின் முன்பு ஒருபுறம் நூற்றுக்கால் மண்டபமும், இன்னொருபுறம் சிவபெருமான் சன்னிதியும் இருக்கின்றன. படிகளில் ஏறி, அந்த சிவபெருமான் சன்னிதியில் உள்ள லிங்கத்தை தரிசனம் செய்கிறோம். இந்த ஈசனின் திருநாமம் 'சோறுடை ஈஸ்வரர்'.



• வாழைப் பரிகாரம்



அப்பர் பெருமான் ஒவ்வோர் ஊராகத் தரிசனம் செய்து வருகிறார். திருச்சி, திருப்பராய்த்துறை தெய்வங்களை தரிசனம் செய்தபின் திருப்பைஞ்ஞீலி நோக்கி வந்து கொண்டிருந்தார். கடுங்கோடையில் நீண்ட தூரம் நடந்து வந்ததால் உடல் சோர்ந்து களைப்படைந்தார். கூடவே பசி மயக்கமும் வாட்டியது. தன் பக்தன் வாடுவதை எந்தத் தெய்வம் பொறுத்துக் கொள்ளும்? இந்த ஊர் சிவபெருமானும், அப்பர் ஓய்வெடுக்க இருந்த இடத்தில், ஒரு தடாகத்தை உருவாக்கி, தாக சாந்திக்கு ஏற்பாடு செய்தார். அது போதாதென்று, தானே, அந்தணர் வடிவில், கட்டுச்சோறு மூட்டை எடுத்துக் கொண்டு, அப்பர், அமர்ந்திருந்த இடத்துக்

குச் சென்று தன் கையால் அமுதும் படைத்தார்.

தன்னுடைய ஆயாசத்தைத் தீர்த்த அந்தணரிடம், திருப்பைஞ்ஞீலிக்கு எப்படிப் போக வேண்டும் என்று வழி கேட்க, அந்தணரும் தான் அந்தவூர்க்காரர்தான் என்று கூறி அப்பரைத் திருப்பைஞ்ஞீலிக்கு அழைத்துச் செல்கிறார். ஊர் எல்லை வந்ததும், தான் யார் என்பதை, ரிஷபாரூடராய்த் தரிசனம் தந்து தெரிவிக்கிறார். அப்பரும் நெகிழ்ந்து போகிறார். இந்த நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் அப்பர் பிறந்த நாளான சித்திரை அவிட்டத்தில் 'கட்டமுது சோறு திருவிழா' இந்தச் சன்னிதியில் நடைபெறுகிறது.

சோறுடைநாதரின் சன்னிதியைச் சுற்றி வந்தால், அவருக்கு அருகில் அருகம்புல் விநாயகர் அமர்ந்திருக்கிறார். அவருக்கு முன் உள்ள ஹோம குண்டத்தில், பக்தர்கள் தீபமேற்றுகின்றனர். 'வாழைப் பரிகாரம்' செய்பவர்கள் அருகம்புல்லால் இந்த விநாயகருக்கு அர்ச்சனை செய்த பிறகுதான் அடுத்தகட்டப் பூஜைக்குச் செல்கிறார்கள்.

அவரைத் தரிசித்த பிறகு படிகளில் இறங்கிப் பிரதான கோபுரவாயிலை ஒட்டி அமைந்துள்ள திருச்சுற்றை வலம் வந்தால், எமதர்மராஜன் சன்னிதியை அடையலாம். கி.பி. 6ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த மகேந்திரவர்ம பல்லவனால் கட்டப் பெற்ற குடவரைக் கோயில் இது.

சிவபெருமானின் இடப்பக்கம் பார்வதிதேவி அமர்ந்திருக்க, இவர்கள் இடையே முருகப்பெருமான் உட்கார சிவபெருமானின் வலப் பாதத்துக்கு அடியில் குழந்தை போல் படுத்திருக்கிறார் எமதர்மராஜன்.

திருக்கடையூரில் கால சம்ஹார மூர்த்தியாகி, மார்க்கண்டேயனின் உயிரை எடுத்துச் செல்ல வந்த எமதர்மனின் உயிரைப் பறித்து விடுகிறார் சிவபெருமான். எமனுடைய ஆட்சி அஸ்தமித்து விட்டதால், இறப்பு என்பதே இல்லாமல் போக, மக்கள் தொகை பெருகி, திருடு, சூது, வறுமை ஆகியவை ஆட்சி செய்ய ஆரம்பித்தன. இவற்றால் திருப்பஞ்ஞிலியை மட்டும் ஆள முடியவில்லை. காரணம் இந்த



திருமணத்துக்குப் பத்துப் பொருத்தம் பார்க்க வேண்டும் என்கின்றனரே... அந்தப் பத்துப் பொருத்தங்கள் என்னென்ன தெரியுமா?

தினம், கணம், மாகேந்திரம், ஸ்த்ரீ தீர்க்கம், யோனி, ராசி, ராசி அதிபதி, வசியம், ரச்சு, நாடி என்பவையே.

- ஆர். ராஜலட்சுமி, கரூர்.

கல்யாண சத்திரத்தில் மேடையில் திருமண நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஹாலில் நுழைந்தவுடன், நமக்கு எதிர்த்தாற்போல் உள்ள இடதுபுற இருக்கைகளில் அமர்ந்து கொள்ளுங்கள். வீடியோ, போட்டோகிராபர்களின் குறுக்கீடு இல்லாமல் நிகழ்ச்சிகளை கண்டுகளிக்கலாம்.

- பாமா ரமணி, திருச்சி - 5.



ஊர் உமா மகேஸ்வரன் அருளால், காலாகாலத்தில், நடக்க வேண்டிய கடமைகளும், அலுவல்களும், தவறாமல் நடந்து வந்தன. ஆகவே, பூமி பாரம் தாங்க முடியாத பூமாதேவி, தேவர்களுடன் சேர்ந்து, இந்த ஊருக்கு வந்து இறைவனிடம் முறையிட்டு, எமனுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும்படி வேண்டுகிறார். மகேசனும் மனமுவந்து எமதர்மனை, பிலத்துவாரத்தின் வழியாக வரவழைத்து, முன்பு போல அழித்தல் தொழில் அதிகாரத்தைத் தைப்பூசத் தன்று வழங்குகிறார். ஆகவே இறைவனுக்கு 'அதிகார வல்லபர்' என்ற பெயரும் உண்டு. அதிகாரம் இழந்தவர்கள், பதவி பறிபோனவர்கள், பிரார்த்தனை செய்ய ஏற்ற இடம் இது. இங்கு ஆயுள் விருத்திக்கான ஹோமங்களும் செய்கிறார்கள். சனிக்கு அதிபதி எமன் ஆகையால், இங்கு சனீஸ்வரருக்கு சன்னிதி கிடையாது.

அங்கிருந்து திருச்சுற்றை வலம் வந்து, பிரதான வாயில் வழியாக உள்ளே நுழைந்தால் நம்மை வரவேற்கின்றன நவக்ரஹ படிகள். ஒவ்வொரு படியும் ஒவ்வொரு கிரஹத்துக்குச் சொந்தமானது. இந்த ஒன்பது படிகளிலும், மெதுவாகப் பாதங்களை வைத்துப் படிப்படியாக இறங்க, இறங்க, நவக்ரஹ தோஷங்களும் நம்மிடமிருந்து இறங்குகின்றன. படிகள் மூலமாகக் கீழே இறங்கி, பலிபீடத்தைத் தாண்டி, நந்தி தேவரை நமஸ்கரிக்கிறோம்.

மூலஸ்தானத்தை நோக்கி அமர்ந்திருக்கும் நந்திதேவருக்கு முன் ஒன்பது குழிகள் உள்ளன. அந்த ஒன்பது குழிகளையும் ஒன்பது கிரஹங்களாகப் பாவித்துப் பக்தர்கள் நல்லெண்ணெய்த் தீபம் ஏற்றுகின்றனர். நவக்ரஹப் படிகளில் இறங்கி, நவக்ரஹ குழிகளில் தீபம் ஏற்றுவதால், நவக்ரஹ தோஷங்கள் நீங்குகின்றன. ஆகவே இங்கு நவக்ரஹங்களுக்கென்று தனி சன்னிதி கிடையாது.

வாழை மரத்தை ஸ்தலவிருட்சமாகக் கொண்ட மூலவரின் திருநாமம் வாழைவனேஸ்வரர் (ஸ்ரீவிவன நாதர்). வசிஷ்டருக்கு நடன தரிசனம் காட்டியவரும், அப்பருக்கு அமுது ஊட்டியவரும், எமனுக்கு உயிரையும் கொடுத்து அதிகாரத்தையும் கொடுத்து, அதிகார வல்லபர்

திருப்பைஞ்ஞீலிக்கு செல்லும் வழி

திருச்சி கொள்ளிடம் பாலம், நொச்சியம், மண்ணச்சநல்லூர் வழியாக திருப்பைஞ்ஞீலியை அடையலாம்.

திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து டவுன் பஸ் எண்கள் :

27, 27A, 27E, 124

இங்கு தங்கும் வசதிகள் போதாது.

கோயில் திறந்திருக்கும் நேரம்

காலை 6-1 மணி

மாலை 4 - 8 மணி

வாழைப் பரிகார பூஜை நேரம்

காலை 8.30 - 12.30 மணி

மாலை 4.30 - 5.30 மணி

என்ற கீர்த்திகளையெல்லாம் சுமந்து நிற்பவருமான இந்த மூர்த்தி, பார்வைக்கு மிகச் சிறிய லிங்கமாய்க் காட்சி தருகிறார். தானாகவே தோன்றிய சுயம்பு லிங்கம். ஸ்வாமியை தரிசனம் செய்துவிட்டு, கல்யாணமாகாதவருக்கு கைகொடுக்க காத்திருக்கும் கல் வாழைகளை காணச் செல்கிறோம்.

சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக யோகத்தில் அமர்ந்தார். தானும் அதுபோல் சிவயோகத்தில் இருக்க விரும்பிய பார்வதி, விசாலையாக, இங்கு வந்து பாறை மீது தவமிருக்கிறார். அங்கு நிழல் தரும் மரங்கள் இல்லாதது கண்டு, தன்னுடன் கூட வந்திருந்த தோழிகளான சப்தகன்னிகைகளையும், தானமர்ந்த பாறையின் மேல் நிழல் தரும் வாழைமரங்களாகும்படி பணித்தார். தவத்தின் நோக்கம் முடிந்தபின், அந்தக் கல் வாழைக் கன்னிகளை அங்கேயே இருந்து, தன்னை நாடி வரும் பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்ற வரம் அளித்தார். இத் தலவிருட்சம் 64 சதுர்யுகங்களைக் கண்டிருப்பதாக கோயில் தலபுராணம் தெரிவிக்கின்றது. (12,000 ஆண்டுகள் கொண்டது ஒரு சதுர்யுகம்).

பாறையின் மேல் வாழை மரங்கள் வளர்வதாகக் கூறுகிறார்கள். ஆனால் மேலே மூடியிருக்கும் மண்தான் பார்வைக்குத் தெரிகிறது. இந்த மரத்தின் பூ, காய், இலை, தண்டு, நார், எதையும் பயன்படுத்துவது இல்லை. மரத்தின் பழத்தை மட்டும் ஈஸ்வரனுக்கு அபிஷேகம் செய்கிறார்கள். அதையும் பிரசாதமாக உண்பதில்லை.

வாழைப் பரிகாரம் செய்பவர்கள் இங்கும் சங்கல்பம் செய்து கொண்டு, வாழைமரத்துக்குச் சிவப்பு துணியை அணிவித்து, அதன் மேல் மஞ்சள் கயிறைக் கட்டி, கற்பூர ஆரத்தி செய்து வணங்கிப் பிரார்த்தனை செய்கிறார்கள். செவ்வாய்தோஷம், களத்ர தோஷம் உள்ளவர்கள் வாழைப் பரிகாரப் பூஜை செய்கிறார்கள். இப்படிப் பரிகாரம் செய்பவர்களுக்கு 90 நாட்களுக்குள் திருமணம் கூடுகிறது." என்கிறார் அங்கு சங்கல்பம் செய்து வைக்கும் குருக்கள். வாழைப் பரிகாரப் பொருட்கள் கோயிலிலேயே கிடைக்கின்றன.

வாழையடி வாழையாக வளர்ந்து வாழ வேண்டும் என்று வாழ்த்துவது பெரியோர் வழக்கம். அதே போல் வாழைக்கும் - இல்லற வாழ்க்கைக்கும் இனிய தொடர்பை ஏற்படுத்தித் தருகிறது இந்தக் கோயில்.

- கோழியாலம் நந்தகுமார்

படங்கள் : **ஸ்ரீ அரசு**



மாறினாரு மாப்பிள்ளை!

என் அக்காவின் திருமணம் கும்பகோணத்தை அடுத்துள்ள திருபுவனத்தில் நடந்தது.

நிச்சயதார்த்துக்கு வராமல், திருமணத்துக்கு மட்டும் கல்கத்தாவிலிருந்து வந்திருந்த என் அண்ணா, மாப்பிள்ளையை ஆரத்தி எடுப்பதற்காக அழைத்து வரச் சென்றார். கைகுலுக்கித் தோளில் கை போட்டுப் பேசிக் கொண்டே அழைத்து வந்தவரை ஆரத்தி எடுக்க நிறுத்தினார். உடனே அந்த இளைஞன், ''நான் மாப்பிள்ளை இல்லை; நான் மாப்பிள்ளை இல்லை. நான் மாப்பிள்ளையின் தம்பி'' என்று அலறியதும் என் அண்ணாவின் முகத்தில் டன் கணக்கில் அசடுவழிந்தது. எங்களுக்கோ ஒரே சிரிப்பு.

''சரி, மாப்பிள்ளை எங்கே?'' என்று தேடினால் பஸ்ஸிலேயே பேண்ட்டைக் கழற்றிவிட்டு வேஷ்டிக்கு மாறிக் கொண்டிருந்தார்!

- ஆர். ராஜலெக்ஷ்மி,
கடப்பா.

உங்கள் இல்லத்தில்

திருமணமா?

சமையலுக்கு யாரை

தேர்ந்தெடுப்பீர்கள்!

சமையல் என்றாலே தமிழகத்தில் கைராசி ஸ்தாபனம்

ஜே.டி. கேட்டரிங்தான்...!

ஏனெனில்

பல **காரணங்கள்** உள்ளன!



வாருங்கள்! ஜே.டி. கேட்டரிங்கோடு இணைந்து தங்கள் மகன், மகள் திருமணத்தை சுவையுள்ளதாக்குங்கள்!

சென்னையில் 25 வருடகாலமாக கல்யாணம் பண்ணிப்பார் வீட்டை கட்டிப்பார் என்று அந்த காலத்தில் பெரியவர்கள் சொல்வார்கள். ஆனால் இப்போது இருக்கும் காலத்தில் இவையெல்லாம் மிகவும் எளிதாக போய்விட்டது வீட்டிற்குள் இருந்தபடியே எல்லாவற்றையும் பேசி முடித்து விடுகின்ற அளவில் இன்று எளிதாக போய்விட்டது. அப்படிப்பட்ட உலகில் எல்லோரும் பெருமைபடையும் வகையில். பல பெரிய மனிதர்கள் வீட்டு கல்யாணங்களும் அனைவரும் வியக்கும் வண்ணம் சாப்பாடு, டிபன், காபி, ஜூஸ், டின்னர், பஃபே என வடஇந்திய தென்னிந்திய உணவு வகைகளை காலத்திற்கேற்ற மாதிரி அன்பாய் விரும்பும் வண்ணம் பரிமாறி தனக்கென தனி முத்திரை பதித்துவரும் முன்னணி நிறுவனம்தான் ஜே.டி. கேட்டரிங் சர்வீஸஸ். உங்கள் இல்லத்தில் நடக்கும் அனைத்து சுபகாரியங்களுக்கும் A to Z நாங்களே முன்னின்று உங்கள் உறவினர் உணர்வுடன் சமையல் செய்து வியாபாரம் நோக்கம் இல்லாமல் பரிமாறி வருகிறோம். உயர்தர மக்கள் மட்டுமின்றி நடுத்தர வர்க்கத்தினருக்கும் அவரவர் வசதிக்கு தகுந்தமாதிரி நாங்கள் சிறப்பாக உணவு வகைகளை சமைத்து சிறப்பாக பரிமாறி வருகிறோம். இவ்வாறு உயர்தர மற்றும் நடுத்தர மக்களின் ஏகோபித்த ஆதரவை ஜே.டி. கேட்டரிங் பெற்றுள்ளது எங்களிடம் தி.நகர் - மடிப்பாக்கம் - கும்பகோணம் போன்ற இடங்களில் சொந்தமாக திருமண மண்டபங்கள் உள்ளன. இந்த திருமண மண்டபத்தில் ஃபுல் பேக்கேஜிங் ஸ்கீம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். இங்கு எங்களை தொடர்பு கொண்டால் போதும் திருமணத்திற்கு தேவையான அனைத்து வசதிகளையும் நாங்களே ஏற்பாடு செய்துத் தருகிறோம். மேலும் வீடுகளில் நடக்கும் சிறிய விசேஷங்களுக்கும் நாங்கள் டிபன், சாப்பாடு, டின்னர் ஆர்டர்களின் பேரில் சர்வீஸ் செய்துத் தருகிறோம்.

J.D. மேரேஜ் கேட்டரிங் சர்வீஸஸ்

ப்ளாட் எண்: 17, E.B. காலனி 3வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை - 600 088.

தொலைபேசி: 2253 0164 / 5519 0961 / 2242 0232 செல்: 98400 76035



J.D. துரை

எங்களுடைய சார்பு நிறுவனங்கள்: ஜே.டி. மேரேஜ் கேட்டரிங் சர்வீசஸ் | ஜே.டி. என்டர்பிரைசஸ்
ஸ்ரீ குரு ராகவேந்திரா கல்யாண மண்டபம் - சென்னை, கும்பகோணம். | ஸ்ரீ குருராகவேந்திரா கல்வி அறக்கட்டளை
ஸ்ரீ குருராகவேந்திரா மெட்ரிகுலேஷன் பள்ளி | ஸ்ரீ குருராகவேந்திரா சில்வர் சிட்டிசன் ஹோம் | சாய் கல்யாண மண்டபம் - தி.நகர்



மொய் எழுத வாரீகளா?

சிலர், திருமண அழைப்பிதழில், 'அன்பளிப்பைத் தவிர்க்கவும்' என்று கேட்டுக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம். ஆனால், இந்த மாதிரியான வேண்டுகோளை (இல்லை, மிரட்டலை) எந்த அழைப்பிதழிலாவது பார்த்திருக்கிறீர்களா?

பட்டுக்கோட்டைக்கருகே ஒரு கிராமத்தில், உறவினர் வீட்டில் வேறொரு கிராமத்திலிருந்து வந்த அழைப்பிதழ் ஒன்றைப் பார்த்தேன். வழக்கமான அழைப்புக்குப் பிறகு ஒரு பின்குறிப்பு.

'1975-க்குப் பிறகு எங்கள் வீட்டில் எந்த விசேஷமும் வைக்கவில்லை. நிறையப் பேருக்கு மொய் செய்திருக்கிறோம். செய்ய வேண்டியிருப்பவர்கள் அவசியம் வந்து மொய் எழுத வேண்டியது' என்று அச்சிடப்பட்டிருந்ததைப் பார்த்து ரசித்தேன்.

ஒருவேளை அப்படி வந்து மொய் எழுதாதவர்கள் வீட்டுக்கு, பெண் மாப்பிள்ளை யையே நேரில் அனுப்பி வசூல் செய்திருப்பார்களோ அல்லது அடியாட்கள் யாரையும் அனுப்பி வசூலித்திருப்பார்களோ என்னவோ! நல்ல வசூல் ராஜா குடும்பம்!

- ராஜேஸ்வரி கிட்டு, மதுரை.

மணமகள் தேவை



V. VAIDHYANATHAN, D.M.E., & D.M.M.

Iyer, Vadama, Bharathwajam, D.M.E., D.M.M. 31/3/1967 having Own Business (M/s Vee Vee Marketing) income of Rs. 20,000/- p.m. seeks graduate employed/unemployed girl. Box No. 12627

G.K. RAJAN, B.COM. D.C.A.



Thenkalai, Iyengar, Kousiga, Sadayam, Kumbha 35/175cms, 14,000/- p.m. mother no more, Father remarried. Boy living seperately. Clean habits seeks Vegetarian, Graduate or plus 2, homely girl (persons from Orphanage homes also welcome.) Box No. 12655



M.S. BALASUBRAMANIAN

ஐயர், வடமாள், கௌசிகம், விசாகம், 8ல் செவ்வாய், 33/168, (பி.ஏ.) தனியார், 5000/- பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். எஸ். சாவித்திரி, 43/20, பாபு ராஜேந்திர பிரசாத் முதல் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 33. போன் : 98400 89487

அரிமா எம்.எஸ். ராஜேந்திரன், நிலச்சுவாந்தார்



ஆர்ய வைஸ்யர், கிருத்திகை, 1952, குழந்தைகள் இல்லாத, சட்டப்படி விவாகரத்தானவர், சொத்து சுகமுள்ள, அதன் மூலம் ரூபாய் ஒரு லட்சம் வருமானமுள்ள, நிறைய தர்ம காரியங்களுக்கு உதவும் நிலச்சுவாந்தார் வரனுக்கு, 35 வயதிற்கு மேல் உள்ள, வரன் செய்யும் தர்மகாரியங்களுக்கும், சமூக மற்றும் ஆன்மிகப் பணிகளுக்கும் உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருக்கும் பெண் தேவை. ஆங்கிலம், இந்தி தெரிந்திருந்தால் நல்லது. ஜாதி தடையில்லை. அனைத்துப் பிரிவினரும் விண்ணப்பிக்கலாம். மற்ற விவரம் நேரில் கலந்து பேசியபின், ஜாதகம் கொடுக்கப்படும். அரிமா எம்.எஸ். ராஜேந்திரன், விஜயலக்ஷ்மி காம்ப்ளக்ஸ், 109, வெட்டிக்காடு ரோடு, பட்டுக்கோட்டை - 641 601. போன்: 04373-222575.

◆ ஐயர், வடமா, ஸ்ரீவத்ஸ கோத்திரம், பூராடம், 1977, D.E.E., தனியார் கம்பெனி, 12,000 வேலைக்குச் செல்லும்/வேலைக்குச் செல்லத் தகுதியுள்ள மணப்பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். ஜாதகம், மற்ற தகவல்களுடன் தொடர்பு கொள்ள தொலைபேசி எண் : 044-2377 6401/044-23644035 பெட்டி எண் : 12620

◆ Vadama, Bharadwaja, Thiruvonam, 35, 5.2', B.Sc., R&D Engineer, MNC Co., Chennai Rs. 15,000/- Required graduate girl. Contact : 98940-54918, Prabha : 5536 2626. Box No. 12621

◆ ஐயர், வடமாள், கர்க்க கோத்திரம், உத்திரம், 34 வயது, 5 அடி, மாநிறம்,

வலது கால் சற்று ஊனம், பி.ஏ., டிசிஏ, சுயதொழில் 5000/- +2/டிகிரி படித்த வேலைக்குச் செல்லாத 28-32 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. 044-2381 0616. பெட்டி எண் : 12622

◆ Iyer, Vadamal, Bharatwajam, Ayilyam, Padam-3, 28/5,.6', fair, B.Sc., M.Fc., CA (final), MBA (Final), Rs. 15,000/- Business Accountant, MNC, Chennai, Seeks homely, educated girl. Ph : 2371 5723. Box No. 12623

◆ Nellai Saiva Pillai, B. Sankaran, B.E., D.O.B. 14.10.1973, Bharani Star, Software Company, Rs. 20,000/-p.m. seeks employed good looking girl from same caste. Ph : 2481 0116. Box No. 12624

◆ Iyer, Vadama, Vadhoolam, Mirgaseerisham-2, 36/175, DME, Sr. Engineer, Rs. 16,000/- Own House, seeks employed/unemployed bride. Subsect acceptable. Ph : 044-2248 3397. Box No. 12625

◆ ஐயர், பிரஹசரணம், ஹரிதம், 1) புனர்பூசம், 29, வைதீகம், புரோகிதம், மாத வருமானம் ரூ. 7000/- 2) ஆயில்யம், 27, வைதீகம், மாத வருமானம் 10,000/- சகோதரர்களுக்கு தகுந்த மணப்பெண்கள் தேவை. ஃபோன்: 044-2467 0626. பெட்டி எண் : 12626

◆ Iyer, Vadama, Bharatwajam, Moolam, D.E.E., 23/12/1965 Own Company (M/S. Nagoba Switchgear) Chennai - 16 income of Rs. 15,000/- p.m. seeks graduate girl. Box No. 12628

◆ Punarpoosam, working in (UAE) Rs. 35,000/- 169/29 seeks fair, good-looking slim, graduate working or non-working from respectable family. Either Malayali or Telugu Chennai based. Phone No. 2485 4090. Box No. 12629

◆ ஐயர், பிரஹசரணம், காஸ்யப கோத்திரம், 1975, பரணி 2, எம்.சி.ஏ. அமெரிக்காவில் வேலை செய்யும் பையனுக்கு கிராஜுவேட்டிற்கு குறையாமல் படித்த எல்லா உட்பிரிவுகளையும் சேர்ந்த 1 வயது வித்யாசமான வரன்கள் தேவை. ஃபோன்: 08057675860 பெட்டி எண் : 12630

◆ Handsome boy, Hindu, 30, M.Com., Right leg Polio stricken, Pvt. Monthly Income 7000/- p.m. seeks educated/ homely girl. Caste no bar. Box No. 12631

◆ ஐயர், வடமாள், பெங்களூரில் சொந்த வீடு, கௌசிக கோத்திரம், 29 வயது, பி.யு.சி. வரையில் படித்தவர், ஒரே பையன் சொந்தத் தொழில் ரூ. 12,000/- மாத வருமானம். பிராமணப் பெண் தேவை. பெட்டி எண் : 12632

◆ Iyer, Vadamal, Baradwajam, Pooram, MA, DECT, eCRM, 32/ 170 cms, Handsome, employed, IBM, Bangalore, seeks graduate employed bride. Subsects no bar. Contact Ph : 080-25427521, 9448454258(M) Box No. 12633

◆ குருக்கள், வசிஷ்டம், மிருகசீரிஷம், டிப்ளமோ I.T.I., அர்ச்சகர் 8000/- சிவப்பு நிறம் உள்ள வரனுக்கு ஓரளவு படித்த, நல்ல குடும்பப்பாங்கான பெண் தேவை. எதிர்பார்ப்புகள் இல்லை. தொடர்புக்கு : 04343-253160 செல்: 9842914648 பெட்டி எண் : 12634

◆ குருக்கள், வசிஷ்டம், மகம், 31, அர்ச்சகர் 8000/- டிப்ளமோ, மாநிறம், வசதியுள்ள வரனுக்கு, ஓரளவு படித்த நல்ல குடும்பப்பாங்கான பெண் தேவை. எதிர்பார்ப்புகள் இல்லை. தொடர்புக்கு : 04348-232519 செல்: 9842914648 பெட்டி எண் : 12635

◆ Iyer, Vadamal, Bharathwajam, Rohini, 18-09-1973, B.A., DCA, Circulation Executive, Indian Express, Chennai, Rs. 9000/- p.m. Suitable graduate girl. Age upto 27. Phone : 0416-5536388, 99941 87526. Box No. 12636

◆ Vadakalai, Srivatsam, Uthiram, BE, 31, 5.7', Project Manager, MNC, Seeks graduate home loving god fearing soft

spoken preferably un employed bride. Contact with BHP returnable Ph : 020-27201110. Box No. 12637

◆ சிவகோத்திரம், எஸ். மனோகரன், DME தமிழ் நாவிதர் (மருத்துவர்) Asst. Engineer Fabrication Site Works, Rs. 20,000/- p.m. (MNC) அதே இனத்தில் படித்த பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு கொள்ள எஸ். பழனிவேலு, வெட்டுவாணம், செல் :94428-07649. பெட்டி எண் : 12638

◆ Iyer, Athreya, Vadamal, Sathayam, 30/5.3', B.Com., Rs. 10,000/- employed in Private Concern in Mumbai, Contact : Phone :022-25240754. Box No. 12639

◆ Father Brahmin, Mother Mudaliar (veg) 23, Uthiram-4, Kasyabam, BE, Trainee, Software Engineer seeks well to do family girl (graduate) efficient in domestic affairs from same parentage or respectable family. Contact No. 98840-26593. Box No. 12640

◆ Iyer, Bharatwajam, Brahacharanam, Pooradam, fair, 27/192 B.Sc., (C.S), working in Textile Exports Manager at Tirupur Rs. 30,000 p.m. seeks good family, graduate, unemployed girl, height 165 cm above. cell no. 09443464116. Box No. 12641

◆ Iyer, Vadamal, Haritha, 31/170 Project Manager, I.T. Unconsummated marriage legally divorced seeks unmarried girl. No demands simple marriage. Box No. 12642

◆ ஐயர், வடமாள், 33/5.8', 12,000, கௌசிகம், ஸ்வாதி-2, டெல்லியில் சொந்த வீடு, ஜெராக்ஸ் பிசினஸ், காது மந்தமும், பேச்சு குறையுமுள்ள ஆரோக்கியமான பையனுக்கு இதே குறைபாடு இல்லாத குடும்பப்பாங்கான, தென்னிந்திய பிராமண மணமகள் தேவை. சிறு குறைபாடுகள், பெற்றோர் இல்லாதவர்கள், வசதி குறைவானவர்கள் சம்மதம். 011-25251512 044-24990423 அகிலா. பெட்டி எண்: 12643

◆ ஐயர், வடமாள், கௌசிகம், கார்த்திகை, 34/5.6', Civil Draughtsman employed, Own House உள்ள வரனுக்கு படித்த, வேலைக்குப் போகும், போக விருப்பமுள்ள பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். தொடர்பு : 044-22264242, 09873089386 பெட்டி எண் : 12644

◆ Iyer, Brahacharanam, Gowthama, 32/165 Thiruvathirai, Sr. Software Engr. Bangalore, Decent salary, seeks suitable graduate employed girl. Contact Phone : 044-2652 1932 Box No. 12645

◆ காது கேட்கும் திறனும், பேச்சுத் திறனும் சற்றுக் குறைவாகவுள்ள ஐயங்கார், கௌசிக கோத்திரம், சதயம், 25/182 செ.மீ., ரூபாய் 11,000/- சம்பளம்; பி.காம்., பட்டதாரிக்கு அதே குறை யுள்ள ஐயங்கார்/ஐயர் பெண் தேவை. போன் நெம்பர் : 98842 65717. பெட்டி எண் : 12646

◆ Madhwa Desistha, Marathi, Kaushika, Mrigashirsha-3, Mithuna 28/5.10', B.Com., CA Infosys Bangalore, seeks educated, good-looking girl from Marathi Desistha. Contact : 044-22433017. cell:9884119630. Box No. 12647

◆ ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸ கோத்திரம், அவிட்ட நட்சத்திரம், 29 வயதான பி.டெக். படித்த சாஃப்ட்வேர் என்ஜினியருக்கு பட்டதாரியான நல்ல குடும்பப் பெண் தேவை. தொடர்பு கொள்ள (தந்தை) தொலைபேசி எண் : 5548 5040. பெட்டி எண் : 12648

◆ Iyer, Vadamal, Madara, Aswathi, 1973, Graduate, Computer Literate, Own House, Privately employed, seeks good-looking home loving graduate

girl. Subsect financial status no bar. No demands. Phone : 04652-244343 email: ramasubramonian@yahoo.com Box No. 12650

◆ Iyer, Brahacharanam, Kashyabha, Pooratathi, 29/163, Fair, M.Sc., Chemistry, PGDCA, Senior Executive in Reputed Pharma with clean habits seeks good-looking graduate girl. Contact : 0424-2282403/98657-37865. Box No. 12651

◆ Iyer, Brahacharanam, Pooram, Kousika, Simham, 33, 5.5', D.E.E.E. M.A., Electrical Engineer, Dubai, Rs. 40,000/- seeks age between 28 to 30 qualified girl willing to work. Box No. 12652

◆ Brahmin Bharadwajam, Uthiradam, 36 years, graduate employed earning Rs. 1,20,000/- p.a. widower without encumbrance seeks suitable alliance without encumberance. Contact : 98415-43054; 22241226 Box No. 12653

◆ Iyer, Bharadwajam, Pooruttathi, 31/178, Phd., DRDO employed, clean habits, legal divorcee by mutual consent, not lived a single day, seeks god fearing, good looking, Iyer girl, divorcee/widows kindly excuse. No demands, early marriage. Reply with details. Box No. 12654

◆ Tamil Iyer, Vadamal, Vadhoolam, Avittam, Makararasi for second of only two sons, very fair, 180cm, 21.07.78 B.Com., MBA, Lean, Handsome, employed Coimbatore, ICFAI, 16,000/- seeks suitable girl. Ph : 9894872317 9444622594, 22290829 Box No. 12656

◆ Iyer, Vadama, Kowshika Gothram, Ayilyam 3rd padam, MCA, 1973/6 feet, working in Software Co., as Senior Software Engineer in Chennai seeks suitable bride. Contact : 044/22240114 Box No. 12657

◆ Telugu Viswakarma, Gootaluvalu, Thiruvathirai, 39/182 cm., BE, PGDPM, Software Engineer Legally Divorced seeks homley fair graduate below 35 girl. Caste no bar. Send BHP Ph : 0431-2446276 Box No. 12658

◆ Palghat Iyer, Brahacharanam, Bharatwajam, Swathi, 36/5.6', B.Com., Sales Officer in a Pvt. Co., Ernakulam, Seeks good-looking girl from respectable family. Contact : 0484-2321 978. Box No. 12659

◆ **Iyer Athreya, Visakam, Tula 35/167cms, fair, M.A., Mass Communications Jamia Chief copy Editor Daily News Analysis Mumbai (Unit Dhainik Bhaskar) 35000+p.m. seeks good-looking employed girl from decent family. Send BHP Box No. 12660 Contact parents Delhi. 011-25592762**

◆ Iyer, Vadamal, Haritham, Rohini, B.E., Born 1964 August handsome Medium Built Regional Manager, Private Company at Chennai Three Lakhs per annum seeks Suitable graduate bride. Call : 98401 79486 Box No. 12661

◆ Vadama, Koushikam, Anusham-4, 15.11.74, 172cms, B.Sc., PGDCA, CAIIB PSU Bank Officer, Rs. 15,000/- p.m. seeks suitable girl same sect and respectable family. Box No. 12662

◆ ஐயர், பிரஹசரணம், ஹரித, ரோஹிணி, 46 வயது, பட்டப் படிப்பு, 180 செ.மீ., 50 ஆயிரம் மாத வருமானம், சொந்த வீடு, மனைவி இழந்த, 14 வயது ஆண், 11 வயது பெண் உள்ள வரனுக்கு 35 வயதுக்கு மேல் உள்ள பெண் (உட்பிரிவு சம்மதம்), குழந்தையில்லாத விவாகரத்து ஆனவர்கள் சம்மதம். ஃபோன்: 24433-28499 பெட்டி எண் : 12663

திருமண மலர் - விளம்பரக் கட்டண அறிவிப்பு

திருமண மலர் விளம்பரக் கட்டணம் முதல் 30 வார்த்தை களுக்கு ரூ. 500/- அதிகப்படியான வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ரூ. 15/- வண்ணத்தில் 'ஹைலைட்' செய்ய ரூ. 100/- கூடுதலாக அனுப்பவும். வண்ணப் புகைப்படத்துடன் (1" X 1") வெளியிட ரூ. 800.

◆ Alliance invited for Bangalore based Tamil Vadama, Viswamithra, Uthirattadhi, 29, 5.5', B.Sc., GNIIT (MBA) Multinational Customer Support Team Leader Drawing above 20,000 p.m., from parents of Charming Healthy graduate girl. Contact : 080-2362 1636. Box No. 12664

◆ **Family of Iyer, Brahacharanam, Kousikam, 5.8', 33 years, MNC Software Manager earning 12 lakhs per annum, invites alliance from parents of Iyer girl with respect for our values. Please reply with details. e-mail: mohanvilla@gmail.com Box No. 12665**

◆ TWINS Vadama, Srivatsam, Pooradam, Jan '72, Graduates, one employed in Pvt. Ltd., another Business, Own House, seek suitable employed, or unemployed Iyer Girls no dowry. Ph : 2471 3857, Cell : 98407 11389 Box No. 12666

◆ **Iyer, Vadamal, Naithruba Kashyaba, Karthigai-4, 1971, B.Sc., 168cm, MNC, Bangalore, Rs. 20,000/- seeks fair, graduate, Vadamal girl with good family background. Contact parents. Phone : 044-2474 1542. Box No. 12667**

◆ Tamil Iyer, Vadamal, Bharatwajam, Poorattadhi II, July '72, 5.7, B.Com., employed in M.N.C. Bangalore, 25,000/- p.m. seeks graduate employed girl age 26-31 Subsect no bar. Box No. 12667

◆ Tamil Iyer, Kowshigam, Uthradam, 29/165 cm, D.M.E. M.A. Engineer at Bangalore salary Rs. 30,000/- p.m. seeks suitable bride. Contact No. 044-2247 4727/98401 27507. Box No. 12669

◆ குருக்கள், பராசரம், சுவாதி, 31 வயது, கோவில் பூஜகர், மாத வருமானம் ரூ. 8000/- இதே இனத் தைச் சேர்ந்த படித்த மணமகள் தேவை. 22593413-044. பெட்டி எண் : 12670

◆ Iyer, Brahacharanam, Shadamarshanam, Uthirattadhi, 29/180, B.E., MBA, fair, handsome, MNC, Chennai seeks Prof. Qualified employed good-looking girl from affluent family. Box No. 12671

◆ Iyer, Vadama, Koundinya, Swathi, 31/175, very fair, B.Sc., (MCA), Software Professional California 8000$ visiting Chennai, September seeks good-looking girl Radhakrishnan AA-11, Alacrity Housing Complex, Mogappier West Chennai - 600 058. email: vkrlakshmi@yahoo.com Box No. 12672

◆ **ஐயர், அஷ்டசகஸ்ரம், ஸ்ரீவத்ஸம், அஸ்தம், 29, 5.7', பி.காம்., சொந்தத் தொழில் பெங்களூரில், 15,000+ ஆண்டு லாபம். சிவந்த நிறமுடைய நல்ல தோற்றமுடைய பையனுக்கு படித்து, வேலையிலுள்ள அழகான பெண் தேவை. ஃபோன்: 044-22381669. பெட்டி எண் : 12673**

◆ Iyer, Vadamal, Kousikam, Kettai-I padam, 1972, 6.' tall, fair, clean habits, DME, MNC, Regional Manager, 20,000+ allowances. Seeks suitable bride. Iyer/Iyengar girl acceptable. Ph : 044-32006851 Box No. 12674

◆ ஐயர், வாத்திமாள், ஸ்ரீவத்ஸம், 1) திருவோணம், 41, +2, 10,000/- 2) ஹஸ்தம், 38, +2, 15,000/- சுயதொழில் புரியும் சகோதரர்களுக்கு பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். ஃபோன்: 044-2471 3646. பெட்டி எண் : 12675

◆ Vathimal, Konerirajapuram, Residing Chennai, Srivatsam, Poorattadhi IV, 03-06-1975, 172 cms, Specialised Diploma in Paper Technology from Seshasayee Trichi, Marketing Manager in Balaji Paper International. Salary 2.40 lacs p.a. seeks bride. Box No. 12676

◆ Vathimal Trichi, Residing Calcutta, Kaushikam, Poorattadhi I, 17.01.1975, 159 cms, M.Com., ACS, PGD(PM&IR) ICICI Bank Manager, Salary 4.00 lacs p.a. seeks bride. Box No. 12677

◆ Iyer, Brahacharanam, Athreya, Aswini, 30, 180cm, Dip. Electronics and Tele Communication Executive Private firm 9000/- Own House in Chennai seeks employed/unemployed middle class family bride. Ph : 2258 0074. Box No. 12678

◆ Iyer, Vadamal, Kowsikam, Pooradam, Feb.'63, Magara Lagnam, 7th place Mars, 5.7', B.Sc., M.B.A., Project Consultant, Multinational Bank Dubai seeks suitable bride with Mars in 7th or 8th place. Box No. 12679

◆ Iyer, Vadamal, Gargeye, Visakam-3, BE/27years, 5.6', fair, working in Qatar Airways, Base Engineering, Doha-Qatar (Gulf) seeks well educated, homely Vadama Girl. Send BHP. Parents at Chennai. Box No. 12680

◆ Iyer, Brahacharanam, Sikitha, Uthirattadhi, January, 1976, 174cm, BE, MS SWE California, USA, seeks suitable good-looking girl professionally qualified. Reply with BHP p_krishna76@yahoo.com Box No. 12681

◆ ஸ்மார்த்த கன்னட ஐயர், காசியபம், கிருத்திகை-3, ரிஷபம், 1974, 6.2', M.Sc., IT, working in MNC, Chennai as Team Leader, fair looking வரனுக்கு ஸ்மார்த்த கன்னட ஐயர் பெண் 26 வயதுக்குள் தேவை. 044-2231 3169, 94444-89333. பெட்டி எண் : 12682

◆ ஐயர், வடமாள், கௌசிகம், ஆயில்யம், 33, 5.7', எம்.எஸ்ஸி., எம்.பி.ஏ., ஆபீஸர், தனியார் ரூ. 6638+ பிஸினஸ் வரனுக்கு தகுந்த படித்த பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். தொடர்பு : 044-2686 1156 பெட்டி எண் : 12683

◆ Alliance invited from Hindus, Brahmins, Sourashtrians, Minimum graduate, very fair, good-looking bride for fair, USA Software Engineer, clean habits, 39, Legally divorced without encumbrance. Respond with BHP to Box No. 12684

◆ ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸ கோத்திரம், ஆயில்யம், 31, 5.10', பி.எஸ்ஸி., (கெமிஸ்.) ரூ. 35,000/- துபாயில் வேலை பார்க்கும் பையனுக்கு வேலைக்குச் செல்ல விருப்பமுள்ள பட்டதாரிப் பெண் தேவை. ஃபோன்:044-22484778 செல் : 98842-94982 பெட்டி எண் : 12685

◆ Madhwa Kannada, Aaruvelu, Barathwaja Pooradam, 30 years, 168cms, Marketing Executive in a leading Electronic Company Private in Coimbatore Rs. 20,000/- p.m. seeks Madhwa educated girl. Contact Ph : 0422-2453815. Box No. 12686

இந்த இதழில் பிரசுரமாகும் பெட்டி எண் விளம்பரதாரருக்கு பதில்கள் அனுப்ப கடைசி தேதி 10/9/2006. பதில்கள் அனுப்ப வேண்டிய முகவரி : பெட்டி எண் : .... C/o மங்கையர் மலர், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

◆ 27 years, MCA, Arcot Mudaliyar, 5.7', Associate Consultant Polaris seeks decent family good-looking graduate bride. shankarrajonline@gmail.com Box No. 12687

◆ ஐயர், பிரஹசரணம், கௌண்டின்யம், கேட்டை, 2ம் பாதம், 30, 172 செ.மீ., சி.ஏ., எம்.என்.சி. மும்பை, ரூ. 90,000/- மாத வருமானம், சிவப்பான பையனுக்கு பட்டதாரி வேலைக்குச் செல்ல விருப்பமில்லாத குடும்பப்பாங்கான மணப்பெண் தேவை. ஃபோன்:022-65233905 (அ) 98207 74190 பெட்டி எண் : 12688

◆ வடகலை, ஹர்கீ கோத்திரம், சதயம், 35/5.9', 15,000 பி.ஏ. சேலத்தில் எக்ஸ்போர்ட் எக்ஸிகியூடிவ் வேலை பார்க்கும் பையனுக்கு, குடும்பப்பாங்கான பெண் தேவை. தென்கலையும் சம்மதம். எந்தவித எதிர்பார்ப்பும் இல்லை. ஃபோன்: 04282 221591 பெட்டி எண் : 12689

◆ Tamil Iyer, Vadamal, Gowthama, Uthiradam, 33, 158, +2, ITI, employed in MNC Bangalore Rs. 10,000/- p.m. seeks suitable employed/unemployed girl below 27 with +2/graduate from middle class family. Contact cell:9980669928 Box No. 12690

◆ Iyer, Brahacharanam, Bharatwajam, First Boy 41 years, M.Com., Pooradam, LIC agent DM Club Member and functions contract in Erode. Good Earning. Second boy 37 years, Hastham, B.Com., ACA Own Practice in Erode. Both with clean habits. Pious. Contact : 9443014813 or 0424-2210666. Box No. 12691

◆ Iyer, Brahacharanam, Sankruti, Sadhayam, 27/180, B.Com., HWC (NIIT), working National News Paper, Delhi, 2 lakh per annum, seeks tall, slim, fair, graduate, employed Iyer girl. Age upto 24 from decent family. Contact : 044-2637 5358 or Reply with BHP to Box No. 12692

◆ ஐயர், வாத்திமாள், ஹரிதம், திருவாதிரை, 38, எஸ்.எஸ்.எல்.சி., சட்டப்படி விவாகரத்தான குழந்தை இல்லாத, சொந்தத் தொழில் புரிபவர் ரூ. 10,000/- மாத வருமானம், பிராமண பிரிவில் ஓரளவு படித்த திருமணம் ஆகாத/டைவர்ஸி/விதவை/குழந்தை இல்லாத வரன் தேவை. எளிய திருமணம். எதிர்பார்ப்புகள் எதுவும் இல்லை. 09444895869. பெட்டி எண் : 12693

◆ Iyer, Vadamal, Haritha, Punarpoosam-3, 1976/5.10', B.E. (Mechanical) SWE, MNC, Chennai, Rs. 9 Lakhs annum, seeks cheerful graduate/post-graduate, home loving girl with music knowledge. Contact Parents. Ph : 044-2372 4214. Box No. 12694

◆ Iyer, Vadamal, Srivatsam, Uthirattathi, 32/5.6', B.A., BLIS, Pvt. Rs. 5000/- Plus other Income 3000/- Mars in Seventh Place Neecham. Boy seeks suitable girl. Ph : 55266439. Box No. 12695

◆ ஐயர், ஆத்ரேயம், அனுஷம் II, B.Com., PGDCA (MBA) Rs. 8000 சொந்த வீடு உள்ள சென்னையில் பணிபுரியும் ஒரே மகனுக்கு வேலைக்குப் போகும்/போகாத பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். எதிர்பார்ப்புகள்

திருமண மலர் பகுதியில் இடம்பெறும் விளம்பரங்கள் அனைத்தும் விளம்பரம் செய்பவர்களின் கையொப்பத்துடன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மணமகள் அல்லது மணமகன் பற்றிய வயது, வருமானம், அந்தஸ்து உள்ளிட்ட இதர விவரங்கள் விளம்பரதாரர் தரும் குறிப்புகளின் அடிப்படையில் பிரசுரிக்கப்படு கின்றன. இந்த விவரங்களைக் கொண்டு தொடர்பு கொள்ளும் பெற்றோர்கள் அவை சரியான விவரங்களா என்று தனிப்பட்ட முறையில் விசாரித்து உறுதி செய்து கொள்வது நல்லது. மேலும் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும்பொழுதே மருத்துவப் பரிசோதனையும் மேற்கொண்டால் பிறவிக் குறைபாடுகளுடன் குழந்தைகள் பிறப்பதைத் தடுக்கலாமே! - *பதிப்பாளர், மங்கையர் மலர், சென்னை 600 032*

இல்லை. எளிய திருமணம். ஃபோன்: 22445736. பெட்டி எண் : 12696

◆ ஐயர், பிரஹசரணம், ஷடமர்ஷணம் கோத்திரம், புனர்பூசம், 27 வயது, பெங்களூரில் எம்.என்.சி.யில் வேலை. 20,000 ரூ. வருமானம் பெறும் பையனுக்கு பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். பெட்டி எண் : 12697

◆ ஐயர், பிரஹசரணம், கௌசிகம், 35/5.4', எம்.காம்., எம்.எட்., இன்டர்நேஷனல் பள்ளியில் பெங்களூரில் பணிபுரியும் பையனுக்கு வேலையிலுள்ள பட்டதாரிப் பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். போன்: 044-2618 3877 பெட்டி எண் : 12698

◆ தமிழ் ஐயர், பிரஹசரணம், 5.8', 31 வயது, ஆத்ரேயம், உத்திரட்டாதி 1ம் பாதம், M.A., D.C., Tech., (Computer) சுயதொழில் : பயணத்திற்கும், சுற்றுலாவுக்குமான வாடகை ஊர்திகள், 2. LIC, HFL Consultant. மாத வருமானம் ரூ. 25,000/- சொந்த வீடு உடையவர், தகுதியான மணமகள் தேவை. தொலைபேசி எண் : 94439 28069, 0451-2420145 பெட்டி எண் : 12699

◆ பாரத்வாஜ கோத்திரம், வடமாள், அனுஷ நட்சத்திரம், 5.6', 47 வயது நிரம்பிய மத்திய அரசு வேலையில் உள்ள வரனுக்கு மணமகள் தேவை. பெட்டி எண்: 12700

◆ ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸ, மகம், வயது 37, மாத வருமானம், ரூ. 30,000 தொழில் மார்க்கெட்டிங் மேனேஜர் ஏழைக் குடும்பத்துப் பெண்ணும், உட்பிரிவும் சம்மதம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி : எம்.கே. வெங்கட்ராமன், ஃபோன். 044-2489 6404 பெட்டி எண் : 12701

◆ **Tamil Iyer, Vadama, Srivatsam, Poosam-3, 15.09.'71/172, clean habits, M.E. from Anna University (Govt. College), Lecturer Deemed University Chennai Rs. 22,000/- fair, seeks good qualification bride. No Expectations, 044-2247 7866, (0)94449 36541 Box No. 12702**

◆ Iyer, Brahacharanam, Athreya, Punarpoosam (Mitunam), Suddha Jadhagam, 30/172, clean habits, B.Com., GNIIT, M.C.A., (doing MS) well employed Software Engineer at USA seeks graduate girl below 27. Send horoscope Bio-data. Box No. 12703

◆ Iyer, Ashtasasthram, Vadhoolam, Swathi, (Thula Rasi) B.E./28/5.5.very fair working in MNC B'lore Rs. 9.00 lacs per annum seeks professionally qualified working girl below 5.4 Ph: 0427 2330913 Box No. 12704

◆ Vadamal, Iyer, Kowsikam, Poorattathi-1, Suddha Jadhagam, 34/167 M.Com., ICWA (final) Manager Cum Accountant Private Co., Ghana Africa seeks graduate bride from decent family. Contact : R.Arunkumar, 15 Second St., Vedachalam Nagar, Kodambakkam, Chennai - 600 024. Ph: 044-2473 3065.

◆ Iyer, (North Arcot), Vadama,

Bharathwajam, Krithigai, 31, 170cm, D.M.E. (AMIE), Sr. Engineer & LIC Agent, Boy seeks girl, salary Rs. 17,000 Subsect acceptable. A.E. Nagarajan, 27&28B, 3rd Street, Murugappa Nagar, Puzhuthivakkam, Chennai - 600 091. Ph : 044-2242 5534.

◆ ஐயர், பிரஹசரணம், ஆத்ரேய கோத்திரம், புனர்பூசம், 28, பி.எஸ்ஸி., தனியார் கம்பெனி, சம்பளம் ரூ. 10,000/- தகுந்த படித்த பணியிலுள்ள மணமகள் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். எல்.கே. ஹரிஹரன், 2, சண்முகநாதர் தெரு, சீதாபதி நகர், சிட்லபாக்கம், சென்னை - 64.

◆ ஐயர், பாரத்வாஜம், வடமாள், அஸ்வதி நட்சத்திரம், தனியார், Rs. 30,000/- p.m. B.Com., CA/ICWA(Final), குடும்பப்பாங்கான மணப்பெண் தேவை. கே. ஜானகிராமன், Plot No. 26-B, லீலாவதி அம்மாள் தெரு, மடிப்பாக்கம், சென்னை - 91. 044-2242 2417.

◆ Iyer, Vadama, North Arcot, Kousigam, Pooradam, 28/165 B.Com., M.B.A., PGDCA MNC seeks girl from decent family. J. Prabhakaran, 35 Patel Street, Nehru Nagar, Chromepet, Chennai - 600 044. Phone : 2223 5587.

◆ Koundinyam, Vadamal, Uttarattadhi, Aug. '77/5.9, MS (UK) Internet Engineering IT Consultant, Chennai seeks accomplished bride. Subsects acceptable. Contact with BHP Subramanian, 303, Meenakshi's Parkside, Srinagar Colony, Hyderabad - 500 073. email : madhusundar@aurobindo.com 040-66689357

◆ Bank Manager (Retd.) is looking alliance for Second Son Iyer, Vadamal, Kousigam, Uthradam, 36/175/B.Sc., PGDCA (worked previously USA past 6 years) earning Rs. 30,000/- per month now doing Computer allied Business at Chennai. Subsect acceptable. Contact with horoscope. Balasubramaniam, 43/48-12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. (or) Cell : 98401 65794.

◆ **Thenkalai Iyengar, Bharathwajam, Thiruvadirai, 34/168, 40,000/- p.m. M.Sc., M.S. (Computer Science), Software Engineer, MNC, Bangalore seeks graduate girl. Contact : S. Rengasamy, E-154, Santhanam Road, TVS Nagar, Madurai - 625 003, Ph : 98425 96182, 9894159244.**

◆ Iyer, Vadamal, North Arcot, Bharathwajam, Avittam-1, 25, 5.7', Gammon India, Bangalore, Rs. 30,000/- p.m. B.E., seeks graduate homely girl. A.N. Venkatesan, B-656, BHEL Township, Ranipet - 632 406. Ph :04172-241560; Mob : 94422 41570.

◆ பாலக்காடு ஐயர், காசியப, உத்திரட்டாதி-3, 14.6.74, 5.10', (டிஎம்ஈ) பிபிஏ, பெங்களூர் தனியார் கம்பெனியில் ரூ. 20,000/- சம்பளம் பெறும் வரனுக்கு மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். K.S. Raman, 47, 5th East Street, Kamaraj Nagar, Tiruvanmiyur, Chennai - 600 041.

◆ ஐயர், வடமாள், கௌண்டின்யம், ரேவதி, 27/171/55,000$ Annum தனியார் ஆஸ்திரேலியா, MS(AUS), B.E. அதே இனத்தைச் சேர்ந்த இன்ஜினியர்/புரொபஷனல் வேலை பார்க்கும் மணமகள் தேவை. சுவாமிநாதன், H331 சூர்யா அபார்ட்மெண்ட்ஸ், எல்லீஸ் நகர், மதுரை - 16. போன்: 2301187.

◆ ஐயர், பிரஹசரணம், ஹரித கோத்திரம், 21.04.1978, ஹஸ்தம், எம்.எஸ்ஸி., மத்திய அரசுப் பணி, ரூ. 12,000/- மாத வருமானம் வரனுக்கு படித்த பட்டதாரி மணமகள் தேவை. எஸ். சுவாமிநாதன், பிளாட் எண் : 26,

ஹவுசிங் யூனிட், பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை-622 003. ஃபோன்: 04322-261581

◆ ஐயர், வடமாள், கௌசிகம், ஹஸ்தம், 33/178 செ.மீ., B.A., D.M.M.V. தனியார் நிறுவனம், ரூ. 15,000/- தகுந்த மணமகள் தேவை. உட்பிரிவு சம்மதம். D.ராமன், பிளாட் நெ.4 (புதிய நெ. 20), இரண்டாவது தெரு, லெக்ஷ்மி நகர், நங்கநல்லூர், சென்னை - 61. ஃபோன்: 5591 6061.

◆ Vadamal, Srivatsa, Thiruvathirai, 1970, 6', MCA Software, Central Govt. Ministry of Finance, Programmer Analyst, Chennai. Rs. 3 Lakhs p.a. seeks qualified employed bride. P.R. Ramasamy, 64/79 Saravanaperumal I Lane, Purasaiwakkam, Chennai - 600 084. Ph : 044-5566 0433.

◆ வடகலை, கௌசிகம், சதயம், 40 வயது, கோயில் குருக்கள் + வைதீகம் கூட்டுக் குடும்பம், நல்ல பண்புள்ள ஏழை பிராமண பெண் தேவை. கூடவே தனியாக தொழில் செய்யும் உத்தேசம் உள்ளது. எஸ். கிருஷ்ணன், 3, பக்தவச்சலம் தெரு, விஜயலெக்ஷ்மிபுரம், அம்பத்தூர், சென்னை - 600 053.

◆ Iyer, Vadamal, Srivatsa, Revathi IV, 04.04.1973, B.Com., 170cms, Builder and Promoter, Requires Graduate, Unemployed girl. 7th and 8th house in horoscope should be vacant. Contact : R.B. Rajagopalan/K.Uma Maheswari, Plot No. 35, Door No. 5/1, Neithal Street, Fathima Nagar, Valasarawakkam, Chennai - 600 087. Mobile : 9444119330/9884256058, brgpal@gmail.com

◆ Iyer, Vadama, Vathula, Uthiradam, M.Sc., M.Phil., B.Ed., 29/167 in Government Service earning Rs. 15,000/- owning two houses at Ambur seeks B.Ed., or Secondary grade teacher girl employed in Govt, Service 24. Contact : K.S. Krishnamurthi, 28, III Street, Bethlehem, Ambur - 635 802. 04174-243842 with horoscope.

◆ 32, Male, 5.5ht, C.A. very fair, Hindu Brahmin Iyer, very fair, Magaram rasi, Sadilyam Gothram, Thiruvonam, working in MNC IT, Dubai as Accounts Manager with good pay. Looking for Tamil Iyer fair girl with good educational background. If interested please Contact my parents with horoscope and photo asap-Mr. Arunachalam, Plot No. 26/32, Sellam Nagar, Dr. Moorthy Road, Kumbakonam - 612 001, Phone : 04352430483, My mobile Number 00971507485360 email: axhari@yahoo.com

◆ Iyer, Vadama, Kowsika, Punarpoosam-4, 165/1966, B.Com., ACA, young looking, Gulf employed Suddha Jathaka bachelor seeks suitable bride. Contact No. 0484 2357429, 98460 89148. M. Ramakrishnan, 39/3789, Manikkiri Road, Ernakulam, Kochi - 682016.

◆ ஐயர், வடமாள், பாரத்வாஜ, திருவோணம் -3, 33, 5.6', எம்.எஸ்ஸி., சொந்த கடை சொந்த இடத்தில், சொந்த வீடு, 15,000 கிருஷ்ணமூர்த்தி, ஏ.வி.எஸ். புக் சென்டர், 28 தேர்வீதி, சேலம் - 1. போன் : 2253630.

◆ Iyer, Kasyapam, Brahacharanam, Barani-2, 27/168, BBA, MBA, Senior Manager, Radio Mirchi, 3.5 lacs p.a. seeks qualified, employed/employable girl. 044-2617 6396 Dwarakanathan, C8, Thirumalai Complex, ICF Link Road, Chennai - 600 049.

◆ Brahmin Widower 1966, November with 2 kids Moudgalya, Poosam, Own Business with property preferably unemployed bride without encumbrance Sangara Narayanan, 26, Basappa Road, First Floor, Shanthi Nagar, Bangalore - 560027. Ph : 080-2222 4218.

◆ Wanted bride for Tamil Iyer,

Vadamal, Naidruvakasyapa, Aswini, 1967, 170cm, B.Sc.,/Electronics MBA contact : Flat 21, Anuradha Complex, Bhaupatil Road, Kirkee, Pune - 411 020. Phone : 020-25818702, 09892591857

◆ Iyer, Vadamal, Vadulam, Thiruvoonam, 174/30, B.Com., Fair, clean habits working as Senior Accountant Advertising Company in Nagpur Rs. 8000/- seeks fair, good-looking girl from decent family. Send horoscope, Bio-data P.C. Shankaran, 166, Pande Layout, Khamla, Nagpur - 440 025.

◆ பிரஹசரணம், ஹரிதம், அனுஷம், 33 வயது, 5.11', பி.எஸ்ஸி., எம்.சி.ஏ., Processing Officer, Software Company, பையனுக்கு 25லிருந்து 32 வயதிற்குட் பட்ட வேலைக்குச் செல்லும்/செல்லாத பட்டதாரிப் பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். லக்ஷ்மி ஸ்ரீராமன், 12, 40வது தெரு, D1, மஹேந்திரா ஃப்ளாட்ஸ், நங்கநல்லூர், சென்னை - 600 061. ஃபோன்: 2232 6809.

◆ தமிழ் ஐயர், வடமாள், ஸ்ரீவத்ஸம், கிருத்திகை, 1960, (பி.ஏ.,) 5.8', எம்.ஜி.ஆர். போக்குவரத்து கழகம், காஞ்சீபுரம், ரூ. 9500/- மாதம், சொந்த வீடுள்ள வரனுக்கு குடும்பப்பாங்கான எஸ்.எஸ்.எல்.சி., (அ) +2 படித்த பெண் தேவை. (ஐயங்கார்/மத்வர் சம்மதம்). H.Y. Narayanan, A-4, Paras Apt., Jeevaratnam Nagar, Adyar, Chennai - 600 020.

◆ Tamil Iyer, Vadamal, Vasishta Gothram, Chittirai-4, 41, LEE working Central Govt. at Chennai, widower, with 6 years old daughter seeks educated employed girl who can look after the child. R. Chelliah, Retd. AEE, 118-D, Railway Quarters, Egmore, Chennai - 600 008. Ph : 044-26613521.

◆ Iyer, Kashyapa, Ashtasahasram, Aswini, Mesham, 32/175cms, M.Sc., (Yoga), Yoga Consultant and Theraphist requires graduate, home-loving Iyer girl. P.N. Jayaraman, 3/21, Agraharam, Kambarasampettai, Trichy. Phone : 0431-2701848.

◆ Brahacharanam, Athreya, Sadhayam, 27/175 cm, AMIE, 25,000/- working in Reliance is looking for a graduate, fair, & Good looking girl from a respectable family. Subsect no bar. (செவ்வாய் 7வது இடத்தில்) P. Jayashree Sriram, 4/5 Sriram Nagar, 1st Street, Thiruvanmiyur, Chennai - 41. Ph : 2452 9035, 9841013512.

◆ ஐயர், அஷ்டசகஸ்ரம், அவிட்டம், பாதராயணம், 28, 5.7', பி.ஏ., (எம்.பி.ஏ.) பில்டர்ஸ் பங்குதாரர் சொந்த வீடு நல்ல வசதியான வரனுக்கு அழகான குடும்பப்பாங்கான மணப்பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். வி. கிருஷ்ண மூர்த்தி, நியு. நெ. 4/5 ஸ்ரீராம் நகர் முதல் தெரு, திருவான்மியூர், சென்னை - 600 041, 044-2452 9035, 98410 13512.

◆ Iyer, Vadamal, Srivathsam, Visagam 1st padam, 36, 5.6', Rs. 10,000/- p.m. L&T, M.Com., PGDCA (MBA) Own house seeks girl. Contact : 04146-227786 5A, Thiruvalluvar Nagar, Viratikuppam Road, Villupuram - 605 602.

◆ ஐயர், பிரஹசரணம், கௌசிகம், வயது 32, மூலம், புரோகிதர், மாத வருமானம் 12,000-15000, +2 வேதம் படித்தவர். பார்வைக்கு நன்றாக இருப் பார். ஓரளவு படித்த குடும்பப்பாங்கான மணமகள் தேவை. லௌகீக நிர்பந்தங் கள் ஏதும் இல்லை. உட்பிரிவு சம்மதம். தொடர்புக்கு : ஜி. விஸ்வநாதன், 7, இரண்டாம் தெரு, சுப்ரமணியபுரம், காரைக்குடி - 630 002. தொலைபேசி :954565226254.

◆ ஐயர், பிரஹசரணம், ஸ்ரீவத்ஸம், உத்திரட்டாதி, 03.08.77, பி.ஈ., பொறியாளர், INTEL ரூ. 75,000/- உயரம் 145 செ.மீ., 7ல் செவ்வாய், படித்த, உயரம் குறைவான பெண்

தேவை. P. ராஜேந்திரன், 11/12, மேல அய்யன் தெரு, கும்பகோணம் - 612 001. 0435-2421481.

◆ ஐயர், வடமாள், கௌசிகம், பூராடம், 31, கோயில் வேலை மாத வருமானம் 4000, எஸ்.எஸ்.எல்.சி. படித்த மணமக னுக்கு, குடும்பப்பாங்கான பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். எம்.கே. இராமமூர்த்தி, 64, பெருமாள் கோயில் தெரு, கண்ணமங்கலம் - 632 311. திருவண்ணாமலை மாவட்டம். ஃபோன்: 04173-240393.

◆ Thengalai, Bharadwajam, Mirugasrisham-3, 34/5.6', 16,000 B.Sc., (M.Sc.,) (MCA) Stenographer, Hindu, Chennai, Owns Flat, seeks suitable girl. Kalai no bar. Simple marriage. V. Raghavachari, P.No. 7, Shaw Wallace Colony, Chitlapakkam, Chennai - 64. Ph : 2223 2618.

◆ Vadamal, Vadoolam, Poonarpoosam-1, 29 years, 178cms, Director Only Success Learning Technologies P. Ltd., 5 lacs per annum, Boy seeks graduate bride, Vaidhyanathan, A7, Vatsalyam, 7, Reddy Kuppam Road, Saidapet, Chennai - 15. Ph : 23811300

◆ Iyer, Vadamal, Koundanya, Kettai IInd, 32/ 5.7', BBA, Reputed Company, Chennai 8000/- p.m. Own Flat seeks employed/unemployed girl. Subsect acceptable. S. Venkatesh, Radiant Ramya Appartments, No. 69, 2nd Main Road, South Jeganathan Nagar, Villivakkam, Chennai - 49. Ph : 55485920, 98408-13917.

◆ ஐயர், வடமாள், கௌண்டின்யம், சித்திரை-4, BCS (MBA) 27/5.8'/20,000 p.m. B.P.O. Chennai, e-serve பட்டதாரி, வேலைக்குச் செல்லும் குடும்பப்பாங் கான பெண் தேவை. ஜாதகம் அவசி யம். ஆர். மஹாதேவன், 15/11, பிள்ளையார் கோவில் தெரு, விஜய லக்ஷ்மிபுரம், அம்பத்தூர், சென்னை - 600 053. ஃபோன் : 044-26571298.

◆ ஐயர், வடமாள், கௌதம கோத்திரம், அஸ்வினி, 31, பி.எஸ்ஸி., 5.6', தனியார், ரூ. 23,000/- பட்டதாரி பெண் தேவை. S. Jagadeesan, B4, Shah Apartments, 43, Bharathiyar IInd Street, Palavanthangal, Chennai - 114.

◆ Iyer, Brahacharanam, Koushikam, Avittam, 29, 176cms, Zonal Credit Manager in Bank, seeks beautiful working girl from decent family. Contact : 044-2483 4799. S. Rangaswamy, New No. 31, Old o. 16, Chakrapani St., West Mambalam, Chennai - 33.

◆ Iyer, Brahacharanam, Koundinyam, Chithirai, 26/180/B.E., fair Software Engineer TCS Chennai 25,000/- p.m. seeks graduate employed girl. Contact with horoscope T.M. Ganesan, Plot 29/ Door 15, Appar Street, Kamakodi Nagar Annex, Valasaravakkam, Chennai - 600 087. Ph : 044-2486 1582.

◆ Iyer, Vadama, Sankrithi, Sathayam, 29, M.Sc., I.T. MNC Chennai seeks girl. Contact R. Hariharan, No. 28, Rohini Ramaneeyam Apartments, West Adayavalanjan Street, Srirangam, Trichy - 6. 0431-2436511/98408 44216.

◆ ஐயர், வடமாள், கௌண்டின்யம், சீனிவாசன், 28, 170 செ.மீ., பி.எஸ்ஸி., (Computer Literate) புரோஸஸ் கன்ட்ரோலர் ஸ்டெர்லைட் இந்தியா, தூத்துக்குடி, 18,000 ஜாதகம் அனுப்பவும். ஜி. வெங்கடாசலம், 47 ஆறாவது வடக்குத் தெரு, தியாகராஜ நகர், திருநெல்வேலி - 627 011. போன் : 95462/2533625.

மணமகன் தேவை

◆ கார்காத்த சைவ வேளாளர், வானதேக கோத்திரம், மகம் 3ம் பாதம், 24, 5.1', எம்.சி.ஏ., 22,000/- சிகப்பு, சென்னை HCL-ல் பணிபுரியும் பெண்ணிற்கு நல்ல பணியிலும் இருக்கும் மணமகன் தேவை. பெட்டி எண் : 29495

◆ Father Nadar Christian, Mother Iyer Vadamal, Intercaste parentage, Magam, 23/5.2', M.Sc., M.Phil., Teacher girl, Chennai seeks educated well employed Vegetarian boy. Ph : 044-2618 1331. Box No. 29496

◆ Hindu, Telugu, Aryavaisya, Punarpoosam, Karkatakam, 24 years, 5.1', B.Com., employed, beautiful deaf & dumb girl. Seeks suitable broad-minded/Hindu Boy. Deaf & Dumb boys can also apply. Ph : 044-2247 5756. Box No. 29497

◆ Iyer, Brahacharanam, Sankrithi, Avittam, 34/155, Wipro Software, Engr. Seeks professionally qualified grooms India/Abroad. Box No. 29498

◆ Sourashtra, Savanaga Gothram, Moolam, 27, 5', M.Pharm, Scientist, MNC, Mumbai, 28,000/- fair, good-looking seeks professionally qualified Sourashtra groom, below 32. Contact : 0427-2266252. Box No. 29499

◆ Vellala Pillai, Poosam, 30/5.2', Suddha Jadhagam, B.P.T., Lecturer in Pune College (Maharastra) seeks professionally qualified CA, B.E., well employed Boy. Contact Phone No. 020-2767 2173 044-2259 2099. Box No. 29500

◆ Iyer girl, Vadamal, Uthchasya Uthirattadhi, 79, 157, Bachelor of Electronic Science, graduate having Computer knowledge working in E.Publishing MNC Chennai seeks graduate well employed Brahmin groom upto 30 from Madras. Girl's sisters married in other caste with both parents approval well settled. email:vsamy@yahoo.co.in. Box No. 29501

◆ Iyer, Vadama, Kaundinyam, Thiruvadirai(3), 27/165cms, B.Com., MFM, Honours Diploma in Computer working in Bangalore seeks qualified, well employed, bridegroom with clean habits from good family age between 30 to 32 years. Phone : 0-9886227772. Box No. 29502

◆ Iyer, Brahacharanam, Srivatsam, Kettai-4, 13.04.1982, 163cm, B.E., System Executive, MNC, Chennai 27,000, good-looking girl seeks BE/MCA/MBA/CA groom, Subsect no bar. Contact Father G.V. Subramanian at Madurai. 0452-2608177. Box No. 29503

◆ Tamil Iyer girl, Brahacharanam, Srivatsam, Punarpoosam, Sudha Jadhagam, 23, MCA, 157, seeks upto 30, Brahacharanam, PG/BE/MCA grooms. Box No. 29504

◆ Iyer, Vadamal, Srivatsam, Anusham, 26/151cm, B.E. (CSE) TCS girl requires professionally qualified clean habits pure-veg boy from decent family. Ph : 0452-2484209, 559 2955 abhayamkitti@gmail.com Box No. 29505

◆ Vadama, Koushikam, Karthigai-2, 22.02.1980, 153cms, M.A., PMIR, DCA unemployed, fair, seeks qualified well employed groom from same sect and respectable family. Box No. 29506

◆ Father Mudaliar, Mother Nadar, Intercaste parentage, 25/5.4', Revathi, M.A., (Ph.D), fair, Private, 18,000/- p.m. girl seeks suitable upper middle Class groom. Contact : 9840301115. Box No. 29507

◆ Iyer, Vadamal, Bharadwajam, Thiruvadhirai, 28, 5.2', MBA (Finance) MNC Chennai, very fair girl seeks suitable groom. Ph : 044-22237316. Box No. 29508

◆ வடகலை, கௌசிகம், ஆயில்யம், 32/5.8', எம்.ஏ., பி.எட்., சென்னையில் அரசு சார்ந்த பள்ளி ஆசிரியை. தாய்மை

செப்டெம்பர் மாத இதழுக்கான திருமண மலர் விளம்பரங்கள் எமது அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி : 5.8.2006

அடைய முடியாதவள். ஆனால் தாம்பத்திய வாழ்க்கைக்கு ஏற்ற பெண்ணுக்கு ஒரு குழந்தையுள்ள நல்ல பண்புள்ள 35-40 வயதிற்குள் சென்னையில் இருக்கும் பிராமண மணமகன் தேவை. பெண் குடும்பப்பாங்காய் லட்சணமாய் இருப்பாள். பெட்டி எண் : 29509

◆ Iyer, Brahacharanam, Sikitha Gothram, Uthiram, 24/160, B.Com., MBA, employed Chennai seeks professionally qualified well settled India/Abroad reply with BHP p_krishna76@yahoo.com Box No. 29510

◆ Iyer, Brahacharanam, Athreya, Moolam I padam, 26/5.4', MCA, seeks professionally qualified groom age difference max 5 Box No. 29511

◆ Iyer, Brahacharanam, Aathreya, Hastham, 24/154cm, M.Tech., working as Lecturer in Pvt. Engg. College, Rs. 15,000/- p.m. fair girl seeks suitably qualified software professional grooms. Subsect acceptable. Ph : 98945 89562 Box No. 29512

◆ ஐயர், அஷ்டசகஸ்ரம், பௌருகுத்ஸ கோத்திரம், விசாகம் 1981, சி.ஏ. ஃபைனல் பெண்ணுக்கு 1977ம் அதற்கு பின்பும் பிறந்த, தகுந்த படிப்பும், பணியிலும் உள்ள வரன் தேவை. ஃபோன்: 0422-2434360. பெட்டி எண் : 29513

◆ Reputed affluent Hindu family seeks professional groom upto 35 years for their very fair, good-looking daughter B.E. M.S. 31/162 working in U.S. Unconsummated Marriage. Legally divorced. Apply with Bio-data photo horoscope. Box No. 29514

◆ Tamil Iyer, Vadamal, Naithrubakashyabam, Krithigai-4, (no dosham) August 1983, B.E., working in MNC Chennai 3 lakhs p.a. seeks B.E./ B.Tech.,/C.A. well employed/ settled groom at Chennai/Bangalore only. Box No. 29515

◆ Iyer, Vadama, Sreevatsa Gothram, Mrigasirisham, BE (Chennai) MS (USA) 157 cms, 24 years seeks MS/ MBA/Ph.D., groom working in States with HIB/GC-Contact : 044-24468346. Box No. 29516

◆ Tamil Iyer, Brahacharanam, Koundinya, Moolam-4, 25 years, 5.4', wheatish, B.Com., CA Final employed girl seeks professionally qualified CA/ BE well employed boys below 30 years with Rahu/Kethu in Lagnam. Subsects acceptable. Phone : 044-22231253 Box No. 29517

◆ Gurukkal, Kasyaba Gothram, Avittam, 28, 155cm, fair, good-looking girl, B.E. M.S., Senior Software Engineer, MNC, Chennai, seeks good-looking, professionally qualified well employed boy. Contact : 98400 87317 Box No. 29518

◆ Iyer, Vadamal, Garga, Mirugasreesham 3rd padam, 24.6.1979, 157cm, B.Sc., MCA, working MNC, Chennai seeks professionally qualified Vadamal/Brahacharanam, groom upto 32 years. Working in Chennai. Contact : 044-2815 6892, 98651-20001. Box No. 29519

◆ Smartha, Desastha, Marathi, Brahmin, Bharatwajam, Visakam, 32/ 165 fair, B.Sc., seeks well settled groom Box No. 29520

◆ ஐயர், வடமாள், பாரத்வாஜ், ஸ்வாதி, 1970, பிப்ரவரி, 5.2', இங்கிலாந்தில் பிஸினஸ் படிப்பு படித்து சொந்தத் தொழில்புரியும் பெண்ணுக்கு நன்கு படித்த மணமகன் தேவை. பெட்டி எண் : 29521



பெண்டுகள் வளைத்தல்

வழக்கமாகத் திருமணங்களுக்குத் 'திருமண அழைப்பிதழ்' அச்சடித்து அதை நேரில் கொண்டு போய்க் கொடுத்தோ, தபால் மூலம் அனுப்பியோ திருமணத்திற்கு அழைப்பார்கள்.

ஆனால் எங்கள் ஊரில் 'பெண்டுகள் வளைத்தல்' என்ற நிகழ்ச்சி மூலம் குறைந்தது பதினொரு பெண்களாகச் சேர்ந்து, பட்டுப் புடைவை சரசரக்க, தெருவையே அடைத்துக் கொண்டு ஒவ்வொரு வீடாகப் போய்த் திருமணத்திற்கு அழைப்பர்.

இவ்வாறு அழைத்து முடிக்க குறைந்தது ஒரு வாரமாவது ஆகும். இந்த ஒரு வாரமும், பெண்கள் கேலியும், சந்தோஷமுமாக இருப்பதே தனி அழகுதான்!

- நஸிஹா ஹஃபீஸ், கீழக்கரை.

காய்கறிக

கல்யாணமாம் கல்யாணம் கல்யாணமாம் கல்யாணம்!
கல்யாணமாம் கல்யாணம் கல்யாணமாம் கல்யாணம்!

கத்தரிக்காய்க்கும் முருங்கைக்காய்க்கும் கல்யாணம்...
கொத்தவரங்காய் கூட்டமெல்லாம் ஊர்கோலம்!

கல்யாணம் நடக்குமிடம் கோயம்பேடுதானுங்கோ...
கறிவேப்பிலை, கொத்துமல்லி தோரணத்தைப் பாருங்கோ!

கல்யாணப் பெண் கத்தரிக்காய்க்கு கோரிமேடு ஊருங்கோ...
மாப்பிள்ளை முருங்கைக்காய்க்கு சூளைமேடுதானுங்கோ!

கல்யாணப் பெண் சீதனமாம் காலிஃப்ளவர் தோட்டங்கோ...
குடைமிளகாய் நடனங்கோ, புடலங்காய் பாட்டுங்கோ!

பாகற்காய் வகையெல்லாம் பக்கவாத்தியம் தானுங்கோ...
திருமணத்தை நடத்தி வைக்கும் தலைவர் பூசணிக்காய்ங்கோ!

மூன்று வகை இனிப்புங்கோ, முக்கனிகள் விருந்துங்கோ...
முள்ளங்கியும், உருளையும் பந்தி பொறுப்புதானுங்கோ!

இஞ்சியும் பச்சை மிளகாய் எடுபிடியாம் பாருங்கோ...
கறிகாய்கள் கூட்டத்தையும் கனிவகையும் பாருங்கோ!

கல்யாணமாம் கல்யாணம், கல்யாணமாம் கல்யாணம்...
கல்யாணமாம் கல்யாணம், கல்யாணமாம் கல்யாணம்!

- வாசுகி, சென்னை - 64.



'வாளமீனுக்கும், விலாங்குமீனுக்கும் கல்யாணம்' மெட்டில் கானா உலகநாதன் ஸ்டைலில் பாடவும்.

கல்யாணம்!





கல்யாண ராசி!

'மங்கையர் மலர் - திருமண மலரின்' பகுதியைப் பார்த்ததும் என் நினைவுகள் பின்னோக்கிப் பறந்தன.

1999-ஆம் ஆண்டு ஜூலை மாத இதழ் கைக்குக் கிடைத்ததும் வாசலிலேயே பிரித்துப் படித்துக் கொண்டிருந்தேன். காக்கி உடையில் இருந்த இருவர், எங்கள் வீட்டுக்கு டெலிஃபோன் கனெக்ஷன் கொடுப்பதற்காக வந்து இருப்பதாகக் கூறினார்கள். எனக்கு ஒரே மகிழ்ச்சி. ஒரு மணி நேரத்தில் கனெக்ஷன் கொடுத்து முடித்து விட்டார்கள்.

"நாளை, உங்களுக்கு ஆபீஸிலிருந்து நம்பர் தருவார்கள். நீங்கள் ஏதாவது இரண்டு நம்பருக்கு ஃபோன் செய்யுங்கள்" என்றார். எனக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை. யாருக்கு போன் செய்வது என்று திகைத்துப் போனேன். என் அம்மாவுக்கு போன் செய்து, ஃபோன் வந்து விட்டது என்று கூறி சந்தோஷப்பட்டேன்.

அடுத்த நம்பர் யாருக்கு செய்வது என்று யோசித்தேன். மேஜையில் அப்போதுதான் படித்து வைத்திருந்த மங்கையர் மலர் திருமண மலரில் ஒரு நல்ல வரன் பார்த்து வைத்திருந்தேன். அந்த எண்ணுக்கு ஃபோன் செய்தேன். மறு முனையில் மாப்பிள்ளையாக வந்த வரின் அக்கா பேசினார்.

அவர்களிடம் என் மகளைப் பற்றிய விவரங்கள் கூறினேன்.அவர்களும் ஜாதகம் அனுப்பி வைக்குமாறு கூறினார். அடுத்தடுத்து பெண் பார்க்கும் படலம், நிச்சயதார்த்தம், கல்யாணம் என சுப நிகழ்ச்சிகள் நடந்தேறின.

இப்போது ஒரு குட்டிப் பேரன். என் மகள், மாமியார், மாமனார், புது வீடு, புது கார் என்று சௌகரியமாக இருக்கிறாள். இதன் மூலம் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். கல்யாண ராசி தந்த கைராசி பத்திரிகை மங்கையர் மலர்!

- கே. பானுமதி,
நங்கநல்லூர்.


என்றும் உங்களுடன்
மங்கையர் மலர்
ஆகஸ்ட் 2006 இதழுடன் இலவச இணைப்பு
வேகம்... விவேகம்!
டூ வீலர் பாதுகாப்பு 64
வழங்குவோர்
Scooty Pep+

அதிகமில்லை. பத்து வருடங்களுக்கு முன்னால் கூட சாலையில் பெண்கள் டூ வீலர் ஓட்டினால் வியப்புப் பார்வைகள் காத்திருக்கும். இன்று? சாலைகளில் பல பெண் சாரதிகள்.

இப்படி வண்டியோட்டும் பெண்களுக்குப் பாதுகாப்பு வேண்டாமா? அவர்கள் தாங்கள் ஓட்டும் வாகனத்தைப் பற்றிய சில அடிப்படை விஷயங்களை அறிந்திருக்க வேண்டாமா? வேண்டும். வேண்டும். அதற்காகத்தான் இந்தச் சிறு கையேடு.

இந்த 'டூ-வீலர் திருக்குறளை' மனப்பாடம் செய்து கொண்டாலும் தப்பில்லை.

(ஆசிரியர்)

அட்டையில் : திவ்யா
படம் : ஸ்ரீஹரி




ஸ்டீயரிங் லாக்கைத்
திறக்காமலேயே சில பேர் ஸ்டாண்டை
எடுத்து விடுவார்கள். இது ரொம்பத்
தப்பு! ஸ்டாண்டை எடுக்கும் போது,
'ஹாண்டில் பார்'கள் இரு பக்கமும்
சுலபமாக இயங்கும்படி இருந்தால்தான்
நல்லது. புரிஞ்சுதா?



Scooty pep+

தினமும் காலையில் வண்டியை எடுக்கும் போது, பார்க்கிங் ஏரியாவிலிருந்தே ஸ்டார்ட் செய்து கொண்டு விரைகிற பெண்ணா நீங்க? ப்ளீஸ் இனிமே அது மாதிரி செய்யாதீங்க...! நிறுத்தும் இடத்திலிருந்து மெள்ள தள்ளிக் கொண்டு, வீதிக்கு வந்ததும் ஸ்டார்ட் செய்யவும். இப்படிச் செய்வதால் வண்டியிலிருந்து வெளிப்படும் விஷ வாயுக்கள் வீட்டுக்குள் புகுந்து மாசு செய்யாது. வண்டியின் மூவ்மெண்ட்டுக்கும் இது நல்லது!



இப்ப நிறைய டூ-வீலர்களில் ஆட்டோமேடிக் கியர் சிஸ்டம் இருக்கு. அதனால, என்ஜினை ஆன் செய்த உடனேயே பிரேக்கைப் பிடித்துக் கொண்டு, ஆக்ஸிலரேஷன் தரவும். இல்லையென்றால், வண்டி அவுட் ஆஃப் கன்ட்ரோல் ஆகி வேகமாக முன்னேறி விடும் அபாயமிருக்கிறது. எனவே, ஆக்ஸிலரேட் செய்யும்போதே, மெள்ள பிரேக்கை ரிலீஸ் செய்து, வேகத்தை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துடுங்க!



Scooty pep+

வண்டியை ஓட்டத் தொடங்குவதற்கு முன் 'சைடு ஸ்டாண்ட்' 'சென்டர் ஸ்டாண்ட்' இரண்டும் முழுவதுமாக மேலே தூக்கப்பட்டு விட்டனவா என உறுதி செய்துக்குங்க. போடப்பட்டிருந்த சைடு



ஸ்டாண்ட் அதன் ஒரிஜினல் இடத்துக்குப் போகாமல் இருக்கும்போது, வண்டியை ஓட்டுவது ரொம்பவே ரிஸ்க்கான விஷயம்! சில பிரத்யேக மொபெட்டுகளில் சைடு ஸ்டாண்ட் இயல்பு நிலையில் இல்லையென்றால், 'பீப்' சத்தம் கிளம்பி, எச்சரிக்கை செய்யும்.

இப்ப உங்களுக்கு ஒரு சந்தேகம் வந்து குடையலாம். பொதுவாக எதைப் பயன்படுத்துவது நல்லது? நடு ஸ்டாண்டா? சைடு ஸ்டாண்டா? நடு ஸ்டாண்ட்தான் நல்லது. அதுதான் அதிக உறுதியானது. தவிர, வாகனத்தை எங்காவது பார்க் செய்துவிட்டுப் போகும்போது உங்கள் வண்டி மீது யாராவது சாய்ந்து கொண்டால் சைடு ஸ்டாண்ட் நகர்ந்துவிட வாய்ப்பு உண்டு.



போக்குவரத்து சிக்னல்களில் மஞ்சள் வண்ண சிக்னலை, பலரும் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். அது வண்டி வேகம் எடுப்பதற்கான சிக்னல் அல்ல. வேகத்தைக் குறைத்து வண்டியை நிறுத்தச் சொல்லி நம்மை எச்சரிக்கும் சிக்னல்.



வண்டி எடுத்ததுமே,
கரிய புகை கிளம்பி, கடுப்படிக்கும்! அந்த நச்சுப் புகை அனுமதிக்கப்பட்ட அளவுக்குள் இருக்கிறதா என்பதற்கான சான்றிதழை (Emission Control Certificate) இதற்கான அரசு அங்கீகாரம் பெற்ற சோதனை மையத்தில் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வாங்கிக் கொள்வது நல்லது. புது வண்டியானால் முதல் மூன்று மாதங்களுக்கு இந்தச் சான்றிதழ் அவசியமில்லை.





டூ வீலரை வாங்குவதற்கு முன் அதற்கான பதிவுச் சான்றிதழ், இன்ஷ்யூரன்ஸ், தவணை முறையில் வாங்கினால் அதற்கான ஆவணங்களையெல்லாம் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

லைசன்ஸ், வண்டிப் பதிவுச் சான்றிதழ் இன்ஷ்யூரன்ஸ் பாலிசி ஆகியவற்றின் ஒரிஜினல்களை வீட்டில் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இவற்றின் நகல்களைக் கட்டாயம் வண்டி ஓட்டும் போது வைத்திருக்க வேண்டும். இவற்றை ஒரு பிளாஸ்டிக் பையில் வைத்துக் கொண்டால் மழைக் காலத்திலும் பாதுகாப்பு.





முதலுதவிப் பெட்டி ஒன்றை டூ வீலர் தயாரிப்பு நிறுவனங்கள் தருவது உண்டு. இதை மறக்காமல் எப்போதும் வண்டியில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். அப்படி முதலுதவிப் பெட்டியைத் தரவில்லை என்றால் நீங்களே சின்னதாக ஒரு பெட்டியைத் தயார் செய்து வைத்துக் கொள்ளுங்கள்.

பெண்களுக்கு மிகவும் வசதியாக இருக்கக்கூடிய சில சாதனங்களை இங்கும் இதற்கு அடுத்துள்ள சில பக்கங்களிலும் குறிப்பிட்டு இருக்கிறோம். முன்பெல்லாம் ஸ்டாண்ட் போடுவது என்பது நம் பலத்தைச் சோதிக்கும் முயற்சியாக இருக்கும். இப்போது அவற்றில் பொருத்தப்படும் சில லீவர்களின் காரணமாக கொஞ்சம் எளிதாக ஸ்டாண்டைப் போட்டுவிட முடிகிறது.





வண்டியை வாங்கும் போது 'Owners manual' என்ற ஒரு சிறு புத்தகத்தைத் தருவார்கள். அதை முதலில் கவனமாகப் படியுங்கள். அதில் வண்டியுடன் என்னென்ன பொருள்கள் அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். அந்தப் பட்டியலைப் படித்து அவை அளிக்கப்பட்டனவா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

குளிர்காலங்களிலும், சில சமயம் காலை வேளைகளிலும் வண்டி எளிதில் கிளம்பாது. அப்போது 'சோக்' போட்டுக் கிளப்ப வேண்டியிருக்கும். இதற்கான சுவிட்சை இழுத்து, வண்டியைக் கிளப்பிய பிறகு மீண்டும் அந்த சுவிட்சை உள்ளே தள்ள வேண்டியிருக்கும். சில சமயம் இப்படி உள்ளே தள்ள மறந்து விடுவோம். இதற்கு மாற்றாக இப்போது ஆடொமேடிக் சோக் வந்து விட்டது. மின்னணு முறையில் கட்டுப்படுத்தப்படும் மைக்ரோசிப் இதில் இருப்பதால் வண்டியை 'சோக்' போட்டு ஸ்டார்ட் பண்ணும் வேலை மிச்சம்!



Scooty pep+



பெட்ரோல் அளவு குறைந்து வரும்போது ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் 'ரிசர்வ்' நிலையை அடையும். அப்போதே பெட்ரோல் போட்டுக் கொண்டு விடுவது புத்திசாலித்தனம். இப்போது சில டூவீலர்களில் Auto fuel tap என்ற ஒரு வசதி அறிமுகமாகி விட்டது. வண்டியை ஓட்டும் போது எதிரே உள்ள fuel guage என்னும் கருவியைப் பார்ப்பதன் மூலம் வண்டியில் இன்னும் எவ்வளவு பெட்ரோல் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கலாம்.

இரவு வேளைகளில் கொஞ்சம்
இருட்டாக இருக்கும்போது ஸ்டீயரிங்
சாவியை நுழைக்க வேண்டிய இடம்
சுலபத்தில் தட்டுப்படாமல் போய்
டென்ஷன் செய்கிறதா? கவலைப்படேல்.
அந்த இடத்தைச் சுற்றி இருட்டிலும்
ஒளிரும்படியான வட்டம் (glow ring)
சிலவகை வாகனங்களில்
பொருத்தப்பட்டுள்ளது.



இரண்டு பிரேக்குகளையும்
பயன்படுத்துவதுதான்
வண்டியின் உறுதித் தன்மைக்கு
நல்லது.



Scooty pep+



அதிகபட்சம் வாகனத்தில்
எவ்வளவு எடை ஏற்றலாம்?
வண்டியை வாங்கும் போது
கொடுக்கப்படும் 'மானுவலில்'
இதைக் குறிப்பிட்டு இருப்பார்கள்.
அதைப் பின்பற்றுவதுதான்
நல்லது.

மிக்ஸி, கேஸ் ஸ்டவ் மாதிரி கனமானப் பொருள்களைப் பின்னால் வைத்துக் கட்டிக் கொண்டு போக நேரும்போது... மிதமான வேகத்தில் வண்டியை ஓட்டுங்கள். அப்போதுதான் வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமை ஏற்படும்போது நிலை தடுமாறாமல் இருக்கலாம்.





பின்புறம் யாரையாவது ஏற்றிச் செல்கிறீர்களா? அவரை வைத்துக் கொண்டு ஓட்டும் லாகவம் உங்களுக்குப் பிடிபடும் வரை ரொம்ப மெதுவாகவே ஓட்டுங்கள். அதுதான் இருவருக்குமே நல்லது. பிறகும் மெதுவாக ஓட்டலாமே ஒழிய வேகம் மட்டும் வேண்டாம்! வேண்டாம்!

என்னது? இரண்டு குழந்தைகளையும் முன்புறம் நிற்க வைச்சுக்கிட்டே ரோடில் பி.சி. சர்க்கார் மாதிரி மாஜிக் வேலை எல்லாம் செய்யறீங்களா? ரொம்ப டேஞ்சராச்சே! இப்படி வண்டி ஓட்டுவது சரியல்ல. அப்படியே வேறு வழியில்லை, ஒரு குழந்தையையாவது முன்புறம் நிற்க வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், வண்டியின் முன்புறம் ஸ்பான்ஞ் பொருத்தலாம். அப்போதுதான் அவசர பிரேக் அடிக்கும்போது குழந்தையின் முகவாய் வண்டியின் முன்புறத்தில் விசையாக இடித்துக் கொள்ளாமல் இருக்கும்.





வண்டியின் (பிரேக் லைட் உட்பட)
எல்லா விளக்குகளும் நல்ல
நிலையில் இருக்கின்றனவா
என்பதை அவ்வப்போது உறுதி
செய்து கொள்ளுங்கள்.
திடீரென்று இரவில்
வண்டியோட்ட நேரலாமே!

'டமால்... படீர்!' என்ன கண் சிமிட்டும்
நேரத்தில் விபத்து நேர்ந்துடுச்சா..?
உடனே பதற்றப்பட்டு இயங்காதீங்க.
அவசரத்தின் சூழலுக்குத் தகுந்தபடி,
யாரைக் கூப்பிடணும்... போலீஸையா..
ஆம்புலன்ஸையா... என்று தீர்மானித்துக்
கொண்டு செயல்படுவது நல்லது.
விபத்தின் போது உங்களை முழுவதுமாகப்
பாதுகாத்துக் கொண்டு மற்றவர்களுக்கு
உதவி செய்யுங்க.





Scooty pep+



பெட்ரோலை ஃபுல் டாங்குக்கு நிரப்பிக் கொள்வது நல்லது. எரிபொருள் வீணாகி ஆவியாக மாறுவது தவிர்க்கப்படும் அல்லது குறைக்கப்படும்.

‘பவர் மோட், எகானமி மோட் (mode)’ என்று இரண்டு உண்டு. இவற்றில் ‘எகானமி’யில் ஓட்டுவதுதான் நல்லது. இயல்பை விட அதிகமான வேகத்தில் ஓட்டும்போது ‘பவருக்கு’ வாகனம் தானாக மாறிவிடும். இப்படி மாறுவதால் வண்டிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. என்றாலும் இதனால் எரிபொருள் தேவைக்கு அதிகமாகவே செலவாகும்.






குழந்தைகளை அழைத்துச்
செல்லும்போது
அவர்களுக்குரிய
ஹெல்மெட்டை அணிவித்து
அழைத்துச் செல்லுங்கள்.
தலைக்கவசம் உயிரைக்
காக்கும்.

**பிரேக் போடும் போது
க்ளட்ச்சை ஒரு போதும்
அழுத்தாதீர்கள்.**

தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்.**
கார்ட்டூன்ஸ் : **பிள்ளை**





திருப்பங்கள் வரும்போது
வண்டியோடு உடலையும் அதற்கு
ஏற்ற மாதிரி சற்றே வளைத்துக்
கொண்டால் பைக் வேறு நீங்கள்
வேறு என்று உணராமல்
ஸ்மூத்தாகத் திரும்புவீர்கள்.

வசதியாக உட்கார்ந்து கொண்டு
வாகனத்தை ஓட்டுங்கள்.
எஞ்சினுக்கு அதிக நெருக்கத்தில்
உட்கார்ந்து செல்லும் போது மேலும்
தைரியமாக உணர்வீர்கள்.



சைக்கிளில் செல்லும் போது முன் பிரேக்கை மட்டும் அழுத்திப் பிடித்தால் டக் என்று ஒரு குலுக்கலோடு வண்டி நிற்கும்தான். பயிற்சி இல்லாத ஓட்டுநர் விழுந்து விடவும் வாய்ப்பு உண்டு. ஆனால் மொபெட் போன்ற டூ வீலர்களில் முன் பிரேக்கை எவ்வளவு அழுத்தமாகப் பிடித்தாலும் அதனால் வண்டியோ நீங்களோ விழுந்து விட மாட்டீர்கள். இரண்டு பிரேக்குகளையும் ஒருசேர பிடிப்பதும் நல்லதுதான். 'அதிகமுறை முன் பிரேக்கைப் பிடிப்பது நல்லது' என்கிறார்கள் நிபுணர்கள்.



ஹாண்டில்பாரை லகுவாக ஆங்கில வி (V) வடிவில் பிடித்துக் கொள்ளுங்கள். இறுக்கமாகவோ நேராகவோ பிடித்துக் கொள்ள வேண்டாம்.





‘தர்மம் தலைகாக்கும்’ - இது
பழைய படம்!
‘ஹெல்மெட் உயிர் காக்கும்’
இது புதிய பாடம்! கண்டிப்பாக,
வண்டிச் சாவியை எடுக்கும்போதே,
ஹெல்மெட்டையும்
மறக்காமல் எடுத்து மாட்டிக்
கொள்ளுங்க!

திருப்பங்களில் பிரேக்
போடுவதைத் தவிர்க்கப் பாருங்கள்
அப்படிப் போட்டாக வேண்டும்
என்றால் பின் பக்க பிரேக்கைப்
பயன்படுத்துங்கள். மற்றபடி
திருப்பங்களில் மெதுவாக வண்டியை
ஓட்டுவதுதான் நல்லது.



Scooty pep+



சிலர் திரும்பும்போது திரும்ப வேண்டிய திசையைக் கைகாட்டுவார்கள். வண்டியில் உள்ள 'இன்டிகேட்டரை'ப் பயன்படுத்துவதே நல்லது. முக்கியமாக இரவில் வண்டி ஓட்டும் போது இருட்டில் பின்னால் வரும் வண்டியோட்டி உங்கள் கை சிக்னலைக் கவனிக்காமல் போகலாம்.

நீங்கள் வலப்புறம் திரும்பலாம் என நினைக்க, உங்களுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டு பயணம் செய்பவர் இடப்பக்கம் திரும்புவதாகக் கைகாட்டக் கூடாது. பின்னால் இருப்பவர் எந்தச் சைகையும் காட்டாமல் இருப்பதே நல்லது. ஓட்டுநர்கள்தான் இதைச் செய்ய வேண்டும். ரொம்ப அவசியம் ஏற்பட்டு, பின்னால் இருப்பவர் சைகையைக் காண்பித்தால் அதை ஓட்டுபவரிடம் முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும்.



Scooty Pep+



வண்டி வாங்கியதும் அதன்
முதல் 500 கி.மீ.
ஓட்டத்தில், அதிக வேகம்
வேண்டவே வேண்டாம்.

கார் போன்ற நான்கு சக்கர வாகனங்களில் லக்கேஜ் வைக்க இடம் உண்டு. ஆனால் மொபெட் அதிக எடை சுமக்க ஏற்றது அல்ல. பேலன்ஸ் தவறி விட வாய்ப்பு உண்டு. லெஸ் லக்கேஜ்... மோர் கம்ஃபோர்ட், கிரேட்டர் சேஃப்டி.





வாகனத்தை வாங்கிய சில மாதங்களுக்கு இலவசமாகவே சர்வீஸ் செய்து தருவது வழக்கம். அப்படிக் குறிப்பிடும் காலகட்டங்களில் மறக்காமல் சர்வீஸிங்குக்கு விட வேண்டும்.

வாகனத்தின் பின்புறம் எடை ஏற்ற
வேண்டும் என்றால் முடிந்தவரை
அதைப் பின்சக்கரத்துக்கு முன்பாக
வைக்கப் பாருங்கள்.





வண்டியை ஓட்டிக் கொண்டிருக்கும்போதே (பஞ்சர் போன்ற) பிரச்னை ஏதாவது ஏற்பட்டால், வலக்கையை நன்கு உயரே தூக்கிக் காட்டியபடி வண்டியின் வேகத்தைக் குறையுங்கள்.

பின்புற எடை இருபுறங்களிலும் சமமாக இருந்தால்தான் வாகனத்தை பாலன்ஸ் செய்வது எளிதாக இருக்கும். பின்னால் உட்காருபவர் கூட இருபுறங்களிலும் கால்களைத் தொங்கவிட்டுக் கொண்டு உட்காருவதுதான் நல்லது.





வண்டியை இன்ஷ்யூர் செய்வது கட்டாயம். உங்கள் வாகனம் சாலையில் செல்லும் போது பிறருக்கு ஏற்படுத்தும் நஷ்டத்தையும் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனம் ஈடுசெய்யும். இந்த வகையில் இன்ஷ்யூரன்ஸ் செய்வது சிறந்தது.

வண்டியை காம்ப்ரஹென்ஸிவ்
இன்ஷ்யூரன்ஸ் செய்து
கொண்டால் விபத்து போன்றவை
நேரிடும்போது மற்றவர்களுக்கு
மட்டுமல்ல; உங்களுக்கும் உங்கள்
வாகனத்துக்கும் ஏற்படும்
பாதிப்புக்கும் நஷ்டஈடு கிடைக்கும்.






உதைத்து வண்டியைக் கிளப்புவது பெண்களுக்குக் கொஞ்சம் கஷ்டம்தான். எனவே, ‘ஸெல்ஃப் ஸ்டார்ட்’ வசதி கொண்ட வண்டியைத் தேர்ந்தெடுப்பது புத்திசாலித்தனம். அதாவது ஒரு பட்டனை அழுத்தினால் எஞ்சின் உயிர் பெற்றுவிடும்.

எதிர்பாராதவிதமாக பாதி சாலையில் வண்டி நின்று விட்டால் முதலில் பாதுகாப்பாக அதைச் சாலையின் ஓரமாகத் தள்ளிச் சென்று ஸ்டாண்ட் போட்டு நிறுத்துங்கள். பிறகு அருகிலுள்ள டீலரைத் தொடர்பு கொள்ளுங்கள்.



Scooty Pep+

நெருப்பு என்றால் வாய் வெந்து விடாது. ஏதாவது விபத்தில் நீங்கள் சிக்கிக் கொண்டால் அணுக வேண்டியவர்களின் பெயர் மற்றும் தொலைபேசி எண் போன்ற விவரங்களை எப்போதும் கைவசம் வைத்திருங்கள்.



வண்டியைப் பயன்படுத்தும் தொடக்க மாதங்களில் முடிந்தவரை நல்ல சாலைகளைத் தேர்ந்தெடுப்பது நல்லது. வண்டியின் புதிய பாகங்கள் சரியாக இணைத்துக் கொண்டு செயல்பட தங்களை அட்ஜஸ்ட் செய்து கொள்ளும் காலம் இது.



Scooty pep+

ஒவ்வொரு வண்டிக்கும் டயரில் காற்றழுத்தம் இவ்வளவு இருக்க வேண்டும் என்று முறை உண்டு (வண்டி வாங்கும்போது அளிக்கப்படும் 'மானுவலில்' இதைக் குறிப்பிட்டிருப்பார்கள்). அவ்வப்போது பெட்ரோல் பங்கில் காற்றை நிரப்பி (அல்லது நீக்கி) இதே அளவு அழுத்தம் இருப்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். இதைவிட அதிகமான காற்றழுத்தம் இருந்தால் சாலையில் டயருக்குப் போதிய பிடிமானம் இருக்காது. குறைவான காற்றழுத்தம் என்றால் பெட்ரோல் இழப்பு!



பெண்கள் பெரும்பாலும் தோளில் மாட்டிக் கொள்ளக்கூடிய பை போன்றவற்றை எடுத்துக் கொள்வார்கள். சில சமயம் காய்கறி, மளிகைச் சாமான் போன்றவற்றை எடுத்துச் செல்ல வேண்டி இருக்கலாம். இவைபோன்ற எடைகளை வண்டியின் இருபுறங்களிலும் சமமாகத் தொங்கவிடுங்கள்.






எச்சரிக்கை! எச்சரிக்கை! வண்டி
ஒட்டும்போது செல்ஃபோனில்
பேசவே வேண்டாம்.
ஒட்டுவதில் உள்ள
கவனம் குறையும்;
விபத்து நேரலாம்.

இரவில் வண்டி ஓட்டும் போது 'ஹை பீம்' பயன்படுத்த வேண்டாம். எதிரில் வரும் வண்டியோட்டிக்குக் கண்கள் கூசி விபத்துக்கு வழிவகுக்கலாம்.





பெட்ரோல் பங்கில்
நிற்கும்போது
செல்ஃபோனைப்
பயன்படுத்தக் கூடாது
என்பது உங்களுக்குத்
தெரியுமா? அதிலிருந்து
உருவாகக்கூடிய ஸ்டாடிக்
மின்சாரம், ஆபத்தை
உருவாக்கலாம்!

வண்டியை ஓட்டத் தொடங்கும்
போதே அதிக வேகம்
தேவைப்படாது. முதலில் கொஞ்சம்
கொஞ்சமாக வேகத்தை
அதிகரிப்பதுதான் நல்லது.
விபத்தையும் தவிர்க்கும்.
பெட்ரோலையும் மிச்சப்படுத்தும்.



முன்னால் செல்லும் வண்டிக்கும் உங்களுக்கும் இடையே போதிய இடைவெளி இருக்க வேண்டும். வண்டியின் வேகம் அதிகரிக்கும்போது இந்த இடைவெளியும் அதிகமாக் இருக்க வேண்டும். அப்போதுதான் முன்னே - செல்லும் வண்டி திடீர் பிரேக் பிடித்தால் மோதிக் கொள்ளாமல் இருக்கும்!



இரவில் வண்டியை
எடுக்க வேண்டி இருந்தால்
பளிச்சென்ற வண்ணம் கொண்ட
உடைகளை அணியுங்கள். கறுப்பு,
அடர்நீலம் போன்ற உடைகளைக்
கண்டிப்பாகத் தவிர்க்கவும்.
இது விபத்துகளைத்
தவிர்க்க உதவும்.



Scooty pep+



போக்குவரத்துக்கான எல்லா அடையாள குறியீடுகளையும் (உதாரணம் - ஒரு வழிப் பாதை, அருகில் பள்ளிக்கூடம், ஒலி எழுப்பக் கூடாது) தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள். தெரியவில்லை என்றால் ஓட்டும் பயிற்சி நிலையத்தின் மூலம் தெரிந்து கொள்ளுங்கள்.

நகரச் சாலைகளில் எந்த 'லேனில்'
செல்கிறீர்களோ அதிலேயே
செல்லுங்கள். போக்குவரத்துக் குழப்பம்
இல்லாமல் இருக்கும்.
வண்டியோட்டிக்கும் ரிஸ்க் குறையும்.
அடிக்கடி லேன் மாற்றி ஓட்டுவது
ஆபத்து.





வண்டியை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தும்போது சமதளத்தில் நிறுத்துங்கள். அப்போதுதான் அது கீழே விழாமல் இருக்கும்.

சில வகை வண்டிகளில் பெட்ரோலையும் எண்ணெயையும் கலந்து ஊற்றக் கூடாது. அப்படி ஊற்றினால் இன்ஜின் பழுதடையும். அதே போல் கலந்துதான் ஊற்ற வேண்டும் என்று இருக்கும். அப்போது வண்டியில் பெட்ரோலை மட்டுமே நிரப்பினாலும் சர்வீஸ் ஸ்டேஷனுக்கு அடிக்கடி செல்ல வேண்டி இருக்கும்.





வாகனத்தை 'ஆன்'
நிலையிலேயே வைத்திருந்தால்
அது (வண்டி ஓடாத போதும்)
பாட்டரியில் உள்ள சக்தியைப்
பயன்படுத்திக் கொண்டே
இருக்கும். எனவே வண்டியைப்
பயன்படுத்தாத போது
அதிலிருந்து சாவியை வெளியே
எடுத்து விடுங்கள்.

சன் ஸ்க்ரீன் லோஷன் தடவிக் கொண்டு, தொப்பி அணிந்து கொண்டால் கைகளும் முகமும் கறுத்துப் போகாமலிருக்கும்.





தொளதொளப்பான ஆடைகளை அணிய வேண்டாம். தலைமுடியைப் பறக்கவிடக் கூடாது. வண்டியில் உட்காருவதற்கு முன் துப்பட்டா, முந்தானை ஆகியவற்றை இழுத்துச் செருகிக் கொண்டு, கம்பீரமாக, பத்திரமாக வண்டியை ஓட்டிச் செல்லுங்கள்.



செல்ஃப் ஸ்டார்ட் வசதி
இருந்தால் கூட தினமும்
வண்டியை முதன் முதலாகக்
கிளப்பும்போது உதைத்து
கிளப்புவதே வண்டியின்
பாட்டரிக்கு நல்லது.

பேருந்தில் இடிமன்னர்களைத் தவிர்க்கலாம். அலுவலகத்துக்கோ, கல்லூரிக்கோ, கொஞ்சம் தாமதமாகக் கிளம்பி கொஞ்சம் சீக்கிரமாக வரலாம், வரும் வழியில் காய்கறி வாங்குவது சுலபம், குட்டி மகனையோ சுட்டி மகளையோ ஷாப்பிங்குக்கு அழைத்துச் செல்ல வேண்டுமானால் வசதி.

இப்படி டூ-வீலர் வாங்க... எத்தனையோ காரணங்கள் இருக்க... உடனே டூ-வீலர் வாங்கி, பத்திரமா, ஓட்டிக்கிட்டுப் போங்க!

ஆல் தி பெஸ்ட்!

(இவை தவிர, டூ-வீலர் பாதுகாப்பு பற்றி ஏதேனும் கேள்விகளிருந்தால்... அஞ்சல் அட்டையில் மட்டுமே எழுதி அனுப்புங்க. அதற்கான பதிலை டி.வி.எஸ். நிறுவனம் அளிக்கும். கடைசித் தேதி : 15.8.06)



Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN / CC (S) DN / 170 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 103 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka. Supplement to the Mangayar Malar August 2006 issue



Registered with the Registrar of Newspaper of India under No. 30309/75 * Registered No. TN / CC (S) DN / 170 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 103 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.

சங்கு மயில் கோலம்

16 புள்ளி 2 வரிசை
நேர்ப்புள்ளி 2 வரை



- ஹம்சா ஜெயராமன், திருச்சி.

அட்டைப்படம் : ஸ்ரீஹரி